டைய ஸம்ப₃ந்த₄முடையார், இவள்தன்னைப்போலே அநந்யப்ரயோஜனைகளாய் A "இன்று வந்தித்தனையுமமுதுசெய்திடப்பெறில்" என்றிருக்குமவர்கள். (எல்லாரும் வந்து) உன்னையொழிய ஒரு ப்ரயோஜநமுண்டென்றிருக்கிலன்றே இவர்களுக்குக் கண் உறங்குவது. (நின்முற்றம்) ஒரு த்ரிபாத்₃விபூ₄தியிலும்இடமுடைத்தாயிருக்கை. (புகுந்து) 1. "உத்தரம் தீரமாஸாத்₃ய" என்கிறபடியே ப்ராப்யஸ்த₂லத்தே புகுந்து. இவர்களுக்கு ப்ராப்யமானபடியென்னென்னில்; B "முற்றத்தூடு புகுந்து" C "முற்றம் புகுந்து முறுவல்செய்து நின்றீர்". ஶேஷிக்கு ப்ராப்யமானது ஶேஷபூ₄தனுக்கு ப்ராப்யமாகக் கேட்கவேணுமோ? C [முறுவல்செய்து] ஏகரூபமானவனையும் விக்ருதனுக்கும் முற்றம். 'புகுந்து கொள்ளப்புகுகிற கார்யமென்?' என்ன — (முகில் வண்ணன் பேர்பாட) 2. "மேக₄ஶ்யாமம்" என்கிற வடிவழகையும், 3. "ஸ ஸர்வா நர்த்தி₂நோ த்₃ருஷ்ட்வா" D "எனக்கே தன்னைத்தந்த" என்ற ஔதா₃ர்யத்தையும் சொல்லி நீ பாட, நாங்களும் உன்பக்கமே நின்று அத்தைப் பெறுகைக்காக, நீ உகக்கும் அவன் வடிவழகிலும் ஔதா₃ர்யத்திலும் ஈடுபட்டுத் திருநாமத்தைப் பாடச்செய்தேயும்.

(சிற்றாதே பேசாதே) அவ்வடிவை நினைத்து அங்குங்கூப் பரிஸ்பந்தி₃ப்புதல் வார்த்தைபேசுதல் செய்யாதே கிடக்க, இவள் சேஷ்டிதமும் வார்த்தையும் கண்ணுக்கும் செவிக்கும் பே₄க்₃யமாகையாலே 'கண்ணையுஞ் செவியையும் சேரப் பட்டினிகொள்ளவேணுமோ?' என்று இன்னுதாகிறார்கள். (செல்வப்பெண்டாட்டி நீ) உன்னை நீ பிரிந்து அறியாயே. உன்னோடே கூடுவதே எங்களுக்கு எல்லா ஐஶ்வர்யமான நீ. உன்னுடைய உத்₃தே₃ஶ்யம் நீ கூடுபூரித்து வைத்தால் எங்களுக்கு உத்₃தே₃ஶ்யம் பெறவேண்டாவோ? 'இங்கே கூடுபூரித்துக் கிடக்கிறதோ?'— என்ன; (எற்றுக்குறங்கும் பொருள்) உள்ளூ கூடுபூரித்ததில்லையாகில் எங்கள் ஆர்த்தத்₄வநி கேட்டால் கண் உறங்குமோ? எங்கள்பாடே புறப்படாதே உறங்குகிறதுக்கு ஒரு ப்ரயோஜநமுண்டோ? E "அடியார்கள் குழாங்களை-உடன்கூடுவதென்றுகொலோ" என்றிருக்கும்படி அழகிதாயிருந்தது; அவனைத் தனியநுபவிக்கை கைவல்யமோக்ஷத்தோடு ஒக்குமத்தனை. F "தொண்டீரெல்லீரும் வாரீர்" என்றிருக்க வேண்டாவோ? (எற்றுக்குறங்கும் பொருள்) உன்னுடைய உத்₃தே₃ஶ்யத்தைப் பாராதே, எங்களுடைய ஆற்றுமையைப் பார்தே, க்ருஷ்ணனுடைய நிரதிஶய போ₄க்₃யதையைப் பாராதே, ஏதுக்காகக் கிடக்கிறாய்? (எற்றுக்குறங்கும் பொருள்) 'அவனை உகப்பிக்கப் பார்த்தாயாகில், அவனுடையாரையும் உகப்பிக்க வேணுங்காண். ஸ்வப்ரயோஜநமான கைங்கர்யத்தைக் காட்டில் ஒருவாசி கண்டிலோமே உனக்கு. உன்னையும் அவனையும் பொருந்தவிட நாங்கள்வேணும்; அவனைப் பிரிந்தவன்று, வ்ருத்தகீர்த்தநம் பண்ணி த₄ரிப்பிக்கைக்கு நாங்கள் வேணும்; நீயும் அவனுமாக அநுப₄வியாநின்றுல் எடுத்துக்கைநீட்ட நாங்கள் வேணும், ஆனபின்பு எங்களையொழிய உனக்கு உறங்க விரகுண்டோ? 11.

A நாச்-திரு 9-7, B நாச்-திரு 2-9, C பெரிய திரு 10-8-5, D திருவாய் 2-7-11, E திருவாய் 2-3-10, F திருவாய் 5-2-2.

ஈராயிரப்படி—பதினோராம்பாட்டு

அவ:—பதினோராம்பாட்டு—க்ருஷ்ணன் ஊருக்கொரு பிள்ளையானாற்போலே ஆபி₄ஜாத்யமுடையளாய் ஊருக்கொரு பெண்பிள்ளையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:—(கற்றுக்கறவை) கன்று நாகுகள் நித்யஸூரிகளைப்போலே பஞ்ச விம்ஶதிவார்ஷிகமாயிருக்கை. க்ருஷ்ணனுடைய ஸ்பர்ஶத்தாலே கீழ்நோக்கின வயஸ்ஸை புகுமித்தனை. ப்ரணயத்துக்கு முலைபட்டாராகாதாப்போலே ஆகாதென்கை. 'கன்றுகளை ரக்ஷிக்கவென்று வ்யவஸ்தை₄யுண்டோ?' என்னில்; A "கன்றுமேய்த்தினிதுகந்த காளாய்" என்றும், B "திவத்திலும் பசுநிரைமேய்ம்புவத்தி" என்றும் நித்யஸூரிகளிலும் பசு மேய்க்க உகக்கும். அவன் ஈரணுகி₃தவத்ஸலனுனுல் ஈரணுகி₃தவத்ஸலமாமித்தனையிறே. 1. "யதா₄ தருணவத்ஸா" C "கறவாமடநாகு" 2. "ஈரணுகி₃தவத்ஸல:" 3. "த்வயி கிஞ்சித்".

(கணங்கள் பல) நம்முடைய அனுத்மகு₃ணங்களும் அவனுடைய ஜ்ஞான ஶக்த்யாதி₃கு₃ணங்களும்—நார ஶப்₃த₃த்திலே சொன்ன நாரங்களினுடைய ஸமூஹமானாலும் எண்ணலாம், இவை எண்ணப்போகாது. 4. "ரதி₃குஞ்ஜரவாஜிமாந்" என்னுமாபோலே. (பல கறந்து) ஈஶ்வரன் ஒருவனுமே ஸர்வாத்மாக்களுக்கும் நியமனாதி₃கள் பண்ணுமாபோலே ஜாதியினுடைய மெய்ப்பாட்டாலே செய்யவல்ல ஸாமர்த்₂யம்.

(செற்றார்) 5. "ஶத்ரோஸ் ஸகாஶாத் ஸம்ப்ராப்த:" என்ற அங்க₃த₃ப்பெருமாளைப்போலே இவ்வைஶ்வர்யம் காணப்பொறுதார் நமக்கு ஶத்ருக்களாயிருக்கிறபடி. (திறலழிய) கம்ஸாதி₃களை மறுமுட்டுப் பெறுதபடி கிழங்கெடுக்கைக்கு மிடுக்குடையார்கள் இவ்வூரார் என்கை. (சென்று செருச்செய்யும்) எதிரிகள் வந்தால் பொருகையன்றிக்கே இருந்தவிடங்களிலே சென்று பொருகை. (குற்றமொன்றில்லாத) எடுத்துவரப் பார்த்திருக்கும் குற்றமில்லை. கையிலாயுத₄ம் பொகட்டால் எதிரியை நிரஸிக்கிற குற்றமுமில்லை. ப₄க₃வத்₃ ப₄க₃வத விஷயங்களிலே குற்றம் செய்தாரை, அக்₃நீஷோமீயஹிம்ஸைபோலே பாராதே கொல்லவல்லார்களென்றுமாம். (கோவலர்தம் பொற்கொடியே) ஜநகராஜன் திருமகள்போலே ஊருக்கொரு பெண்பிள்ளை. (பொற்கொடியே) த₃ர்ஶநீயமாயிருக்கையும் கொள்கொம்பையொழிய ஜீவியாமையும். -கொடி தரையிலே கிடக்கலாமோ? ஒரு தா₄ரகம் வேண்டாவோ? எங்களோடே கூடிநில்லாயென்கை. D "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றிலேன் யான்."

(புற்றரவல்குல்) வெய்யிலடியுண்டு புழுதிபடைத்த அரவுபோலன்றிக்கே தன் நிலத்திலேவாழும் பாம்பின் படமும் கழுத்தும் போலேயிருக்கை. இத்தனை சொல்லலாமோவென்னில், பெண்ணைப் பெண் சொல்லுகிறதன்றே? 6. "யாஸ்ஸ்த்ரியோ த்₃ருஷ்டவத்யஸ்தா: பும்பா₄வம் மநஸா யயு:" என்று; அவன் 7. "பும்ஸாம் த்₃ருஷ்டிசித்தாபஹாரி"யானாற்போலே. (புனமயிலே) இது தன் நிலத்தில் நின்றமயில்; க்ருஷ்ணனையும் தங்களையும் பிச்சேற்றவல்ல அளகபா₄ரத்தை உடையளாய்

A திருநெடு-16. B திருவாய் 10-3-10. C பெரியதிரு 7-1-1, D திருவாய்10-10-3.

யிருக்கை. (போதராய்) 1. "ஸோப₄யந் த₃ண்ட₃காரண்யம்" போலே எங்களை வந்து களிக்கப்பண்ணுய் என்கை. (சுற்றத்துத் தோழிமாரித்யாதி₃) "நான் புறப் படுகைக்கு நீங்களெல்லோரும் வந்திகோளோ?" என்ன—2. "உத்தரம் தீரமா ஸாத்₃ய" என்னும்படியே எல்லாரும் வந்து ப்ராப்யதே₃ஶமான உன் திரு முற்றத்தேவந்து புகுந்தது. A "முற்றம் புகுந்து முறுவல் செய்து நின்றீர்" என்றும், B "முற்றத்தூடு புகுந்து நின்முகங்காட்டிப் புன்முறுவல் செய்து" என்றும் ஸுஶியானவனுக்கும் ப்ராப்யமான உன் திருமுற்றம் ஸுஷ்டு₄தைகளான எங்க ளுக்கு ப்ராப்யமென்னச் சொல்லவேணுமோ? புகுந்து கொள்ளப்புகுகிற கார்ய மென்னென்ன—(முகில் வண்ணன் பேர்பாட) உகக்கும் திருநாமங்களை நீ பாட, நாங்கள் உன் பக்ஷத்தே நின்று கூட்டம்பற்ற; நீ அவன் அழகிலே ஈடுபட்டுப்பாட உன்னீடுபாடுகண்டு நாங்கள் ஈடுபட்டுப்பாட.

(சிற்றாதே) சேஷ்டியாதே. கண்ணையும் செவியையும் பட்டினிவிடுவியா தின்றாய். (செல்வப்பெண்டாட்டி நீ) உன்னை நீ பிரிந்தறியாயே; உனக்குக் கூடுபூரித்திருந்ததென்றுமாம். (எற்றுக்குறங்கும் பொருள்) C "குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்றிருப்பார் செய்வதோ இது? கைவல்ய மோக்ஷம் போலே தனி கிடக்கிற கார்யமன்றே என்று. 11.

நாலாயிரப்படி — பதினோராம் பாட்டு

அவ:— பதினோராம் பாட்டு — க்ருஷ்ணன் ஊருக்கு ஒரு பிள்ளையானாற்போலே, ஆபி₄ஜாத்யமுடையாளாய் ஊருக்கொரு பெண்பிள்ளையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். 'அரியதைச் செய்யவல்ல குடியிலே பிறந்துவைத்து அரியதைச் செய்யாதேகொள்' என்கிறார்கள்; எளியராக வேண்டுமிடத்திலே அரியராக வொண்ணுதே.

வ்யா:— (கற்றுக் கறவை) கன்றுகாகுகள். நித்யஸூரிகள் பஞ்சவிம்ஶதி வார்ஷிகராயிருக்குமாபோலே; அவர்கள் இப்படியிருக்கிறது எம்பெருமானை அநுஸந் தி₄த்தன்றே; க்ருஷ்ணஸ்பர்ஶத்தால் வந்த தன்னேற்றம் பார்த்துக்கொள்ளுவது. கீழ் நோக்கி வயஸ்ஸுப்புகுமத்தனை. திருவாய்ப்பாடியில் கன்றுகளுக்கும் வாசி தெரியாது. பசுக்களுக்கும் வாசி தெரியாது. (கற்றுக்கறவை) 3. "ப₄வாமி₁ த்₃ருஷ்ட்வா ச புநர்யு வேவ". ப்ரணயித்வத்துக்கு முலைபட்டாராகாதாப்போலே, 'கன்றுகளையேரக்ஷிக்கவேணு மென்றொரு வ்யவஸ்தை₂யுண்டோ?' என்னில், D "கன்று மேய்த்தினிதுகந்த காளாய்", என்னுமாபோலே. E "திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி" நித்யஸூரிகளிலும் பசு மேய்க்க உகக்கும்; கன்றுமேய்க்கப்போனால் பசுக்களும் நித்யஸூரிகளோடொக்கத் தள்ளுண்ணுமத்தனை. பசுமேய்க்க உகக்கும்; கன்றுமேய்க்க இனிதுகக்கும். அதா வது—ஸ்வரக்ஷணத்தில் அந்வயமில்லாதாரை உகக்குமென்றபடி. D [காளாய்] அவை இளகிப் பதிக்கத் தானுமிளகிப்பதிக்கும். 4. "ய: பூர்வ்யாய வேத₄ஸே நவியஸே ஸுமஜ்ஜா₂நயே விஷ்ணவே த₃த₃ாஶதி। யோ ஜாதமஸ்ய மஹதோ மஹிப்₃ரவத் ஸேதுர்₄ரவோபி₄ர்யுஜ்யம் சித₃ப்₄யஸத்॥" F "மைந்தனை மலராள் மணவாளனை"

A பெரியதிரு 10-8-5. B நாச்-திரு 2-9, C திருவாய் 2-3-10. Dதிருநெடு 16.
E திருவாய் 10-3-10. F திருவாய் 1-10-4.

அவன் ஸரணுகை₃தவத்ஸலனுனுல் ஸரணுகை₃தவத்ஸலமாமித்தனையிறே. 1. "யதா₃ தருணவத்ஸா வத்ஸம் வத்ஸோ வா மாதரம் சா₃யா வா ஸத்த்வமநுக₃ச்சே₂த்" A "கறவாமடநாகு தன் கன்றுள்ளினுற்போல் மறவாதடியேனுன்னையே அழைக்கின் றேன்" 2. "அபி₄த்வா ஸுர நோநுமோ து₃க்₃த₄ா இவ தே₄நவ:" 3. "ஸரணுகை₃தவத் ஸல:" கன்றிடுகிற முன்னுள் கோமூத்ரமாதல் சாணமாதல் புல்லிலேபடில் மோந்து பார்த் துக் காற்கடைக்கொள்ளும். பிற்றைநாள் கன்றிடில் அக்கன்று சாணத்திலும் கோமூத் ரத்திலும் புரண்டாலும் அதுதன்னையே பே₄க்₃யமாகக் கொண்டு நக்காநிற்கும். முன்னைணைக் கன்றையும் புல்லிட வந்தவர்களையும் கொம்பிலே சூடும். 4. "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" 5. "அப₄யம் ஸர்வபூ₄தேப்₄யோ த₃த₃ாமி".

(கணங்கள் பல) 6. "நாரா:" என்னுமாபோலே ஸமூஹங்கள் பலவென்னு மத்தனை. (பல) நாரஸப்₃த₃த்தில் நாரங்களினுடைய ஸமூஹங்களையும், அஸங்க்₂யாத மான ப₄க₃வத்₃ கு₃ணங்களையும், அவற்றையுங்கூட வெல்லும்படி மஹிமான நம்முடைய அநாத்மகு₃ணங்களையும் எண்ணினாலும் எண்ணப்போகாது; சொல்லும்போது 7. "ரத₃குஞ்ஜரவாஜிமாந்" என்றாற்போலே பலவென்னுமத்தனை. B "கழியாரும் கன சங்கம்" இத்யாதி₃. (பல கறந்து) ஈச்வரன் ஒருவனே ஸர்வாத்மாக்களுக்கும் நியமநாதி₃களைப் பண்ணுமாபோலே ஜாதியினுடைய மெய்ப்பாட்டாலே செய்யவல்ல ஸாமர்த்₂யம்.

(செற்றார்) 8. "ஸத்ரோஸ் ஸகாஸாத் ஸம்ப்ராப்த:" என்ற அங்க₃த₃ப் பெருமாள் போலே இவ்வைஸ்வர்யம் காண வேண்டாதார் தனக்கு ஸத்ருக்களாயிருக்கிறபடி. (திறலழிய) 'சுடுகாட்டுச் சாம்பலைப்பூசி எலும்பைப் பூண்டு திரியும் ருத்₃ரனும், ஒத்துப் போம் ப்₃ரஹ்மாவும், அந்யபரனுயிருக்கிற எம்பெருமானும், ஸாது₄ இந்த்₃ரனும் எனக்கு எதிரோ' என்றிருக்கும் கம்ஸாதி₃கள் மறுமுட்டுப் பெருதபடி கிழங்கெடுக்கைக்கு மிடுக்குடையார் இவ்வூராரென்கை. (சென்று செருச்செய்யும்) எதிரிகள் வந்தால் பொருகையன்றிக்கே இருந்தவிடங்களிலே சென்று பொருகை. 9. "அபி₄யாதா ப்ர ஹர்த்தா ச". (சென்று) சக்ரவர்த்தித் திருமகனைப்போலே; ஊராகச் சக்ரவர்த்தித் திருமக னோடொப்பர்கள், வீரத்துக்கு. 'சென்று செருச்செய்கை எங்கே கண்டோம்?' என்னில், 'பசுமேய்க்கிறார் இரண்டிடையர் குவலயாபீட₃த்தின் கொம்பைப் பிடுங்கி விளையாடா நின்றார்கள்' என்று கண்டோமிறே."

(குற்றமொன்றில்லாத) எடுத்துவரப் பார்த்திருக்கும் குற்றமில்லை. எதிரி கையில் ஆயுத₄ம் பொகட்டால் எதிரியையும் ரக்ஷியாத குற்றமில்லை என்னவுமாம். 'இப்படி அழியச் செய்தார்கள்' என்று எம்பெருமானுக்கு முறைப்பட்டால் C "செய்தாரேல் நன்று செய்தார்" என்னும்படி பிறந்தவர்களென்னவுமாம். 10. "ஸாது₄ரேவ ஸ மந்தவ்ய:" 11. "தோ₃ஷோ யத்₃யபி தஸ்ய ஸ்யாத்" D "குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்" ப₄க₃வதநுப₄வமே தே₃ஹயாத்ரையாயிருப்பார்க்கு அநீதிக்குப் பெரு நிலை நிற்கும்; வஸ்த்ராந்நபாநாதி₃களோடொக்க ப₄க₃வத்₃கு₃ணங்களும் கலசி தா₃ரக மாயிருப்பார்க்கு அநீதி பொறுக்கும்; அல்லாதார் அநீதி எம்பெருமானுக்கு அஸஹ்ய

A பெரியதிரு 7-1-1, B பெரியதிரு 6-9-2, C பெரியாழ்திரு 4-9-2 D முதல்திரு 41

மாயிருக்கும்; 1. "நிர்தே₃ஷம் வித்₃தி₄ தம் ஜந்தும் ப்ரப₄வாத் பரமாத்மந:" ப₄க₃வத்₃ விஷயத்தில் ஓரடி புகுராநிற்கையிறே ஒருவனுக்கு ஸுத்₃தி₄ யாவதென்கை. ஆஶ்ரி தருடைய தே₃ஷத்தை, கடலுக்குத் தொடுத்த அம்பை மருகாந்தாரத்திலே விட்டாற் போலே அசல் பிளந்தேற்றல், ப₄க₃தா₃த்தனுடைய அம்பை மார்விலே ஏற்ருற் போலே தான் அநுப₄வித்தல், அதுதன்னையே புண்யமாகக் கொள்ளுதல் செய்யு மவன். (குற்றமொன்றில்லாத) 2. "அத்₃யைவ த்வாம் ஹநிஷ்யாமி" 3, "ஹந்யா மஹமிமாம் பாபாம்" என்று சொல்லுகிறபடியே ப₄க₃வத்₃ப₄ாக₃வத விஷயங்களில் குற்ரம் செய்தாரை அக்₃நீஷோமீய ஹிம்ஸைபோலே கண்பாராதே கொல்ல வல்லவர் காணென்றுமாம். (கோவலர்தம் பொற்கொடியே) 4. "ஜநகாநாம் குலே கீர்த்தி மாஹரிஷ்யதி மே ஸுதா" என்னுமாபோலே ஊருக்கொரு பெண்பிள்ளை. (பொற் கொடியே) தர்ஶநீயமாயிருக்கையும் கொள்கொம்பையொழிய ஜீவியாமையும். கொடி தரையிலே கிடக்கலாமோ? ஒரு தா₄ரகம் வேண்டாவோ? பெண்களோடு கூடிக் கொண்டு நில்லாயென்கை. A "ஆவிக்கோர் பற்றுக்கொம்பு நின்னலாலறிகின்றி லேன்யான்"

(புற்றரவல்குல்) பிடியுண்டு புழுதிபடைத்த அரவுபோலன்றியே தன் நிலத்திலே வாழும் பாம்பின் படமும் கழுத்தும் போலேயிருக்கை. இவர்கள் இத்தனை சொல்ல லாமோ? என்னில்: பெண்களைப் பெண்கள் சொல்லுகிறதன்றே: 5. யாஸ்ஸ்த்ரியோ த்₃ரு ஷ் ட வ த் ய ஸ் த ா: பும்ப₄ாவம் மநஸா யயு:" அவன் 6. "பும்ஸாம் த்₃ருஷ்டி சி த் த ா ப ஹ ா ரி ண ம்" என் கி ற ப டி யே ஆண் க ளை ப் பெண்களாக்கும்; இவள் பெண்களை ஆண்களாக்கும். (புனமயில்) தன்னிலத்தில் மயில். கண்ணழையும் தங்களையும் பிச்சேற்றவல்ல அளகபா₄ரத்தையுடையளா யிருக்கை. (போதராய்) 7. "ஶோப₄யந் த₃ண்ட₃காரண்யம்" என்கிறபடியே எங்களை வந்து உள்தளிர்க்கப்பண்ணுய் என்கை. (போதராய்) உன்னுடைய அழகைக்காட்டி எங்களை உண்டாக்காய். இத்தால் சொல்லிற்ருய்த்து — ப₄க₃வத்ஸ்பர்ஶமுடையாரு டைய தே₃ஹகு₃ணத்தோடு ஆத்ம கு₃ணத்தோடு வாசியற எல்லாம் ஆகர்ஷகமா யிருக்கிறதென்கிறது.

'நான் புறப்படுகைக்கு நீங்கள் எல்லாரும் வந்திகோளோ?' என்ன—(சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து நின் முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட) 8. "உத்தரம் தீரமாஸாத்₃ய" என்னும்படி எல்லாருமே ப்ராப்யதே₃ஶமான உன் முற்றத்திலே புகுந்தது. B "முற்றம்புகுந்து முறுவல் செய்து நின்றீர்" என்றும், C "முற்றத்தூடுபுகுந்து நின் முகங்காட்டிப் புன்முறுவல் செய்து" என்றும் ரோஷி யானவனுக்கு ப்ராப்யமான முற்றம்—ரோஷபூ₄தைகளான எங்களுக்கு ப்ராப்ய மென்று சொல்ல வேண்டுமோ? "புகுந்து கொள்ளப்புகுகிற கார்யமென்" என்ன— முகில் வண்ணன் பேர்பாட) நீ உகக்கும் திருநாமங்களைப்பாட., நாங்கள் உன் பரிஜநத்திலே நின்று கூட ஏத்த; நீ அவனழகிலே ஈடுபட்டுப் பாடவும், நீ பாடும் பாட்டை கண்டு நாங்கள் ஈடுபட்டுப்பாட.

(சிற்ருதே) 'முகில்வண்ணன்' என்றவாறே வடிவை நினைத்து விடாய்கெடப் பேசாதே கிடந்தாள். (சிற்ருதே) சேஷ்டியாதே. அவர்கள் ஜீவனம். எங்கள் கண்ணையும்

A திருவாய் 10-10-3. B பெரியதிரு 10-8-5 C நாச்-திரு 2-9.

செவிடையும் பட்டினிவிடுவியாகின்றாய். (செல்வப்பெண்டாட்டி நீ) உன்னை நீ பிரிந்தறியாயே? உன் கைங்கர்யம் கூடு பூரித்ததென்னவுமாம். (எற்றுக்குறங்கும் பொருள்) A "அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்று கொலோ" என்றிருப்பார் செய்வதோ இது? இவ்வளவும் வந்தார்க்குத் தனித்து பகவதநுபவம் பண்ணுவது குடிப்பழி. 'எனக்கு இங்கே கூடு பூரித்திருந்ததோ?' என்ன, 'இல்லையாகில் எங்கள் பாடு புறப்படாதே கைவல்யமோக்ஷம்போலே தனிக்கிடக்கிற கார்யமென்?' என்கிறார்களென்றுமாம். 11.

ஸ்வாபதேஶ வ்யாக்யானம்—பதினோராம் பாட்டு

அவ:—பதினோராம்பாட்டு. (கற்று இத்யாதி) இப்பாட்டில் ஈஶ்வரனே உபாயோபேயமென்று அத்யவஸித்திருப்பார்க்கு மிகவும் ஆதரணீய விஷயமான அதிகாரியை எழுப்புகிறார்கள்.

வ்யா:—(கற்றுக்கறவை) ஸஸந்தாநரான ஶிஷ்யர். (கணங்கள் பல) அவர்களுடைய பலவான ஸமூஹங்களை. (கறந்து) அவர்களுடைய அபிநிவேஶாநுகுணமாக ஜ்ஞாநப்ரதாநம்பண்ணி.

(செற்றார்திறல்அழிய) செற்றருண்டு—உபாயாந்தரபரரும், உபேயாந்தரபரரும்; அவர்களுடைய திறலுண்டு ஸ்வார்த்தபரதை, அழிய—நஶிக்கும்படி. (சென்றுசெருச் செய்யும்) தாங்களே விஜய யாத்ரையைப்பண்ணி அவர்களோடே வாதிக்கிற. (குற்றமொன்றில்லாத) பூர்வோத்தராகங்களில் ஒன்றுமில்லாத. (கோவலர்தம்) "அவனே உபாயோபேயம்" என்று அத்யவஸித்திருக்குமவர்களுக்கு. (பொற்கொடியே) ஸ்ப்ருஹணீயமான பொற்கொடிபோன்ற திருமேனியை உடையவளே! ஜ்ஞாநவைராக்ய யத்தை உடையவளே! என்றுமாம். (புற்றரவல்குல்) கீழ், பொற்கொடியென்று—பக்தியைச் சொல்லுகையாலே; அல்குலென்று—ஸ்வவிஷயத்திலே படிந்த பரபக்தியைச் சொல்லுகிறது. (புனமயிலே) அளகமென்று—ஸ்வாபதேஶத்தில் வ்யாமோஹத்தைச் சொல்லுகையாலே, வ்யாமோஹந்தான் இதரவிஷய வைராக்ய பூர்வகமாய், ஸ்வவிஷய விரஹாஸஹிஷ்ணுவான ப்ரேமரூபஜ்ஞாநமாகையாலே, "புனமயிலே" என்று—பரமபக்தியையுடையவளே என்கிறது. (போதராய்) நீ புறப்பட்டுவரவேணும்.

'நான் புறப்பட்டு வருகைக்கு நம்முடையவர்களெல்லாரும் வந்தார்களோ?' என்ன—(சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து) உனக்கு பந்துக்களாய், பகவதநந்யார்ஹ ஶேஷபூதரான பாகவதரெல்லாரும் வந்து, (நின்முற்றம்புகுந்து) பரமப்ராப்யமான உன்னுடைய திருமுற்றத்திலே புகுந்து. (முகில்வண்ணன்பேர்பாட) பரமோதாரனும் ஸ்ரமஹரமான வடிவையுடையவனுமான அவனுடைய திருநாமத்தை, நீ புறப்பட்டு வருவுதி என்றுபாட.

(சிற்றாதே பேசாதே) பரக்க ஒரு வ்யாபாரத்தையும் பண்ணாதே, வார்த்தையுஞ் சொல்லாதே. (செல்வப்பெண்டாட்டி) பகவதத்குணங்களை ஒருமடை செய்து புஜிக்கையாகிற ஸம்பத்தை உடைய நிருபாதிகபாரதந்த்ரியமுடையவளே! (நீ) இந்த ஸம்பத்து என்றும் மாறாமல் செல்லுகிற நீ. (உறங்கும்பொருள் எற்றுக்கு) உறங்குகிறதுக்கு ப்ரயோஜநம் ஏது? எங்களை அகற்றுகையே ப்ரயோஜநமோ? இன்னம் ஸம்ஸாரிகளைச் சேதநராக்குகையே ப்ரயோஜநமோ? சொல்லாய் என்கிறார்கள்.

இப்பாட்டில் ஜாத்யுசிதமான தர்மத்தை ஸாதநபுத்தியாவன்றிக்கே கைங்கர்யபுத்தியா அநுஷ்டிதத்தால் குற்றமில்லை என்கிறது, 'கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து குற்றமொன்றில்லாத' என்கையாலே. 11.

A திருவாய் 2-3-10.

பன்னிரண்டாம் பாட்டு

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திரா யிதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— இளம் கற்று எருமை — இளங் கன்றுகளையுடைய எருமைகளானவை, கனைத்து—(கறப்பாரில்லாமையாலே) கதறிக்கொண்டு, கன்றுக்கு இரங்கி—(தம்) கன்றுகளிடம் இரக்கங்கொண்டு, நினைத்து—அக்கன்றுகளை நினைத்து, முலைவழியே நின்று பால் சோர—(அந்நினைவின் முதிர்ச்சியாலே) முலைகளின் வழியாகப் பால் இடைவிடாமல் பெருக, நல்லம் நனைத்து—(அதனால்) வீடு முழுவதும் ஈரமாக்கி, சேறு ஆக்கும்—(துகைத்துச்) சேருக்கும்படியிருப்பவனுய், நல் செல்வன்—க்ருஷ்ணைகங்கர்யமாகிற மேலான செல்வத்தை உடையவனுனவனுடைய, தங்காய்—தங்கையே! தலை பனி வீழ—(எங்கள்) தலையிலே பனி பெய்யும்படியாக, நின் வாசல் கடை பற்றி— உன் வாசற்கடையைப் பிடித்துக்கொண்டு, தென் இலங்கை கோமானை — செல்வத்தையுடைத்தான இலங்கைக்கு அரசனான ராவணனை, சினத்தினால் செற்ற — (பிராட்டியைப் பிரித்தான்) என்னும் கோபத்தாலே கொன்றவனுய், மனத்துக்கு இனியானை—மநஸ்ஸுக்கு இனிமையைத் தருமவனுன இராமபிரானை, பாடவும்—(நாங்கள்) பாடியபோதிலும், நீ வாய்திறவாய் — நீ வாய் திறந்து பேசுகிறயல்லை; இனித்தான்—இனியாவது, எழுந்திராய்—எழுந்திருப்பாயாக; ஈது என்ன பேருறக்கம்—இது என்ன பெருந்தூக்கம்? அனைத்து இல்லத்தாரும்—(ஆய்ப்பாடியிலுள்ள) எல்லா வீட்டினராலும், அறிந்து—(உன்னுடைய பெருந்தூக்கம்) அறியப்பட்டு விட்டது.

மூவாயிரப்படி—பன்னிரண்டாம்பாட்டு

அவதாரிகை:— பன்னிரண்டாம்பாட்டு. a க்ருஷ்ணனைப் பிரியாதே இடைய பெருமானைப்போலேயிருப்பானொருவன் தங்கையாகையாலே ஸ்லாக்யையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— b (கனைத்து) c கறப்பாரில்லாமையாலே முலைகடுத்துக் கதறுகை. d (இளங்கற்றெருமை) e இளங்கன்றுகையாலே e_1 பாடாற்றமாட்டாமை.

ஏ. அ. பன்னிரண்டாம்பாட்டு. (கனைத்து இத்யாதி$_3$) a "நற்செல்வன் தங்காய்" என்றதைக்கடாக்ஷித்து அவதாரிகையிடுகிறார் (க்ருஷ்ணனை இத்யாதி$_3$) b, c, s "நற்செல்வன்" என்றதைக் கடாக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கறப்பார் இத்யாதி$_3$) d, e இரண்டான கன்றையுடைத்தான எருமையென்று ஸப்$_3$தா$_3$ர்த்த$_2$ம் விவக்ஷித்து, இளங்கன்றையிட்டு விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இளங்கன்று இத்யாதி$_3$) e_2 பாடாற்றமாட்டாமை — க்லேசம் பொறுக்கமாட்டாமை. f வ்யாக்$_2$யாதா ஈடுபடுகிறார்.

சி. அ. பன்னிரண்டாம்பாட்டு. (கனைத்து) d, e இளங்கற்று—இளங்கன்று.

தெ. அ. பன்னிரண்டாம்பாட்டு. (கனைத்திளங்கற்று இத்யாதி$_3$) b கனைத்து — கன்றின் விஷயமான ஆதா$_3$ரத்தாலே கூப்பிட்டு.

(கன்றுக்கு இரங்கி) தன்முலைக்கடுப்புக் கிடக்க, ''கன்று என்படுகிறதோ!'' என்று இரங்கி. f எம்பெருமான் ஆஸ்ரிதவிஷயத்திலிருக்கும்படிக்கு நிதர்ஶநமிறே. g இத்தால் சொல்லிற்றாய்த்து — g2 அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும் பாட்டை நாங்கள் உன்னுலே படாநின்றோமென்கை. h (நினைத்து முலை வழியே இத்யாதி3) கன்றை நினைத்து i பா4வநாப்ரகர்ஷத்தாலே முலையிலே வாய்வைத்ததாகக்கொண்டு பால்சொரியாநிற்கும். j (முலைவழியே) k கைவழி தவிர. (நின்று பால்சோர) l நினைவு மாறுமையாலே, திருமலையில் திருவருவி கள்போலே, பால் மாறுதே சொரிகை. m இவன் எருமை கறவாதொழிவானென்? என்னில் — இளையபெருமாள் க்ஷத்ரியத4ர்மமான அக்3நிகார்யத்துக்கு உறுப்பா மன்றிறே, இவன் எருமைகள் விட்டுக் கறப்பது; n அதுவென்னென்னில்: o 1. ''ந தே3வலோகாக்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே'' என்னுமாபோலே, க்ருஷ்ணனைப் பிரிய க்ஷமனல்லாமையாலே; p 2. ''பரித்யக்தா மயா லங்கா'' என்னும்படியாலே ப்ராப்யவிரோதி4களில் நசையற்றபடியாகவுமாம். q (நினைத்து q3 இல்லம் சேருக்கும்) r பாலின் மிகுதியாலே அகம்வெள்ளமிடும்; அத்தாலே துகையுண்டு சேருகும்; இத்தால்—சேருகையாலே புகுரவொண்கிறதில்லை யென்கை. s (நற்செல்வன்) தோற்றி t மாயும் ஸம்பத்தன்றிக்கே நிலைநின்ற ஸம்பத்து.

பெ.அ. (எம்பெருமான் இத்யாதி3) g முலைகடுத்துக் கறக்கையைச்சொல்லுகைக்கு ப்ரக்ருதோப யோக3ம் காட்டுகிறார் (இத்தால் இத்யாதி3) g2 (அவன்) என்றது—நற்செல்வனே. h, i நினைவை விவரியாநின்றுகொண்டு மேலுக்கு ஹேதுவானமையைக் காட்டுகிறார் (பா4வநேத்யாதி3) n (அதுவென்னென்னில்) என்றது — ஸ்வத4ர்மமான கறக்கையை விட்டு க்ருஷ்ணனைப் பின் செல்லுகைக்கு ஹேதுவென்னென்னில் என்றபடி. q, r ''இல்லம் — நினைத்து — சேருக்கும்'' என்று அந்வயித்து ஹேதுபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பாலின் இத்யாதி3) t மாயும் — நசிக்கும், u, v க2நித்ரபிடகாத4ராந்யாய்க்கொண்டு எழுந்தருளுகிற இளையபெரு மானை 3. ''லக்ஷ்மிஸம்பந்ந:'' என்கையாலே கைங்கர்யமே லக்ஷ்மியென்று விவக்ஷித்து.

சி.அ j. k 'முலை வழியே' என்ற ஏவகாரத்துக்குத் தாத்பர்யம் (கைவழிதவிர) என்றது. அதாவது—கையாலே பிச்சுகையன்றிக்கே தன் கடைவழியே வழிய என்றபடி. h (நினைத்து) என்றது—கன்று முலையிலே வாய் வைத்ததாக நினைத்து என்றபடி. l (நினைவுமாறுமையாலே) என்றதற்கு ''கன்றினிடத்திலுண்டான'' இதி ஆதி3:. m (இவன் எருமை கறவாதொழிவா னென்? என்னில்) என்றதுக்குத் தாத்பர்யம் ஜாத்யுசிதமுமாய், ஹிதமுமாய், புருஷார்த்த2மு மானதாக அனுஷ்டி2யாதொழிகிறது என்? என்றபடி. o, p இதுக்குப் பரிஹாரம் (நதே3வ) என்றதும், (பரித்யக்தா) என்றதும். அதாவது ஒன்றுக்கு ப்ராபகாப4ாஸங்களை விட்டபடி. இரண்டாம் தாத்பர்யத்துக்கு ப்ராப்யாப4ாஸங்களை விட்டபடி. இவ்வர்த்த2த்3வயத்தாலும் பழிதீர்ந்தது அநந்யோபாயத்வத்துக்கும் அநந்யோபேயத்வத்துக்கும் விரோத4மாகையாலே தவிர்த்தான் என்றபடி. q2 இல்லம் — அகம்.

அதாகிறது — க்ருஷ்ணன் திருவடிகளில் நிரந்தரஸேவை. u 1. "லக்ஷ்மணே லக்ஷ்மிஸம்பந்ந:" என்கிறபடியே கைங்கர்ய லக்ஷ்மியிறே இவ்வாத்மாவுக்கு நிலை நின்ற ஸம்பத்து. v 1. "லக்ஷ்மிஸம்பந்ந:" என்றது, A "ஊரும் நாடுமுலகமுந் தன்னேப்போல்" என்கிறபடியே — தன் வைஷ்ணவஸ்ரீயாலே ஜக₃த்துக்கடைய வைஷ்ணவத்வமுண்டாம்படியிருக்கை. w (தங்காய்) x கு₃ணஹாநிக்கு 2. "ராவணஸ்யாநுஜோ ப்₄ராதா" என்னுமாபோலே x_2 கு₃ணத்துக்குத் தமையனில் தன்னேற்ற முடையளென்கை.

y (பனித்தலைவீழ நின் y_2 வாசல் கடைபற்றி) z மேல் வர்ஷம் வெள்ளமிட, கீழ் பால் வெள்ளமிட, நடுவு மால் வெள்ளமிட நின்றநிலையாகையாலே, தெப்பம் பற்றுவாரைப்போலே நின்வாசற்கடையில் தண்டியத்தைப்பற்றிக் கிடக்கிற இந்த த₄ர்மஹாநி அறிகிறிலே.

இப்படிச் சொன்னவிடத்திலும் இவர்கள் படும் அலமாப்புக் காண்போ மென்று பேசாதே கிடக்க; —(சினத்தினால்) a 'பெண்களைத் a_2 தீராமாற்றுக நெஞ் சாரல் பண்ணும் க்ருஷ்ணனையொழிய, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித்திருமகனைச் சொல்லுவோம் இவள் எழுந்திருக்கைக்காக' என்று ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள்:— (சினத்தினால்) b தண்ணீர்போலே யிருக்கிற சக்ரவர்த்தித்திருமகனுக்கும் சினமுண்டோ? என்னில்: — c ஆஸ்ரித

பெ.அ க்ருஷ்ணஸ்ரவை நற்செல்வமானமையை உபபாதி₃க்கிறார்; "லக்ஷ்ம்யா ஸம்பந்ந:— ஸ்ரீயக் ஸஹித:" என்றும், ஸம்யக்த்வத்தை உபபாதி₃க்கிறார் (லக்ஷ்மிஸம்பந்ந இத்யாதி₃) w,x "நற்செல்வன்" என்றதுக்கு க்ருஷ்ணனிடத்தில் ப₄க்தியாலே கைங்கர்யம்பண்ணு மவனென்று அர்த்த₂மாகையாலே அவனுக்குத் தங்கையென்று இவளைச் சொல்லுகையாலே புருஷனிற்காட்டில் ஸ்த்ரீக்கு ப்ராவண்யம் பள்ளமடையாகையாலே அவனில் ஏற்ற முடையவளே என்று விவக்ஷித்து த்₃ருஷ்டாந்தபூர்வகம் அருளிச்செய்கிறார் (கு₃ணஹாநிக்கு இத்யாதி₃) x_2 கு₃ணத்துக்கு — ப்ராவண்யரூபகு₃ணத்துக்கு.

y, z "தலையிலே பனி விழுகையாலே நின்வாசல் கடைன்பப் பற்றி" என்று ஸ்ப₃ஷ்டார்த்த₂ம் விவக்ஷித்து "பால்சோர" என்றதைக் கடாக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (மேல் இத்யாதி₃)

a 'தங்களுக்கு உத்₃தே₃ச்யமான க்ருஷ்ணனைப் பாடவும்' என்னுதே, சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவானென்னென்ன, அருளிச்செய்கிறார் (பெண்களை இத்யாதி₃) a_2 (தீரா மாற்றுக) என்றது — மாற்றுலே — ப்ரதிக்ரியையாலே தீராதபடியாக என்றபடி. b 3. "ந க்ருத்₄யத்யபி₄ஷ்டோSபி க்ரோத₄நீயாநி வர்ஜயந்" என்னும் ப்ரமாண ப்ரஸித்₃தி₄யைப்பற்ற ஸங்காநுவாத₃ம் (தண்ணீர் இத்யாதி₃) c, d ஆஸ்ரித ரக்ஷகர்களிடத்தில்

சி.அ y_2 வாசற்கடை — வாசல் தலை; வாசல்கடைபற்றி — சுவரின் மேலே நாட்டின கொம்பைப் பிடித்துக்கொண்டு என்றபடி.

A திருவாய் 6-7-2.

ஶத்ருக்கள் இவர்க்கும் ஶத்ருக்களிறே; d 1. "ததோ ராமோ மஹாதேஜாः ராவணேந க்ருதவ்ரணம் l த்₃ருஷ்ட்வா ப்லவக₃ஶார்த்தூ₃லம் கோபஸ்ய வஶமேயிவாந் ll" e மஹாராஜர்க்குச் சீற்றம் பிறந்தபோது வாலியை எய்தார்; அவரழுதபோது கூட அழுதாரிறே. f 2. "த்₃விஷத₃ந்நம் ந பே₄க்தவ்யம்" என்றிறே இருப்பது. g (தென்னிலங்கைக் கோமானே) h 3. "யத்₃யத₄ர்மோ ந ப₃லவாந் ஸ்யாத₃யம் ராக்ஷஸேஶ்வர: l ஸ்யாத₃யம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா ll" என்று திருவடி மதித்த ஐஶ்வர்யத்தையுடையவனே. i (செற்ற) j ஓரம்பாலே தலையைத் தள்ளிவிடாதே படையைக் கொன்று, தேரை அழித்து, ஆயுத₄ங்களை முறித்து, j₂ A "தான்போலும்" இத்யாதி₃ A கோன்போலுமென்றெழுந்து கிளர்ந்துவந்த மானத்தையழித்து நெஞ்சாரல் பண்ணிக் கொன்றபடி.

(மனத்துக்கினியானே) B "வேம்பேயரக வளர்த்தாள்" என்னும்படியே—பெண்களைப் k படுகுலையடிக்கும் க்ருஷ்ணனைப்போலன்றிக்கே, ஏகத₃ாரவ்ரதஸ்தையிருக்கை; பெண்களை l ஒடியெறிந்து துடிக்க விட்டுவைத்துப் பின் இரக்கமின்றிக்கேயிருக்கும் க்ருஷ்ணனையொழிய 4. " ஸஞ்ஜாதப₃ாஷ்ப: பரவீரஹந்தா" என்று - ஶத்ருக்களுக்கும் கண்ணநீர்பாயுமவனே என்றுமாம். m (பாடவும் நீ வாய்திறவாய்) n C "கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" என்று நம்மை நலியும் க்ருஷ்ணனுடைய பேரைக் காற்கடைக் கொண்டு, 5. "இத உபரி ம்ருத ஸஞ்ஜீவநம் ராமவ்ருத்தாந்தம்" என்னும்படியே க்ருஷ்ண விரஹத்தாலே கமர்ந்திளந்த நெஞ்சு பதஞ்செய்யும்படியான சக்ரவர்த்தித்திருமகனைப் பாடச்செய்

பெ. அ. c, d ஆஶ்ரிதஶத்ருக்களிடத்தில் இவர்க்குச் சினமுண்டென்னுமதுக்கு, திருவடியை நலிந்த ராவணனிடத்தில் கோபம்பண்ணினானென்னும் ப்ரமாணத்தைக் காட்டுகிறார் (தத இத்யாதி₃) e ஆஶ்ரிதவிரோதி₄களிடத்தில் கோபமுண்டென்னுமதுக்கு உதா₃ஹரணம் காட்டுகிறார் (மஹாராஜர் இத்யாதி₃) g, h "தென்" என்று — அழகாய், ஸ்ப்ருஹணீயமாகையாலே. ஐஶ்வர்யத்தைக் காட்டுகையால், அத்தை ப்ரமாணபூர்வகம் அருளிச்செய்கிறார் (யத்₃யத₄ர்ம இத்யாதி₃) i, j "சினத்தினால்" என்று ஸம்ப₃ந்தி₄ ஸம்ப₃ந்தி₄களளவும் கோபம் விவக்ஷிதமாகையாலே "செற்ற" என்றதுக்கு அத்தைப்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஓரம்பாலே இத்யாதி₃)

k 'படுகுலையடிக்கும்' என்றதுக்கு D "கருமலர்க்கூந்தலொருத்திதன்னைக் கடைக்கணித்து" இத்யாதி₃ப்படியே பெண்களனைவர்க்கும் ஆசையுண்டாக்கி ஸம்ஶ்லேஷியாமல் ப₃ாதி₄க்கும் என்றபடி. l ஒடியெறிகை — காட்டுவழியே வேடர் மரத்தைத் தள்ளுகையாதல், பாதிமரத்தை அர்த்த₄ஜீவனுக்கி விடுகையாதல். இத்தால் — க்ருஷ்ணன் தங்களை வஶீகரித்து ஸம்ஶ்லேஷியாமல் துடிக்கவிடுவனென்று கருத்து. m, n "பாடவும்" என்ற சகாரம் — ப்ரதா₄ந்யத்திலேயாய் அந்த ப்ரதா₄ந்யத்தை வ்யாவ்ருத்திபூர்வகம் அருளிச்செய்கிறார்

பி. அ. c, d, e, f 'ஆஶ்ரிதஶத்ருக்களைத் தனக்கு ஶத்ருக்களாக நினைத்திருக்குமோ?' என்ன உதா₃ஹரணத்ரயம் அருளிச்செய்கிறார் (ததோ ராமோ மஹாதேஜா இத்யாதி₃) g, h "தென்" என்றதுக்குப் பொருள் (யத்₃யத₄ர்மோ ந ப₃லவாந் இத்யாதி₃) j₂ (தான்

A. பெரிய-திரு 4-4-6 B நாச்-திரு 13-7 C திருவாய் 9-5-8 D பெரு-திரு 6-3.

தேயும். (நீ வாய்திறவாய்) o நீ வாய்திறக்கிறிலே; p ப்ரீதிக்குப் போக்குவிட வேண்டாவோ?

(இனித்தானெழுந்திராய்) எங்களாற்றுமை அறிவித்த பின்பும் உறங்கக்கட வையோ? எழுந்திராய். q (ஈதென்ன பேருறக்கம்) r 1. ''ப₄க₃வதஸ் த்வராயை நம:'' என்றுகொண்டு பிறர் ஆர்த்திக்கு த்வரித்து உணருமவனேடே பழகிவைத்து இங்ஙனே உறங்குவதே! என்கிறார்கள். s ஆபந்நர்க்காக உணருமவன்படியுமன்றிக்கே, காலம் உணர்த்த உணரும் ஸம்ஸாரிகள் படியுமன்றிக்கேயிருப்பதே உன்னுறக்கம்!

t (அனைத்தில்லத்தாரும் அறிந்து) u பெண்களெல்லாரும் வந்து உன் வாச லிலே அழைக்கிறமை ஊராக அறியவேணுமென்றிருந்தாயாகில், எல்லாரு மறிந்தது, இனி எழுந்திராய்; v 'ப₄க₃வத்₃விஷயம் ரஹஸ்யமாக அநுப₄விக்கு மித்தனை; புறம்பு இதுக்கு ஆளுண்டோ?' என்று கிடக்கிறுயாகில், அது எங்கும் ப்ரஸித்₃த₄மாய்த்தென்றுமாம். w எம்பெருமானார் திருவவதரித்தாற்போலே காணும் w_2 இப்பெண்பிள்ளையும். 12.

பெ.அ. (கண்ணன் இத்யாதி₃) m, o ''திறவாய்'' என்றது — திறக்கவேணுமென்று அர்த்த₂ மாகில் ''பாடவும்'' என்றது அந்வயியாமையாலே, வ்யதிரேகமுக₂மாக ஸப்₃த₃ார்த்த₂ம் அருளிச்செய்கிறார் (நீ வாய்இத்யாதி₃) p 'நீங்கள் பாட, நான் அநுப₄வித்துக் கொண்டிருக்கை ப்ராப்தமாயிருக்க, வாய் திறக்கவேண்டுவானென்?' என்று அவளுக்குக் கருத்தாக அருளிச் செய்கிறார் (ப்ரீதிக்கு இத்யாதி₃)

q, r, s ''ஈது'' என்றதாலும், ''பேருறக்கம்'' என்றதாலும் தோன்றுகிற உபாலம்ப₄ த்₃வயத்தையும் க்ரமேண அருளிச்செய்கிறார் (ப₄க₃வத இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே)

t, u ''அறிந்து'' என்றது — கடைக்குறைத்தலாயிருந்ததென்று ஸப்₃த₃ார்த்த₂ம் திரு வுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பெண்கள் இத்யாதி₃) v ''பெண்கள் அழைக்கிறமையை அறிந்து'' என்று அத்₄யாஹாரம் திருவுள்ளம்பற்றிக் கீழ் ஒருதாத்பர்யம் அருளிச்செய்து, ''ரஹஸ்யத்தையறிந்து'' என்று அத்₄யாஹரித்துத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ப₄க₃வத்₃விஷயம் இத்யாதி₃) w_2 'இப்பெண்பிள்ளை' என்றது — எழுப்பு கிற பெண்பிள்ளையென்றபடி. ஆண்டாளென்றபடி. இவள் வாசலிலேயிருந்து அவள் ரஹஸ்யமாக அநுப₄விக்க, அத்தை வெளியிட்டாளென்று கருத்து. 12.

சி.அ. போலும் என்று இத்யாதி₃) ராவணன் வார்த்தை. q, r, s ''ஈதென்ன பேருறக்கம்'' என்றதுக்குத் தாத்பர்யம் (ப₄க₃வத இத்யாதி₃) w எங்கும் ப்ரஸித்₃த₄மானபடியை த்₃ருஷ்டாந்த முகே₂ந வ்யாக்₄யாதா அருளிச்செய்கிறார் (எம்பெருமானார் அவதரித்தாற்போலே) என்று.

இப்பாட்டுக்கு ஸ்வாபதே₃ஶம் :— ப₄க₃வத்₃ விஶ்லேஷம் அஸஹ்யமாம்படி அவ்க₃ாஹித்தவர்கள் தங்களுக்கு ஶ்ரீவைஷ்ணவர்கள் உத்₃தே₃ஶ்யராமளவன்றிக்கே தத் ஸம்ப₃ந்தி₄ ஸம்ப₃ந்தி₄களும் உத்₃தே₃ஶ்யரென்றிருக்கை ஸ்வரூபம் என்றது. 12.

கு. அ. w எங்கும் ப்ரஸித்₃த₄மானபடியை த்₃ருஷ்டாந்தமுகே₂ந வ்யாக்₄யாதா அருளிச் செய்கிறார் (எம்பெருமானார் அவதரித்தாற்போலே இத்யாதி₃) இது வ்யாக்₄யாதா வாக்யமாகவுமாம்; புறத்தில் பெண்களுடைய வார்த்தையாகவுமாம். w_2 அன்றிக்கே 'பெண் பிள்ளை' என்றது — பெண்பிள்ளைகள் என்று ப₃ஹுவசனமாக்கி, புறத்திலே பெண்களைச் சொல்லுகிறது என்னவுமாம். இப்படி ஸந்தே₃ஹமாக அருளிச்செய்வர். 12.

ஆருயிரப்படி — பன்னிரண்டாம்பாட்டு

அவ:— பன்னிரண்டாம்பாட்டு. பெருமாளைப் பின்தொடர்ந்து நோக்கிக் கொண்டு திரியும் இளையபெருமாளைப்போலே, க்ருஷ்ணனையல்லதறியாதே பின் தொடர்ந்து க்ருஷ்ணவிஷயத்திலே போரப் பரிவனுயிருப்பானொருவனுடைய தங்கை யாகைபாலே ஸ்லாக்யையாயிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். ஸ்வதர்மத்தை அநுஷ்டிப்பவர்களுடைய பெண்பிள்ளையை எழுப்பிற்று-கீழ்; இதில், ஸ்வதர்மத் தைக் காற்கடைக்கொண்டவனுடைய தங்கையை எழுப்புகிறது. அவர்களுடைய அநுஷ்டாநமும் இவனுடைய அநநுஷ்டாநமும் உபாயமன்று; யாதொன்று உபே யத்தைத் தரவற்று, அதிறே உபாயம். விடச்சொன்னவையும் பற்றச் சொன்னவை யும் அன்றிறே உபாயம்; விடுவித்துப் பற்றுவித்தவனிறே உபாயம்.

வ்யா:— (கனைத்து) உதாரர் கொடுக்கப்பெறுவிட்டால் படுமாபோலே, ஆஸ்ரிதர்கார்யம் செய்யப்பெறுவிட்டால் 1. ''ருணம் ப்ரவ்ருத்தமிவ'' என்னுமாபோலே ஈஸ்வரன், ப்ராப்த காலத்தில் கறப்பாரில்லாமையாலே முலை கடுத்து, 'இவ்வாசலிலே கன்றுகாலியாய், நாம்பட்டதோ!' என்று குமுறி. ''கறக்க வேண்டும் போதிலே, இவற்றைக்கறவாதே காற்கடைக்கொள்ளுவானென்?'' என்னில்; இளையபெருமாளுக்கு அக்நிகார்யத்தில் அந்வயமுண்டாமன்று இவ னுக்கு இவற்றினுடைய ரக்ஷணத்தில் அந்வயமுள்ளது. இளையபெருமாளுக்குப் பெருமாளைப் பிரியமாட்டாமையாலே; இவன் க்ருஷ்ணனைப் பிரிய மாட்டாமையாலே. இப்படி பகவத்விஷயத்தில் ப்ரேமத்தாலே பிரிய அவஸரமில்லாமையாலே ஸ்வ தர்மத்தை அநுஷ்டியாதொழிகை-விடுகையாவது; அல்லது, ஆலஸ்யத்தாலே விடுமது-விடுகையன்று; A ''தொழிலெனக்குத் தொல்லைமால் தன்னுமமேத்தப்பொழு தெனக்கு மற்றதுவேபோதும்'' என்னும்படியே. (இளங்கற்றெருமை) இளங்கன்றுள எருமையென்னுதல்; இளங்கன்றையுடைய எருமையென்னுதல். இரண்டாலும் பாடாற்றமாட்டாமை சொன்னபடி. B ''கறவாமடநாகு தன் கன்றுள்ளினுற்போல்'' என்னக்கடவதிறே. (கன்றுக்கிரங்கி) தன் முலைக்கடுப்புக்கிடக்க ''கன்று என்படு கிறதோ!'' என்றிரங்கி. எம்பெருமான் ஆஸ்ரிதவிஷயத்தில் C ''ஏழை ஏதலன் கீழ் மகனென்னுதிரங்கி'' என்று படும் பாட்டுக்கு நிதர்ஶநமாயிருக்கிறது. அவன் எருமைகள் கறவாவிட்டால் அவை படும்பாட்டை, நாங்கள் உன்வாசலிலே வந்து நின்று புகுரப்பெருமையாலே படாநின்றேம். (நினைத்து) 2. ''மநஸாசிந்தயத்தாரம்'' என்று நினைத்த அநந்தரம், 3. ''திவராயை நம;'' என்னும்படி திருவுள்ளம் அங்கே ப்ரவணமானாற்போலே. (நினைத்து முலைவழியே) கன்றை அகலக் கட்டி வைப்பார்கள்; அத்தை நினைத்து, பாவநாப்ரகர்ஷத்தாலே கன்று முலையிலே வாய் வைத்ததாகக்கொண்டு, கைவழியுமன்றிக்கே கன்றின் வாய்வழியுமன்றிக்கேயிருக்க, முலைவழியே பால் சொரியாநிற்கும். (நின்று பால்சோர) மேகங்களுக்குக் கடலிலே புக்கு முகந்துகொடு வந்து வர்ஷிக்கவேணும், அவ்வருத்தமிவற்றுக்கில்லை,

---

A நான் திருவ 85 B பெரிய திரு 7-1-1 C பெரியதிரு 5-8-1.

தினவு ஊற்றுகச் சுரக்கிற பாலாகையாலே, நினவு மாறுமையாலே, திருமலையில் திருவருவிகள் போலே பால் மாறுதே செல்லும். (பால்சோர) பக₃வத்₃விஷயம் கேளாதேயிருக்க, தன் செல்லாமையாலே சொல்லுவாரைப் போலே; அர்ஜுநன் கேளாதேயிருக்க, 1. ''பூ₄ய ஏவ மஹாபா₃ஹோ ஶ்ருணு மே பரமம் வச:'' என்றவன் தன்னைப்போலே. (நனைத்து இல்லம் சேறுக்கும்) பால்வெள்ளமிடுகையாலும், எருமை கள் துகைக்கையாலும் சேறுய்க்கிடக்கும். (இல்லம் சேறுக்கும்) எத்தனையேனும் ஏறிப்பாயாத மேடும் பால்வெள்ளத்தாலே சேறுனபடி. கடலை அகழ் செய்துகொண்டு கிடந்தால், ஓடமேறிப்புகுதல், சேற்றுக்கு அளற்றுப்பொடியிட்டுப் புகுதல் செய்ய வேண்டும்படியிருக்கை. (நற்செல்வன்) கர்மத்தாலேயாதல், தே₃வதாந்தரப₄ஜநத் தாலேயாதல் வரும் ஐஶ்வர்யம் அந்தவத்தாயிருக்கும்; பெருமாளைப் பிரியாத இளையபெருமாளுடைய ஐஶ்வர்யம்போலே, க்ருஷ்ணனைப் பிரிய க்ஷமனன்றிக்கே அவனை நோக்குகிற ஐஶ்வர்யமிறே; நிரந்தரஸேவைபோலே நிலைநின்ற ஐஶ்வர்யும். 2. ''லக்ஷ்மணே லக்ஷ்மிஸ்தம்பந்த:''; கைங்கர்ய ஸம்பத்திறே இவ்வாத்மாவுக்கு நிலை நின்ற ஸம்பத்து. 3. ''ந தே₃வலோகாக்ரமணம்'' என்னும்படியே ப்ராப்யவிரோதி₄ களில் நசையற்றபடியாலே, தோற்றி மாயும் ஸம்பத்தன்றியிலேயிருக்கை. 2. ''லக்ஷ்மி ஸம்பந்ந:'' A ''ஊரும் நாடுமுலகமுந் தன்னைப்போல்'' என்று ஆழ்வாருடைய கைங்கர்யஶ்ரீ விஶ்லேஷஜ்ஞரோடு அவிஶ்லேஷஜ்ஞரோடு வாசியற ஏறிப்பரந்தாற்போலே, இவனுடைய கைங்கர்யஶ்ரீயும் நாட்டுக்கெல்லாம் குறையற்றிருக்கை. (தங்காய்) உங்களுக்கு ரக்ஷ்யவர்க்க₃த்தை நோக்காமை ஜந்மஸித்₃த₄மிறே. (நற்செல்வன் தங்காய்) 4. ''ராவணஸ்யாநுஜோ ப்₄ராதா'' என்று - தமையனுடைய தண்மை சொல்லவேண்டாத ஏற்றமுண்டிறே உனக்கு. ஶ்ரீவிபீ₄ஷணாழ்வானிலும் அவன் மகளான த்ரிஜடை பிராட்டிக்கு அடிமை செய்தாற்போலே, க்ருஷ்ணனை நோக்கின தமையனிற் காட்டிலும் எங்களை நோக்கவேண்டாவோ? க்ருஷ்ணன் ரக்ஷ்யமான போதே நாங்களும் அந்தர்ப்பூ₄தைகளன்றே.

(பனித்தலைவீழ) ஆழிமழைக்கண்ணனிலே வர்ஷிக்க நியமிக்கையாலே, மேல் வர்ஷமாக, கீழ் பால் வெள்ளமிட நின்று அலைகையாலே, தெப்பம்பற்றுவாரைப் போலே தண்டியத்தைப் பற்றிக்கொண்டு நின்றேம். ப்ராப்ய பூ₄மியில் ஐஶ்வர்யம் இங்கே கைபுகுரச்செய்தே அவ்வருகே போகத் தேடுகிறது எங்களுடைய அபி₄நிவே ஶாதிஶயமிறே. ஈஶ்வரன் அபி₄நிவேஶமறிந்து B ''விள்கை விள்ளாமை விரும்பி உள் கலந்தார்க்குத்'' தன்னைக் கொடுக்குமாபோலே, இவர்களபி₄நிவேஶம் அறியு மளவும் பேசாதே கிடக்க, அவள் நினைவறியாதே தங்கள் செல்லாமையாலே சொல்லுகிறார்கள். (சினத்தினால்) 'பெண்களுக்காகில் சேர்க்கைப்பல்லிபோலே க்ருஷ்ண வ்ருத்தாந்தஞ் சொல்லுகை பணியிறே; 5. ''அத₃வா கிம் தத₃ாலாபை:'' என்று-பெண்களைத் தீராமாற்றமாக நெஞ்சாரல்படும்படி பண்ணுமத்தை நினைத்துக்கிடக் கிறாள்; C ''உண்ணுதுறங்காது'' 6. ''அநித்₃ஸ் ஸததம் ராம:'' என்று-பெண்

A திருவாய் 6-7-2 B திருவாய் 1-6-5 C நாச்திரு 11-7.

கனைப் பிரிந்தால் ஊனுமுறக்கமுமின்றிக்கே, பெண்பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம் இவளெழுந்திருக்கைக்காக' என்று ராமவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள்.

விரோதிகளைப்போக்கி நமக்கு உபகரித்தானுயிருக்கும் க்ருஷ்ணனைப்போலன்றிக்கே, ஆஸ்ரிதவிரோதிகளைப் போக்குமது தன் சினம் தீர்ந்தானுக நினைத்திருக்கை. 'தண்ணீர்போலேயிருக்கிற சக்ரவர்த்தித் திருமகனுக்கும் சினமுண்டோ' என்னில்; தன் திருமேனியிலே அம்புபட்டபோது ஆறியிருந்தான்; திருவடிமேலே அம்புபட்ட போது சிறிதினிறே. 1. [ததோராமோ மஹாதேஜா:] — திருவடிமேலே அம்புபட்டவ நந்தரம், நீரிலே நெருப்பு எழுந்தாற்போலே, பெருமாள் அநபிபூவநீயரானுர். 1. [ராவணஸ்ய க்ருதவ்ரணம் த்ருஷ்ட்வா] — தான்பருவம் நிரம்பாத காலத்திலே பண்ணிக்கொண்டதன்றிக்கே தரமல்லாத ராவணனுலே நோவுபடக் கண்டவாறே. 1. [ப்லவகஸார்த்தூலம்] திருவடி, தன்மேலே அம்பு படப்பட, வர்ஷங்காணப் பணைக்கும் பதார்த்தங்கள்போலே, மேனிவித்துக் கொடுத்தான். 1. [கோபஸ்ய வஸுமேயிவாந்] திருவடி தரமல்லாத ராவணன்கையிலே புண்பட்டவாறே 2. ''க்ரோதமாஹாரயத்'' என்றிருக்கக்கடவ தாமும் கோபம் இட்ட வழக்கானுர். ஆஸ்ரிதகார்யமென்றும் தங்கார்யமென்றும் இரண்டன்று. மஹாராஜர் சிற்றம் பிறந்து ''வாலியைக் கொல்லவேணும்'' என்றபோது எய்தார். அவருக்கு ஸௌப்ராத்ரம் பின்னுட்டிக் கண்ணநீர் பாய்ந்தவாறே தாமுங்கூட அழுதார். (தென்னிலங்கை) பையல் செய்த அநீதியை நினைத்து. ''பறைச்சேரி, பறைச்சேரி'' என்பாரைப்போலே அத்திக்கும் அஸஹ்யமானபடி. (தென்னிலங்கைக் கோமானை) 3. ''யத்யதர்மோ ந பலவான்'' என்றும், 4. ''அஹோ வீர்யம்'' என்றும் திருவடி மதித்த ஐஸ்வர்யமிறே. ஒரம்பாலே தலையைத் தள்ளிவிடாதே, படையைக்கொன்று, புத்ரபௌத்ராதிகளைத் தலைசாய்த்து, ஆயுதங்களை முறித்து A ''அரக்கர்தங்கள் கோன்போலும்'' என்கிற அபிமாநத்தையழித்து, பட்ட எளிவரவெல்லாம் அறிவிப்பாரில்லாதபடி தரம் கெடுத்து, நெஞ்சாரல் படுத்திக் கொன்றபடி. 5. ''யோ வஜ்ர பாதாஸ நிஸந்நிபாதாந்ந சுக்ஷுபே நாபி சசால ராஜா ஸ ராமபாணாபிஹதோ ப்ருஸார்த்தஸ்சசால சாபஞ்ச முமோச வீர:॥'' 6. ''மாதங்க இவ ஸிம்ஹேந கருடேந நேவ பந்நக:। அபிபூதோபவத்ராஜா ராகவேண மஹாத்மநா'' 7. ''கச்சாநுஜா நாமி ரணாத்திதஸ்த்வம் ப்ரவிஸ்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம்'' ஆஸ்வாஸ்ய நிர்யாஹி ரதீ ஸதந்வீ ததா பலம் த்ரக்ஷ்யஸி மே ரதஸ்தை:॥'' (மனத்துக்கினியானை) அர்த்திகள் ஒருத்தன் பக்கல் பெருவிட்டால் ''சொல்லாய் சிமானே'' என்னுமா போலே, பெண்களை ஓடியெறிந்து துடிக்க விட்டுவைத்து, பின் இரக்கமன்றிக்கே துடிப்புக்கண்டு, இத்தனை கண்ணநீரும் விழவிடாதே படுகுலையடிக்கும் நிம்பனை க்ருஷ்ணனைப்போலன்றிக்கே 8. 'ரிபூணமபிவத்ஸல'னுய் சத்ருக்களுக்குங்கூடக் கண்ணநீர் விழவிடுமவனையன்றே பாடுகிறது. B ''கண்ணன் நாமமே குழறிக்

A பெரியதி 4-4-6 B திருவாய் 9-5-8.

கொன்றீர்'' என்று-நம்மை நலியும் க்ருஷ்ணனுடைய பேரைக் காற்கண்டக்கொண்டு, 1. ''இத உபரி ம்ருதஸஞ்ஜீவநம் ராமவ்ருத்தாந்தம்'' என்னும்படியே க்ருஷ்ணவிர ஹத்தாலே கமர்பிளந்த நெஞ்சு பத₃ஞ்செய்யும்படிக்காக, சக்ரவர்த்தித் திருமகனைப் பாடச் செய்தேயும்; போன உயிர் மீளும்படியானவனைப் பாட, வாய் திறக்கின்றிலை. A ''வேம்பேயாக வளர்த்தாள்'' என்று-பெற்ற தாயையும் குற்றஞ் சொல்லும்படி யிறே இவன்படி. 2. ''கௌஸல்யா லோகபர்த்தாரம்'' என்று-பெற்றவளையும் கொண்டாடும்படியிறே அவன்படி. (பாடவும் நீ வாய் திறவாய்) பிறர் அநர்த்த₂த்துக் காக நீ விஶ்லேஷஜ்ஞையாவதே! எங்களுக்காகவன்றிக்கே உன் ஹர்ஷத்துக்குப் போக்கு விடவேண்டாவோ?

(இனித்தானெழுந்திராய்) எங்கள் ஆர்த்திக்கு உணராவிட்டால் உன்பேற்றுக்கு உணரவேண்டாவோ? எங்களாற்றுமையை அறிந்தபின்பும் எழுந்திராதொழிவதே! (ஈதென்ன பேருறக்கம்) வைதி₄கமுமன்றிக்கே லௌகிகமுமன்றிக்கேயிருப்பதொரு உறக்கமுண்டாவதே! பரார்த்த₂மாக B உலகெல்லாம் நன்கொடுங்க உறங்கும் ஈஶ்வரனுறக்கமுமன்றிக்கே, தாபார்த்தராய், தமோகு₃ணபி₄பூ₄தராய், க்லேஶம்போக வுறங்கும் ஸம்ஸாரிகள்படியுமன்றிக்கே இரண்டிலும் வ்யாவ்ருத்தமாய், இதொ ந பத்தொன்பதாம் பா₄ஷையாயிருந்ததே! பிறர் ஆர்த்திக்கு த்வரித்து உணருமவனேடே பழகிவைத்தும் இங்ஙனே உறங்குவதே! (அனைத்தில்லத்தாரும்) பரஸம்ருத்₃தி₄ யேகப்ரயோஜநையாகையாலே, 'பா₄லைகளாயிருப்பாரும் உணர்ந்து வரவேணும்' என்றி ருக்கிறயாகில், அதெல்லாஞ்செய்தற்றது: நாங்கள் உன்வாசலிலே வந்தெழுப்பவும் நீ சிறிதுபோது உணராதொழியவும், இத்தால் வந்த மதிப்பு எல்லாருமறியவேணு மென்றிருந்தாயாகில் அதெல்லாருமறிந்தது. (இனித்தானெழுந்திராய்) ''பா₄க₃வத₃ விஷயம் ரஹஸ்யமாக அநுபா₄விக்குமித்தனை; புறம்பு இதுக்காளுண்டோ?'' என்று கிடக்கிறயாகில் பெண்களையும் க்ருஷ்ணனையும் சேரவொட்டாத ஊரடைய ப்ரஹித்₃த₄ மாய்த்து என்றுமாம். எம்பெருமானுர் அவதரித்தாற்போலேகாணும் இப்பெண்பிள்ளையும்.

12.

ஈராயிரப்படி — பன்னிரண்டாம் பாட்டு

அவ:— பன்னிரண்டாம் பாட்டு — க்ருஷ்ணன் வளர வளர த் தீம்பிலே கைபுக்கவாறே இவனைக் காக்கைக்கு இவனைப் பிரியாதே போருகிறுளெருத்தன் தங்கையை எழுப்புகிறுர்கள்.

வ்யா:— (கனைத்து) கறப்பாரில்லாமையாலே "இவ்வகத்துக்குக் கன்று காலியாய் நாம் பட்டதோ!" என்று கூப்பிட்டாநிற்கும். (இளங்கற்றெருமை) இளங் கன்று பாடாற்றமாட்டாமை. (கன்றுக்கிரங்கி) எம்பெருமான் ஆஶ்ரிதவிஷயத்தி லிருக்குமாபோலே, அவன் எருமை கறவாவிட்டால் அவைபடும் பாடு நாங்கள் உன்னுலே படாநின்றேரும். (நினைத்து) கன்றை நினைத்து பா₄வனுப்ரகர்ஷத் தாலே முலையிலே வாய்வைத்ததென்று பால் சொரியாநிற்கும். (முலைவழியே)

A நாச்-திரு 13-7. B திருவாய் 4-8-9

கைவழியே தவிர. (நின்று பால்சோர) கேட்பாரன்றியேயிருக்க ஆற்றுமையாலே படுகுவத்; குணங்களைச் சொல்லுவாரைப் போலே. மேகத்துக்குக் கடலிலே முகந்துகொண்டு வரவேணும். இவற்றுக்கு வேண்டா. (நனைத்தில்லம் சேறாக்கும்) பாலின் மிகுதியாலே அகம் வெள்ளமிடும்; அவற்றின் காலிலே துகையுண்டு சேறும். சேறுப்பு புகுரவொண்கிறதில்லை. (நற்செல்வன்) 1. லக்ஷ்மணோ லக்ஷ்மி ஸம்பந்ந:" — தோற்றி மறையும் செல்வமன்று. A "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்" B "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே" என்கிறபடியே இவனுடைய வைஷ்ணவஶ்ரீ இருந்தபடி. 2. "லக்ஷ்மித்ரே புங்க்ஷ்வ போகான் ஸ்த்வம்". (தங்காய்) குணஹானிக்கு ராவணனைப்போலே. 3. "ராவணஸ்யானுஜோ ப்ராதா" என்னும்படி இக்குணத்திலே தஸ்யானுஜனைப்போலே; 4. "அந்தரிக்ஷகத: ஸ்ரீமா"னுடைய மகளான அனலையைப் போலே. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்குமில்லாத பிராட்டிக்குக் கைங்கர்யம் பண்ணவுண்டிறே அனலுக்கு. (வீழ) மேல் பனிவெள்ளமிட, கீழ் பால் வெள்ளமிட, நடு மால் வெள்ளமிட நின்றலைந்து. (வாசல்கடை பற்றி) தண்டியத்தைப்பற்றி நாலாநின்றோம். இத்தர்ழஹாநியை அறிகிறிலை. 'இவர்கள் படுமலமாப்புக் காண்போம்' என்று பேசாதே கிடக்க—(தென்னிலங்கை) 'பறைச்சேரி' என்பாரைப் போலே பெருமாளோடே கூடியிருக்கிற பிராட்டியைப் பிரித்த படுகுலக்காரனிருக்கிறவிடமிறே. (கோமானே) 5. "யத்யதர்மோ ந பலவான்" என்று திருவடி மதித்த ஐஶ்வர்யம். (செற்ற) ஓரம்பாலே தலையைத் தள்ளி விடாதே தேரைத்தள்ளி வில்லைமுறித்து படையைக்கொன்று ஆயுதங்களை முறித்து C "தான் போலுமென்றெழுந்தான்" இத்யாதிப்படியே பின்னைத் தலையை அறுத்துவிட்டபடி.

(மனத்துக்கினியானே) வேண்டிற்றுப் பெருவிட்டால் "சொல்லாய் சீமானே" என்னுமாபோலே. (பாடவும் நீ வாய்திறவாய்) ராமவ்ருத்தாந்தம் கேட்டது உறங்குகைக்குறுப்பாயிற்றே? (வாய்திறவாய்) ப்ரீதிக்குப் போக்குவிடவேண்டாவோ? தாங்கள் ஒருதலைப்பற்ற வேண்டியிருக்கிறீர்கள்.

(இனித்தான்) எங்களுக்காக உணராவிட்டால் உனக்காக உணரவுமாகாதோ? சூர்ப்பணகை உள்ளிட்டரீர்க்குள்ள இரக்கமும் உன்பக்கல் கண்டிலோமே. (ஈதென்ன பேருறக்கம்) எம்பெருமான் பரார்த்தமாக உணரும். ஸம்ஸாரிகள் ஸ்வார்த்தமாக உணருவர்கள். இது ஒருபடியுமன்று. ஆர்த்தி கேட்டு உணராதொழிவதே! "பையத்துயின்ற பரமன்" (2) 6. "புகுவதஸ்த்வராயை ஈத:" என்னும்படி ஆர்த்தி கேட்டால் அப்படி படுமவனேயே வர்த்தித்து இங்ஙனே கிடப்பதே!

(அனைத்தில்லத்தாருமறிந்து) உன் வாசலிலே வந்தெழுப்ப நீ எழுந்திராதது எல்லாரும் அறியும்படியாய்த்து. இனி உணராய். ஊராரறியாதபடி புகுவதர்விஷயத்தை அனுபவிக்க வேணுமென்றிராதேகொள். 12.

A திருவாய் 6-7-2, B திருவாய் 3-3-11 C பெரியதிரு 4-4-6.

நாலாயிரப்படி — பன்னிரண்டாம்பாட்டு

அவ :— பன்னிரண்டாம்பாட்டு. க்ருஷ்ணன் வளரவளரத் தீம்பிலே கைவளரப் புக்கவாறே ஸ்ரீ நந்த₃கோ₃பர் வ்ருத்₃தா₄ராகையாலும், நம்பிமூத்தபிரான் விலக்கமாட்டாதே அவன் வழியே போகையாலும், இவனைக் காக்க இளையபெருமாளைப்போலே அவனைப்பிரியாதே போகிறான் ஒருத்தன் தங்கையை எழுப்புகிறார்கள்.

வ்யா :— (கனைத்து) இளையபெருமாள் அக்₃நிகார்யத்துக்கு உறுப்பாமன்றிறே இவன் எருமைகளை விட்டுக் கறப்பது. தவிர்ந்தவனைநெடு செய்கிறவனைநெடு வாசியில்லை; இரண்டும் உபாயமன்று. யாதொன்று பேற்றை ஸாதி₄த்துத்தருவது. அதுவே உபாயம். அபி₄சாரத்தைப்பற்ற காம்யகர்மம் புண்யம்; ஜ்யோதிஷ்டோமாதி₃க்கு பு₄க்தி தன்னேற்றம். 'எல்லாத்தையும் விட்டு என்னைப்பற்று' என்றவனடைய த்யாஜ்யமாம். ஜீயர் பின்னை திருநறையூரரையர்க்கு அருளிச்செய்த வார்த்தை :— 'விடுகையும் உபாயமல்ல; பற்றுகையும் உபாயமல்ல; விடுவித்துப் பற்றுவிக்குமவனே உபாயம்' என்று. 1. "ந தே₃வலோகாக்ரமணம்" 2. "பரித்யக்தா" இத்யாதி₃யிற் படியே ப்ராப்யவிரோதி₄களில் நசையற்றபடியாகவுமாம். (கனைத்து) கறப்பாரில்லாமையாலே 'இவ்வகத்து நாம் கன்றுகாலியாய்ப்பட்டதோ!' என்று கூப்பிடாநிற்கும். (இளங்கற்றெருமை) இளங்கன்றுகையால் பாடு ஆற்றமாட்டாமை. (கன்றுக்கிரங்கி) எம்பெருமான் ஆர்ஜிதவிஷயத்தில் இருக்குமாபோலேகாணும்; அவன் எருமை கறவாவிட்டால் அவை படும் பாட்டை நாங்கள் உன்னுலே படாநின்றோம்.

(கனைத்து) கன்றை நினைத்து ப்₃ரஹ்மரக்ஷஸ்ஸாலே முலையிலே வாய் வைத்ததாய்க் கொண்டு பால் சொரியாநிற்கும். நினைவு மாறினிறே பால் மாறுவது. (முலைவழியே) கன்றின் வாய் வழியாதல், கறக்கிறார் கைவழியாதலன்றிக்கே முலை வழியே (நின்று பால் சோர) கேட்டாரின்றிக்கே, விம்மலாலே பு₄கு₃வத்₃ குணங்களைச் சொல்லுவாரைப் போலே, மேகத்துக்குக் கடலிலே முகந்து கொண்டு வரவேணும். இவற்றுக்கு அதுவேண்டா. (நனைத்தில்லம் சேறாக்கும்) 'பாலின் மிகுதியாலே அகமெல்லாம் வெள்ளமிடும்; அவிறறின் காலாலே பின்னைத் துகையுண்டு சேரும். சேரல் புகுரவொண்ணாதிறதில்லை' என்ன, 'அளறறுப் பொடியிட்டுப் புகுருங்கோள்; அவ்வளவின்றிக்கே மேலே மேலே வெள்ளமிட்டதாகில் ஓடமேறிப்புகுருங்கோள்'.

(நற்செல்வன்) 3. "லக்ஷ்மணே லக்ஷ்மிஸம்பந்த:" — தோற்றி மறையும் நற்செல்வமல்ல; நிலைநின்ற ஸம்பத்து. 3. [ஸம்பந்த:] A "ஊரும் நாடுமுலகமும் தன்னைப்போல்" B "வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம்புகழ" என்னும்படியே அவனுடைய வைஷ்ணவஸ்ரீயாலே ஜக₃த்துக்களடைய வைஷ்ணவத்வமுண்டாம்படியிருக்கை. 4. "ஸௌமித்ரே பு₄ங்க்ஷ்வ போ₄கா₃ம்ஸ்த்வம்" 5. "யத்₃ விநா ப₄ரதம் த்வாம் ச ராத்ருக்₃நம் சாபி மாதர"ம். (தங்காய்) குணஹானிக்கு 6. "ராவணஸ்யானுஜோ ப்₃ராதா" என்னுமாபோலே, குணத்துக்கு அவனில் இவளுக்குத் தன்னேற்றமும் அத்தனைபோரும். 7. "அந்தரிக்ஷக₃த: ஸ்ரீமாந்" என்ற ஸ்ரீவிபீ₄ஷணாழ்வானுக்கு மகளான த்ரிஜடை போலே. ஸ்ரீவிபீ₄ஷணாழ்வானைப் போலன்றியே இவள் பிராட்டிக்கு

A திருவாய் 6-7-2 B திருவாய் 3-3-11.

அடிமைசெய்யப் பெற்றுளிறே. அப்படியே இங்கு தமையன் க்ருஷ்ணனுக்குத் துணையாய்த் திரிய, இவள் நப்பின்னைப் பிராட்டிக்கு அடிமை செய்யப் பிறந்தவள். (பனித்தலை வீழ) மேல் பனி வெள்ளமிட, கீழ் பால் வெள்ளமிட, நடுவே மால் வெள்ளமிட நின்றமை இது. (வாசல் கடை பற்றி) 'மேலப்படியையும் தண்டியத்தையும் பற்றி நாலாநின்றேரும். இத்தர்மஹாநியை அறிகின்றிலை' என்கிறார்கள். 'இவர்கள் படும் அலமாப்புக் காண்போம்' என்று பேசாதே கிடக்க, தீராமாற்றமாக நெஞ்சாரல் பண்ணி முகம் காட்டாத க்ருஷ்ணனென்றால், பெண்கள் சிவட்கென்று 'இதொரு பித்து' என்பர்களொன்று பார்த்து, 'க்ருஷ்ணனால் பட்ட நெஞ்சாரலடையத் தீர்ந்து நெஞ்சுகள் குளிரும்படி, பெண் பிறந்தார்க்குத் தஞ்சமான சக்ரவர்த்தித் திருமகனைச் சொல்லுவோம், இவளெழுந்திருக்க' என்கிறார்கள் :—

(சினத்தினால்) ஆஸ்ரிதர் கார்யம் செய்யாதானையிரான் க்ருஷ்ணனைப் போலே. இவன்தன் கார்யந்தானையிருக்கும். A "தான் தன சீற்றத்தினை முடிக்கும்". 1. "த்3விஷத3ந்நம் ந பே4க்தவ்யம்"— ஆஸ்ரிதருடைய ஶத்ருக்களே தனக்கு ஶத்ருக்கள். ப4க்3வத3பசாரம் ப4ாக3வதாபசாரம் என்று இரண்டில்லை போலே இருந்தது. 2. "மம மத்3ப4க்தப4க்தேஷு ப்ரீதிரப்4யதி4கா நருப" என்று, 'ஆஸ்ரிதர்க்கு நல்லவர்கள் தனக்கு நல்லவர்கள்' என்றிருக்கும்; மஹாராஜர்க்கு சீற்றம் பிறந்தபோது வாலியை எய்தார்; அவர் அழுதபோது கூட அழுதார். 3. "ஸஞ்ஜாதப3ாஷ்ப:". (தென்னிலங்கை) அவன் செய்த அநீதியை நினைத்து 'பறைச்சேரி' என்பாரைப்போலே அத்தி3க்குங் காணவேண்டாதேயிருக்கிறபடி. ஒரு ப்ராணனை இரண்டாக்கினாற்போலே தாயையும் தமப்பனையும் பிரித்த படுகொலைக் காரனிருக்கிறவிடமிறே. (கோமான்) 4. "யத்3யதா4ர்மோ ந ப3லவாந் ஸ்யாத3யம் ராக்ஷஸேஶ்வர: | ஸ்யாத3யம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா ||" என்று திருவுள்ளம் மதி3த்த ஐஶ்வர்யம். (செற்ற) ஓரம்பாலே தலையைத் தள்ளிவிடாதே மொட்டும் நெம்பும் பாறும் கலங்கும்படி தேரை அழித்து, வில்லை முறித்து, படையைக் கொன்று, ஆயுதங்களை அறுத்து, B "தான் போலுமென்றெழுந்தான் தரணியாளன்" என்று கிளர்ந்து வந்த அபி4மானத்தையும் அழித்து, நெஞ்சாரல் படுத்தி, 5. "க3ச்ச3ானுஜ்ஞாநாமி" என்கிறபடியே படையைச் சிரைத்துவிட்ட படியான எளிவரவு மூதலிக்கைக்கு ஆளில்லையாம் என்று கொல்லாதே விட்டார். 6. "யோ வஜ்ரபாதாஶநி" 7. "மாதங்க3 இவ" 8. "ப்3ரஹ்மத3ண்ட3ப்ரகாஶாநாம்" என்று; 9. "தஸ்யாபி4ஸங்க்ரம்ய ரத3ம் ஸசக்ரம் ஸாஶ்வத்4வஜச்ச3த்ரமஹாபதாகம் | ஸஸாரதி3ம் ஸாஶநிஶூலகூட்3கு3ம் ராம: ப்ரசிச்சே2த3 ஶரைரஸ்ஸுபுங்கை3:||" 10. "ஸ ஏவமுக்தோ ஹததர்ப்பஹர்ஷ: நிக்ருத்தசாபோ நிஹதாஶ்வஸூத: | ஶரார்த்தி3த: க்ருத்தமஹாகிரீட: விவேஶ லங்காம் ஸஹஸா ஸ ராஜா ||"

(மனத்துக்கினியானை) வேண்டிற்றுப் பெருவிட்டால், "சொல்லாய் சீமானே" என்றாப்போலே. C "வேம்பேயாக வளர்த்தாள்" என்னும் க்ருஷ்ணனல்லவே. பெண்களைக்கொன்று துடிக்க விட்டுவைத்துத் துளி கண்ணீரும் விழவிடாதே நிற்கும் க்ருஷ்ணனையொழிய, 3. "ஸஞ்ஜாதப3ாஷ்ப: பரவீரஹந்தா" என்று ஶத்ருக்களுக்கும் கண்ணீர் பாய்ந்து, D "உண்ணுதுறங்காதொலிகடலையூடறுத்து" தன்னைப்பிரிந்து

A திருவாய் 6-4-7, B பெரிய திரு 4-4-6, C நாச்-திரு 13-7, D நாச்-திரு 11-7.

நாம் படுவுற்றை நம்மைப் பிரிந்து தான் படவல்லன். (பாடவும் நீவாய்திறவாய்) 1. "இத உபரி ம்ருதஸஞ்ஜீவநம் ராமவ்ருத்தாந்தம்" என்றத்தைக் கேட்டும் உனக்கு உறங்குகைக்கு உறுப்பாயிற்றே? (வாய்திறவாய்) ப்ரீதிக்குப் போக்குவிடவேண்டாவோ? தாங்கள் ஒரு தலைப் பற்றவேண்டியிருக்கிறார்கள்.

(இனித்தானெழுந்திராய்) எங்களுக்காக உணராவிட்டால் உனக்காக உணரவுமாகாதோ? எங்களாற்றுமை அறிவித்தபின்பும் உறங்கவல்லையாவதே! அகம்பநன் சூர்ப்பணகையுள்ளிட்டாரக்குள்ள இரக்கமும் உன்பக்கல் கண்டிலோம். (ஈதென்ன பேருறக்கம்) எம்பெருமான் பரார்த்தமாக உணரும்; ஸம்ஸாரிகள் ஸ்வார்த்தமாக உணருவர்கள். இது இரண்டுபடியுமன்று; ஆர்த்திகேட்டும் உணராதொழிவதே! "பையத்துயின்ற பரமன்" (2) 2. "பகவதஸ் த்வராயை நம:" ஆர்த்தி கேட்டால் அப்படி புறப்படும் அவனேடொக்கப் பழகிவைத்து இங்ஙனே கிடப்பதே! அக்குணங்கள்தானே உன்னை உறக்குகிறதோ?

(அனைத்தில்லத்தாருமறிந்து) 'உன் வாசலிலே எல்லாரும் வந்து எழுப்ப நீ எழுந்திராதொழிந்தாய் என்கிற வேண்டப்பாடு எல்லாருமறியவேண்டியிருந்தாயாகில் அதுவும் செய்ததுகாண், இனி உணராய்' என்ன; "க்ருஷ்ணனையும் நம்மையும் சேரவொட்டாத ஊரிலே, பதினைந்து நாழிகையிலே வந்து எல்லாரும் கேட்க 'மனத்துக்கினியான்' என்பது 'க்ருஷ்ணன்' என்பது, 'எழுந்திராய்' என்பதாய்க் கூப்பிட்டால் நம்மை என் சொல்வார்கள்?" என்ன; "நீ நீயாக, நாங்கள் நாங்களாக வந்துபோய் ப்ரஸித்₃த₄மாயிற்று; இனி அத்தை விடாய்" என்கிறார்கள். 'ரஹஸ்யமாக பகவத்₃விஷயமநுப₄விக்கும்தனையொழிய, புறம்பிதுக்காளுண்டோ' என்றிருந்தாயாகில், "நீ பிறந்த பின்பு இதொரு வ்யவஸ்தை₃யுண்டோ? எல்லாரும் உன்னைப் போலேயாம்படி அதுபோய் ப்ரஸித்₃த₄மாயிற்றுக் கிடாய்" என்றுமாம். எம்பெருமானுர் திருவவதரித்தாற்போலே காணும்; இந்நாச்சியார் அவதரித்த பின்பு எல்லாரும் பகவத்₃விஷயமறிந்தது. 12.

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யாநம் — பன்னிரண்டாம் பாட்டு

அவ :— பன்னிரண்டாம் பாட்டு. (கனைத்து இத்யாதி₃) இப்பாட்டில், பா₄க₃வதாபி₄மாந நிஷ்ட₂ரை எழுப்புகிறார்கள்.

வ்யா :— (கனைத்து) ஸ்வாசார்யன், தனக்கும் (ஸ்வஸந்தாநத்துக்கும் பக₃வத்₃கு₃ணநுப₄வம் பண்ணுவிக்கவில்லையென்று வ்யஸநப்பட்டு. (இளங்கற்றெருமை) பாலஸந்தாநமுடைய ஶிஷ்யர்: (கன்றுக்கிரங்கி) ஸ்வஸந்தாநத்திலே த₃யைபண்ணி. (நினைத்து) ஸ்வாசார்யன் தன்னை அதி₄ஷ்டி₂த்துக்கொண்டு ஸ்வஸந்தாநத்துக்கு பக₃வத்₃கு₃ணநுப₄வம் பண்ணுவித்தருளுகிறானென்று நினைத்து. (முலைவழியே நின்று பால்சோர) பாவநாப்ரகர்ஷத்தாலே ஸ்வாசார்யாபி₄மாநமடியாக பக₃வத்₃கு₃ணங்கள் சுரக்க. (நனைத்து இல்லம் சேறாக்கும்) ஶ்ரோதாக்களுடைய ஹ்ருத₃யத்தை ஸாம்ஸாரிகதாபமெல்லாம் ஆறும்படி குளிரப்பண்ணி, கு₃ணநுப₄வத்தாலே களிக்கும்படி பண்ணுகிற. (நல்செல்வன்) ஶ்லாக்₄யமான ஸம்பத்தையுடைய பா₄க₃வதனுடைய. (தங்காய்) ஸோத₃ரியானவளே!

(பனித்தலைவீழ) பனியானது தலைமேலே சொரிய. அதாவது A மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களுடைய ஶ்ரீஸூக்திகளாலே வரும் பகவத் குணானுபவம். (நின்வாசல் கடைபற்றி) கீழ் ஆசார்யோபதேஶமடியாக வரும் பகவத்குணானுபவப்ரவாஹமென்ன, மேலே A மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களால் வரும் குணானுபவப்ரவாஹமென்ன, நடுவே பாகவதகுணானுபவப்ரவாஹமென்ன, இப்படி ப்ரவாஹத்ரயத்திலே அகப்பட்டு அலைகிற நாம், உனக்கு ப்ரதிபாதகமான நமஸ்ஸிலே தத்வார்த்தியான நகாரமாகிற அவலம்பதத்தைப்பற்றி; கீழசொன்ன குணானுபவங்களில் போக்த்ருத்வபுத்தி வாராதபடி தடுக்கிற நகாரத்தைப் பற்றி என்றபடி. (சினத்தினால் தென்னிலங்கைக்கோமானைச் செற்ற மனத்துக்கினியானை) கோபத்தினாலே, யமவச்யதாமூலமான ஸம்ஸாரத்துக்கு நிர்வாஹகமான அஹங்காரத்தை நசிப்பித்து, அத ஏவ மனத்துக்கினியனை சக்ரவர்த்தித்திருமகனை (பாடவும் நீ வாய்திறவாய் இனித்தானெழுந்திராய்) எங்களாற்றுமை காணவேணுமென்று இருந்தாயாகில் கண்டபின்பும் உறங்குமித்தனையோ? எழுந்திராய். (ஈதென்ன பேருறக்கம்) காலமுணராத்த உணரும் ஸம்ஸாரிகள் நித்ரை போலுமன்றிக்கே, ஆஶ்ரிதர்களார்த்தி உணர்த்த உணரும் ஈஶ்வரனுடைய உறக்கமும் போலன்றிக்கே, உபயவிலக்ஷணமான இம்மஹாநித்ரையேது? ஸம்ஸாரிகள் நித்ரை, தமோபிபூதியாலுண்டானதாகையாலே ஸத்த்வோத்தரமான காலத்திலே தீரும்படியாயிருக்கும்; ஈஶ்வரனுடைய நித்ரை, ஜகத்ரக்ஷண சிந்தாரூபமாகையாலே பிறரார்த்திகாணத் தீரும்; இவளுடைய நித்ரை, சரமபர்வ நிஷ்டருடைய ஆற்றுமை காணத் தீருமதாகையாலே, அதுக்கு அதிகாரிகள் கிடையாமையாலே பேருறக்கமாயிருக்கும். (அனைத்தில்லத்தாருமறிந்து) "நாங்கள் உன்னை எழுப்புகிறது எல்லாரும் அறியவேணுமென்றிருந்தாயாகில், அது எல்லோரும் அறிந்தார்கள்; எழுந்திராய்" என்கிறார்கள். 'பகவத்விஷயம் ரஹஸ்ய மென்றிருந்தாயாகில் அது எங்கும் ப்ரஸித்தமாய்த்து, எழுந்திராய்' என்கிறார்கள்.

கீழ்ப்பாட்டில் "கற்றுக்கறவைக் கணங்கள் பலகறந்து" என்று ஸ்வவர்ணோசித தர்மாநுஷ்டானத்தைச்சொல்லி, இப்பாட்டில் சொல்லாமையாலே அநுஜ்ஞாகைங்கர்ய நிஷ்டனுக்கு ஆஜ்ஞா கைங்கர்ய ஹாநி ஸ்வரூபவிரோதமன்றென்கிறது. இவன் எருமை கறவாமைக்கு இளையபெருமாளை த்ருஷ்டாந்தமாக அருளிச்செய்து, உபாயாந்தரத்யாகத்துக்கு ப்ரமாணமாக 1. "ந தேவ லோகாக்ரமணம்" என்கிற ஶ்லோகத்தை உதாஹரித்தது ஐஶ்வர்ய கைவல்ய பகவல்லாபங்களில் அபேக்ஷையில்லாதவர்க்கு தத்ஸாதநாநுஷ்டானத்தில் அபேக்ஷை பிறவாது என்னும் அபிப்ராயத்தாலே. 12.

A திருவாய் 1-1-1

பதின்மூன்றும் பாட்டு

புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லா வரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்ப்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால்
கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— புள்ளின் வாய் கீண்டானை—பறவையுருவங்கொண்டு வந்த ப₃காஸு₃ரனுடைய வாயைக் கிழித்தெறிந்தவனும், பொல்லா அரக்கனை கிள்ளி களைந்தானை — பொல்லாங்குகளுக்கு உறைவிடமான இராவணனை விளையாட்டாக அழித்துப்போட்டவனுமான எம்பிரானுடைய, கீர்த்திமை பாடி போய்—வீரச்செயல்களைப் பாடிக்கொண்டு சென்று, பிள்ளைகள் எல்லாரும்—எல்லாப் பெண்பிள்ளைகளும், பாவைக்களம்—(க்ருஷ்ணனும் தாங்களும்) நோன்பு நோற்கைக்காகக் குறித்தவிடத்திற்கு, புக்கார் — புகுந்தனர்; வெள்ளி எழுந்து—சுக்கிரன் மேலெழுந்து, வியாழம் உறங்கிற்று—கு₃ரு அஸ்தமித்தது; (மேலும்) புள்ளும் சிலம்பின காண்—(பறவைகளும் இரைதேடச்) சிதறிச்செல்கின்றன; போது அரி கண்ணினாய்—பூவையும், மானையும் ஒத்துள்ள கண்ணையுடையவளே! பாவாய் — இயற்கையாகவே ஸ்த்ரீத்வத்தைப் பெற்றவளே! நீ—நீ, நல் நாள்—கிருஷ்ணனும் நாமும் கூடப் போகும் இந்த நல்ல நாளில், கள்ளம் தவிர்ந்து—(கிருஷ்ண கு₃ணங்களைத் தனியிருந்து அனுப₄விக்கையாகிற) கபடத்தைவிட்டு, கலந்து—(எங்களோடு) சேர்ந்து, குள்ளக் குளிர குடைந்து நீராடாதே—மிக்க குளிர்ச்சியாயிருக்கும் நீரில் நன்றாக நீராடாமல், பள்ளி கிடத்தியோ—படுக்கையில் கிடந்து உறங்குகின்றாயோ? ஆல்—ஆச்சரியம்!

மூவாயிரப்படி—பதின்மூன்றும் பாட்டு

அவ:— பதின்மூன்றும் பாட்டு. a நம் கண் உண்டாகில் தானே வருகிறவனென்று கிடக்கிறாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— b (புள்ளின்வாய் கீண்டானை) c A 'பள்ளத்தில் மேயும்' e இத்யாதி₃; ப₃காஸு₃ரனைப் பிளந்தபடி. d (பொல்லா அரக்கனை) e தாயையும் தமப்பனையும், e உடலையும் உயிரையும் பிரித்தாற்போலே பிரித்த நிர்க்₄ருணன்.

பெ. அ. பதின்மூன்றும்பாட்டு. (புள்ளின்வாய் இத்யாதி₃) a "போதரிக்கண்ணினாய்" என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை (நம் கண் இத்யாதி₃) 'நம் கண்ணுண்டாகில்' என்றது — கண்ணழகு உண்டாகிலென்றபடி.

b, c "புள்ளின்வாய் கீண்டான்" என்றதுக்கு — அஸு₃ரனுகையாலே கீண்டானென்னுமத்தை ப்ரமாணமுகே₂ந த₃ர்ஶிப்பித்துக்கொண்டு ஸப்₃த₃ார்த்த₂ம் அருளிச்செய்கிறார் (பள்ளத்தில் இத்யாதி₃) c_2 "இத்யாதி₃" என்றவநந்தரம் "என்கிறபடியே" என்று ஶேஷம். e_2 1. "ராமஸ்ய த₃யிதா பா₄ர்யா நித்யம் ப்ராணஸமா ஹிதா"

A- பெரியாழ்-திரு-2-5-4.

A "சுரிகுழல் கனிவாய்" இத்யாதி; f B "முன்பொலாவிராவணன்" என்னு மித்தனைபோக்கி அவன் தண்ணிமைக்கு ஒரு பாசுரமில்லையிறே. g அத்தாலேயிறே பிராட்டியும் 1. "த்வம் நீச ஸமஸ்வத் ஸ்மருத:" என்றது; h 2. "விபீஷணஸ்து தர்மாத்மா" என்று — நல்ல அரக்கனும் உண்டென்கை. (கிள்ளிக்களைந்தானை) i திருவிளையாடு சூழலிலே நோய்புக்கவிடங்களைக் கிள்ளிப்பொகடுமாபோலே, தோஷாம்ஸத்தை வாங்கிப் பொகட்டபடி. j (கீர்த்திமை) k 3. "ஸத்ரோ: ப்ரக்ருயாத வீர்யஸ்ய" என்று எதிரிகளுக்கும் k_2 நெஞ்சு உளுக்கும்படியான வீர சரிதத்தை. l 3. "ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" என்று — உகவாதார்க்கும் விட வொண்ணாத வீரம், உகந்த பெண்களுக்குச் சொல்லவேணுமோ? 4. "லோகாம்ஸ்ச லோகாநுகதாந் பஸூம்ஸ்ச ஹித்வா ஸ்ரிதாஸ் த்வச்சரணாதபத்ரம் l பரஸ்பரம் தத்குணவாத ஸீது பர்யூஷ நிர்யாபிததோஹயாத்ரா: ll" m ராவணன்

பெ. அ. என்றத்தைப்பற்ற (உடலையும் உயிரையும்) என்றது. f, g திருவினைப் பிரித்தமையைப் பொல்லாங்காக்கி, விஸேஷபரமாகக் கீழ் ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து ஸாமாந்யமாக ஸகலவிதமான பொல்லாங்கையும் விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரத்தை ப்ரமாண பூர்வகம் அருளிச்செய்கிறார் (முன்பொலா இத்யாதி) வாக்ய த்வயத்தாலே) h "அரக்கன்" என்றால் போராதோ? "பொல்லா" என்னவேணுமோ? என்ன — அருளிச்செய்கிறார் (2. விபீஷணஸ்து இத்யாதி) k_2 நெஞ்சு உளுக்கும்படி — மநஸ்ஸைதிறல்யம் பிறக்கும்படி. l ஸௌத்ருத்யாதிகளைப் பாடவேண்டியிருக்க வீரசரிதத்தைப் பாடுகிறதென்னென்ன, அருளிச்செய்கிறார் (3. ரஞ்ஜநீயஸ்ய இத்யாதி) m. ப்ரதிகூலர் வீரத்துக்கு உகக்கக் கூடுமோவென்ன த்ருஷ்டாந்தம் காட்டிக்கொண்டு உபபாதிக்கிறார் (ராவணன் இத்யாதி)

நி. அ. பதின்மூன்றும் பாட்டு. (புள்ளின் வாய் கீண்டானை) d,e,f.h "பொல்லா அரக்கன்" என்றதுக்கு மூன்று பொருள். e பிராட்டியையும் பெருமாளையும் பிரித்த நிர்க்ருணன் என்னுதல்; f ஹேயனென்னுமித்தனைபோக்கி அவன் தண்மைக்குப் பாசுரமில்லை என்னுதல்; h விபீஷணனும்வானை வ்யாவர்த்திக்கிறது என்னுதல். h இதுக்கு ப்ரமாணம் (2. விபீஷணஸ்து தர்மாத்மா) என்று. i (திருவிளையாடு சூழலிலே நோய்புக்க இடங்களைக் கிள்ளிப் பொகடுமா போலே) என்றது-உத்யானத்திலே புழுக்களுற்றால் அந்த இலையைக் கிள்ளிப்பொகடுமா போலே, அநுகூலரான ஸ்ரீவிபீஷணனும்வானை நிறுத்தி, தோஷாம்ஸமான ராவணாதிகளை வாங்கிப் பொகட்டான் என்றபடி. j கீர்த்திமை-குணப்ரதை, k,l,m கீர்த்திமைக்கு மூன்று பொருள்; k முந்தினது ஸத்ருக்கள் பயப்படும் வீர்யம் என்று (ஸத்ரோ: ப்ரக்ருயாதவீர்யஸ்ய இத்யாதி) l இரண்டாம் அர்த்தம் (ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை: இத்யாதி) அதாவது—உகவாதார்க்கும் ஆகர்ஷகமான விக்ரமம் என்றபடி. m மூன்றும் அர்த்தம் (ராவணன் பெருமாள்

தி. அ. பதின்மூன்றும்பாட்டு (புள்ளின்வாய் கீண்டானை இத்யாதி) d, e, f "பொல்லா அரக்கனை" என்றதுக்கு இரண்டு பொருள். e 'நிர்க்ருணன்' என்னுதல், f இரண்டாம் தாத்பர்யம் (முன்பொலாவிராவணன் என்று தொடங்கி) இத்தால் தோஷபூயஸ்த்வம் சொல்லுகிறது. d,h வ்யதிரேகத்திலே தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (விபீஷணஸ்து தர்மாத்மா இத்யாதி) இது மூன்றும் தாத்பர்யம் என்றும் அருளிச்செய்வர். அதாவது—பொல்லா அரக்கனையொழிய நல்ல அரக்கரை ரக்ஷிக்குமென்று பெருமாள் குணத்திலே தாத்பர்யம். i (திருவிளையாடு சூழலில் நோய்) என்றது திருத்தோப்புக்குண்டான நோய் என்றபடி.

A பெரியதிரு 5-7-7 B திருக்குறு 15.

பெருமாள் வீரத்துக்கு இலக்கானன்; m₂ தங்கை அழகிலே கண்கலங்கினள்; m₃ தம்பி ஸீலத்துக்கு இலக்கானன். n (பாடிப்போய்) o இவர்களுக்குப் பாதே₂யம் இருக்கிறபடி; p 1. "பாதே₂யம் புண்ட₃ரீகாக்ஷநாமஸங்கீர்த்த நாம்ருதம்" என்று வழிக்கு தா₄ரகம் திருநாமமிறே. q A "தன்தாள்பாடி" என்னக்கடவதிறே.

(பிள்ளைகள் இத்யாதி₃) நாம் சென்று எழுப்பவேண்டும் ப₃ாலைகளும் உனக்கு முன்னே உணர்ந்து புறப்பட்டார்கள். r (பாவைக்களம் புக்கார்) க்ருஷ்ணனும் தாங்களும் s கழகமிடும் t ஸங்கேதஸ்த₂லம் புக்கார்கள்.

'அவர்கள் போகைக்குப் போதுவிடிந்ததோ?' என்ன (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) u வெள்ளி உச்சிப்பட்டது; v வியாழம் அஸ்தமித்தது. w உங்களுக்கு நக்ஷத்ரமெல்லாம் வெள்ளியும் வியாழமுமாயிறேயிருப்பதென்ன, அதுவேயன்று. (புள்ளும் x சிலம்பினகாண்) புட்கள் உணர்ந்தமாத்ரமேயன்றிக்கே இரைதேடிச் சிலம்பிப்போயிற்றினை.

y (போதரிக்கண்ணினுய்) z புஷ்பம்போலேயும் மான்போலேயுமிருந்துள்ள கண்; அரியென்று — மான். a அன்றிக்கே, பூவிலே வண்டு இருந்தாற்போலே

பெ. அ. n, o, p, q "பாடி" என்றது, "போய்" என்றதுக்கு ஹேதுவாகத் தோன்றுகையாலே, அத்தை ப்ரமாணபூர்வகம் உபபாதி₃க்கிறார் (இவர்களுக்கு இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே) q-A "தானுகந்தவூரெல்லாம் தன் தாள்பாடிப் பூங்கோவலூர்தொழுதும் போது நெஞ்சே" என்று பாடுகை வழிக்கு தா₄ரகமென்றதிறே என்றபடி.

s கழகம் — ஒலக்கம். t ஸங்கேதஸ்த₂லமாவது—வர்ஷார்த்த₂மாக இந்த்₃ராணியையும் ஸம்ஸ்லேஷார்த்த₂மாக ரதியையும் நோற்கைக்குப் பெண்கள் திரளுமிடம்.

சி. அ. வீரத்துக்கு இத்யாதி₃) அதாவது கீர்த்திமை என்று கு₃ணவத்தா ப்ரதை₂யைச் சொல்லி அந்த கு₃ணங்களுக்கு ஈடுபட்டபடி சொல்லுகிறது. m₂(தங்கை) ஸ்ரீர்ப்பணகை₂. m₃ (தம்பி) விபீ₄ஷணன். m₂(அழகிலே) என்றது 2. "தருணௌ" இத்யாதி₃யையும், m₃ (ஸீலத்துக்கு) என்றது 3. "ஸர்வலோகஸரண்யாய" என்றத்தையும் பற்ற. r,t. பாவைக்களம் — ஸங்கேதஸ்த₂லம், u வெள்ளி—ஸுக்ரன். v வியாழம் — ப்₃ருஹஸ்பதி. w (உங்களுக்கு நக்ஷத்ரமெல்லாம் வெள்ளியும் வியாழமுமாயிறே இருப்பது) என்றது — ப₃ால்யத்தாலும், ப்ரா₄வண்யத்தாலும் கண்டதெல்லாம் வெள்ளியும் வியாழமுமாய் இருந்தது என்றபடி. x சிலம்பினகாண் — சிதறின காண்-பரந்தனகாண். y,z,a b, "போதரிக் கண்ணினுய்" என்றதுக்கு மூன்று தாத்பர்யம். z போதென்று புஷ்பமாய், அரி என்று மானுய், புஷ்பம்போலும் மான்போலும் இருக்கிற கண் என்னுதல்; a அன்றிக்கே, போதென்று புஷ்பமாய். அரி என்று வண்டாய், பூவிலே வண்டு

கு.அ. y,z,a,b, "போதரிக்கண்ணினுய்" என்றதற்கு மூன்று தாத்பர்யம். z போதென்று புஷ்பம்; அதாவது நெய்தல் என்றபடி; அரி என்றுமான்; அத்தாலே மான்கண்ணுக்குச் சொல்லுகிறது; இத்தால் குவளைப்பூப்போலேயும். இளமான்கண்களைப்போலேயும் இருக்கிற கண் என்னுதல். a அன்றிக்கே 'அரி' என்று வண்டாய், பூவிலே வண்டு படிந்திருந்தாற்போலே என்னுதல்.

A திருநெடு 6.

என்றுமாம்; ''அரி'' என்று — வண்டு. b அன்றியே, போதை ஹரிக்கிற கண் என்றுமாம். c பூவோடே சீறுபாறென்னும் கண் என்னவுமாம். d (குள்ளக் குளிர) ஆதித்யனுதித்து நீர் கொதிப்பதற்கு முன்னே. e (குடைந்து e2 நீராடாதே) f 1. ''ஸரயூமவகாஹதே'' என்னும்படியே f1 க்ருஷ்ணவிரஹமாற நீராடப்போகாதே. g நமக்குச் செல்லுகிற க்ருஷ்ணவிரஹதாபம் ஶமிக்கைக்கும், இனி ஒருகால் க்ருஷ்ண விஶ்லேஷம் பிறவாமைக்காகவும் g2 க்ருஷ்ண குணங்களிலே அவகாஹித்து அநுபவிக்கப்பெருதே. h (போதரிக்கண்ணினுய்) i உன் கண்ணுலே க்ருஷ்ணனைத் தோற்பித்து, அவன் கண்ணுலே குமிழி நீருண்ணப்பாராதே. A நெடுங்கணிளமான் இவள்; A அனைத்துலகுமுடைய அரவிந்தலோசநன் அவன். இருவர்கண்ணுக்கும் இலக்கானவர்களிறே இவர்கள். j உன்னுடைய ஸௌந்தர்யம் எங்கள் பேற்றுக்கு உடலென்றிருந்தோம்; அங்ஙனன்றிக்கே, இழவுக்கு உடலாகாநின்றதோ? k (பள்ளிக்கிடத்தியோ) l க்ருஷ்ணஸ்பர்ஶமுடையதொரு படுக்கையை மோந்துகொடு கிடக்கிருயோ? விளைந்து கிடக்க m உதிர்நெல் பொறுக்குகிருயோ?

பெ.அ. c ''அரி'' என்று — ஶத்ருவாய், அத்தை அருளிச்செய்கிறார் (பூவோடே இத்யாதி3) g ஸ்வாபதே3ஶத்துக்குச்சேர அர்த்த2ம் அருளிச்செய்கிறார் (நமக்கு இத்யாதி3) h ,i இவனைக் கண்ணழகையிட்டுச் சொல்லுகிறது நீராடுகைக்கு உபயுக்தமென்னுமது தோற்றுகைக்காக என்று ப்ரதீகத்3வாரணபூர்வகம் ப4வம் அருளிச்செய்கிறார் (உன்கண்ணுலே இத்யாதி3) k, l கண்வளர்ந்திருக்கும் பெண்ணை ''பள்ளிக்கிடத்தியோ'' என்றதுக்கு ப4வம் அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணேத்யாதி3)

சி.அ. இருந்தாற்போலே இருக்கிற கண் என்னுதல்; b அன்றிக்கே புஷ்பத்தை ஹரிக்கிறகண் என்னுதல். e ''குடைந்து நீராடாதே'' என்றதுக்கு இரண்டு பொருள். f2 க்ருஷ்ண விரஹதாப மாறும்படி நீராடப்போகாதே என்னுதல்; f அதுக்கு ப்ரமாணம்(ஸரயூம் இத்யாதி3) g2 அன்றிக்கே க்ருஷ்ணகு3ணங்களிலே அவகா3ஹித்து அனுப4விக்கப்பெறுதே என்னுதல். e2,h,i 'போதரிக் கண்ணினுய்' என்றத்தோடே கூட்டி ''நீராடாதே'' என்றதுக்கு க்ருஷ்ணனுடைய கடாக்ஷத் தில் அவகா3ஹியாதே என்று தாத்பர்யம் (உன் கண்ணுலே) என்று, h''போதரிக்கண்ணினுய்'' என்று கண்ணழகைச் சொல்லுகிறதுக்குத் தாத்பர்யம் —உன்னுடைய் கண்ணழகாலே க்ருஷ் ணனை ஸ்வவஶமாக்கிக்கொண்டு க்ருஷ்ணனேடே இவர்கள் சேரும்படி புருஷீகரிக்கை. e குடைந்து–அவகா3ஹித்து. d குள்ளக் குளிர–மிகவும் குளிர. m (உதிர்நெல்) என்றது உஞ்ச2

கு.அ. b அதுவுமன்றிக்கே, நெய்தல்பூவைத் திரஸ்கரிக்கிற கண் என்னுதல். இப்போது 'அரி' என்று ஹரிக்கிற என்றபடி, d ''குள்ளக்குளிர''—மிகவும் குளிர. e2.f2 ''நீராடாதே'' என்றதுக்கு முந்தினது க்ருஷ்ணவிரஹதாபமாறும்படி நீராடாதே என்று; e2.g இரண்டாம்தாத்பர்யம்(நமக்குச் செல்லுகிற க்ருஷ்ண விரஹதாபம் இத்யாதி3) e2,h,i ''போதரிக்கண்ணினுய்'' என்றத்தோடே கூட்டி 'நீராடாதே'' என்றதுக்கு க்ருஷ்ணனுடைய கடாக்ஷத்தில் அவகா3ஹியாதே என்று அரு ளிச்செய்கிறார் (உன் கண்ணுலே க்ருஷ்ணனைத்தோற்பித்து)என்றுதொடங்கி, இத்தால் க்ருஷ்ண ஸம்ஶ்லேஷம் சொல்லுகிறது. h.j அன்றிக்கே ''போதரிக்கண்ணினுய்'' என்ற பத3த்துக்குத் தாத்பர்யம் அருளிச் செய்கிறார் (உன்னுடைய ஸௌந்தர்யம்) என்று தொடங்கி. அதாவது-

---

A திருவாய் 6-7-10.

n (பாவாய்நீ) o தனிக்கிடை கிடக்க வல்லளல்லேயே நீ. (நன்ஞளால்) க்ருஷ்ணன்கிடாய் பெண்கள்கிடாய் என்கிற நாட்டாரும் இசைந்து அவனும் நாமுமாய் ஜலக்ரீடை₃பண்ணி அவன் மடியிலே சாயலாம் காலத்தைப் பெற்று வைத்து, படுக்கையை மோந்துகொடு கிடப்பதே! p (நன்ஞளால்) q மேல்வருகிற நாள் ராவணுதி₃களேப்போலே பிரிக்கிற நாளிறே. r (கள்ளம்தவிர்ந்துகலந்து) கள்ளமாவது — தனியே க்ருஷ்ணகு₃ண சேஷ்டிதங்களே நினைத்துக்கிடக்கை. அத்தைத் தவிர்ந்து எங்களோடே கலந்து; s 'எங்களுக்கு உன்னைக்காட்டாதே மறைக்கையாகிற t ஆத்மாபஹாரத்தைத் தவிர்ந்து எங்களோடே கல' என்றுமாம். u ஸேஷத்வத்தை அபஹரித்தால் ஸேஷியை க்ஷமைகொள்ளலாம்; v ஸேஷித்வத்தை அபஹரித்தால் பொறுத்தோமென்பாரில்லே; குற்றம் நின்றேபோமித்தனே.

கலந்து — குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ என்று அந்வயம். 13.

பெ. அ. n, o பாவையாயிருக்குமவனே 'பாவாய்' என்று மீளவும் ஸம்போ₃தி₄க்கைக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (தனி இத்யாதி₃)

u, v தன்னை மறைத்தால் வந்த விரோத₄மென்னென்ன அருளிச்செய்கிறார் (ஸேஷத்வத்தை இத்யாதி₃) 13.

சி. அ. வ்ருத்தி. p, q "நன்ஞளால்" என்றதுக்குத் தாத்பர்யார்த்தரம் (மேல்வருகிற நாள் இத்யாதி₃) r,s, "கள்ளம் தவிர்ந்து" என்கிறதுக்குத் தாத்பர்யார்த்தரம் (எங்களுக்கு உன்னை இத்யாதி₃) u ஸேஷத்வத்தை அபஹரிக்கை - இதரஸேஷமாகை. t (ஆத்மாபஹாரத்தை) ஸேஷியான உன்னுடைய அபஹாரத்தை என்றபடி. v ஸேஷித்வாபஹாரத்தால் வந்த ஹானி ஏதென்ன அருளிச்செய்கிறார் (ஸேஷித்வத்தை அபஹரித்தால் இத்யாதி₃) ஸேஷித்வத்தை அபஹரிக்கை—ஸ்வதந்த்ரையாகை.

இப்பாட்டுக்கு ஸ்வரூபதே₃ஶ-ப₄க₃வத₃நுப₄வ பரிகரமான ஜ்ஞான வைராக்₃ய ப₄க்திகளாலே பரிபூர்ணராயிருக்குமவர்கள் நிறத்தில் தத₃ர்த்த₂மாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபம் என்று. 13.

கு. அ. கண்ணழகாலே க்ருஷ்ணனே ஸ்வவஶமாக்கிக்கொண்டு க்ருஷ்ணனேடு இவர்கள் சேரும்படி புருஷீகரிக்கை.

[புள்ளின்வாய் கீண்டானே என்று தொடங்கி, போதரிக்கண்ணையுடைய பாவாய்! நீ நன்ஞளால்—கள்ளம் தவிர்ந்து கலந்து குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே பள்ளிக்கிடத்தியோ] என்று அந்வயம். 13.

ஆருயிரப்படி பதின்மூன்றும் பாட்டு

அவ:— பதின்மூன்றும் பாட்டு. (புள்ளின்) தன் கண்ணழகை நினைத்து, 'இக்கண்ணழகுடைய நானிருந்தவிடத்தே எல்லாரும் வருமத்தனையன்றே; நானே போவேன்?' எனபாளொருத்தியை எழுப்புகிறார்கள். ''மனத்துக்கினியானைப்பாடவும்'' (12) என்று-இவர்கள் சொன்ன பாசுரத்தை அசல் மாளிகையிலே கேட்டுக் கிடப்பாளொரு பெண்பிள்ளை, நம் அபராதந்தீர இவர்களுக்கு வார்த்தை சொல்லுவோமென்று, ''பெண்காள்! இங்கு ராமவ்ருத்தாந்தம் சொல்லுருண்டோ?'' என்ன; 'ராமவ்ருத்தாந்தமுஞ் சொன்னேம்; க்ருஷ்ணவ்ருத்தாந்தமுஞ் சொன்னேம்; ஸ்ரீராமாயணமும், பாரதமும், ஸ்ரீபாஞ்சராத்ரமுமகப்படச் சொன்னேம்' என்கிறார்கள்.

வ்யா:— (புள்ளின்வாய் கீண்டானை) A ''பள்ளத்தில் மேயும் பறவையுருக் கொண்டு கள்ளவசுரன்'' ''கள்ளச்சகடம்'' (6) என்னுமாபோலே, மேய்கிற கொக்கிலே அஸுரன் ஆவேஸித்து நலியப்புகுந்தான். A ''பொதுக்கோ'' என்று-கீண்டசடக்கைச் சொல்லுகிறது. (புள்ளின்வாய்கீண்டானை) இது இவர்களுக்கு ராவணவதம் பண்ணினபடி. இத்தலைக்கு அநுமதியிறே வேண்டுவது. விரோதியைப் போக்கித் தன்னைக் கொடுக்கை அவன் பணியிறே. இவனுடைய அநுமதியும் அவனுடைய ரக்ஷகத்வமும் ஸ்வரூபத்திலே புகுமத்தனை. கர்மஜ்ஞாநங்களை ஸஹகாரியாகக்கொண்டு பக்தி உபாயமென்றிருக்குமவர்களன்றே; தன்னுடைய அஜ்ஞாநாஸக்திகளையும், அவனுடைய ஜ்ஞாநஸக்த்யாதிகளையும் ஸஹகாரியாகக் கொண்டு அவனே உபாயமென்றிருக்குமவர்களிறே. கீழிற் பாட்டிலும் இப்பாட்டிலும் ராமவ்ருத்தாந்தத்தைச் சொன்னால் ''ஒருகால் சொன்னதன்றயே சொல்லாநின்றீர்களே'' என்று நினைக்கக்கூடும் என்று, தங்கள் பாழியான க்ருஷ்ணவ்ருத்தாந்தத்தையும் கூட்டிச்சொல்லுகிறார்கள். தங்களுக்குப் பள்ளமடையான க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லிற்றிலை, பின்னை ராமவ்ருத்தாந்தமென்னென்னில்; தங்களோடொருகோவையான பிராட்டி பிரிவு பொறுக்கமாட்டாதவருடைய வ்ருத்தாந்தமென்று சொல்லுகிறார்கள். (பொல்லாவரக்கனை) உயிரையுமுடலையும் பிரித்தாற்போலே, தாயையும் தமப்பனையும்ஓரிடத்தில் சேரவிருக்கவொட்டாதே பிரித்த நைர்க்ருண்யத்தாலே வந்த தண்மையை நினைத்து ''பொல்லா'' என்கிறது. B ''ஞான்பொலாவிராவணன்'' என்னுமத்தனை போக்கி, அவன் தண்மைக்குப் பாசுரமில்லையிறே; C திருவினைப் பிரித்த கொடுமையிறே; 1. ''துர்வ்ருத்த:'' என்னுமித்தனையிறே. இத்தண்மையை. பிராட்டியும், 2. ''த்வந்நீச'' என்றருளிறே. (பொல்லாவரக்கனை) 3. ''விபீஷணஸ்து தர்மாத்மா'' என்று-நல்லவரக்கனுமொருத்தனுண்டிறே. (பொல்லாவரக்கனை) 4. ''ஜகத்ஸர்வலம் பரிவர்த்தயாம்யஹம்'' என்ற நிலைமாறி, தண்ணிப பையல்களளவிலே பர்யவஸித்தபடி. (அரக்கரை) மாயாம்ருகத்தைக் காட்டுவார், மாயாஸீரஸ்ஸைக் காட்டுகைக்கு ஸஹகரிப்பார், க்ருத்ரிமத்தாலே பிரித்த:

A பெரியாழ் திரு 2-5-4, B திருக்குறு 15, C பெரிய திரு 5-7-7.

விடம் அழகியதாய்ச் செய்ததென்பாராய், ராவணனில் தண்ணியாரில்லையிறே இஜ் ஜாதிக்குள். (கிள்ளிக்களைந்தானை) வீரபத்னியாகையாலே A ''கல்லெடுத்து'' என்னுமா போலே, ''கிள்ளி'' என்கிறார்கள். திருவிளையாடுசூழலில் நோவுபட்ட இடங்களைக் கிள்ளிப்பொகடுமாபோலே, தே₃ஷாம்ஶத்தை வாங்கிப் பொகட்டபடி. (கீர்த்திமை பாடி) 1. ''ஶத்ரோ: ப்ரக்₂யாதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:'' என்று-எதிரிகளும் மேலெழுத்திடும்படியான வீர்யமிறே. உகவாதார்க்கும் விடவொண்ணுத வீரம் உகந்த பெண்களுக்குச் சொல்லவேணுமோ? எதிரம்புகோத்த ஸம்ஸாரிகள் 2. ''நமோ நாராயணாய'' என்று-தங்களுடைய தோல்விக்கும் அவனுடைய ரக்ஷகத்வத்துக்கும் மேலெழுத்திட்டுக் கொடுத்தாற்போலே. ராவணன் பெருமாள் வீரத்துக்கிலக்கானான்; தங்கை அழகிலே கலங்கினாள்; தம்பி ஶீலத்துக்கிலக்கானான். 'விரஹ து₃ர்ப்ப₃லைகளானவர்கள் போனபடியென்?' என்னில் — (பாடிப்போய்) பாட்டே தா₄ரகமாகப் போனார்கள்: கால்நடைதருகைக்கு தா₄ரகம் திருநாமமிறே. 3. ''பாதே₂யம் புண்ட₃ரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதம்''—ஸாக்ஷாத்பாதே₂யம் திருநாமஸங்கீர்த்தநம் B ''தன்தாள்பாடி'' என்னக்கடவதிறே. (பாடிப்போய்) 4. ''ப₄வதோ ப₃லேந'' என்கிறபடியே (பிள்ளைகளெல்லாரும்) நாம் சென்று எழுப்பிக் கொண்டுபோக வேண்டும்படி—ப₃லைகளான பெண்களெல்லாருமூணர்ந்து புறப்பட்டு, க்ருஷ்ணன் பெண்களை மெய்க்காட்டுக்கொள்ளும் ஸங்கேதஸ்த₂லத்தேறப்போனார்கள். ''பாவைக்களம்'' என்று-இந்த்₃ராணியை, ரதியை நோற்கைக்குப் பெண்கள் திரளுமிடம். திரளுமிடத்தை, ''நெற்களம், போர்க்களம்'' என்னுமாபோலே.

''ப₃லைகளாகையாலே அவர்கள் காலமறியாமே போகக்கூடும், அறிந்த நாம் அகாலத்திலேபோகவொண்ணுதிறே; ஶுக்ரன் உதி₃த்தானுகில் பாருங்கோள்'' என்ன— (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) ஶுக்ரப₄கவானும் மத்₄யக₃தனானான், ப்₃ருஹஸ்பதியும் அஸ்தமித்தான். ''நீங்களும் அபி₄நிவிஷ்டைகளாகையாலே நக்ஷத்ரஸாத்₃ருஶ்யத்தைக்கொண்டு; நக்ஷத்ரமெல்லாம் ஶுக்ரப்₃ருஹஸ்பதிகளாயிறே தோற்றுவது— C நின்றகுன்றத்தினை நோக்கி நெடுமால் என்னுமவர்களன்றே; ஆகையால் புதுவிடிவுக்குடலன்று; வேறடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்'' என்ன 'நாங்களித்தனைபேர் திரண்டு வந்ததடையாளமன்றே?' என்கிறார்கள்; 'பிரிந்தார் திரளிலன்றே திரட்சிவாவது; D ''ஈட்டங்கண்டிடக் கூடுமேல்'' என்றும், E ''ஒருகாலும் பிரிகிலேன்'' என்றும் திரியுமவர்களன்றே நீங்கள்; உங்கள் திரட்சி விடிவுக்குடலன்று; வேறுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன—(புள்ளுஞ் சிலம்பினகாண்) கீழேயும் ''புள்ளுஞ் சிலம்பின'' (6) என்றது, அங்கு-கூட்டில் தீர்ற்றும் சிலம்பினபடி சொல்லிற்று; இங்கு-கூட வழியே போகிடமெல்லாம் போய், ஆஹாரார்த்த₂மாகச் சிதறினபடி சொல்லுகிறது.

'திர்யக்குக்களினுடைய வ்ருத்தாந்தங்கொண்டோ காலநியதிபண்ணுவது?' என்று அவள் பேசாதே கிடந்தாள்; ''நாங்கள் சொன்ன வார்த்தைகளுக்கெல்லாம் விபரீதஞ் சொல்லுகிறது உன் கண்ணழகை நினைத்திறே'' — (போதரிக்கண்ணினாய்) உபாஸ்யமிருந்தவிடத்திலே உபாஸகன் வருமித்தனையன்றே. 5. ''அஸிதேக்ஷணே'' புண்ட₃ரீ

A திருநெடு 13, B திருநெடு 6, C திருவாய் 4-4-4, D பெரு - திரு 2-1, E பெரிய திரு 7-4-4.

காக்ஷனிருந்தவிடத்தில் போகக்கடவளோ? என்கிறார்கள். A ''நெடுங்கணிளமான்'' A ''அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனன்'' என்று-அவனுடைய விபூதியும் இவள் கண்ணில் பரப்பிலே ஒரு மூலைக்கும் போராதென்றதிறே. (போது அரிக் கண்ணி) பூவும் மானும் போன்ற கண்; பூவில் படிந்த வண்டு போன்ற கண் என்னவுமாம்; பூவோடே சிறுபாறு என்ற கண் என்னவுமாம்; உலாவுகின்ற மான்போலே இருக்கிற கண் என்னவுமாம். ''அரி'' என்று- மானென் னவுமாம் வண்டென்னவுமாம், ஸ்த்ரு வென்னவுமாம். (குள்ளக் குளிர) ஆதித்யகிரணம் பட்டுக்கொதிப்பதுக்கு முன்னே. ஆழ முழுகினாலும் விரஹதாபம் அங்கும் புகுந்து சுடுமென்னுமிடம்றியார்களே. (குடைந்து நீராடாதே) 1. ''ஸரயூமவ காஹதே'' என்னுமாபோலே, க்ருஷ்ணவிரஹதாபமாற நீராடப்போராதே. நமகுச செல்லுகிற க்ருஷ்ணவிரஹதாபம் ஸமிக்கைக்கும் இனி ஒருகாலும் க்ருஷ்ணவிஸ் லேஷம் பிறவாமைக்காகவும். கிருஷ்ண குணங்களை அவகாஹித்து அநுபவிக்கப் போராதே. உன் கண்ணுலே க்ருஷ்ணனைத் தோற்பித்து, அவன் கண்ணுலே குமிழி நீருண்ணப்போராதே. இருவர்கண்ணுக்குமிலக்கானவர்களிறே நாங்கள். உன்னுடைய ஸௌந்தர்யம் எங்கள் பேற்றுக்குடல் என்றிருந்தோம்; அங்ஙனன்றே? (பள்ளிக் கிடத்தியோ) நாமுமவனுமாய் அவன் முழுக்கூட்ட, அவனேடே ஜலக்ரீடைபண்ணி அவன் மடியிலே சாயக்கடவ அத்தைவிட்டு, அவன் ஒருகால் கிடந்த படுக்கையென்று அத்தை மோந்து கொண்டு கிடக்கிறபோ? 2. ''தவாங்கே ஸமுபாவிஸம்''. பார்த்த பார்த்தவிடமெங்கும் விளைந்துகிடவாநிற்க, உஞ்சவ்ருத்திபண்ணி ஜீவிப்பாரைப்போலே.

(பாவாய் நீ) க்ருஷ்ணனுடைய கண்ணுக்கிலக்காம்படியான நிருபாதிக ஸ்த்ரீத்வத்தையுடைய நீ தனிக்கிடைக்கிடக்கவல்லையோ? (நன்னுளால்) ''காலம் பரிணமி'' என்னுமிடமறிகிலையோ? அநந்தரம் 3. ''வயோSஸ்யா ஹ்யதிவர்த்ததே'' என்று ஸோகிக்கும்படியன்றேயிருப்பது. காலக்ருதபரிணாமமில்லாத தேஸத்தி லுள்ளவர்களும் ஆறியிராநின்றார்களே? அன்றிக்கே, (நன்னுளால்) இனிச் சற்றுப் போது கழிந்தால் எங்களைத்தான் உன் வாசலிலே நிற்கவொட்டுவர்களோ? ''க்ருஷ்ணன் கிடாய், பெண்கள் கிடாய்'' என்கிற நாட்டாரிசைந்து, க்ருஷ்ணன் முகத்திலே விழிக்கப் புகுகிறநாளன்றே; ஆறியிருக்கிறதென்? (கள்ளம் தவிர்ந்து) கள்ளமாவது- தனிபே க்ருஷ்ணகுணசேஷ்டிதங்களை நினைத்துக் கிடக்கை; அத்தைத் தவிர்ந்து, எங்களோடே கலந்து. (கள்ளம் தவிர்ந்து) அவனேடே கலந்த உடம்புகாண உகக்கு மவர்களன்றே நாங்கள்; எங்களுக்கு மறைக்கிறதென்? அந்த ஆத்மாபஹாரத்தைத் தவிர்ந்து எங்களோடே கலக்கப்பாராய். 4. ''சோரேணாத்மாபஹாரிணி'' என்று- ஸோஷத்வத்தை அபஹரித்தால் ஸோஷியை க்ஷமைகொள்ள, இக்குற்றம் அவன் பொறுக்கத் தீரும்; ஸோஷித்வத்தை அபஹரித்தால் ஸோஷியுடைய குற்றம் பொறுத்தோமென்பாரில்லை; குற்றம் நின்றநுபவித்தே போமித்தனை; ஆனபின்பு' எங்களுடைய குற்றம்போலன்றுகாண் அவனேடே கலந்த உடம்பைக் காட்டாத உன்னுடைய குற்றம்.

''கள்ளந்தவிர்ந்து கலந்து-குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே-பாவாய் நீ நன்னுளால்-பள்ளிக்கிடத்தியோ'' என்று அந்வயம். 13.

A திருவாய் 6-7-10

ஈராயிரப்படி — பதின்மூன்றும் பாட்டு

அவ:— பதின்மூன்றும் பாட்டு. இவளெழுப்புகிறது அசலகத்தே கேட்டுக் கிடந்தாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (புள்ளின்வாய் கீண்டானை) கொக்கின் வடிவு கொண்டு வந்த ப₃காஸுரனைப் பிளந்தவனை. (பொல்லாவரக்கனை) தாயையும் தமப்பனையும் பிரித்த நிர்க்₄ருணனை. A "சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்". (பொல்லா) B "முன்பொலா இராவண"னிறே. பிராட்டி 1. "த்வம் நீசஸ்₂ரவத்" என்றுள். 2. "விபீ₄ஷணஸ்து தா₄ர்மாத்மா ந து ராக்ஷஸ சேஷ்டித:" என்று நல்ல அரக்கனும் உண்டென்கை.

(கிள்ளிக்களைந்தானை) மறுவலிடாதபடி கிழங்கோடே வாங்கினபடி; தே₃வாஷாம்ஸ்₂தை வாங்கிப் பொகட்டபடி; கு₃ணம்ஸ்₂ஸ ஸ்ரீவிபீ₄ஷணஸ்₂ஸ்வான். (கீர்த்திமை) எதிரிகள் நெஞ்சு உளுக்கும்படியிறே பெருமாள் பராக்ரமம் இருக்கும்படி. 3. "ஸ்₂தை₂ர்ய: ப்ரக்₄யாத வீர்யஸ்ய" என்னும்படியான வீர்யம். ராவணன் வீர்யத்துக்கிலக்காஸ்₂ஸ். தங்கை அழகுக்கிலக்காஸ்₂ள். தம்பி ஸ்₂ரீலத்துக்கிலக்காஸ்₂ன். தங்களுக்கு ப₃லமுண்டாக அவன் விஜயத்தையே அனுஸந்தி₄க்கிறார்கள்; பரம சேதனன் உபாயமாமிடத்தில் அது 4. "ஜ்ஞாநஸ்₂தி₂கருணஸ்₂ஸ்" என்கிற ஜ்ஞான ஸ்₂தி₂ க்ருபைகள் வேண்டுகையாலே, அவற்றை அனுஸந்தி₄த்து மார்விலே கை வைத்து உறங்குமவர்கள் இவர்கள். 5."கு₃ணவாந் வீர்யவாந்" இறே. (பாடிப்போய்) கால் கொண்டு போய் என்கை. (பிள்ளைகளெல்லாரும்தி₃) "இன்னமுணர்ந்து முணராத சிறு பிள்ளைகளை எழுப்பிக்கொண்டு விடிந்தவாறே போகிறோம்" என்ன, 'அவர்கள் முன்னே உணர்ந்து க்ருஷ்ணன் மெய்க்காட்டுக்கொள்ளுமிடம்புக்கார்கள்' என்கிறார்கள். (பாவைக்களம்) "போர்க்களம் நெற்களம்" என்பாரைப்போலே. (பிள்ளைகளெல்லாரும்) எல்லாரும் — நாம் சென்றெழுப்ப வேண்டும்படியான ப₃ர்லைகளும். (பாவைக்களம்) ஸங்கேதஸ்தா₂லம். "அவர்கள் போனார்களாகிலும் அகாலத்திலே போகவேணுமோ? விடிந்தால் போருங்கோள்" என்ன — (வெள்ளி. யெழுந்து) 'நினைக்கிறபடியே வெள்ளியுச்சிப்பட்டு வியாழனும் அஸ்தமித்தது' என்ன; "நக்ஷத்ரங்கள் கண்டதெல்லாம் வெள்ளியாயும் வியாழமாயுமன்றே உங்களுக்குத் தோற்றுவது; அவை புனர்பூசமும் பூசமுமாகக் கொள்ளீர்: மற்றடையாளமுண்டோ" என்ன, 'நாங்கள் திரண்டு தோன்றுமதுஅல்லவோ?'என்ன,'நீங்கள் பிரியிலன்றே திரளவேண்டுவது. மற்றடையாளமுண்டோ?' என்ன—(புள்ளும் சிலம்பினகாண்) புள்ளும் சிதறிப் போந்தன. (போதரிக்கண்ணினாய்) "இக்கண்ணுடைய எனக்கு ஒரிடத்தே புறப்படவேணுமோ என்ன? என்காலிலே விழுகிறார்கள்" என்று கிடக்கிறாயோ? (அரி) வண்டு. பூவிலே வண்டிருந்தாற் போலே. 6. 'அஸிதேக்ஷணே' யாகையாலே, அவனும் அவன் விபூ₄தியும் கண்ணிலொரு மூலைக்குப் போராது. இக்கண்ணாலே அவனைக் குமிழிநீருண்ணப்பாராய். (குள்ளக்குளிர) ஆதி₃த்ய கிரணங்களாலே நீர் வெதும்புவதற்கு முன்னே. (குடைந்து நீராடாதே) தாங்களாகையாலே உள்ளே கிடந்தாலும் தங்கள் ஸம்ப₃ந்த₄த்தாலே கொதிக்குமென்று அறிகிறிலள். (பள்ளிக்கிடத்தியோ) பிள்ளைகள் தாங்களும்

A பெரியதிரு 5-7-7. B திருக்குறு 15.

படுக்கையை விட்டுப் போகாநிற்க, நீ படுக்கையிலே கிடப்பதே! அவன் கிடந்து போன படுக்கையென்று மோந்து கொண்டு கிடக்கிறுயோ? பயிர் விளைந்து கிடக்க, கதிர் பொறுக்கி ஜீவிக்கிறுயோ? (பாவாய் நீ) தனி கிடக்கவல்லனோ நீ? (நன்னுள்) அடிக்கழஞ்சு பெற்ற இந்நாளிலே. இந்நாலு நாளும் போனுல், மேலில் நாள்கள் ராவணனைப்போலே பிரிக்கும் நாள்கள்.

(கள்ளம் தவிர்ந்து) 1. 'சோரேணுத்மாபஹாரிணு" என்று தத்வஸ்துவிலும் ததீயவஸ்துவை அபஹரிக்கையன்றே பெருங்களவு. "கலந்து குள்ளக்குளிரக் குடைந்து நீராடாதே" என்று க்ரியை. 13.

நாலாயிரப்படி — பதின்மூன்றும் பாட்டு

அவ:-பதின்மூன்றும்பாட்டு. இவளை எழுப்புகிறது அசலகத்திலே கேட்டுக்கிடந்தா ளொருத்தி தன்னபராதத்தைத் தீர உணர்ந்தாளாய், 'பெண்காள்! இங்கும் ராமவ்ருத் தாந்தம் சொல்லி எழுப்பினிகோளோ?' என்ன, 'ராமவ்ருத்தாந்தமும் சொன்னேம், க்ருஷ் ணவ்ருத்தாந்தமும் சொன்னேம், ஸ்ரீராமாயண மஹாபாரதங்களிரண்டும் சொன்னேம்' என்று கண்ணழகியாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (புள்ளின் வாய்கீண்டானை) கொக்கின் வடிவு கொண்டு வந்த அஸு ரனைப் பிளந்தபடி. A "பள்ளத்தின் மேயும்". இத்தலைக்கு இசைவேயிறே வேண்டுவது. விரோதி போக்குகை அவன் படியென்றிருக்கை. நம்முடைய அநீதிகளுக்கு ஈச்வரன் பண்ணும் அநுமதி வைஷம்ய நைர்க்ருண்யத்தில் புகாதாப்போலே, இவ்வநுமதி உபாயத்தில் புகாது. இருவர்க்கும் இரண்டநுமதிகளும் ஸ்வரூபத்திலே கிடக்குமத் தனை. (பொல்லாவரக்கனை) தாயையும் தமப்பனையும் பிரித்த நிர்க்ருணனை. B "சுரிகுழல் கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்". (பொல்லா) C "முன் பொலாவிராவணன்தன் முதுமதிளிலங்கைவேவித்து". பிராட்டி 2. "த்வம் நீச ஸமாவத் ஸ்ம்ருத:" என்றுள். இவள்தானும், D "அன்றின்னுதன செய்சிசுபாலன்" என்றுள். 3. "விபீஷணஸ்து தர்மாத்மா நது ராக்ஷஸ சேஷ்டித:" என்று நல்லவர்க்கனு முண்டென்கை. 4. "ஸீதாயாஸ்சரிதம் மஹத்" என்கிற பிராட்டிவ்ருத்தாந்தம் ஸ்ரீராமாயணமான படியென்னென்னில்; 5. "குணவாந்" என்றது அவனையும் அவளை யும் கூட்டி வாழ நினைக்குமவர்களோடு பரிமாறினபடி. 5. "வீர்யவாந்" என்றதுபிரிக்க நினைத்தார் முடியும்படி. 5. "தர்மஜ்ஞ:" என்றது அவர்கள் ஸ்வரூபமுணர்ந்திருக்கும்படி.

(கிள்ளிக்களைந்தானை) மறுவலிடாதபடி கிழங்கோடே வாங்கினபடி. திருவிளை யாடு சூழலில் புழுத்தவிடம் கிள்ளிப் பொகடுமாபோலே, ஆஸ்ரிதர் குடியில் தோஷாம் ஸத்தை வாங்கிப்பொகட்டபடி. (கீர்த்திமை) எதிரிகள் நெஞ்சு உளுக்கும்படி. 6. "ஸத்ரோ: ப்ரக்ருதாதவீர்யஸ்ய" என்னும்படியிருக்கும் வீரம். ஸத்ருக்களும் மேலெழுத்திட்டுக்கொடுக்கும் வீரம். 7. "க இதி ப்ரஹ்ம மஜ்ஞை நாம" என்று பரரானவர்கள் பகவத்பரத்வத்துக்கு மேலெழுத்திட்டுக் கொடுக்குமாபோலே; ஆத்மாபஹாரிகள் எதிரம்பு கோக்கை தவிர்ந்து 8. "நமோ நாரா ணாய" என்று அவனுடைய ஸுலப்யத்துக்கு மேலெழுத்திட்டுக்கொடுக்குமாபோலே. (ரஞ்ஜநீயஸ்ய) தோளாலே நெருக்குண்ட பிராட்டியார் சொல்லுமாபோலே சொல்லுவதே!

A பெரியாழ் திரு 2-5-4, B பெரிய திரு 5-7-7, C திருக்குறு 15; D நாச்-திரு 4-7.

உகவாதார்க்கும் விடவொண்ணுத வீரம் உகந்த பெண்களுக்கு விடவொண்ணுமைக்குச் சொல்லவேணுமோ? ராவணன் பெருமாள் வீரத்துக்கிலக்காணுன், தங்கை அழகுக்கிலக்காளுள்; தம்பி ஸீலத்துக்கிலக்காணுன். தாங்கள் அப₃லைகளாகையாலே தங்களுக்கு ப₃லமாக அவன் விஜயத்தை அநுஸந்தி₄க்கிறபடி. கர்மஜ்ஞாநப₄க்திகள் உபாயமாமிடத்தில் இவனும் கூடவேணும். பரமஸேதநனுன இவன்தானே உபாயமாமிடத்தில் 1- "பாபீயஸோபீத்யாதி₃ —த்வஜ் ஜ்ஞாநப₄க்திகருணுஸ்ஸ ஸதீஷ்ட" என்று ஜ்ஞாநப₄க்திக்ருபையே ஸஹகாரமாகையாலே அவற்றை அநுஸந்தி₄த்து மார்விலே கைவைத்துக்கொண்டு உறங்குவார்களிவர்கள். (பாடிப்போய்) இவர்களுக்குக் கால்நடை தருகைக்கு மிடுக்குக்கால் கொண்டு போகை. ஸுகுமாரரான பிள்ளைகள் 'உண்டுண்டு வழிபோய்' என்னுமாபோலே. 2. "பரஸ்பரம் தத்₃கு₃ணவாத₃ஸீது₄ பீயூஷ நிர்யாபிதேஹயாத்ரா:" 3. "பாதே₂யமித்யாதி₃". A போழ்துபோக உள்ளகிற்கும் புன்மையில்லாதவர்கள் இவர்கள். அவர்களுக்கு A "வாழ்துணையா வடமதுரைப் பிறந்தவ" னன்ரோ; இவர்களுக்குச் சொல்ல வேணுமோ?

(பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார்) 'இன்னமுணர்ந்தும் உணராத சிறுபிள்ளைகளையும் எழுப்பிக்கொண்டு விடிந்தவாறே போகிறோம்' என்ன; 'அவர்கள் உனக்கு முன்னே உணர்ந்து க்ருஷ்ணன் மெய்க்காட்டுக் கொள்ளுமிடம் புக்கார்' என்கிறார்கள். (பாவைக்களம்) 'போர்க்களம்' 'நெற்களம்' என்னுமாபோலே; (எல்லாரும்) நாம் சென்றெழுப்பவேண்டும்படியான ப₃லைகளும். (பாவைக்களம்) ஸங்கேதஸ்த₂லம். 'அவர்கள் போனுர்களாகிலும் அகாலத்திலே போகவேண்ணுது. வெள்ளி எழுந்ததோ பாருங்கோள்' என்ன—(வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) நீ நினைக்கிறவளவு தப்பி வெள்ளி உச்சிப்பட்டு வியாழம் அஸ்தமித்தது.

'நக்ஷத்ரம் கண்டதெல்லாம் வெள்ளியாயும் வியாழமாயும்ன்ரோ உங்களுக்குத் தோற்றுவது; அவை புன்பூசம் பூசங்களாகக் கொள்ளீர்; மற்றடையாளமுண்டோ?' என்ன; 'நாங்கள் திரண்டதொன்றுமல்லவோ?' என்ன, 'நீங்கள் பிரியிலன்ரோ திரளவேண்டுவது, மற்றடையாளமுண்டோ?' என்ன —. (புள்ளும் சிலம்பினகாண்) அது ப்ரமாணமன்றுகில் புள்ளும் சிதறிப்போயிற்றின. பண்டு ஒருகால் 'புள்ளும் சிலம்பின' (6) என்றது; அப்போது கூட்டிலேயிருந்து சிலம்பிற்று; இப்போது பறந்து போகத் தொடங்கிற்று என்கை. (போதரிக்கண்ணினுய்) 'உங்கள் வார்த்தை பழகிறிலேன்' என்று பேசாதே கிடக்க, 'இக்கண்ணுடைய எனக்கு ஓரிடத்திலே புறப்படவேணுமோ? எல்லாரும் என்காலிலே வந்து விழுகிறார்கள்' என்று கிடக்கிறுவோ? (போது அரி) பூவும் மானும் போன்றகண்; பூவிலே வண்டிருந்தாற்போலே என்றுமாம்; பூவோடே சீறுபாலென்றுமாம். 4. "அஸிதேக்ஷிணே"யாகையாலே 'புண்டரீகாக்ஷன் பக்கல் போகவேணுமோ?' என்னும். தான் B "நெடுங்கணிளமான்"; அவன் B "அகத்துலகமுடைய அரவிந்தலோசனன்"; அவனும் அவன் விபூ₄தியும் இக்கண்ணிலே ஒரு மூலைக்குப் போராது. (போதரிக்கண்ணினுயித்யாதி₃) இக்கண்ணிலே அவனைக் குமிழிநீரூட்டி அவன் கண்ணிலே நாம் குமிழிநீருண்ணப் பாராய் என்கை. (குள்ளக்குளிர) ஆதி₃த்யகிரணத்தாலே நீர் வெதும்புவதற்கு முன்னே

A திருவாய் 9-1-8. B திருவாய் 6-7-10.

புறப்பட்டு. பெண்களும் புறப்பட்டு, நீர் வெதும்புவதற்கு முன்னே என்னவுமாம். (குடைந்து நீராடாதே) தாங்களாகையாலே உள்ளே குடைந்தாடும் தங்கள் ஸம்பந்தத்தாலே கொதிக்குமென்றறிகிறிலள்.

(பள்ளிக் கிடத்தியோ) பிள்ளைகள் படுக்கையிலே விட்டுப் போகாநிற்க, நீ படுக்கையிலே கிடப்பதே அவன் கிடந்துபோன படுக்கையை மோந்து கொண்டு! பயிர் விலைந்து கிடக்கக் கதிர் பொறுக்கி ஜீவிக்கிறுயோ? (பாவாய் நீ) தனிக்கிடக்க வல்லனோ நீ? (நன்னுள்) அடிக்கழஞ்சு பெற்ற நாளிறே; இந்நாலு நாளும் போன வாறே பெண்களும் க்ருஷ்ணனும் என்று புகுகிறார்கள் கிடாய்? இந்நாலுநாளும் போனவாறே மேல் நாள்கள் ராவணனைப் போலே பிரிக்கும் நாட்கள். ஆண்டாள் திருவேகாதசி படிந்நிவிட்டு பட்டரை 'தீர்த்தம் தாரும்' என்ன, 'இப்பெரிய திருநாளிலே இதொரு திருவேகாதசி எங்ஙனே தேடி எடுத்துக்கொண்டிகோள்' என்றருளிச்செய்தார்.

(கள்ளம் தவிர்ந்து) 1. "சோரேணாத்மாபஹாரிணா" என்ற தத்வஸ்துவிலும் ததீயவஸ்துவை அபஹரிக்கையன்றே பெருங்களவு. A "என்னுடை நாயகனே" என்னும்படியே ஸ்வாமித்வத்தைச்சொல்லி, போஷ்யதனுக்கு போஷகத்வத்தை அபஹரித்தால் போஷியை க்ஷமை கொள்ளலாம். போஷிக்குத் தன் போஷித்வத்தை அபஹரித்தால் க்ஷமை கொள்ளுகைக்குப் பொறுத்தோமென்பாருமில்லையே; குற்றம் நின்றேபோமித்தனை. "கலந்து குள்ளக்குளிரக்குடைந்து நீராடாதே பாவாய் பள்ளிக் கிடத்தியோ" என்று க்ரியை. 2. "தஸ்யோபவநஷண்டேஷு" இத்யாதி. 13.

ஸ்வாபதேச வ்யாக்யாநம் — பதின்மூன்றும் பாட்டு

அவ:— பதின்மூன்றும் பாட்டு. (புள் இத்யாதி) இப்பாட்டில். — நமக்கு ஸ்வரூபஜ்ஞாநமுண்டாகில், அவன்தானே வருகிறுனென்று நிர்ப்பரராயிருக்கு மவரை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (புள்ளின் வாய்கீண்டானை) ஸ்வாச்ரிதருக்கு ஸ்வாநுபவ விரோதியான காமாதிதோஷ நிவர்த்தகனாய். (பொல்லாவரக்கனைக் கிள்ளிக் களைந்தானை) பொல்லாத அப்ராப்த விஷயபூதமான அஹங்காரத்தை; அஹங் காரத்துக்கு நன்மை தீமைகளாவன—"அஹம், மம" என்றுல் ஈச்வரனும் ஈச்வர விபூதியும் ஸ்வாபிமாந விஷயமாகத் தோன்றுகை-அஹங்காரத்துக்கு நன்மை யாவது; தேஹமும் ஆத்மாவும் ஸ்வதந்த்ரமாகத் தோன்றுகை-தீமையாவது; அநுகூலமான அஹங்காரத்துக்கு அழல்தட்டாதபடி நிரஸித்தவனுடைய. (கீர்த்திமை பாடிப்போய்) கல்யாண குணங்களை ப்ரீதிக்குப்போக்கு வீடாகப் பாடி அதுவே தாரகமாகப் போய். (பிள்ளைகளெல்லாரும்) நாம் சென்று எழுப்ப வேண்டிய அகில (அபிநவ) பாகவதரும். (பாவைக்களம் புக்கார்) அநந்யார் ஹராஸ்ரீவைஷ்ணவர்கள் நிரூபகமான ஸங்கேத ஸ்தலத்தை ப்ரவேசித்தார்கள்.

A பெரியாழ் திரு 5-4-3.

பதினெட்டாம் பாட்டு

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்(து) ஆம்பல்வாய் கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய் நாணுதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணனைப் பாடேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— எங்களை—(உன் தோழியராகிய) எங்களை, முன்னம் எழுப்புவான்—முதன் முதலில் எழுப்புவதாக, வாய்பேசும்—வாயாலே சொல்லிவைத்த, நங்காய்—பரிபூர்ணையே! நாணுதாய்—('சொன்னபடி செய்யாதொழிந்தோமே' என்னும்) வெட்கமுமற்றவளே! நா உடையாய்—(இன் சொற்களைப் பொழியும்) நாவை உடையவளே! உங்கள் புழைக்கடை தோட்டத்து வாவியுள்—உங்களுடைய புழைக்கடையிலுள்ள தோட்டத்தில் விளங்கும் குளத்தினுள், செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து—செங்கழுநீர் மலர்கள் மலர்ந்து, ஆம்பல் வாய் கூம்பினகாண்—கருநெய்தல் மலர்கள் குவிந்துகொண்டன காண்! (மேலும்) செங்கல் பொடி கூறை—காஷாயம் படிந்த உடையை அணிந்தவரும், வெண்பல்—வெளுத்தபற்களையுடைய வரும், தவத்தவர்—தபோவேஷத்தை உடையவருமான சைவஸந்யாஸிகளும், தங்கள் திருக் கோயில்—தங்களுடைய தெய்வஸந்நிதிகளில், சங்கு இடுவான்—சங்கு ஊதுகைக்காக, போகின்றார்—செல்கின்றனர்; சங்கொடு சக்கரம்—சங்கத்தையும் சக்கரத்தையும், ஏந்தும்—(இரு கைகளிலும்) லாகவமாக தரிக்கும், தட கையன்—பெரிய கைகளை உடையவனும், பங்கய கண்ணனை—செந்தாமரை போன்ற கண்களை உடையவனுமான ஸர்வேச்வரனை. பாட—(ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்) பாடுவதற்காக, எழுந்திராய்—எழுந்திருப்பாயாக.

ஸ்வா:- அதாவது-காலக்ஷேப கூடம். (வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று) பரிசுத்தமான ஜ்ஞானம் அபிவ்ருத்தமாய், அஜ்ஞானம் தலைமடிந்தது; (புள்ளுஞ் சிலம்பினகாண்) மற்றுமுள்ள பாகவதரும் தவரித்துக்கொண்டு போந்தார்கள். (போதரிக்கண்ணினாய்) ஸ்வச்சமாய் ஸ்லாக்யமாய் ஸாக்ஷாத்காரமான ஜ்ஞானத்தையுடையவரே! (குள்ளக்குளிர) அவனைப்பிரிந்திருந்த வ்யஸநமெல்லாம் நிச்சேஷமாய்ப்போம்படி. (குடைந்து) காலக்ஷேபகூடத்திலே ப்ரவேசித்து. (நீராடாதே) பாகவதாநுபவத்தைப் பண்ணுதே. (பள்ளிக்கிடத்தியோ) தனித்து க்ஞாநுபவம் பண்ணுகிறாயோ? (பாவாய் நீ) தனித்து க்ஞாநுபவம் பண்ண வல்லையோ? (நன்னாளால்) ஸத்தவோத்தரமான காலம் நேர்பட்டபடி என்தான்! (கள்ளம் தவிர்ந்து) உன்னை எங்களுக்குக் காட்டாமலிருக்கிற களவை விட்டு. (கலந்து) எங்களோட ஒருநீராகக் கலந்து எங்கள் ஸத்தையை உண்டாக்காய்.

மூவாயிரப்படி — பதினன்காம் பாட்டு

அவ:— பதினன்காம்பாட்டு. a இவையெல்லாவற்றுக்கும் தானே கடவளாய், எல்லாரையும் தானே எழுப்பக்கடவதாகச் சொல்லிவைத்து, அது செய்யாதே உறங்குகிருளொருத்தியை எழுப்புகிருர்கள்.

வ்யா:— b (உங்கள் b_1 புழைக்கடை இத்யாதி$_3$) c 'செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல் மொட்டிக்கும்படி போது விடிந்தது; உறங்குவதே இன்னம்!' என்ன; 'நீங்கள் வயலிலே போனிகளோ?' என்ன; 'புழைக்கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல் மொட்டித்தன' என்ன; d 'அது பின்னை நீங்கள் வலிய அலர்த்தினிகோள்' என்ன; (உங்கள் புழைக்கடைத் e தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின) எங்களுக்குப் புகுர வொண்ணுதே அஸூர்யம்பஶ்யமான உங்கள் புழைக்கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் மொட்டித்தன: f வெயில்

பெ. அ. பதினலாம்பாட்டு. (உங்கள் இத்யாதி$_3$) a "நங்காய்" என்றதையும் "எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும்" என்றதையும் கடாக்ஷித்து அவதாரிகையிடுகிருர் (இவையெல்லாவற்றுக்கும் இத்யாதி$_3$)

b_2, c "புழைக்கடை" என்று விஶேஷித்ததுக்கு உக்திப்ரத்யுக்திமுகே$_2$ந பஶ்சாத்தாகவம்அருளிச்செய்கிருர் (செங்கழுநீர் இத்யாதி$_3$) b, d "உங்கள்" என்ற பத$_3$ப்ரயோக$_3$த்துக்கு உக்திப்ரத்யுக்திமுகே$_2$ந ப்ரயோஜநம் அருளிச்செய்கிருர் (அது பின்னை இத்யாதி$_3$) இவர்களுக்குப் புகுரவொண்ணுத புழைக்கடையில் அலருகையையும் மொட்டிக்கையையும் புறம்புள்ளவற்றைக் கண்டு அநுமித்துச்சொல்லுகிருர்களென்று கருத்து. e, f "தோட்டம்" என்று விஶேஷித்ததுக்குப் ப$_2$லிதார்த்த$_2$ம் அருளிச்செய்கிருர் (வெயில் இத்யாதி$_3$) இத்தால்—கிரணஸ்பர்ஶத்தாலொழிய அலருகையும் மொட்டிக்கையும் கூடாதென்று அவள் பண்ணுகிற

சி. அ. பதினலாம்பாட்டு (உங்கள்) b,c,d "செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்" என்ன, உள்ளேயிருக்கிறவள் "என்னைக்காணப்புகுகிறேம் என்று மலர்ந்த உங்களுடைய கண்களையும், நான் வார்த்தை சொல்லாமையாலே சிவட்கென்று முகுளிதமான உங்களுடைய வாய்களையும் கண்டு செங்கழுநீர் மலர்ந்து ஆம்பலும் கூம்பின என்று ப்ரமித்திகோளாகவடுக்கும்" என்ன, புறத்திலே இருக்கிறவர்கள் "வயலிலும் செங்கழுநீர் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பிற்றின காண்" என்ன, உள்ளிருக்கிறவள் "நான் எழுந்திருக்கவேணும் என்று நீங்கள் வலிய அலர்த்துகைக்கும் மொட்டிக்கப்பண்ணுகைக்கும் வயலிலே போனீர்களோ?" என்ன, புறத்திலிருக்கிறவர்கள் "உங்கள் புழைக்கடை" என்கிருர்கள். இப்படி அத்$_4$யாஹரித்துக் கொள்ளவேணும். f (வெய்யில் பட்டன்றிக்கே காலபாகத்தாலே என்கை) என்றதுக்குத் தாத்பர்யம்—ஸூர்யோத$_3$யமானால் வெய்யில்பட்டு விகஸிக்கிற வயல்களிலே இருக்கிற செங்கழுநீர்மாத்ரமன்றிக்கே, ஆதி$_3$த்யகிரண ஸம்ஸர்கமில்லாத புழைக்கடையில் வாவியிலுள்ள செங்கழுநீர் விகஸிதமாயிற்றின என்றபடி. இத்தால் மிகவும் வெய்யில் ஏறிற்று என்றபடி, b, f_2 "உங்கள் புழைக்கடை" என்று வேறிட்டுத்

பட்டன்றிகே f₂ காலபாகத்தாலே என்கை. g இவள் எழுந்திராத இன்னுப்பாலே, ''உங்கள் புழைக்கடை'' என்று வேறிட்டுச் சொல்லுகிறார்கள்.

'அலரப்புகுகிறவளவிலே கழிய அலர்ந்ததென்று சொல்லுகிறிகோள்; வேறு அடையாளம் உண்டோ?' என்ன; h (செங்கற் பொடிக்கூறை இத்யாதி₃) i அளற்றுப்பொடியிலே புடைவையைப் புரட்டி, ப்₃ரஹ்மசர்யம் தோற்றப் பல்லை விளக்கி j த₃ண்ட₃பரிஹாரார்த்த₄மாகத் தபோவேஷத்தையுடையரான ஸிவத்₃வி ஜருங்கூடத் தங்கள் தே₃வதைகளை ஆராதி₄க்குங் காலமாய்த்து, ''திருக்கோயில்'' என்றது—அவர்கள் சொல்லும் பாசுரத்தாலே. k ''சங்கு'' என்று - ஆராத₄நோப கரணத்துக்கு உபலக்ஷணம்; l குச்சியிட என்றுமாம். இத்தால் m அஸூத்₃த₄ருங் கூட எழுந்திருக்கும் காலமாய்த்து என்கை. n ஸந்யாஸிகள் ஸந்த்₄யாவந்த₃நம் பண்ணித் தங்களுடைய அகங்களிலே திருவாராத₄நம்பண்ணும் காலமாய்த்து என்றுமாம்.

பெ.அ. அந்யத₂ாஸித்₃தி₄யைப் பரிஹரித்தார்களென்று சொல்லிற்றாய்த்து. g இவளுடைய தோட்டமென்று தோற்றவேண்டில் ''இந்தப்புழைக்கடை'' என்னலாயிருக்க, ''உங்கள்'' என்று — மமகாரமுண்டானவர்களைப்போலே சொல்லக்கூடுமோவென்ன, அருளிச் செய்கிறார் (இவள் இத்யாதி₃)

j 'த₃ண்ட₃பரிஹாரார்த்த₂மாக' என்றது-ராஜாக்கள் த₃ண்ட₃ம்கொள்வர்; அது வாராமைக்கு என்றபடி. k ''சங்கிடுவான்'' என்றதுக்கு, சங்கிலே நீர்விடுகை அர்த்த₂மாய், தாத்பர்யம் அருளிச்செய்கிறார் ('சங்குஎன்று' இத்யாதி₃) இது எம்பார் நிர்வஹிக்கும்படி. h, n ''செங்கல்பொடிக்கூறை'' என்று-காஷாயவஸ்த்ரத₄ாரிகளென்றும், ''வெண்பல்'' என்று-தாம்பூ₃லாதி₃களில்லாமையாலே பே₄ாக்₃யத்₃ரவ்யங்களில் விரக்தரென்றும், ''தவத்தவர்'' என்று-ஸாத்விகரென்றும் ஸப்₃த₃ார்த்த₃ம் விவக்ஷித்து, திருமலைநம்பி அருளிச்செய்த யோஜ நாந்தரம் அருளிச்செய்கிறார் (ஸந்யாஸிகள் இத்யாதி₃)

பி.அ. சொல்லுகையாலே கட்டும் காவலுமாயிருக்கையாலே தமக்கு ப்ரவேஶிக்கப்போகாது, வலிய அலர்த்துகைக்கு; காலபாகத்தாலே அலர்ந்தன என்றபடி. i அளற்றுப்பொடியாவது — செங்கல்லாலே வைத்த சுவரில் உதிர்ந்த பொடி. k,l, ''சங்கிடுவான்'' என்றதுக்கு இரண்டு தாத்பர்யம்; k ஸங்க₃ம் பிடிக்கைக்காக என்னுதல், l சங்கு என்று குச்சியாய், குச்சி திறக்கைக் காக என்னுதல். m (அஸூத்₃த₄ருங் கூட எழுந்திருக்கும் காலமாய்த்து) என்றதுக்குத் தாத் பர்யம் தாமஸராகையாலே உதி₃த்த பிற்பாடொழிய எழுந்திரார்கள் என்றபடி. h,n ''செங்கற் பொடிக்கூறை'' என்றதுக்கு இரண்டாம் அர்த்த₂ம்—காவிதோய்த்த புடவையையுடையராய், வெளுத்த பல்லியுமுடையராய், நல்ல தபஸ்ஸையுமுடைய ஸந்யாஸிகள் தம்முடைய திருவா ராத₄னமான பெருமாள்கோயில் குச்சி திறக்கைக்காக என்று. h ''தங்கள் கோயில்'' என்று பிரித்துச் சொன்னதுக்குத் தாத்பர்யம்—முந்தினபொருளுக்கு அநாத₃ரோக்தி; இரண்டா மர்த்த₂த்துக்கு A ''தங்கள் தேவரை'' என்னுமாபோலே ஸந்யாஸிகளே தமக்கு உத்₃தே₃ஶ்யர் என்றபடி. h,nஸந்யாஸிகளை ''தவத்தவர்'' என்கிறது—1. ''தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாம

கு. அ. பதினாலாம்பாட்டு (உங்கள் புழைக்கடை இத்யாதி₃) h,i செங்கல்பொடிக்கூறை-செங்கல் பொடியிலே புரட்டினபுடைவை. kசங்கென்று ஆராத₄னத்துக்கு உபகரணமாயிருக்கும் ஸங்க₂மாகவுமாம்; l சங்கென்று குச்சியாகவுமாம். n (ஸந்யாஸிகள்) என்றது—த்ரித₃ண்டி₃கள் என்றபடி. h,n ஸந்யாஸிகள் என்ற பக்ஷத்தில் காவித் திருப்பரியட்டமும், வெளுத்திருக்கும்

A நாச். திரு-10-10.

o தம:ப்ரசுரரநுஷ்டா₂நம் ப்ரமாணமோ? 1. ''தா₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேதா₃ஸ்ச'' அன்ரோ? என்ன; 'தா₄ர்மஜ்ஞையான உன்னுடைய ஸமயமும் ப்ரமாணமன்றிறே' என்கிருர்கள்— p (எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும்) 'எல்லாரையும் நானேயெழுப்புகிறேனென்று சொன்னது உன்பக்கல் கண்டிலோமீ!' என்கிருர்கள். (வாய்பேசும்) உக்திமாத்ரமேயாய், அநுஷ்டா₂நம் இன்றிக்கே யிருக்கை. க்ருஷ்ணனேடே பழகின உனக்குப் பொய்சொல்லுகை q வம்போ? r (நங்காய்) s பூர்ணையிறே. t எனக்கு உங்களையொழியச் செல்லாதென்று சொல்லும்படியும், t_2 உன் நைரபேக்ஷ்யமும் எல்லாம் t_3 கண்டோமிறே. u சொலவும் செயலும் சேராதார்க்கு ஒரு u_2 பூர்த்தியும் வேணுமோ? v (எழுந்திராய்) w எங்கள் குறைதீர்க்க w_2 எழுந்திராய்.

x (நாணுதாய்) y சொல்லிவைத்துச் சொன்னபடி செய்யப்பெற்றிலோமென்னும் லஜ்ஜையுமின்றிக்கேயிருந்ததீ! z நீ இருந்தவூரில் z_2 பூசனியும்

பெ. அ. o ''நங்காய்'' என்றதே அமைந்திருக்க, ''எங்களைமுன்னமெழுப்புவான் வாய்பேசும்'' என்று விசேஷித்ததுக்கு - அவள் ஸங்கிக்குமிடத்தில் ஸோபாலம்பே₂த்தரமாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (தம:ப்ரசுரர் இத்யாதி₃) தம:ப்ரசுரர்க்கு அநுஷ்டா₂நத்தில் ஐத₃ம்பர்யமில்லாமையாலே அவர்களெழுந்திருக்குமது விடிந்தமைக்கு அடையாளமாக மெய்க்கொள்ளப்போகாதென்று ஸங்கைக்குக் கருத்து. p திருமலைநம்பி நிர்வாஹத்தில், விடிவுக்கு அடையாளமாக ஸத்யாஸிகளெழுந்திருந்தார்களென்ன செய்தேயும் நிருத்தரையாகக் கிடக்கையாலே வெறுக்கிருளென்று ''எங்களை முன்னம்'' இத்யாதி₃க்கு ஸங்க₃தி கண்டு கொள்வது. q ''வம்போ' என்றது-புதுமையோ? என்றபடி. r,s ஸப்₃த₃ார்த்த₂த₂நமுகே₂ந உபாலம்ப₄ம் தோற்ற அருளிச்செய்கிருர் (பூர்ணையிறே என்று.) t, u இது உபாலம்ப₄மானபடியை உபபாதி₃க்கிருர் (எனக்கு இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே.) t_2 'உன் நைரபேக்ஷ்யமும்' என்றது-உனக்கு எங்களையொழியச் செல்லும்படியிருக்கையும் என்றபடி. t_3 ''கண்டோமிறே'' என்ற அந்தரம் ''ஆகையாலே'' என்று ஸேஷம். u_2 (பூர்த்தியும் வேணுமோ) என்றது-பூர்த்தியுண்டென்றிருக்க வேணுமோ என்றபடி. v,w ''எழுந்திராய்'' என்று ப்ரார்த்த₂னை தோன்றியிருக்கையாலே இதுக்குச்சேரக்கூட்டி அர்த்த₂ம் அருளிச்செய்கிருர் (எங்கள் இத்யாதி₃) வெறுத்தலெல்லாம் ந்யாயநிஷ்டு₂ரோக்தியாகையாலே இப்படி ப்ரார்த்தி₂க்கத் தட்டில்லை.

x,y, நாணில்லாதவளேயென்று ஸப்₃த₃ார்த்த₂மாய் அத்தை ஹேதுபூர்வகம் அருளிச்செய்கிருர் (சொல்லி இத்யாதி₃) z நாணையும், பூசனியுடைய சரசரப்பையும் சுணையென்று வ்யவஹரிக்கையாலே, இவள் சுணையற்றவளாகையாலே, இவ்விருந்தவூரிலும் சுணையற்றமையை ஸித்₃த₄வத்கரித்து, அது இலையாவிட்டால் காய் காயாதென்கிற ப்ரஸித்₃தி₄யைப் பற்ற ஹார்த்த₃பா₄வத்தை அருளிச்செய்கிருர் (நீ இருந்த இத்யாதி₃) இத்தால், இவளுக்கு லஜ்ஜாஸௌந்யதையை நிருபகமாகச் சொல்லுகையால் இப்படிசொல்லலாமென்று திருவுள்ளம். 14.

சி. அ. திரிக்தமாஹு:'' என்கிற தபஸ்ஸப்₃த₃வாச்யமான த்₃வயநிஷ்டா₂தையைப்பற்றை. r,s ''நங்காய்''—பூர்ணையிறே என்னுதல்; t வெறுப்பாதல்; இத்தை அருளிச்செய்கிருர் (எனக்கு இத்யாதி₃) u விவரணம் (சொலவும் இத்யாதி₃) v, w_2 எழுந்திராய்—எழுந்திருக்கவேணும். a நாவுடையாய் — வாக்₃மிதையையுடையாய். z_2 (பூசனியும் காயாதோ) என்றது பூசனிக்குச்

கு. அ. திருமுத்துமுடைய தபஸ்விகள் என்றபடி; இந்தப் பக்ஷத்தில் ''தங்கள் கோயில்'' என்றது ஸந்யாஸிகள் தங்களுக்கு உத்₃தே₃ஸ்யர் என்று தோற்றுகைக்காக: q வம்போ—புதுமையோ என்றபடி.

காயாதோ? என்கை. a (நாவுடையாய்) 'என்னை கூஷிபித்துக்கெரண்டாகிலும் வருகிறதென்?' என்ன; 1. ''நாந்ருக்₃வேத₃விநீதஸ்ய நாயஜுர்வேத₃ தா₄ரிண:'' என்றும், 2. ''நூநம் வ்யாகரணம் க்ருத்ஸ்நம்'' என்றும், 3. ''ஸம்ஸ்ரவே மது₄ரம் வாக்யம்'' என்றும் உன்பேச்சிலினிமை கேட்க; இவள் எல்லாம் படுத்திலுலும் விடவொண்ணுத நாவீறுடைமை.

'உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?' என்ன, b (சங்கு இத்யாதி₃) திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஏந்தி அந்த ஸ்பர்ஶத்தாலே வளர்ந்த திருக்கைகளை. உடையனுய், ஆழ்வார்களிலே வந்து அலையெறிகிற கண்களை யுடையவனை. c A ''இளவாய்ச்சியர் கண்ணினுள் விடவேசெய்து விழிக்கும்பிரான்'' என்று இவர்களைத் தோற்பித்துக்கொள்ளும் கண்ணிறை. d B ''ஆழியொடும் பொன்னுர்சார்ங்கமுடைய அடிகளை இன்னுரென்றறியேன்'' என்று - அனுப₄விப் பாரைப் பிச்சேற்றக்கடவ திருவாழியையும், திருமேனிக்குப் பரப₄ாக₃மான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், d₁ முற்படத் தன்னை எழுதிக்கொடுத்துப் பின்னை எழுதிக் கொள்ளுகிற திருக்கண்களையுமுடையவனை. (பாட) உன் ப்ரீதிக்குப் போக்குவிட்டு எங்களையும் உஜ்ஜீவிப்பிக்க. க்ருஷ்ணன்கையில் இப்போது ஆழ்வார்களுண்டோ? என்னில்:- எப்போதும் உண்டு; அது பெண்களுக்குத் தோற்றும்; அல்லாதார்க்குத் தோற்றுது. 4. ''உபஸம்ஹர'' என்றதும் உகவாதார்க்குக் கூசியிறே, இவர் களுக்குத் தோற்றத்தட்டிலேயே. 14.

சி. அ. சுணையுண்டு. கண்ணென்றது லஜ்ஜைக்கும் வாசகமாய், அதுக்குண்டான லஜ்ஜையும் உனக்கில்லை என்றபடி. b₁ d ''சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன் பங்கயக்கண்ணனை'' என்று இவற்றை இப்படிச் சொன்னதேதுக்கு மற்றையவற்றைச் சொல்லாதே? என்றால் இதுக்குத்தாத்பர்யம்- (ஆழியொடும் இத்யாதி₃) c.d₂ (முற்படத் தன்னை எழுதிக்கொடுத்துப் பின்னை எழுதிக்கொள்கிற) என்றது (இளவாய்ச்சியர்) என்கிற வாக்யத்துக்கு உபபாத₃கம்.

இப்பாட்டுக்கு ஸ்வாபதே₃ஶம்- பக₃வத்₃விஷயத்திலே மூட்டுகையிலே அதி₄கரித்த நிர்வாஹகர்முன்பாக பக₃வதா₃நுப₄வம் பண்ணுகை ஸ்வரூபம் என்று. 14.

ஆருயிரப்படி — பதினான்காம்பாட்டு

அவ:— பதினாலாம்பாட்டு. (உங்கள்) இத்திரளுக்கெல்லாம் நிர் வாஹகையாய், எல்லார்க்கும் முன்னே உணர்ந்து எல்லாரையுமெழுப்பக்கடவே னென்று சொல்லிவைத்து, அத்தை மறந்து சுருக்கமொழிய உணர்ந்து கிடக்கிற வொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:-(உங்கள் இத்யாதி₃) 'நாங்கள் வந்து உன்வாசலிலே நிற்க எழுந்திரா தொழிவதே!' என்ன; 'விடிவுக்கு அடையாளமென்? எழுந்திருக்கும்போது விடிய வேணுமே' என்ன; (செங்கழுநீர்வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்) 'செங் கழுநீரலர்ந்து ஆம்பல்மொட்டிக்குமது அடையாளமன்றே?' என்ன; 'நீங்கள் இவ்வா

A திருவாய் 1-7-5. B பெரிய திரு-10-10-9.

தமிழ் வ.எண்: 2688 நாள்: 27/10/09 நூலகம்

சலிலே வந்த ப்ரீதிப்ரகர்ஷத்தாலே உங்கள் கண்கள் அலர்ந்து, நான் வார்த்தை சொல்லாவிட்டவாறே நீங்கள் வெறுத்து லஜ்ஜித்து வாய்மூடினதும், செங்கழுநீ ரலர்ந்ததாகவும் ஆம்பல் மொட்டித்ததாகவும் தோற்றுகிறது' என்ன; 'அது ஊரிலதிறே, வாவியில் செங்கழுநீர்காண்' என்ன: 'வயலெல்லாமுலாவி அலருவன அலர்த்தி, மொட்டிப்பன மொட்டுவிக்கையன்றே உங்களுக்கு இராவெல்லாம் பணி' என்ன; (தோட்டத்துவாவியுள்) 'A தடமணி வயல்களிலும், B அல்லிக்கமலம் முகங்காட்டுங் கழனிகளிலும் உள்ளவையல்ல; தோட்டத்திலவைகாண்' என்ன; 'அவ்விடங்களிலும் நீங்களுலாவினிகோளாமத்தனே' என்ன; 'புழைக்கடைத் தோட்டங்காண்' என்ன; 'அத்தனேயிடம் போகவேண்டாதே அணித்தானவத்தனேயன்றே' என்ன; (உங்கள் புழைக்கடைத்தோட்டம்) என்கிறார்கள். 'அஸஹ்யம் பச்யமான உன்னுடைய தோட்டத்திலே வெய்யில்பட்டன்றிக்கே காலபாகத்தாலே அலர்ந்தவையும் மொட்டித்தவையுமடையாளமன்றே? சோலைச்செறிவாலே உச்சிப் பட்டாலும் ஆதித்யரச்மி காணவொண்ணுத உன்னுடைய புழைக்கடையிலவையன்றே' 'தாங்கள் புறம்பே உள்ளுப் புகுரப்பெறுதே நிற்கிறவர்கள், இவள் புழைக்கடையில் அலர்ந்தவை யறிந்தபடியென்?' என்னில்; புறம்புள்ளவை அலர்வன மொட்டுப்பனவானபடியைக்கண்டு அநுமித்துச் சொல்லுகிறார்கள். இவளெழுந்திராத இன்னுப்பாலே 'உங்கள் புழைக்கடை' என்று வேறுகூறிட்டுச் சொல்லுகிறார்கள். 1, 'த்வ்யக்ஷரஸ்து பவேந்மருத்யு:'' என்றும், C ''நீர் நுமது'' என்றும், D ''யானே என்றனதே'' என்றும்—அஹங்காரமமகாரம் த்யாஜ்யமாக உணர்ந்தவர்கள், 'உங்கள், எங்கள்'' என்கை விருத்தமன்றே? என்னில்; தேஹாத்மாபிமானத்தால் வரும் அஹங்காரம் த்யாஜ்யமாவது; பகவத்ஸம்பந்தத்தால் வருமது உத்தேச்யமென்னுமிடத்தை 2. ''அச்யுதாஹம் தவாஸ்மி'' என்றும் E ''அபிமானதுங்கன்'' என்றும், F ''என்னுடைய பந்துங்கழலும்'' என்றும் சொல்லிற்றிறே. 'பதார்த்தங்களாகிறன—காலக்ருத பரிணமியாயன்றே இருப்பது' என்ன; ஸந்த்யாஸமயத்தில்படியாயன்றே மத்யராத்ரியில்படியிருப்பது.

'அலர உபக்ரமித்தமாத்ரத்தைக்கொண்டு கழியவலர்ந்ததாகவும், மொட்டிக்கத் தொடங்கினபோதே மொட்டித்ததாகவும், உங்கள் த்வரையாலே ப்ரதமதசையிலே இப்படியே தோற்றுகிறது; இது ப்ராதர்லக்ஷணமன்று; வேறடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன — (செங்கல்பொடிக்கூறை) 'தம:ப்ரசுரருங்கூட உணருங்காலமாய்த்து; இது விடிவுக்கு உடலன்றே' என்கிறார்கள். (செங்கல்பொடிக்கூறை) அளற்றுப்பொடியிலே புடவையைப் புரட்டி, இராவெல்லாம் வெற்றிலை தின்றுகிடந்து ப்ரஹ்மசர்யமும் விரக்தியுந்தோற்றப் பல்லை விளக்கி ''ஸபையார், பெரியவர்கள், கோமுற்றவர், தண்டங்கொள்வார்'' என்று தபோவேஷத்தையுடைய வராஹ ஸிவத்விஜருங்கூட பயப்பட்டுணர்ந்து தங்கள் தேவதைகளை ஆராதிக்குங் காலமாய்த்து. ''திருக்கோயில்'' என்றது—அவர்கள் சொல்லும்படி, ''சங்கு''

A திருவாய் 10-1-1 B பெரியதிரு 7-5-10 C திருவாய் 1-2-3 D திருவாய் 2-9-9. E திருப்பல் 11. F திருவாய் 6-2-1.

என்று-பரிகரத்துக்கும் கொத்துக்கும் உபலக்ஷணம். சங்கிடுவானென்றது - குச்சியிடுவா னென்றுமாம். ''தாமஸப்ரக்ருதிகளைச் சொல்லுகிறது'' என்று எம்பார். ''தம:ப்ரசுரர் உணர்ந்தார்கள் என்று சொல்லியோ எழுப்புவது என்று அவள் நினைத்திருக்கும் என்று, ஸத்வநிஷ்டரான ஸந்யாஹிகளைச் சொல்லுகிறது'' என்று திருமலைநம்பி. 1. ''யதா₃ஹரேவ விரஜேத், ததா₃ஹரேவ ப்ரவ்ரஜேத்'' 2. ''பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ(பரமாத்மநி'' என்று பக்₃வத்₃விஷயத்தில் ஸக்தராய், இதர விஷயங்களில் விரக்தராய், காஷாயவஸ்த்ரங்களை தா₄ரித்து பே₄க்₃யத்₃ரவ்யங்களில் விரக்தராய் ஸாத்த்விகராயிருக்கும் ஸந்யாஹிகள் ஸந்தா₄வந்த₃னங்களைப் பண்ணி அகங்களிலே திருவாராதா₄நம் பண்ணும் காலமாய்த்தென்ன. 3. ''ஸததம் கீர்த்த யந்தோ மாம்'' 4. ''நமஸ்யந்தஶ்ச மாம் ப₄க்த்யா நித்யயுக்தா உபாஸதே'' என்று அநவரதம் ஸ்நேஹத்தோடே உபாஸிப்பர்களென்று சொல்லப்படுகிற வர்கள் விடிவோறே ஒருகால் ஸமாரா₄தா₄நம்பண்ணி அல்லாதபோது பேசாதே யிருப்பார்களோ? இது விடிவுக்கடையாள்மன்றே; இதுதான் ப்ரமாணமுமன்றே?' என்ன; அதுக்கு உத்தரமாகச் சொல்லுகிறதுமேல் — (எங்களை முன்னமெழுப்புவான்) '5. ''தா₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேத₃ாஶ்ச'' 6. ''யத்₃யதா₃சரதி ஶ்ரேஷ்ட₂:'' ''மேலையார் செய்வனகள்'' (26) என்னுமது ப்ரமாணமாக நீ சொன்னுயே, ஸாத் த்விகாக்₃ரேஸரையாயிருக்கிற நீ எங்களை எழுப்புவதாகச் சொல்லிவைத்து அத்தை மறந்துகிடந்து உறங்குகிறுயன்றே. தா₄ர்மஜ்ஞையான உன்னுடைய ஸமயமும் ப்ர மாணமன்றிறே' என்கிறுர்கள். (எங்களைமுன்னமெழுப்புவான்) 'எல்லாரையும் நானே எழுப்புகிறேன்' என்று சொன்னது உன்பக்கல் கண்டிலோமே. (வாய்பேசும்) ஹ்ருத₃யத்திலில்லாதது வாயாலே பேசலாமோதான்? உக்திமாத்ரமேயாய் அநுஷ் டா₂நமின்றிக்கேயிருக்கை. நினைவும் சொலவும் விபரீதமாயிருக்கும். க்ருஷ்ண னைடே பழகிச் சேர்த்தியாயிருக்கிற உனக்குப் பொய் சொல்லுகை வம்போ? (நங்காய்) 'உன்னுடைய லாப₄த்துக்கு நாங்கள் வேண்டாதபடியாயிருந்ததிறே. எங்களை யொழிய நீ நிரபேக்ஷையாயிருந்தாயிறே. ''எனக்கு உங்களையொழியச்செல்லாது'' என்றிருந்ததெல்லாம் கண்டோமிறே. சொலவும் செயலும் சேராதார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ? இரண்டும், சேர்ந்தவிடத்திலேயன்றே பூர்த்தியுள்ளது. அதில்லாதவிடத்தில் ஆதி₃த்யாதி₃கள்பக்கல் ஔபசாரிகமாகச் சொல்லும் ப₄க்₃வச் ச₂ப்₃த₃ம்போலேயன்றே. A ''ஒருகாலும்பிரிகிலேன்'' என்றத்துக்குப் பொரு ளிதுவோ? (எழுந்திராய்) எங்கள்குறைதீர்க்க எழுந்திராய்.

(நாணுதாய்) நீதானெழுந்திருக்க வேணுமோ? நாம் பிற் பாடரானேமென்று கிடந்தவிடத்தே கிடந்து சொன்னபடி செய்யப் பெற்றிலோமென்று லஜ்ஜிக்கத்தான் பெற்றதோ? நீயிருந்தவூரில் பூசனியுங்காயாதோ? 7. ''ஹ்ரீரேஷா ஹி மமாதுலா'' என்னுமவனேடேயன்றே உனக்கு வாஸநை. (நாவு டைபாய்) எங்களை லஜ்ஜிப்பிக்கத்தான் பெற்றேமோ? நாட்டாரளவோ உனக்கு

A பெரிய திரு-7-4-4.

நாக்கு? (நாவுடையாய்) என்னை கூஷபித்துக்கொண்டாகிலும் வருகிறதென்? என்ன, 1.''நாந்நுக்3வேத3விநீதஸ்ய நாயஜுர் வேத3தா4ரிண:'' என்றும். 2. ''நூநம்வ்யாகரணம் க்ருத்ஸ்நம்'' 3. ''ஸம்ஸ்ரவே மது4ரம் வாக்யம்'' என்றும் நீ எல்லாம் படுத்தினலும் உன் பேச்சிலினிமை கேட்கும்படி நாவீறுடையவளன்றே. 'நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?' என்ன; (சங்கொடு சக்கரமேந்தும்) க்ருஷ்ணன் திருநாமங் கூப்பாட. திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமேந்தி அந்த ஸ்பர்ஶத்தாலே வந்த வளர்த்தியையுடைய திருக்கைகளையுடையனுய், ஆழ்வார்களிலே வந்து அலையெறிகிற கண்களையுமுடையனன க்ருஷ்ணனை. A ''கூராராழி வெண்சங்கேந்தி'' B ''ஆழியொடும் பொன்னுர் சார்ங்கமுடையவடிகளை''. ஆசைப்படப்பண்ணுமதுவும் அறிவுகெடப்பண்ணுமதுவும் தி3வ்யாயுத4ங்களோட்டைச் சேர்த்தியேயிறே. (பங்கயக் கண்ணனை) முற்படப் பெண்களுக்குத் தன்னையெழுதிக்கொடுத்து எழுத்து வாங்கப் பண்ணும் கண்கள்: C ''தூதுசெய் கண்கள்'' D ''விடவே செய்து விழிக்கும்'' E''கண்களுக்கு அற்றுத்தீர்ந்தும்'' 4. ''ஜிதந்தே'' F ''தாமரைக்கண்ணனை விண்ணேர் பரவுந்தலைமகன்'' என்று-உப4யவிபூ4தியையுந்தோற்பிக்கும் கண்ணழகுடையவனை. சந்த்3ராதி3த்யர்கள் சேரவுதித்தாற்போலேயிருக்கிற இரண்டு தி3வ்யாயுத4ங்களையும் கண்டு G ''ஆங்குமலருங்குவியும்'' என்கிற திருநாபீ4கமலம்போலே, திருக்கண்களும் அலருவதுமொட்டிப்பதாகாநிற்கும். 'க்ருஷ்ணன் கையில் ஆழ்வார்களுண்டோ?' என்னில்; எப்போதுமுண்டு; அதுபெண்களுக்குத்தோற்றும்; ஆண்களுக்குத் தோற்றது. 5. ''உபஸம்ஹர'' என்றது உகவாதார்க்குக் கூசியிறே. H ''நெய்த்தலைநேமியுஞ் சங்கும் நிலாவிய'' என்று - யஶோதை4ப்பிராட்டி தாலாட்டுகையாலே இவர்களுக்குத் தோற்றத் தட்டில்லையே. (பாட) உன் ப்ரீதிக்குப் போக்குவிட்டுப்பாடி, ஒரு நீர்ச்சாவி போலே கிடக்கிற இத்திரள் உஜ்ஜீவிக்கும்படி வர்ஷியாய். (பங்கயக்கண்ணனைப் பாட) 6 ''உத்3க3யாதிநாமரவிந்த3லோசநம்''. 14.

ஈராயிரப்படி — பதினுலாம் பாட்டு

அவ:— பதினுலாம் பாட்டு. இதுக்கெல்லாம் கடவளாய் எல்லாருக்கும் முன்னே தான் உணர்ந்து எல்லாரையும் உணர்த்தக்கடவளாக ப்ரதிஜ்ஞை பண்ணினுளொருத்தியை எழுப்புகிருர்கள்.

வ்யா:— (உங்கள் புழைக்கடையித்யாதி3) இவர்கள் வாசலிலே வந்து ''போது விடிந்தது எழுந்திராய்'' என்ன, 'அடையாளமென்?' என்ன; 'பஞ்சலக்ஷம் குடியில் பெண்களும் போய், பேசுவாரும் பேசாதிருப்பாருமாய் வந்து நிற்கிறது விடிந்தமைக்கடையாளமன்றே' என்று, செங்கழுநீர் அலர்ந்தாப் போலேயும் ஆம்பல் மொட்டித்தாப் போலேயும் என்று தங்கள் வாயைச் சொல்ல, 'உங்கள் வாய் நீங்கள் வேண்டின போது அலர்ந்து மொட்டியாதோ?'

A திருவாய் 6-9-1. B பெரியதிரு-10-10-9. C திருவாய் 9-9-9, D திருவாய்-1-7-5. E திருவாய்-7-3-3. F திருவாய்-2-6-3. G மூன் திருவ-67. H பெரியாழ் திரு-1-2-12-

என்ன; 'வயலில் அவையும் அப்படியே' என்ன; 'நீங்கள் போய் அலர்த்தியும் மொட்டிக்கப் பண்ணியும் வைத்தீர்கள்' என்ன: 'தோட்டத்தில் வாவியில் அவையும் அப்படியே' என்ன, "வயலிலணித்தன்ரே உங்களுக்குத் தோட்டத்து வாவி' என்ன, 'புழைக்கடைத் தோட்டத்தில் வாவிகளிலவையும் அப்படி அலர்ந்து மொட்டித்தது' என்ன, "அது உங்களுக்குக் கைவந்த இடமன்ரே" என்ன, 'அஸோர்யம்பர்யமாய் க்ருஷ்ணனுக்கும் புகுரவொண்ணுதபடியான உங்கள் புழைக்கடைத் தோட்டத்தில் வாவியில் செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல் மொட்டித்தது' என்ன;

"அலரப்புக்க மாத்ரத்திலே 'கழிய எல்லாமலர்ந்தது' என்றும், மொட்டிக்கப் புக்க மாத்ரத்திலே 'முட்ட மொட்டித்தது' என்றும் சொல்லுகிறீர்கள். இதொழிய அடையாளமுண்டாகுல் சொல்லுங்கோள்" என்ன (செங்கற்பொடிக் கூறை இத்யாதி₃) அளற்றுப் பொடியிலே புடவையைப் புரட்டி ப்₃ரஹ்மசர்யம் தோற்றப் பல்லை விளக்கி, "ஸபை₄யார் பொடிகிறார்கள். கோமுற்றவன் தண்டம் கொள்ளுகிறான்" என்று போதுவைகிற்றென்று தபசிகளுமகப்பட உணர்ந்தார்கள். (தங்கள் திருக்கோயில்) அவர்கள் சொல்லும்-ப்ரகாரம். "சங்கு" என்று குச்சியைச் சொல்லுகிறது.சங்கு ஸமாராத₄னத்துக்கு உபலக்ஷணம், வெள்ளையைத் தவிர்ந்து காஷாயத்தை உடுத்து பே₄காே₃பகரணங்களைத்தவிர்ந்து தபஸ்சர்யை உடையராயிருக்குமவர்கள் ஸந்த்₄யாவந்த₃னாதி₃கள் சமைந்து அகங்களில் திருமுற்றத்திலே எம்பெருமான்களை ஆராதி₄க்கும் காலமாயிற்றென்றுமாம். இரண்டு ப்ரகாரத்தாலும் ஸாத்விகரோடு தமோபி₄பூ₄தரோடு வாசியற உணர்ந்ததென்கிறார்கள். 1. "த₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம்; வேத₃ாஶ்ச" (எங்களை முன்னமித்யாதி₃) "நேற்று எங்களை 'எழுப்புகிறேன், க்ருஷ்ணன்பாடு கொடு போகிறேன்' என்றது கண்டிலோமே" என்கிறார்கள். (வாய்பேசும்) பொய் சொல்ல உகக்கும் க்ருஷ்ணனேடேயிறே பழகுகிறது. பொய்யை நினைத்ததுக்கு மேலே பிறர் அறிய வேணுமோ? (நங்காய்) சொன்னத்தோடே சிலவாகிலும் கூட்டாதேயிருப்பார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ? என்கை. (எழுந்திராய்) இவர்கள் பேச்சே அமைந்தது இவளுக்கு. எங்கள் குறைதீராய். (நாணுதாய்) 'நீயிருந்த ஊரில் பூசனியும் காயாதோ?' என்கை. (நாவுடையாய்) வாயேயிறே உனக்குள்ளதென்கை.

(சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையனித்யாதி₂) இவர்களை த₄ரிப்பிக்கைக்காக. "நாவாலுள்ள காரியம் கொள்ளுங்கோள்" என்ன, 'அவன் திருநாமம் களைப்பாடு' என்கிறார்கள். (சங்கொடு சக்கரம்) A "இன்னரென்றறியேன்" இத்யாதி₃. (பங்கயக்கண்ணனை) 2. "ஜிதம் தே புண்டரீகாக்ஷ". சங்கு சக்கரங்களைக் கொண்டு திருநாபி₃மூலம் போலேயிருக்கை. B "தாதுமெய்க்கொள்ளிவாய்". C "இளவரையர் கண்ணெச்சில் விடவே செய்து விழிக்கும் பிரான்". 14.

A பெரியதிரு 10-1-6. B திருவாய் 9-9-9 C திருவாய் 1-7-5.

நாலாயிரப்படி — பதினாலாம் பாட்டு

அவ:— பதினாலாம் பாட்டு. இதுக்கெல்லாம் கடவளாய், எல்லார்க்கும் முன்னே தானுமுணர்ந்து, எல்லாரையும் உணர்த்தக்கடவளாக ப்ரதிஜ்ஞை பண்ணினா ளொருத்தியை எழுப்புகிறது.

வ்யா:— (உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்) இவள் வாசலிலே வந்து 'போது விடிந்தது காண், எழுந்திராய்' என்ன, 'விடிந்தமைக்கு அடையாளமென்?' என்ன, 'பஞ்சலக்ஷம் குடியில் பெண்களும் வாய்பேசுவாரும், பேசாதிருப்பாருமாய் வந்து நிற்கிறது விடிந் தமைக்கு அடையாளமன்றே?' என்று செங்கழுநீர் அலர்ந்தாற்போலேயும் ஆம்பல் மொட் டித்தாற்போலேயும் என்று தங்கள் வாயைச்சொல்ல, 'உங்கள் வாய் நீங்கள் வேண்டின போது அலர்ந்து மொட்டியாதோ?' என்ன, 'வயலிலவையும் அப்படியே' என்ன, 'நீங்கள் போய் அலர்த்தியும் மொட்டிக்கப்பண்ணியும் வந்திகோள்' என்ன, 'தோட்டத்துவாவியும் அப்படியே' என்ன, 'வயலிலணித்தன்றே உங்களுக்குத் தோட்டத்துவாவி' என்ன 'புழைக்கடைத் தோட்டத்து வாவியும் அலர்ந்து மொட்டித்தது' என்ன, 'அது உங்களுக்குக் கைவந்ததன்றே' என்ன, 'அஸஹ்யம்பஸ்யமாய் க்ருஷ்ணனுக்கும் புகுரவெண்ணுத புழைக்கடையில் தோட்டத்து வாவியில் • செங்கழுநீர் அலர்ந்து ஆம்பல் மொட்டித்தது' என்ன;

'அலரப்புக்கமாத்ரத்திலே கழிய அலர்ந்ததென்றும், மொட்டிக்கப்புக்க மாத் ரத்திலே முட்ட மொட்டித்ததென்றும் சொல்லுகிறீர்கள்; இதுமொழிய வேறடையாள முண்டோ சொல்லுங்கோள்' என்ன, 'ஸாத்விகரோடு தமோபி₄பூ₄தரோடு வாசியற உணர்ந்தது பார்' என்கிறார்கள் — (செங்கல் பொடிக்கூறை இத்யாதி₃) அளற்றுப் பொடியிலே புடவையைப்புரட்டி ப்₃ரஹ்மசர்யம் தோற்றப் பல்லவிளக்கி, 'ஸபையார் பொடிகிறார்; கோமுற்றவன் தண்டம் கொள்ளுகிறான்' என்று போதுவைகிற்றென்று போம் அஸீசிகளுமகப்பட உணர்ந்தார்கள். (தங்கள் திருக்கோயில்) அவர்கள் சொல்லும் ப்ரகாரம். "சிறுபதத்தூற்றத்துறையிலே ஒரு தபசி பரிசிலிலேறி ஆற்றி னுள்ளே புக்கு, காவேரிதேவிக்குச் சங்கூதுகிறேனென்று அங்கே ஊத, பரிசிலிலே போகிற குதிரை மிதித்து அதிலேறின மனிச்சரடைய செத்துப்போச்சு" என்று எம்பாரருளிச் செய்தவார்த்தை. 'சங்கு' என்று குச்சியைச் சொல்லிற்றாகவுமாம். வெள்ளை தவிர்ந்து, காஷாயத்தை உடுத்து, பே₄ராக்₃ய பே₄ராகே₃ாபகரணங்களைத் தவிர்ந்து, தபஶ்சர்யையை உடையராயிருக்குமவர்கள், • ஸந்த்₄யாவந்த₃நாதி₃களைச் சமைத்து அகங்களிலே திருமுற்றத்தெம்பெருமானை ஆராதி₄க்குங்காலமாயிற்று என்றுமாம். சங்கு ஸமாராத₄நத்துக்கு உப்லக்ஷணம். 'தம:ப்ரசுரர் லக்ஷணத்தையோ ஸத்வஸ்த்த₂ரான நமக்குச் சொல்லுவது. 1. "த₄ர்மஜ்ஞஸமய: ப்ரமாணம் வேத₃ாஶ்ச" என்று, ஸத்வஸத்த₂ர்படியைச் சொல்லவேண்டாவோ?' என்ன, 'ஸத்வஸ்த்தை₂களான நாங்கள் சொன்னபடியையும் செய்கிறிலே' என்கிறார்கள்.

நான் செய்ததென்னென்ன — (எங்களை முன்னமெழுப்புவான் வாய் பேசும்) நேற்றே எங்களை எழுப்புகிறேனென்றும், க்ருஷ்ணன் பாடே கொண்டு போகிறே னென்றும் சொன்னது கண்டிலோமே என்கிறார்கள். (வாய்பேசும்) பொய் சொல்லத் தகும் க்ருஷ்ணனுடையிறே பழகுகிறது; பொய்யே நினைத்து அதுக்குமேலே பிறரறிய

வேணுமோ? (நங்காய்) சொன்னத்தோடே செயல் கூடாதேயிருப்பார்க்கு ஒரு பூர்த்தியும் வேணுமோ? என்கை. (எழுந்திராய்) இவர்கள் பேச்சேயமைந்தது இவளுக்கு; உன் பூர்த்தியாலே எங்கள் குறையையும் தீராய். 'இப்படி சொல்லி வைத்துச் செய்யப் பெற்றிலோம்' என்னும் லஜ்ஜையும் கூட இன்றிக்கேயிருப்பதே? (நாணுதாய்) நீயிருந்த ஊரில் பூசனியும் காயாதோவென்கை. (நாவுடையாய்) வாயேயிறே உனக்குள்ள தென்கை. 1. "நாந்₃ருக்₃வேத₃விதோ நீதஸ்ய" இத்யாதி₃. இவள் எல்லாம் படுத்தினாலும் விடவொண்ணுத நாவீறுடைமை. (விண்ணப்பம் செய்வார் எல்லா அநீதிகள் செய்யிலும் ஸத்துக்கள் தலையாலே சுமக்கிறது நாவீறன்றே)

நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்னென்ன; (சங்கொடு சக்கரமேந்தும் தடக்கையன் பங்கயக்கண்ணனைப்பாட)'இவர்களிதெல்லாம் சொல்லுகிறது, தங்களார்த்தியிறே' என்று பார்த்து, இவர்களை தூ₄ரிப்பிக்கைக்காக, 'நாவாலுள்ள கார்யம் கொள்ளுங்கோள்' என்ன, அவன் திருநாமங்களைப் பாடென்கிறார்கள்— (ஏந்துந்தடக்கையன்) பூவேந்தினுற்போலே திருவாழியையும் ஸ்ரீபாஞ்ச₂ஜந்யத்தையும் ஏந்தி அந்த ஸ்பர்ஶத்தாலே வளர்ந்த திருக்கைமலர்களையுடையவனுயிருக்கை. A "இன்னுரென்றறியேன்" என்று மதிகெடுக்கும் கையில் திருவாழியையும் சொல்லுகிறது. (பங்கயக்கண்ணனை) 2. "ஜிதம் தே புண்ட₃ரீகாக்ஷ" B "தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை" என்னப்பண்ணும் கண்ணையுடையவனை. C "ஆங்கு மலரும்" இத்யாதி₃ — ஸ்ரீ பாஞ்ச ஜந்யத்தைச் சந்த்₃ரனென்றும் திருவாழியாழ்வானை ஆதி₃த்யனென்றும், திருநாபீ கமலம் மொட்டிப்பது அலருவதாமாபோலே கண்ணுகிற தாமரையும் மொட்டிப்பது அலருவதாமென்கை. சந்த்₃ர ஸூர்யர்களையும் தாமரைப்பூவையும் ஒரு கலம்பகமாலையாகத் தொடுத்தாற்போலே இருக்கும்படியைச் சொல்லுகை. (பங்கயக்கண்ணனை) கண்ணாலே நமக்கு எழுத்துவாங்கி நம்மை எழுத்துவாங்குவித்துக் கொள்ளுமவன். D "தூதுசெய்கண்கள்" E "இளவாய்ச்சியர்கண்ணினுள் வீட்டுவேசெய்து விழிக்கும்பிரான்" (பாட) உன்னுடைய ப்ரீதிக்குப் போக்குவிட்டு எங்களை விறட்டுகேட்டைக்கீராய். 14.

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யானம் — பதினைந்தாம் பாட்டு

அவ:— பதினைந்தாம் பாட்டு. (உங்கள் இத்யாதி₃) இப்பாட்டில் ப₄க₃வத ஸமுதா₃யத்துக்கெல்லாம் தாமே கடவராய், இவர்களுக்கெல்லாம் ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ கூட்டகர் தாமேயாம்படி ஜ்ஞான ப₄க்தி வைராக்₃யங்களாலே பூர்ணரான ப₄க₃வதரை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (உங்கள் புழைக்கடை இத்யாதி₃) ஆகார்த்₂ய விஶிஷ்டரான உங்களுடைய விஹாரஸ்தா₂நமான திருமந்த்₃ரத்தினுடைய மத்₄யே வர்த்திக்கிற நமஸ்ஸிலே பாரதந்த்ர்யம் ப்ரகாஶமாய் ஸ்வாதந்த்ர்யம் தலைமடிந்ததுகாண்.

(சிங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்) ராக₃ப்ரயுக்தமான மோஷத்வ ஜ்ஞானமுடைய மந்த₃ஸ்மிதமுடையரான ப்ரபந்நாதி₄காரிகள் தங்கள் தங்கள் எம்பெருமான் ஸந்நிதி₄யிலே திருவாராத₄நம் பண்ணுகைக்குப் போந்தார்கள்.

(எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும் நங்காய் எழுந்திராய்) எங்களையெல்லாம் நாங்கள் அபேக்ஷிப்பதற்குமுன்னே ஜ்ஞானிகளாக்கும்படி

A பெரிய திரு 10-10-9, B திருவாய் 2-6-3, C மூன் திருவ 67, D திருவாய் 9-9-9 E திருவாய் 1-7-5.

பதினைந்தாம் பாட்டு

எல்லே இளங்கிளியே! இன்ன முறங்குதியோ?
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லேயுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்கொள்
வல்லானை கொன்றானை மாற்றுரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— இளம் கிளியே — (பேச்சிலும் அழகிலும்) இளமை தங்கிய கிளி போலிருப்பவளே! எல்லே — (உன் பேச்சின் இனிமை) என்னே! இன்னம் — எல்லோரும் வந்து நின்ற பிறகும், உறங்குதியோ — தூங்குகிறாயோ? (என்று எழுப்ப), நங்கைமீர் — பெண் பிள்ளைகளே! சில் என்று அழையேன்மின் — சிலுகு சிலுகு என்று அழைக்காதீர்கள், போதர்கின்றேன் — (இப்போதே) புறப்பட்டு வருகிறேன் (என்று உள்ளிருப்பவள் விடை கூற), வல்லை — (வாய்ப்பேச்சில் நீ) ஸமர்த்தையாயிராநின்றாய், உன் கட்டுரைகள் — உன்னுடைய கடுஞ்சொற்களையும், உன் வாய் — உன்னுடைய வாயையும், பண்டே அறிதும் — நெடுங்காலமாகவே நாங்கள் அறிவோம் (என்று எழுப்புகிறவர்கள் சொல்ல) நீங்களே வல்லீர்கள் — (இப்படி எதிர்வாதம் செய்யும்) நீங்களே வாய் வன்மையுடையவர்கள், நானே தான் ஆயிடுக — (அன்றிக்கே) நானே வாய் வன்மையுடையவளாய் இருக்கட்டும் (உங்களுக்கு நான் செய்ய வேண்டுவதென்? என்று உள்ளிருப்பவள் கேட்க) நீ — நீ, ஒல்லை போதாய் — சீக்கிரம் எழுந்திருப்பாயாக; உனக்கு என்ன வேறு உடையை — உனக்கு என்ன வேறு என்ன பலனை நீ உடையவளாயிருக்கிறாய்? (என்று உணர்ந்தவர்கள் வினவ), எல்லாரும் போந்தாரோ — (வரவேண்டியவர்) யாவரும் வந்தனரோ? (என்று உள்ளிருப்பவள் கேட்க), போந்தார் — (எல்லோரும்) வந்தனர், போந்து எண்ணிக்கொள்— (நீயும்) வந்து எண்ணிப்பார்த்துக்கொள் (என்று உணர்ந்தவர்கள் சொல்ல), 'நான் வெளி வந்து செய்யவேண்டுவதென்' என்று உள்ளிருப்பவள் உசாவ), வல்லானை — (குவலயாபீடமென்னும்) வலிய யானையை, கொன்றானை — அழித்தவனும், மாற்றுரை — சத்துருக்களை, மாற்று அழிக்கவல்லானை—வலியற்றவர்களாகச் செய்யவல்லவனும், மாயனை—ஆச்சரியமான செய்கைகளை உடையவனுமான கண்ணனை, பாட — பாடுவதற்காக (எழுந்திராய் என்று அழைக்கிறார்கள்).

ஸ்வா:- ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்யும் பூர்த்தியை உடையவரே! எழுந்திராய். (நானுதாய்), சொல்லும் செயலும் ஒத்திராதார்க்கு நாணமுமின்றிக்கே யொழிவதே!. இப்படி என்னை க்ஷேபித்துக்கொண்டாகிலும் என்பக்கல் ஸாபேக்ஷராய் வருவதேதென்ன; (நாஉடையாய்) வாங்மாதுர்யமுடையவரே! நீர் அற்ருதயமாகச் சொல்லிலும் பேச்சின் இனிமையைப் பார்த்தால் ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனை ஈச்வரனுக்கும் 'இது ஸத்ருதயம்; அவச்யம் கர்த்தவ்யம்' என்னும்படியாயிருக்கை,

ஜ்ஞாநமுண்டானால் செய்வதென்? என்ன, (சங்கோடு இத்யாதி) 1. "ஏதத் ஸாம கயாந் ஆஸ்தே" என்கிறபடியே திருவாய்மொழி பாடுகையே ப்ரயோஜநம், எழுந்திராய் என்கிறார்கள்.

மூவாயிரப்படி - பதினைந்தாம் பாட்டு

அவ;— பதினைந்தாம்பாட்டு. a எல்லாருடைய திரட்சியும் காணவேண்டி யிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— b (எல்லே b_2 இளங்கிளியே) c ''சங்கொடு சக்கரமேந்துந்தடக் கையள் பங்கயக்கண்ணனைப் பாட'' (14) என்று அசலகத்துப் பெண்பிள்ளையை எழுப்புகிற பாசுரத்தைக் கேட்டு, இவள் அந்தப் பாசுரத்தைத் தன்மிடற்றிலே யிட்டுப் பாட, எழுப்புகிறவர்கள், அந்த த்₄வநிவழியே கேட்டுச்சென்று, இவள் பேச்சிலினிமையாலே (எல்லே ! இளங்கிளியே!) என்கிறார்கள். d (இளங்கிளியே) e கிளியை வ்யாவர்த்திக்கிறது; கிளி இவள்பேச்சுக்கு ஒப்பாமித்தனை; பருவத் துக்கு ஒப்பன்றென்கை. (எல்லே) என்னே! ''எல்லே'' என்று–பேச்சிலினி மையாலே ஆஶ்சர்யப்படுகிறார்கள். f (இன்னம் உறங்குதியோ) g இவர்க ளழைக்கிறது தன் அநுஸந்த₄ாநத்துக்கு விக்₄நமாகையாலே பேசாதே கிடக்க, 'இன்ன முறங்குதியோ' என்கிறார்கள். h க்ருஷ்ணவிரஹத்தாலே தளர்ந்து உறக்கமின்றிக்கே உன்கடாக்ஷமே பற்றுசாக நாங்கள் நின்றபின்பும் உறங்கு மத்தனையோ? i க்ருஷ்ணநுப₄வத்துக்கு ஏகாந்தமான காலம் ஸித்₃தி₄த்திருக்க, உறங்கக்கடவையோ? என்றுமாம்,

---

பெ. அ. பதினஞ்சாம் பாட்டு. (எல்லே இத்யாதி₃) a ''எல்லாரும் போந்தாரோ?'' என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார் (எல்லாருடைய இத்யாதி₃)

b_2, c உறங்குகிறவளைப் பேச்சிலினிமை கேளாதபோது ''கிளியே'' என்று ஸம்போ₃தி₄க்கைக்கு ப்ரஸக்தியேதென்ன அருளிச்செய்கிறார் (சங்கொடு இத்யாதி₃) d, e பேச்சிலினிமையையிட்டு ''கிளியே'' என்று ஸம்போ₃தி₄க்குமிடத்து ''இளம்'' என்றதுக்கு ப்ரயோஜநமில்லாமையாலே, இளமையுடையளாயும் கிளி போன்றவளாயுமிருக்குமவளேயென்று ஸப்₃த₃ார்த்த₃ம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கிளியை இத்யாதி₃) f, g பேச்சைக்கேட்டு 'கிளி' என்று ஸம்போ₃தி₄த்தவர்கள், ''இன்னமுறங்குதியோ'' என்னக் கூடுமோ? என்ன; அதுக்குச்சேரத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி₃) f, h, i ''இன்னம்'' என்றதுக்கு இரண்டுவித₄மாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (க்ருஷ்ண இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே)

சி. அ. பதினஞ்சாம் பாட்டு. (எல்லே) b_2, c இவள் வார்த்தையை அறிந்தபடியென்? என்ன (சங்கொடு சக்கரமித்யாதி₃) b_2 இளங்கிளியே — இளமையையும் கிளியினுடைய பேச்சுப் போலேயிருக்கிற பேச்சையுமுடையவளே! என்றபடி. கிளி பா₃ல்யத்தில் வார்த்தை சொல்ல அறியாமையாலும், பா₃ல்யத்தில் வார்த்தை நன்றுயிராமையாலும் இப்படி கொள்ள வேணும். g இவள் பேசாதே கிடக்கிறதென்? என்ன -- (இவர்கள் அழைக்கிறது தன் அநுஸந்த₄ானத்துக்கு இத்யாதி₃) f, h, i ''இன்னமுறங்குதியோ'' என்றதுக்கு இரண்டு

j "உத்₃தே₃ஶ்யம் கைபுகுந்தாலும் உறங்குவாருண்டோ?" என்ன- k (சில் லென்று அழையேன்மின்) l தன் அநுஸந்த₄ாநத்துக்கு இவர்களழைக்கிறது விக்₄நமாகையாலே, 'சிலுகிடாதே கொள்ளுங்கோள்' என்கிருள். 'இ வ ர் க ள் வார்த்தை அஸஹ்யமோ?' என்னில்? - m திருவாய்மொழி பாடாநின்றுல் n செல்வ ரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாபோலே. o (ந ங் ை க மீ ர் போதர்கின்றேன்) p 'நாங்களும் எங்கள் சொல்லும் பொருதபடி உன்பூர்த்தி இருந்தபடியென்?' என்ன; சிவிட்கென்னக்கூசி. q (நங்கைமீர் q₂ போதர்கின்றேன்) r 'நீங்கள் வாய் திறவாதிருக்கவல்லிகோளாகில் நான் புறப்படுகிறேன்' என்ன;-

s (வல்லே உன்கட்டுரைகள் பண்டே 's₂ உன்வாய் அறிதும்) t 'நங்கைமீர்' என்று - உறவற்ற சொல்லாலே, t₂ வெட்டிமை யெல்லாம் சொல்லவல்லே என்

பெ.அ. j இவர்களெல்லாரும் தன்வாசலிலேவந்திருக்கையும் க்ருஷ்ணநுப₄வத்துக்கு ஏகாந்தம் ஸித்₃தி₄க்கையும் இவளுக்கு உத்₃தே₃ஶ்ய மென்று திருவுள்ளம் பற்றி, யோஜநாத்₃வயத்துக்கும் சேர உக்தார்த்த₂ாநுவாத₃ரூபேண மேலுக்கு ஸங்க₃தியைக் காட்டுகிறுர் (உத்₃தே₃ஶ்யம் இத்யாதி₃) k, l "இன்னமுறங்குதியோ" என்றதுக்கு — "நங்கைமீர் போதர்கின்றேன்" என்று இவ்வளவே சொல்லவேண்டியிருக்க, மத்₄யே அநாத₃ரம் தோற்ற "சில்லென்றழை யேன்மின்" என்னக்கூடுமோ? என்ன அருளிச்செய்கிறுர் (தன் அநுஸந்த₄ாநத்துக்கு இத்யாதி₃) m திருவாய்மொழிபாடுகை — திருப்புன்னைக்கீழே. k, o, p கீழே "சில்லென்றழை யேன்மின்" என்று சொல்லிவைத்து, "நங்கைமீர்" என்று பூர்த்தியையிட்டு இவள் ஸம்போ₄தி₄க்கைக்கு ப்ரஸக்தி அருளிச்செய்கிறுர் (நாங்களும் இத்யாதி₃) q₂ "போதர் கின்றேன்" என்ற அநந்தரம் "என்கிருள்" என்று ஶேஷம். q, r நீங்கள் பூர்ணைகளன்றே? வாய் திறவாதிருந்தால் நானும் எழுந்திருந்து வருகிறேனென்று அநுபயவசநரூபமாகக் கீழுக்குத் தாத்பர்யத்தைச் சொல்லாநின்றுகொண்டு மேலுக்கு அவதாரிகையிடுகிறுர் (நீங்கள் இத்யாதி₃)

q, s, t ஸகி₂களுக்குறித்து "நங்கைமீர்" என்று பூர்ணதையையிட்டுச் சொல்லுகை உறவற்ற சொல்லாகத் திருவுள்ளம்பற்றி, "நங்கைமீர்" இத்யாதி₃ "வாயறிதும்" என்ற அளவுக்கும் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறுர் (நங்கைமீர் இத்யாதி₃) t₂ வெட்டிமை —

வி.அ. தாத்பர்யம். j (உத்₃தே₃ஶ்யம் கை புகுந்தாலும்) [illegible] உத்₃தே₃ஶ்யம் - ததீ₃யஸம்ஸர்க்க₃ம்; அதாவது — தாங்கள் வாசலிலே வந்திருக்கை. m திருவாய்மொழி பாடுகை — சந்த்₃ரபுஷ்கரிணியின் திருப்புன்னைக் கீழே. n (செல்வர் எழுந்தருளுகையும் அஸஹ்யமாமாபோலே) என்றது — திருக்கோட்டியூர் நம்பி பெரியநம்பி முதலானுர் திருவாய்மொழி அநுஸந்தி₄த்திருக்க, செல்வர் எழுந்தருளினுப்போலே அஸஹ்யம் என்றபடி. o,p "நங்கைமீர்" என்றதுவும் வ்யங்க்₃யோக்தி. k, q, r "சில்லென்றழையேன்மின்" என்றத்தோடு கூட்டி அருளிச்செய்கிறுர் (நீங்கள் வாய் திறவாதிருக்கவல்லிகோளாகில் இத்யாதி₃) s, t "வல்லேயுன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்" என்றது 'நீ கட்டுரைகள் சொல்லவல்லே என்று பண்டே உன் வாயறிதும்' என்றபடி. s₂ 'உன்' என்றது நீ என்றபடி. q, s, t "நங்கைமீர்" என்ற பத₃த்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறுர் (நங்கைமீர் என்று உறவற்ற சொல்லாலே இத்யாதி₃) t₂ (வெட்டிமைச்சொல்) கடி₂னோக்தி. k, s, u "சில்லென்

னுமிடம் நாங்கள் இன்ருக அறிகிருேமோ? " u சொல்லிற்ருறச் சொல்லி, u_1 எங்கள் தலையிலே குற்றமாம்படி வார்த்தை சொல்லவல்லே என்னுமிடம் பண்டே அறி யோமோ?" என்றுமாம்.

v (வல்லீர்கள் v_1 நீங்களே) "w 'இன்னம் உறங்குதியோ' என்றும், 'வல்லே யுன்கட்டுரைகள்' என்றும் வெட்டிமை உங்களதன்ருே?" என்ன; x 'உன்வாசலிலே வந்து எழுப்ப, "சில்லென்றழையேன்மின்" என்றது-உன்னதன்ருே வெட்டிமை?' என்ன; y அது என்குற்றமன்று. அதுவும் y_1 உங்கள் குற்றமே; z நம்முடைய வார்த்தை கேட்க உகக்குமிவள், நம் வார்த்தை அஸஹ்யமாம்படியிறே க்ருஷ்ண குணங்களிலே அவகா₃ஹித்தது என்று உகக்கவேண்டியிருக்க, அதிலே தோ₃ஷத்தை ஏறிட்ட உங்களதன்ருே குற்றம்? a அதுகிடக்க; 1. "பரஸ்பர நீசபா₃வை:" என்றன்ருே ஸ்வரூபமிருப்பது; ஆகையாலே b (நானேதான் ஆயிடுக) c இல்லாத குற்றத்தையும் சிலர் "உண்டு" என் ரு ல், இல்லே செய்யாதே இசைகையிறே வைஷ்ணவலக்ஷணம். d 2. மத்பாபமேவாத்ர நிமித்த மாஸீத்" என்று - பிறர் குற்றத்தையும் தன்னுடைய பாபபடலம் என்ருனிறே ஸ்ரீபா₃ரதாழ்வான்.

பெ. அ. நிஷ்டு₂ரம். k, s, u உன்னுடைய கட்டுரைகளை—சொற்களைப் பார்த்தால், நீ—வல்லே—ஸமர்த்தை₂யாகையாலே, உன்வாய் — உன்னுடைய வார்த்தையை, பண்டே அறிதுமென்று ஸம்ப₃ந்தி₂ரித்த₂ம் திருவுள்ளம்பற்றி "சில்லென்றழையேன்மின்" இத்யாதி₃யை உட்கொண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (சொல்லிற்றை இத்யாதி₃) u_2 (எங்கள் தலையிலே குற்றமாம்படி) என்றதுக்கு — நாங்கள் சிலிட்டென்றதாய் நீ கூசி அநுநயம் பண்ணி நல்ல வார்த்தை சொல்ல ஸமர்த்தை, என்று கருத்து.

v. w ஏவகாரம்தவிர, "வல்லீர்கள் நீங்கள்" என்றதுக்கு பா₄வம் அருளிச்செய்கிருர் (இன்னம் இத்யாதி₃) v_1, x, y ஏவகாரத்துக்கு - நான் வல்லியன்று என்று அர்த்த₂ஸித்₃த₄ மாகையாலே, இதுக்கு பரஸக்தியை அருளிச்செய்யாநின்றுகொண்டு தாத்பர்யம் அருளிச் செய்கிருர் (உன்வாசலிலே இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) y_2, z "உங்கள் குற்றமே" என் றத்தை உபபாதி₃க்கிருர் (நம்முடைய இத்யாதி₃) a மேலுக்கு அவதாரிகை அருளிச் செய்கிருர் (அதுகிடக்க இத்யாதி₃) b, c ஸ்வரூபத்தையுணர்ந்தால் இல்லாத குற்றத்தையும் அங்கீ₃கரிக்கவேண்டுவானென்? என்ன, அருளிச்செய்கிருர் (இல்லாத இத்யாதி₃) b, d, "நானே தான்யிடுக" என்று பிறர்பக்கல் குற்றத்தை இல்லேசெய்து, தன்மேலே ஆக்கிக்கொண்ட பேர் உண்டோ? என்ன அருளிச்செய்கிருர் (மத்பாபம் இத்யாதி₃)

சி. அ. றழையேன்மின்" என்ற வாக்யத்தைக் கடாக்ஷித்துக் கொண்டு அருளிச்செய்கிருர் (சொல்லிற்றைச் சொல்லி இத்யாதி₃) b, x "நான்தான் ஆயிடுக" என்னுதே "நானே" என்ற ஏவகார வ்யாவர்த்யம் (உன் வாசலிலே இத்யாதி₃) e, f, g "ஒல்லே நீ போதாய்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். j (ஆழ்வான் வார்த்தையை நினைப்பது) என்றது க்ருமிகண்ட₂ன் உபத்₃ரவத்தாலே எம்பெருமானுர் திருநாராயணபுரத்துக்கு எழுந்தருளினபோது ஆழ்வான் பெருமானே ஸேவிக்க எழுந்தருள, திருவாசலிலே இருந்தவர்கள் சிலர் 'வேண்டா' என்று தகைய, அதிலே சிலர் "ஆழ்வான் நல்லவர்; போகவிடுங்கோள்" என்ன, "இந்த

'உங்களுக்குச் செய்யவேண்டுவது என்?' என்ன, e (ஒல்லை நீ போதாய்) f எங்களுக்கு ஒருக்ஷணமும் உன்னையொழியச் செல்லாமையாலே எங்கள் திரளிலே g சடக்கெனப் புகுந்துகொடு நில்லாய். g A "சாதுகோட்டியுட் கொள்ளப்படுவாரே" என்று அவளுக்கும் இத்திரளேயிறே ப்ராப்யம். h (உனக்கென்ன வேறுடையை) பஞ்சலக்ஷங்குடியில்பெண்களுக்கு உள்ளதொழிய, தனியே ஸ்வயம்பாகம் பண்ணுவாரைப்போலே உனக்கு வேறே சில உண்டோ? i வைஷ்ணவ விஷயத்தை பரிஹ்கரித்துப் பற்றும் பக்ஷவத்விஷயத்தோடு தேஹவதாந்தரத்தோடு வாசியில்லை; "நீ ஒருவர்க்கும் விரோதியல்லை; நீ புக்குத் திருவடிதொழு" என்ன, j ஆழ்வான் வார்த்தையை நினைப்பது.

(எல்லாரும் போந்தாரோ) k 'எனக்கு உங்களையொழிய ஸுகமுண்டோ? உணர அறியாத சிறு பெண்களும் உணர்ந்தால் புறப்படவிருந்தேன்; எல்லாரும் போந்தாரோ?' என்ன; (போந்தார்) 'க்ருஷ்ண விரஹத்தாலே துவண்ட பெண்களடைய உன்னைக் காண்கைக்கு உன்வாசலிலே வந்து கிடந்தார்கள்' என்ன, ஆகில், உள்ளே புகுரவிடுங்கோளென்ன; - (போந்து எண்ணிக் கொள்) புறப்பட்டு l மெய்க்காட்டுக் கொள், m மெய்க்காட்டுக்கொள்ளுகைக்கு ப்ரயோஜநம் தனித்தனியே பார்க்கையும் m₁ அநுபவிக்கையும்.

பெ. அ. e, f_2 "ஒல்லை" என்றதின் அர்த்தமும் 'சடக்கென' என்றது. g இவர்களைப்போலே அவளுக்கும் செல்லாமையுண்டானாலிறே சடக்கென வரக்கூடுமென்ன அருளிச்செய்கிறார் (சாது இத்யாதி$_3$) i இவளுக்குத் தனியே க்ருஷ்ணாநுபவமில்லையோவென்ன அருளிச்செய்கிறார் (வைஷ்ணவ இத்யாதி$_3$) j ஆழ்வான் வார்த்தையாவது-எம்பெருமானார் ஸம்பந்தி$_4$களை "கோயிலுக்குள்ளே புகுரவொண்ணாது" என்ன; "எம்பெருமானார் ஸம்பந்த$_4$மே போரும்" என்று திருப்பிச் சொன்ன வார்த்தை.

h,k, "உனக்கு என்ன வேறு உடைமை" என்றதால்-தன்னிடத்தில் ஸ்வாதந்த்ரியத்தை ஏறிடுகையாலே அஞ்சினமைதோன்ற பாவம் அருளிச்செய்கிறார் (எனக்கு உங்களை இத்யாதி$_3$) l மெய்க்காட்டுக்கொள்—எண்ணிக்கை பிடித்துக்கொள் என்றபடி. m_2 'அநுப$_4$விக்கையும்' என்றது-ஸம்ஸ்லேஷித்து அநுப$_4$விக்கையும் என்றபடி.

சி.அ. வர்த்தமானமேது?" என்று ஆழ்வான் கேட்டருள, "எம்பெருமானார் ஸம்ப$_3$ந்த$_4$முடையாரைப் பெருமாளை ஸேவிக்கப் போகாதபடி தகைந்து கிடக்கிறது" என்ன, ஆத்மகு$_3$ணங்கள் ஆசார்ய ஸம்ப$_3$ந்த$_4$த்துக்குடலென்று சொல்லுவர்கள்; என்னுடைய ஆத்மகு$_3$ண்ங்கள் எம்பெருமானார் ஸம்ப$_3$ந்த$_4$த்தை அறுத்துக் கொள்ளுகைக்குடலாயிற்று" என்று பரிதபப்பட்டருளி, "நமக்குப் பெருமாள் வேண்டா; எம்பெருமானார்ஸம்ப$_3$த்த$_4$மே அமையும்" என்று மீண்டெழுந்தருளினாராம். அத்தை நினைக்கிறது என்றபடி. m (மெய்க்காட்டுக் கொள்ளுகைக்கு ப்ரயோஜனம் தனித்தனியே பார்க்கையும் அனுப$_4$விக்கையும்) என்றது — எழுந்திருக்கும்போது தங்களை ப்ரத்யேகம் ப்ரத்யேகம் கடாக்ஷிக்கையும் ஸ்பர்ஶிக்கையும்

A பெரியாழ்-திரு-3-6-11.

தாமெல்லாரும் கூடினுல் செய்வதென்? என்ன,—n (வல்ஆனைகொன்ருனை) o குவலயாபீட₃த்தைக் கொன்று நம் ஜீவநமான தன்னை நோக்கித் தந்தவனை. p (மாற்ருரை மாற்றழிக்க வல்லானை) q எதிரிட்ட கம்ஸாதி₃களை அநாயாஸேந நஶிப்பித்து, 1. ''ந ஸமம் யுத்₃த₄மித்யாஹு:'' என்று அஞ்சின பெண்களை வாழ்வித்தவனை. r (மாயனை) s தன்கையில் s₂ அவர்கள் படுமத்தைத் தான் பெண்கள் கையிலே படுமவனை. t (வல்ஆனை கொன்ருனை) u அங்கே குவலயாபீட₃த்தைக் கொன்ருற்போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபி₄மாநத்தைப் போக்கினவனை. v (மாற்ருரை மாற்றழிக்க வல்லானை) w சாணூர முஷ்டிகாதி₃களை நிரஸித்தாற்போலே, நம்மைத் தன்னெடு சேரவொட்டாத இடையருடைய ஸங்கல்பத்தைப் போக்கினவனை. (மாயனை) எதிரிகளைத் தான் தோற்பிக்குமாபோலே நம்கையிலே தோற்ற ஆஶ்சர்யபூ₄தனை. x (பாட) y நமக்கு அவன் தோற்கும் தோல்விக்குத் தோற்றுப்பாட. 15.

பெ. அ.n.o வலியதாய் - ப₃லிஷ்ட₂மாயிருக்கிற, ஆனை என்ருய், அத்தைக் கொல்லுகை குணமாம்படி தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (குவலயா இத்யாதி₃) p, q ''மாற்று'' என்று - பொன்வினுடைய வர்ணைக்கர்ஷமாய், இங்கே ப₃லாதி₄க்யத்தைச் சொல்லுகையாலே, 'மாற்ருரை பலம் போக்கும் மிடுக்கனை' என்று ஶப்₃த₃ார்த்த₂ம் திருவுள்ளம் பற்றிப் ப₂லிதார்த்த₂த்தை அருளிச்செய்கிறார் (எதிரிட்ட இத்யாதி₃) r,s கீழைக் கடாக்ஷித்து ப₄ாவம் அருளிச்செய்கிறார் (தன்கையில் இத்யாதி₃) அதாவது - தன் கையில் எதிரிகள் படுமவற்றையெல்லாம் பெண்கள் கையிலே தான்பட்டு, பெண்களுக்குத் தான் தோற்ற தோல்வியாலே அவர்களை வென்றிருக்குமவனென்கை. t,u,v,w ''வல்லானை'' இத்யாதி₃க்கெல்லாம் தாத்பர்யாந்தரங்களை அருளிச்செய்கிறார்(அங்கே இத்யாதி₃) x, y ''வல்லானை'' இத்யாதி₃க்கெல்லாம் சொன்ன இரண்டு ப₄ாவத்தையும் திருவுள்ளம் பற்றி, ''பாட'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நமக்கு இத்யாதி₃) ''பாடப்போந்தார்'' என்ன அந்வயம் கண்டு கொள்வது. 15

சி. அ. என்றபடி.. p ''மாற்ருரை மாற்றழிக்கவல்லானை''—ஶத்ருக்களுடைய ஶாத்ரவத்தைப் போக்கவல்லானை; மாற்று — ஶாத்ரவம். t,u,v,w ''வல்லானை கொன்ருன்'' இத்யாதி₃க்குத் தாத்பர்யாந்தரம் (அங்கே குவலயாபீட₃த்தை இத்யாதி₃ வாக்யத்₃வயேந) s₂ (அவர்கள் படுமத்தை) தன் கையிலே ஶத்ருக்கள் தோற்குமத்தை.- (மாயனைப் பாடுகைக்கு ஒல்லை நீ போதாய்) என்று அந்வயம்.

இப்பாட்டுக்கு ஸ்வாபதே₃ஶம் — ஶ்ரீவைஷ்ணவர்கள் ஸமவாயத₃ர்ஶநம் அபி₄மதமாயிருக்குமவர்களைக் கண்டக்கால் அந்த ஸமூஹமாக அவர்களை உகக்கை ஸ்வரூபம் என்று. 15.

ஆ. அ. பதினஞ்சாம் பாட்டு. (எல்லேஇளங்கிளியே இத்யாதி₃) [மாயனைப்பாடுகைக்கு, எல்லே இளங்கிளியே என்று தொடங்கி, போந்தெண்ணிக்கொள்] என்று அந்வயம். 15.

ஆருயிரப்படி — பதினேந்தாம்பாட்டு

அவ:— பதினேந்தாம்பாட்டு. (எல்லே) பெண்களெல்லாருடையவும் திரள் காண வேண்டியிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள். கீழ்ப்பத்துப் பாட்டாலும் சொன்ன உக்திப்ரத்யுக்தியை முக்தகண்டமாகச்சொல்லுகிறது-இப்பாட்டில். அந்விதாபிதாநம் பண்ணியிறே கிடக்கிறது. திருப்பாவையாகிறது இப்பாட்டிறே. பகவத்விஷயத்திலிருக்கும்படியெல்லாம் சிற்றஞ்சிறுகாலையிலே (29) சொல்லுகிறது; பாகவத விஷயத்திலிருக்கும்படியெல்லாம் இப்பாட்டிலே சொல்லுகிறது.

வ்யா:— ''பங்கயக் கண்ணனேப்பாட'' (14) என்று - அசலகத்தில் பெண் பிள்ளையெழுப்புகிற பாசுரத்தைக் கேட்டு, இவர்கள் பாசுரத்தைத் தன் மிடற்றிலேயிட்டு நுடங்கிப் பாடுகிறபடியைக்கேட்டு, தத்வநிவழியேசென்று பேச்சிலினிமையாலே, ''எல்லே! இளங்கிளியே'' என்கிறார்கள் (எல்லே இளங்கிளியே) யாழிலேயிட்டுப்பாடி, அது பண்பட்டு இனிதானவாறே தந்தாம் மிடற்றிலே மாற்றுவாரைப் போலே, தங்கள் பேச்சுக்கு இவள்பேச்சு (எல்லே இளங்கிளியே) திருவாணமிடறும் பாட்டுமிருந்தபடி என்தான்! பேச்சிலினிமையிருந்தபடி - எழுப்புகை சாலதர்மஹாநியாயிருந்ததே! பேச்சிலினிமையாலே ''எல்லே'' என்று ஆஸ்சர்யப்படுகிறார்கள் (எல்லே) ஸம்போதநமாகவுமாம் (இளங்கிளியே) என்று-கிளியை வ்யாவர்த்திக்கிறது. பசுமைக்கும் பேச்சுக்கும் கிளி ஒப்பாமித்தனை; பருவத்துக்கு ஒப்பாகமாட்டாது; ஒக்கிலும், பிராட்டிமாந்தருவத்துக்கு ஒப்புமித்தனை. இவர்கள் கிளி; தான் இளங்கிளி. A ''மென்கிளிபோல் மிகமிழற்றும்'' B ''அணிமழலைக்கிளி மொழியாள்'' என்னக்கடவதிறே. ''நாணுதாய் நாவுடையாய்'' (14) என்று கீழ்ப்பாட்டிலே அவளையுட்பட வெறுத்தவர்கள் அவளிலும் பிற்பாடையாய், ஸ்வாராதையாய்க்கிடக்கிற நம்மை ஸ்லாகிக்கக் கூடாது. ''மாசுடையுடம்பொடு தலையுலறி வாய்ப்புறம் வெளுத்து'' என்னும்படியே - தங்களுடம்பு விவர்ணமாய் வாயும் வெளுத்திருக்க; க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தாலே உடம்பு பசுபசுகென்று வாயுஞ் சிவந்து நாம் குறியழியாதிருந்தோமென்று நம்மை நிந்தித்திருக்கிறார்கள்; இவ்வளவில் இவர்களுக்கு வாய்திறக்கில் வெறுப்பாமென்று பேசாதேகிடக்க, (இன்னம் உறங்குதியோ) என்கிறார்கள். நாங்கள் வருவதுக்கு முன்பு உறக்கத்தைப் பொறுத்தோமாகிலும், நாங்கள் வந்தால் உறங்கக் கடவதோ? (இன்னம் உறங்குதியோ) க்ருஷ்ணவிரஹத்தாலும் உன் கடாக்ஷம் படாமையாலும் துவண்ட எங்கள் ஆர்த்தத்வநி கேட்டும் கண் உறங்குவதே உனக்கு! (இன்னம் உறங்குதியோ) உத்தேஸ்யம் கைபுகுந்தால் உறங்குவாருண்டோ? க்ருஷ்ணநுபவத்துக்கு ஏகாந்தம் பெற்றாலும் உறங்கக்கடவதோ?

தான் அநுபவிக்கிற பங்கயக்கண்ணனுடைய அநுஸந்தாநத்துக்கு, ''இளங்கிளியே'' என்பது, ''இன்னமுறங்குதியோ'' என்பது, இவர்கள் சொல்லுகிறவை

A திரு நெடு-15. B திருவாய்-9-7-11. C நாச் திரு-1-8.

விக்₃நமாகையாலே, 'சிலுகிடாதேகொள்ளுங்கோள்' என்கிறள்— (சில்லென்றழையேன்மின்) திருவாய்மொழி பாடாநின்றுல் செல்வரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாபோலே; பிராட்டிமாரும் ஸர்வேஶ்வரனும் கூட எழுந்தருளியிருந்தால் ஒட்டுவட்டில் காளாஞ்சியோபாதி பிரியாதேயிருக்கக்கட₃வ ஶ்ரீநார₃ப₄₃வானையும், ஶ்வேதத்₃வீபத்திலே எழுந்தருளுகிறபோது 'உன் வன்மை அவர்கள் பொருதேயிருக்கக்கூடும்' என்று "நான் வருமளவுமிங்கேயிரு" என்று அருளிச்செய்து எழுந்தருளினுரிறே. 'தன்னுலல்லது செல்லாத எங்களைச் சிவிட்கென்பதே!' என்று இன்னுதாய், 'நாங்களும் எங்கள் த₃ர்ஶநமும் எங்கள் பேச்சும் அஸஹ்யமாம்படி உன்னுடைய பூர்த்தியிருந்தபடியென்!' என்ன; (நங்கைமீர் போதர்கின்றேன்) 'என் ப்ரக்ருதியறியாதே "இளங்கிளியே" என்று என்னை ப₃ாதி₄க்கிற நீங்களன்றே பூர்ணைகள்; வாய்திறவாதிருக்கவல்லிகோளாகில் நான் புறப்படுகிறேன்' என்ன;

(வல்லியுன் கட்டுரைகள்) எங்கள் தலையிலே குற்றஞ்சொல்லலாவதெல்லாஞ் சொல்லி, உன்தலையில் குற்றமில்லையென்னும்படி உபபாதி₄க்கவல்லையிறே. (பண்டே உன்வாய் அறிதும்) ' "நங்கைமீர்" என்று உறவற்ற சொல்லாலே வெட்டிமை சொல்லவல்லையென்னுமிடம் நாங்கள் இன்றுக அறிகிறேமோ? பண்டேயறியோமோ? கு₃ணதோ₃ஷங்களென்று ஒன்றுண்டோ? நீசொல்லிற்று வார்த்தையாமித்தனையன்றே. உன்வாசலிலே நாங்கள் எத்தனை கால்முண்டு துவளுகிறது?' என்ன; (வல்லீர்கள் நீங்களே) 'உங்கள் வாசலிலே நான் வந்து துவள, பேசாதே கிடந்து வெட்டிமை சொல்லிப் படுத்தவல்லிகோள் நீங்களன்றே. உங்கள் வாசலிலே வந்தெழுப்ப நான் எத்தனை பண்ணை(டை)க்கேட்டேன்' என்ன; 'அது ஸாத்₄யம், இது ஸித்₄தி₄ம்; ப்ரத்யக்ஷம் கிடக்க அநுமாநத்தைக் கொள்ளவோ?' என்ன; பதகம் மூட்டினவாறே—(நானேதான் ஆயிடுக) 1. "பரஸ்பரநீசபா₄வை:" என்றன்றே ஸ்வரூபமிருப்பது. இல்லாத குற்றத்தைச் சிலர் "உண்டு" என்றல், இல்லைசெய்யாதே இசைக்கையிறே வைஷ்ணவலக்ஷணம். 2. "மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்" என்று-பிறர் குற்றத்தையும் தன் குற்றமாக இசைந்தாரிறே ஶ்ரீப₄ரதாழ்வான். ஸ்வகு₃ணப₄₃ாநத்துக்காக கௌரவ்யரை அதிநிர்ப்₃ந்த₄ம் பண்ணலாகாதென்னும் வேத₃ார்த்த₂ம் ப்ரகாஶிக்கிறது,

'இப்படி தோ₃ஷது₃ஷ்டையான நான் உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?' என்ன; (ஒல்லை நீபோதாய்) உன் குற்றத்துக்கு இசைந்தபின்பு சடக்கெனப் புறப்பட்டு இத்திரளிலே புகுந்து பொறுப்பித்துக்கொள்ளாயோ? (ஒல்லை) A "ஒல்லைக்கூடுமினே" என்றுரிறே. B "சாதுகோட்டியுட்கொள்ளப்படுவார்" என்று-ஶ்ரீவைஷ்ணவ கோ₂ஷ்டி₄யிலே புகுருகை ஏற்றமென்று அருளிச்செய்தாரிறே. (ஒல்லை நீபோதாய்) உன்னை அரைக்ஷணம் காணுதொழியில் எங்களுக்கு ப்ராணஹாநி; புறப்படாதொழியில், உனக்கு அநர்த்த₂மாய்த் தலைக்கட்டும். 'ஆகில் புறப்படாநின்றேன்' என்னத் துடித்துக்கொண்டு புறப்பட்டுநின்று தாங்கள் பட்டது படாமையாலே சிவிட்

A திருப்பல் 4. B பெரியாழ் திரு-3-6-11,

கென்று-(உனக்கு என்ன வேறுடையை) என்கிறார்கள்—இவள் சற்று விளம்பி₃த்துப் புறப்படுங்காட்டில். அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களுக்கொழிய உனக்கென்ன ஒரு ஸ்வயம்பாகம் வேணுமோ? உன் ஸ்வயம்பாகம் தவிர்ந்திலேயோ பெரும்பானை கண்ட பின்பும்? வைஷ்ணவ விஷயத்தை ப₃ஹிஷ்கரித்துப் பற்றும் ப₄க₃வத்₃விஷயத்தோடு தே₃வதாந்தரத்தோடு வாசியில்லை.

இளையபெருமாள், ஸ்ரீப₄ரதாழ்வானுடைய வத₄த்திலே உத்₃யோகி₃த்து, வில்லிலே நாணேறிடுவது, அம்பைத் தரிப்பதாகிறபடியைக் கண்டு, பெருமாளுக்கு அஸஹ்யமாய், ''அவனுக்கு ராஜ்யத்தில் ஸ்ரத்₃தை₄யில்லை, உனக்கு அபேக்ஷையுண்டாகில் வாங்கித்தருகிறேம்'' என்று அருளிச் செய்தபோது இளையபெருமான் தரைப்பட்டாற்போலே, இவளும் ''உனக்கென்ன வேறுடையை'' என்றது பொறுக்க மாட்டாமே-(எல்லாரும் போந்தாரோ) 'உங்களையொழிய எனக்கு ஒரு ஸஹாயமுண்டோ? நம்மிலே சிலர் உறங்கிக்கிடக்கப் போகவொண்ணுதென்னும் இன்னுப்பாலே சொன்னேனித்தனையன்றே. உணரவறியாத சிறுபெண்களும் உணர்ந்தால் புறப்படுவதாகவிருந்தேன், எல்லாருமுணர்ந்து புறப்பட்டார்களோ?' என்ன; (எல்லாரும் போந்தார்) க்ருஷ்ணவிரஹத்தாலே துவண்ட பெண்களடைய உன்னைக் காண்கைக்கு உன்வாசலிலே வந்து கிடக்கிறது. 'நான் எழுந்திருக்கைக்காக ஒன்றைச் சொல்லுகிறிகோளத்தனையன்றே; வந்தார்களாகில் உள்ளே புகுரவிடுங்கோள்?' என்ன; (போந்தெண்ணிக்கொள்) வந்தமை நிஶ்சிதம்; புறப்பட்டு மெய்க்காட்டுக் கொள். மெய்க்காட்டுக்கொள்ளுகைக்கு ப்ரயோஜநமாக இவர்கள் நினைக்கிறது—தனியே பார்க்கையும், பேர்சொல்லுகையும், தொட்டு எண்ணுகையும், ஸ்பர்ஶஸஹ மநுபூ₄விக்கையும், பெண்களுக்கு ஸங்கோ₂யையில்லாமையாலே எண்ணிமுடிக்குந்தனையும் இவைப்பிரியாதே அநுப₄விக்கையும்.

'நாமெல்லாருங்கூடிச் செய்யப்பார்த்ததென்?' என்ன: க்ருஷ்ணனுடைய விஜயங்களை நீ பாட நாங்கள் கேட்கவேணுமென்கிறார்கள் - (வல்லானை கொன்றானை) குவலயாபீட₃த்தைக்கொன்று நம் ஜீவநமான தன்னை நோக்கித்தந்தவனை. பெருமிடுக்குண்டாம்படி மத₃ப்படுத்திநின்ற குவலயாபீட₃த்தைக் கொன்று 1. ''ஸக்₃ரஹ: பஶ்யத'' என்று A காவிமலர் நெடுங்கண்ணர் கைதொழவீதிவந்து நம்மோட்டைம் பெண்களை வாழ்வித்தவனை. B ''கவளயானைக் கொம்பொசித்த கண்ணன்'' என்றிறே பெண்கள் வாய்வெருவுவது. C ''கவளமால் யானை கொன்ற கண்ணன்'' என்று-ஆண்களை எழுதி முடிக்கப் பண்ணினது, பெண்களையெழுத்துவாங்குவிக்கச் சொல்லவேணுமோ? D 'வெஞ்சினவேழ மருப்பொசித்த வேந்தர்கோலேந்திழையார் மனத்தைத் தஞ்சுடையாளர்கொல்'' என்னக்கடவதிறே. E ''வாரணத்தை மருப்பொசித்த பிரானென் மாதவனே'' F ''பாரணங்காளன் வாரணந் தொலைத்த காரணன்'' G ''பின்னை மணாளனுகிக் கருந்தாள்களிரென்றிரைத்தான்'' என்று

A பெரிய திரு-3-3-7. B பெரிய திரு-4-8-1. C திருமாலை-45. D பெரிய திரு 9-2-6. E திருவாய்-2-7-2. F திருவாய்-10-5-2. G பெரிய திரு-8-6-6.

ப்ரத₄மநமஸ்ஸிகள் மூவரும் இவ்வபத₃ாநத்துக்கிறே தோற்றுக்கிடப்பது. ஸ்ரீக₃ஜேந்த்₃ராழ்வாநே ரக்ஷித்ததிலுங்காட்டில் இத்தை கு₃ணமாக A "ஓராநேகாத்துஓராநே கொன்று" என்று அநுஸந்தித்தாரிறே.(மாற்ருரைமாற்றழிக்கவல்லாநே)சக்ரவர்த்தித் திருமகநப்போலே, 1. "க₃ச்ச₂" என்றுவிடாதே, குவலயாபீட₃த்தின் கொம்பைப்பிடுங்கி, மல்லரங்க₃த்திலே புக்கு சாணூரமுஷ்டிகர் தொடக்கமான மல்லரைக்கொன்று உயர்ந்த மஞ்சத்திலேயிருந்த கஞ்சநே மயிரைப் பிடித்திழுத்து, பூ₄தலத்திலே புரட்டித் திருவடிகளாலே உதைத்து, மதிப்பறுத்து, B குஞ்சிபிடித்தடித்து, தன்நே யுபகரித்து, 2. "ந ஸமம் யுத்₃த₄மித்யாஹு:" என்றஞ்சிந பெண்களை வாழ்வித்தவநே; C "வார்கடாவருவி"யில் செய்தவற்றையெல்லாம் நிநைத்துச்சொல்லுகிறர்கள். (மாயநே) தன் கையிலே எதிரிகள் படுவதெல்லாம் நம் கையில் தான்பட்டு நமக்குத்தோற்று அத்தோல்வியாலே நம்மை வென்றிருக்குமவநே. (வல்லாநே கொன்றநே) குவலயாபீட₃த்தை அழித்தாற்போலே நம்முடைய ஸ்த்ரீத்வாபி₄மாநத்தைப்போக்கி, மல்லரை நிரஸித்தாற்போலே தன்தோளோடு அணையவொட்டாத இடையருடைய ஸங்கல்பத்தைப்போக்கி, எதிரிகள் தனக்குத்தோற்றாற்போலே, நமக்குத் தான் தோற்றிருக்கிற ஆஸ்சர்யபூ₄தநே. (பாட) நம்முடைய தோல்வியும் அவனுடைய வெற்றியும் தோற்றப் பாட. D "ஏத்துகின்றோம் நாத்தழும்ப" என்று தோற்றவர்கள் பாடுமாபோலே; "வாயினுல்பாடி" (5) என்று—அவதாரக்ரமம் பாடிநபடி சொல்லிற்று; "கேசவநைப் பாட" (7) என்றும், "பாடிப்பறை கொண்டு" (27) என்றும், "கீர்த்திமைபாடி" (13) என்றும்-விரோதி₄ நிவர்த்தகத்வம் பாடிநபடி சொல்லிற்று; "முகில் வண்ணன்பேர்பாட" (11) என்று-வடிவழகுக்குத் தோற்றுப்பாடிநபடி; "சங்கொடு சக்கரமேந்தும்" (14) என்று-தி₃வ்யாயுத₄ங்களுக்கும் அவயவஸோபை₄க்கும் தோற்றுப்பாடிநபடி; இங்கு, "வெறுங்கையோடே நின்று வென்றபடிக்கும், தங்களுக்குத் தோற்றபடியையும் பாடுகிறார்கள்.

"எல்லே இளங்கிளியே" என்று-ப₄க₃வத்₃ விஷயத்தில் ருசியுடையார் பேச்சும் உத்₃தே₃ஸ்யமென்கிறது; "இன்னமுறங்குதியோ" என்று-ப₄க₃வத ஸஹவாஸம் லி₃ப்₃தி₄த்தால் புறம்பு அந்யபரதைபண்ணுமிடம் சொல்லுகிறது; "சில்லென்றழையேன்மின்" என்றத்தால்-ருசியுடையாக்கு எல்லாரும் சொன்னாலும் பொறுக்க வேணுமென்னுமிடம் சொல்லுகிறது; "நங்கைமீர் போதர்கின்றேன்" என்கிறத்தால்-சாபலத்தாலே சில பிறந்தாலும் ப₄க₃வத்விஷயத்தில் அவக₃ாஹித்த ஜ்ஞாநே, சாபலத்தால் பிறந்தவற்றை நிநையாதே, கெளரவ்யதை தோற்றச் சொல்லவேணுமென்கிறது; "வல்லீயுன்கட்டுரைகள்" என்றத்தால்-"சில்லென்றழையேன்மின்" என்றது இவர்களுக்கு உத்₃தே₃ஸ்யமானவோபாதி உன் வெட்டிமை யறிந்தோமென்றதும் அவளுக்கு உத்₃தே₃ஸ்யமாகக்கடவதென்கிறது; "வல்லீர்கள் நீங்களே நாநேதான் ஆயிடுக" என்கிற இத்தால்-பரதே₃ாஷத்தையும் ஸ்வதே₃ாஷமாக்கிக் கொள்ளவும், கெளரவ்யரை அதிநிர்ப₃ந்த₄ம் பண்ணக்கடவதல்லவென்

A திருச்சந்த-40. B பெரிய திரு-3-10-3. C திருவாய்-8-4. D பெரிய திரு-10-3-1.

னுமிடத்தையும் சொல்லுகிறது. "ஒல்லைநீ போதாய்" என்கிற இத்தால் பாகவத ஸம்ஸ்லேஷம் ஸத்தாஹித்யதி என்கிறது; "உனக்கென்ன வேறுடையை" என்கிற இத்தால்—1. "யதா தே தத்ர வர்த்தேரந்" என்கிற வேதாந்த ப்ரக்ரியையாலே ஸ்ரேஷ்டர் வர்த்தித்தபடி வர்த்தியாதொழிகை தப்பென்கிறது; "எல்லாரும் போந்தாரோ" என்கிற இத்தால்—ஸ்ரீவைஷ்ணவர்களெல்லாரும் உத்தேஸ்யரென்கிறது; "போந்தெண்ணிக்கொள்" என்கிற இத்தால்—ஒருவர் குறைந்தாலும் பகவதநுபவத்துக்குக் குறையென்கிறது; "வல்லானைகொன்றானே" என்றுதொடங்கி—திரண்ட பாகவதர்களுக்கு உஜ்ஜீவநம் A "உண்ணுஞ்சோறு" என்கிறபடியே பகவத் விஷயானுபவமென்கிறது.

15.

ஈராயிரப்படி — பதினேந்தாம் பாட்டு

அவ:— பதினேந்தாம் பாட்டு— இவர்கள் தங்களிலே கூடிப் பாடின பாட்டைக் கொண்டு அசல் திருமாளிகையிலே கேட்டுக் கிடப்பாளொரு பெண் பிள்ளையை, தன்னிலே நுடங்கிப்பாடுகிறபடியைக் கேட்டு "எல்லே இளங்கிளியே', என்கிறார்கள்.

வ்யா:—, 'திருவான பேச்சு இருந்தபடியென்' என்று கொண்டாடுகிறார்கள் யாழிலேயிட்டுப் பாடி இனிதானவாறே மிடற்றிலே இட்டுப் பாடுவாரைப் போலே முற்படப் பெண் பாடக்கேட்டு அவர்கள் பாடுகிறார்கள்.

(எல்லேயித்யாதி) "இளங்கிளி" என்று கிளியை வ்யாவர்த்தித்தபடி. தாங்கள் கிளிகள், இவள் இளங்கிளி. பாட்டிலினிமையும் அப்படியே; இதொரு பேச்சே என்று கொண்டாடுகிறார்கள். இவர்கள் பாட்டுக்கொண்டாடினத்தை. பயத்தாலே தங்களுடைய உடம்பும் வாயும் வெளுத்திருக்க, க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தாலே நம் உடம்பு பசுமையுண்டாய் வாயும் சிவந்திருக்கிறது என்று ஒன்றும் பேசாதே கிடந்தாளாயிருந்தவாறே—(இன்னமுறங்குதியோ) உத்தேஸ்யம் கைபுகுந்தாலும் உறங்குவாருண்டோ? (சில்லென்றழையேன்மின்) தான் அனுஸந்திக்கிற அனுஸந்தானத்துக்கு இவர்கள் அழைக்கிற சொல் விக்நமாகையாலே 'சிலுகிடாதே கொள்ளுங்கோள்' என்கிறாள். திருவாய்மொழி பாடாநின்றால் செல்வரெழுந்தருளுகையும் அஸஹ்யமாமாபோலே. (நங்கைமீர் போதர்கின்றேன்) இவர்கள் சிவிட்கென்ன, 'நாங்களும் எங்கள் சொல்லுமாகாதபடி உன் குறைவறுகை இருந்தபடி யென்?' என்ன; 'நீங்களன்றே குறைவற்றீர்கள்: படுத்தாதே கொள்ளுங்கோள்; புறப்படாநின்றேன்' என்ன (வல்லையுன் கட்டுரைகளித்யாதி) 'நீ சொல்லிற்றைச் சொல்லி எங்களதே சுற்றமாம்படி வார்த்தை சொல்லவல்லை என்னுமிடம் இன்றேயல்ல அறிகிறது; எத்தனை காலமுண்டு உன்னேடே பழகுகிறது' என்ன;

(வல்லீர்கள் நீங்களே) 'உங்கள்வாசலிலேவந்து உங்களாலே படாததுண்டோ?' என்ன அது ஸாத்யம்; இது ஸித்தமன்றே; ப்ரத்யக்ஷித்துக்கு அநுமானம் வேணுமோ?' என்ன; (நானேதானுயிடுக) என்று. ஸ்ரீபராசரபட்டர்

A திருவாய்-6-7-1.

1. "மத்பாபமேவாத்ர" என்றுப்போலே; 2. "மத்₃பா₄க்₃யஸங்க்ஷயாத்" இறே. பர ஸ்துதியோடொக்கும் ஸ்வநிகர்ஷம். (ஒல்லை நீ போதாய்) அவள் புகுராவிடில் தங்களுக்கு ப்ராணஹாநியாகையாலும், அவளுக்கும் அனர்த்த₃மாகையாலும் 'சடக்கெனப் புறப்பட்டுக் கொடுநில்' என்ன, வைஷ்ணவ கோ₃ஷ்டி₂யைப் பிரியாதிருக்கை நன்று. (உனக்கென்ன வேறுடையை) "பஞ்சலக்ஷம் குடியில் பெண்களுக்குள்ளதொழிய உனக்கு வேறே சில உண்டோ? உன் ஸ்வயம்பாகம் இன்னம் தவிர்ந்ததில்லை, பெரும்பானை கண்ட பின்பும்" என்கிறார்கள். அதாவது— மத்₄யமபத₃மும் மூன்றும் பதமும். காட்டில் இளையபெருமாளுக்கு ஸ்ரீப₄ரதாழ்வானைக்காண்கை அஸஹ்யமானவாறே, பெருமாள் "ஆகில் நீர் ராஜ்யத்தை ஆள வேணும்" என்ன, இளையபெருமாள் தரைப்பட்டாற்போலே, இவளும் "உனக்கென்ன வேறுடையை" என்ன, அப்படி தரைப்பட்டாள். A சாதுகோட்டியுட் கொள்ளப் படுவாரென்கை புருஷார்த்த₃ம். இக்கோ₃ஷ்டி₂க்குப் புறம்பாயிருக்கைக்கு மேற்பட அனர்த்த₃முண்டோ? விஷயங்களைப்பற்றிப் புறம்பாயிருக்கவுமாம், ஈஸ்வரனைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம்; ஆத்மாவைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம். 3. "ஸைன்யம் ப₄ரதம் கை₃த்வா ஹநிஷ்யாமி ந ஸம்ஸய:' 4. "ராஜ்ய மஸ்மை ப்ரதீ₃யதாம்" 5. "ஸ்வாகி கை₃த்ராணி லஜ்ஜயா"

(எல்லாரும் போந்தாரோ) உங்களையொழிய எனக்கொரு ஸுக₃முண்டோ? உணர்வறியாத சிறு பெண்களும் இழக்கவொண்ணாது; அவர்களும் உணர்ந்தால் புறப்படவேணுமென்று கிடந்தேன். (எல்லாரும் போந்தாரோ) 'அடைய வந்து புறப்பட்டு மெய்க்காட்டுக் கொள்' என்ன; மெய்க்காட்டுக்கு ப்ரயோஜனம் தொட்டெண்ணுகையும். தனித்தனி எல்லாரையும் தழுவுகையும்.

(வல்லானை கொன்றானை) 'இனி உங்களுக்குச் செய்யவேண்டுதென்?' என்ன, உன் அழகிய மிடற்றுலே 'வல்லானை கொன்றானை' என்றுய் என்கிறார்கள். "ஒருநாள் செய்த உபகாரம் அமையாதோ நமக்கு" என்று கொண்டாடுகிறார்கள். (வல்லானை கொன்றானை) B "புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதான்" என்று வாசலிலே ஆனையை நிறுத்தி, பிள்ளையை ஆனை நலிந்ததாகக் கேட்போமிறே என்று கம்ஸன் அம்மானுயிருக்கப் பார்க்க, அத்தைக்கொன்று அவ்வூரில் பெண்களையும் நம்மையும் உளோமாம்படி பண்ணி, ஜீவனமானதன்னை நோக்கித்தந்தவன். (மாற்றுரையித்யாதி₃) சக்ரவர்த்தித் திருமகனைப் போலே "நாளை வா" என்றுதே அக்கணத்திலே -கம்ஸாதி₃கள் நினைத்த நினைவை அவர்கள்தங்களோடே போக்கி, தாய்தமப்பன் காலில் விலங்கைப் போக்கி வாழ்வித்தவன்.

(மாயனை) தன் கையில் எதிரிகள் அகப்படுமவற்றைத் தான் பெண்கள் கையிலே அகப்பட வல்லவன். (பாட) நமக்கு அவன் தோற்கும் தோல்விக்குத் தோற்றுப்பாட. இவ்விஷயத்திலே ஜயம் ப்ரணயித்வத்துக்குக் கொத்தை:ஆதலால் தோல்வி விஜயமான இடமிறே இவ்விடம். 15.

A பெரியாழ் திரு-3-6-11, B பெரிய திரு-6-5-6-

நாலாயிரப்படி — பதினேந்தாம் பாட்டு

அவ:— பதினேந்தாம் பாட்டு. பெண்களெல்லாருடையவும் திரளைக் காண வேண்டியிருப்பாளொருத்தியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— இவர்கள் தங்களிலே கூடிப் பாடின பாட்டான 'சங்கொடு சக்கர மேந்தும் தடக்கையன் பங்கயக்கண்ணனைப் பாட' என்ற பாட்டைக் கேட்டு அசல் திருமாளிகையிலே கிடந்தாளொரு பெண்பிள்ளை தன்னிலே கிடந்து நடுங்கிப்பாடுகிற படியைக்கேட்டு— (எல்லேயிளங்கிளியே) 'திருவான பேச்சிருந்தபடி என்!' என்று கொண்டாடுகிறார்கள். யாழிலேயிட்டுப்பாடி இனிதானவாறே மிடற்றிலேயிட்டுப் பாடுவாரைப்போலே முந்துறப் பெண்கள் பாடக்கேட்டு இவள் பாடுகிறாள். (இளங் கிளியே இன்னமுறங்குதியோ) 'எல்லே' என்றது என்ன ஆச்சர்யமென்றபடி, ஸம்போ₃தா₄நமாகவுமாம். (இளங்கிளியே) கிளியை வ்யாவர்த்தித்தபடி. தாங்கள் கிளிகள்; இவள் இளங்கிளி; பாட்டில் இனிமையாலே உறங்கி இவள்பேச்சுக்கிடையா தென்னும்படியிருக்கை. 'இதொரு பேச்சு' என்று கொண்டாடினார்கள். இவர்கள் பேச்சைக்கேட்டுக் கொண்டாடிச் சொன்னத்தை, தன் பா₄யத்தாலே தங்களுடைய உடம்பும் வாயும் வெளுத்திருக்க, `க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தாலே நம்முடைய உடம்பு பசுமையுண்டாய், வாயும் சிவந்திருக்கிறதென்கிறார்கள்; இவ்வளவிலே வாய்திறக்கில் பழியிடுவார்களென்று நினைத்து 'நானிங்ஙனே பசுகுபசுகென்று சிறகுகளும் தானுமா யிருந்தேனே?' என்று பேசாதே கிடந்தாள். (இன்னமுறங்குதியோ) உத்₃தே₃ஶ்யம் கை புகுந்தால் உறங்குவாருண்டோ? எங்களுக்கு க்ருஷ்ணவிரஹத்தாலே தளர்வதுக்கு மேலே உறக்கமில்லை; அதுக்கு உன் கடாக்ஷமும் பெருதொழிவதே! உன்பாட்டுக் கேட்கப் பெருதொழிவதாய் உயிர்க்கொலையாக்கி இட்டுவைத்தால் தரிக்க வொண்ணுமோ?

(சில்லென்றழையேன்மின்) பிராட்டிமாரோடே கூட எழுந்தருளியிருந்தாலும் படிக்கத்தோபாதி அந்தரங்க₃னையிருக்கக்கடவ ஸ்ரீநார₃ப₄₃வானை ஸ்வேதத்₃வீபத்துக் கெழுந்தருளினபோது உள்ளே புகப்புக்கவாறே இவன் வெட்டத்தனம் அவர்களுக்குப் பொருதென்று 'நீ இங்கே நில்லு' என்று எழுந்தருளினாற்போலே, தான் அநுஸந்தி₃க்கிற அநுஸந்தா₄நத்துக்கு இவர்கள் அழைக்கிற சொல் விக்₃ரஹமாகையாலே 'சிலுகிடாதே கொள்ளுங்கோள்' என்கிறாள். 'இவர்கள் வார்த்தை அஸஹ்யமோ?' என்னில்; திருப் புன்னைக்கீழே திருவாய்மொழி பாடாநின்றால், செல்வர் எழுந்தருளுகையும் அஸஹ் யமாமாபோலே. (நங்கைமீர் போதர்கின்றேன்) இவர்கள் சிவிட்கென்று, 'நாங்களும் எங்கள் சொல்லும் ஆகாதபடி உன் குறைவறுகை இருந்தபடியென்?' என்ன, 'நீங்களன்றே குறைவற்றிகோள்; என்னைப் படுத்தாதே கொள்ளுங்கோள்; புறப்படா நின்றேன்' என்ன; (வல்லையுன் கட்டுரைகள் பண்டே உன்வாய் அறிதும்) 'நங்கை மீரென்ற உறவற்ற சொல்லாலே நீ சொல்லிற்றைச் சொல்லி, எங்கள் திறத்தே குற்றமாம்படி வார்த்தைசொல்லவல்லை என்னுமிடம் இன்றேயல்ல; எத்தனைகால முண்டு உன்னேடே பழகுகிறது' என்றார்கள்.

(வல்லீர்கள் நீங்களே) 'இன்னமுறங்குதியோ வல்லையுன் கட்டுரைகள்' என்னும் வெட்டிமை உங்களதே; நான் உங்கள் வாசலிலேவந்து படாததுண்டோ?

என்ன; 'அது ஸாத்₄யம்; இது ஸித்₄த₄மன்றே; ப்ரத்யக்ஷத்துக்கு அநுமாநம் வேணுமோ' என்கிறார்கள். (நானே தானுயிடுக) பதகம் மூட்டினவாறே சிறு தூ போதாகிலும் பேசாதேயிருப்பார்களிறே என்று 'நானேதானுயிடுக' என்கிறாள்; ஒருவனுக்கு வைஷ்ணவத்வமாவது ஸ்வதே₃ஹாத்மாவை இல்லையென்னாதே, இல்லாதத்தையும் சிலருண்டென்றால் அத்தை இசைகையே ஸ்வரூபம் என்னும் வேதா₃ர்த்த₄ம் சொல்லிற்றாகிறது. ஸ்ரீ பராசரபட்டர், 1. "மத்பாபமேவாத்ர நிமித்தமாஸீத்" என்றான் பரஸ்துதியோடொக்கும் ஸ்வநிகர்ஷம். அத்தே₃ஹாத்மாவும் என் தலையிலே கிடக்கிறது. 'உங்களுக்குஇப்போது செய்யவேண்டுவதென்?' என்ன; அரைக்ஷணம் தங்களுக்கு அவளை யொழியச் செல்லாமையாலும், அவளுக்குத் தங்களை யொழியச் செல்லாமையாலும் சடக்கெனப் புறப்பட்டுக்கொண்டு நில்லென்கிறார்கள் — (ஒல்லை நீ போதாய்) உன் படுக்கையில் கிடக்கிற க்ருஷ்ணனை இட்டுவைத்து நீ கடுகப்போராய்; "அரைக்ஷணம் வைஷ்ணவதே₃ஹாத்மாவைப் பிரிய நின்று வரும் மாத்₃ரஸ்பர்₃சம் எனக்கென்செய்ய?" என்கிற ஸுப்₃ரஹ்மண்யபட்டர் வார்த்தையை ஸ்மரிப்பது. (உனக்கென்ன வேறுடையை) அஞ்சுலக்ஷம் குடியில் பெண்களுக்குள்ள தாழியு உனக்கு வேறே சில உண்டோ? உன் ஸ்வயம்பாகம் இன்னம் தவிர்ந்திலையோ எங்கள் பெரும்பானை கண்ட பின்பும்? அதாவது — மத்₄யமபத₃மும் உத்தரபத₃மும் 2. "ஸோ(அ)நுதே ஸர்வான் காமான் ஸஹ ப்₃ரஹ்மணா விபஶ்சிதா" என்னக் கடவதிறே; A "கோதில் வாய்மையினையொடுமுடனே உண்பன் நான்," என்னுமா போலே இளையபெருமாள் கைகேயியின் மகன் வருகிறானென்று ஸ்ரீப₄ரதாழ்வானைச் சீறி, 'வில்லோட்டிக் கொல்ல' என்ன, பெருமாளுக்கு அது அஸஹ்யமாய் 'பிள்ளைக்குச் சொல்லிக்கொள்ளுகிறோம், நீ இங்ஙன் அலமாக்கிறது ராஜ்யத்தை ஆசைப்பட்டன்றே; நீ ராஜ்யத்தைப் பண்ணு' என்று சொன்ன வார்த்தையைக் கேட்டு இளையபெருமாள் தரைப்பட்டாற் போலே இவளும் 'உனக்கென்ன வேறுடையை' என்ன அப்படிப்பட்டாள். 3. "ஸஸைந்யம் பரதம் கத்வா ஹநிஷ்யாமி ந ஸம்ஶய:" 4. "ராஜ்யமஸ்மை ப்ரதீ₃யதாம்" 5. "ஸ்வாநி கர்மாணி லஜ்ஜயா" B "சாது கோட்டியுட் கொள்ளப்படுவார்" என்று புருஷார்த்த₄மான இக்கோஷ்டிக்குப் புறம்பாயிருக்கைக்கு மேற்பட்ட அநர்த்த₄முண்டோ? விஷயங்களைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம். ஈஶ்வரனைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம். ஆத்மாவைப் பற்றிப் புறம்பாயிருக்கவுமாம்.

(எல்லாரும் போந்தாரோ) "உங்களையொழிய எனக்கொரு ஸுக₂முண்டோ? உணர்வுறியாத சிறு பெண்களுமகப்பட இழக்கவொண்ணுதென்று பார்த்து, அவர்களுமுணர்ந்தால் புறப்படவேணுமென்று கிடந்தேனித்தனை; எல்லாரும் போந்தார்களாகில் புறப்படுகிறேன்" என்றாள். (போந்தார் போந்தெண்ணிக் கொள்) மெய்க் காட்டுக்கு ப்ரயோஜநம் தொட்டெண்ணுகையும் தனித்தனியே எல்லாரையும் தழுவுகையும்.

"எல்லாரும் வந்தாராகில் இனி உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?" என்ன; "வேறுண்டோ! உன்னுடைய அழகிய மிடற்றாலே ஒரு கால் 'வல்லானை கொன்றானை' என்னுங்" என்கிறார்கள் — (வல்லானை கொன்றானை) 'ஒரு நாள் செய்த உபகாரம் அமையாதோ நமக்கு' என்று கொண்டாடுகிறார்கள். C "புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதான்" என்று வாசலிலே யானையை நிறுத்தி, பிள்ளையை யானை நலிந்ததாகாதே

A பெரிய திரு-5-8-2. B பெரியாழ் திரு-3-6-11. C பெரிய் திரு-6-5-6.

கேட்போமிறே என்று கம்ஸன் அப்மானப் முறைகேடாக்கியிருக்கப் பார்க்க, அதனைக் கொன்று அவ்வூரில் பெண்களையும் கம்மையும் உளோமாம்படி பண்ணி, நம் ஜீவநாத்₃ருஷ்டமான தன்னை நோக்கித் தந்தவன். (மாற்றுரை மாற்றழிக்க வல்லானை) சக்ரவர்த்தித் திருமகனுரைப் போலே, நாளை வாவென்று விடாதே அக்ஷணத்திலே கம்ஸாதி₃கள் நினைத்த நினைவை அவர்கள் தங்கள் நினைவோடே போக்கி, தாய் தமப்பன் கால் விலங்கைப் போக்கி வாழ்வித்தவனை.

(மாயனை) தன் கையில் ஶத்ருக்கள் படுமவற்றைப் பெண்கள் கையிலே படுமவன். (பாட.) நமக்கு அவன் தோற்கும் தோல்விக்குத் தோற்றுப் பாட. இவ்விஷயத்தில் விஜயம் ப்ரணயித்வத்துக்குக் கொத்தையாய், தோற்க, அத்தோல்விக்கு அவனைப் பாடவேணும். 15.

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₄யானம் — பதினைந்தாம் பாட்டு

அவ:— பதினஞ்சாம்பாட்டு. (எல்லே இத்யாதி₃). இப்பாட்டில் பூ₄கு₄வத கோ₄ஷ்டி₄யைக் காண ஆசைப்பட்டிருப்பாரொருவரை எழுப்புகிறார்கள்.

வ்யா:- (எல்லே) அசலகத்துப் பிள்ளையை எழுப்புகிறவர்கள், ''சங்கொடு சக்கரம்'' (14) இத்யாதி₃யைப்பாட, அப்பாசுரத்தைத் தன்மிடற்றிலே வைத்துப் பாடுகையாலே அதுதானும் இவர்களுக்கு அத்யந்தம் ஆகர்ஷகமாயிருக்கையாலே, அவரைக் கொண்டாடுவதற்கு முன்பு ''எல்லே'' என்று ஆஶ்சர்யப்படுகிறார்கள். (இளங்கிளியே) கிளி பேச்சுக்கு ஒப்பாமத்தனையல்லது பருவத்துக்கு ஒப்பாமோ? இவ்விடத்தில், பருவமென்பது - அபி₄நிவேஶத்தை; அவற்றுக்கு அபி₄நிவேஶபூர்வகமாக வார்த்தை சொல்லவேணுமென்கிற நிர்ப்ப₃ந்த₄மில்லையிறே. (இன்னம் உறங்குதியோ) நாங்களனைவரும் வந்த பின்பும் உறங்கக்கடவையோ?

(சில்லென்று அழையேன்மின்) இப்படி அவர்களழைக்கை ஸ்வாநுப₄வ விரோதி₄யாகையாலே, ''சில்லென்றழையேன்மின்'' என்கிறார். (நங்கைமீர் போதர்கின்றேன்) 'நாங்களும் நம் பேச்சும் போராதபடி உன்பூர்த்தி என்?' என்ன, 'நம் பாசுரத்தை மிடற்றிலே வைத்துப் பாடுகிற இவ்வநுப₄வத்துக்கு விரோத₄ம் பண்ணலாகாதேயென்று எழுப்பாதேயிருக்கவேண்டியிருக்க, அது பொருதே எழுப்புகிற நீங்களன்றே பூர்ணைகள். நீங்கள் வெறுமனே இருந்தி கோளாகில் நான் புறப்பட்டு வருகிறேன்' என்ன:

(வல்லே உன்கட்டுரைகள்) நீர் கட்டுவார்த்தை சொல்ல ஸமர்த்தர். (பண்டே உன் வாயறிதும்) இவ்வர்த்த₄ம் முன்பே உம் பாசுரங்களாலே அறிவோம். (வல்லீர்கள் நீங்களே) 'உங்கள் பாசுரத்தை அநுப₄விக்கிற என்னுடைய அநுப₄வத்துக்கு விரோத₄ந்தைப் பண்ணி, அதுக்குமேலே என்மேலே பழியாம்படி வார்த்தை சொல்லவல்ல நீங்களன்றே ஸமர்த்த₄ர்கள்' என்ன; (நானேதான்

பதினேரும் பாட்டு

நாயக ணெய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே கொடித்தோன்றும் தோரண
வா(ச)யில்காப் பானே மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக் கறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால்முன் னமுன்னம் மாற்ருதே யம்மாநீ
நே(ச)ய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— நாயகன் ஆய் நின்ற — (எங்களுக்கு) ஸ்வாமியாயிருக்கிற, நந்த கோபனுடைய — நந்தகோபருடைய, கோயில் — திருமாளிகையை, காப்பானே — காக்கு மவனே! கொடி தோன்றும் — த்4வஜங்கள் விளங்காநிற்கும், தோரண வாயில் — தோரண வாசலி, காப்பானே — காக்குமவனே! மணி — ரத்தினங்கள் பதிக்கப்பெற்ற, கதவம் — கதவினுடைய, தாள் — தாழ்ப்பாளை, திறவாய் — திறக்கவேணும்; ஆயர் சிறுமிய ரோமுக்கு — இடைச்சிறுமிகளான எங்களுக்கு, மாயன் — ஆச்சரியச்செயல்களையுடையவனும், மணிவண்ணன் — நீல ரத்தினம் போன்ற திருநிறத்தையுடையவனுமான கண்ணபிரான், நென்னலே — நேற்றே, அறை பறை வாய் நேர்ந்தான் — ஸப்3தி3க்கும் பறையைக் கொடுப்பதாக வாக்களித்தான்; துயில் எழ — (அவன்) தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும்படி, பாடுவான் — பாடுவதற்காக, தூயோமாய் வந்தோம் — பரிஶுத்3தை4களாக வந்திருக்கின்றேம்; அம்மா — ஸ்வாமி: முன்னம் முன்னம் — முதன் முதலில், வாயால் — (உம்முடைய) வாயினாலே, மாற்ருதே — மறுக்காமல், நேயம் நிலை கதவம் — (கண்ணனிடம்) பேரன்புபூண்ட நிலைமையை யுடைய கதவை, நீ — நீயே, நீக்கு — நீக்கவேணும்.

ஸ்வா:— ஆயிடுக) ப4கவத ஸேஷத்வம் ஸ்வரூபமானால் அவர்களிடும் பழியும் தம்மேலேறிட்டுக்கொள்ளுகை ஸ்வரூபமன்றே; ஆகையாலே, நானே அபராதி4யாயிடுக.

(ஒல்லை நீ போதாய்) இப்படி பழியைத் தம்மேலே ஏறிட்டுக்கொண்ட இவரை, சடக்கென இக்கோஷ்டி3யிலே ப்ரவேஶியாய் என்கிறார்கள். (உனக் கென்ன வேறுடையை) உனக்கென்று ப்ருத2க்கான ப4கவத்3கு3ணானுப4வம் என்? 'நாம் புறப்படுகைக்கு எல்லாரும் போந்தாரோ?' என்ன; (போந்தார் போந்தெண்ணிக்கொள்) எல்லாரும் போந்தார்கள்; நீயும் இக்கோஷ்டி3யிலே ப்ரவேஶித்து மெய்க்காட்டுக்கொள்.

புறப்பட்டுச் செய்யவேண்டியது என்? என்ன, — (வல்லானை இத்யாதி3) ஸ்வயத்நத்தால் கடக்க அரிதாய், ப்ராயஶ்சித்தவிநாஶ்யமுமின்றிக்கேயிருக்கிற அஹங்கார நிவர்த்தகனும் மற்றுமுள்ள காம க்ரோத4ாதி3களுக்கும் நிவாரகனும், ஆஶ்ரிதபரதந்த்ரனுமான; ''ஒல்லை நீ போதாய்'' இத்யந்வய:. 15.

மூவாயிரப்படி - பதினேழும் பாட்டு

அவ:— பதினேழும் பாட்டு. a கீழில் பத்துப்பாட்டாலும் - முற்பட உணர்ந்தவர்கள் உறங்குகிறவர்களை எழுப்ப, எல்லாருங் கூடி வந்து ஸ்ரீநந்த3கோபர் திருமாளிகையிலே சென்று கோயில்காப்பானையும் திருவாசல்காப்பானையும் எழுப்புகிறார்கள். b "செய்யாதன செய்யோம்"-(2) என்று பண்ணின ப்ரதிஜ்ஞையை

பெ. அ. பதினேழும்பாட்டு. (நாயகன் இத்யாதி3) 'முதலஞ்ச பாட்டாலே — ப4க3வதா3நுப4வோபகரணங்களை அருளிச்செய்து, எழுப்புகிற பத்துப்பாட்டிலும் லைத்துக்கொண்டு முதல் பாட்டில் — ப4க3வதே3க போ4க3ரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்ய ப்ரயோஜநராய் இவ்விஷயத்தில் தே3ஶிகரன்றிக்கேயிருப்பாரை அவர்கள் பக்கல் பரிவாலே தே3ஶிகராக்குகை தங்களுக்கு க்ருத்யமென்றிருக்கை — ஸ்ரீவைஷ்ணவத்வலக்ஷணமென்று அவர்கள் ஸ்வப4ாவத்தைச் சொல்லுகிறது; இரண்டாம் பாட்டில் — ப4க3வத்3விஷயத்தில் ஜ்ஞாதமான அர்த்த2ம் ஒருவனுக்கு விஸ்ம்ருதமானால், தங்கள் பரிவாலே, 1. "போ3தா4யந்த: பரஸ்பரம்" என்கிறபடியே அறிவிக்கை — ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது; மூன்றும் பாட்டில் — ப4க3வதா3நுப4வத்தில் ப்ரத்யாஸந்நராய் இருப்பாரைக் குறித்து ஸாபேக்ஷராயிருக்கையும், அவர்களை முன்னிட்டு ஈஶ்வரனைப் பற்றுகையும் — ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது; நாலாம் பாட்டில் 2. "தத் தஸ்ய ஸத்3ருஶம் ப4வேத்" என்று — பூர்வார்த்த4நிஷ்ட்ட2ராயிருப்பாரை ப4க3வத் ப்ரேமாதிஶயத்தாலே ததீ3யபோ4க3ராயிருப்பார் போ4கா3ர்த்த2மாக ப்ரேரிக்கை — ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது; அஞ்சாம் பாட்டில் — 3. "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" என்றும் 4. "அஹம் ஸ ச மம ப்ரிய:" என்றும் அவன் பக்ஷபதித்திருப்பார்திறத்து நித்யஸாபேக்ஷராயிருக்கை — ஸ்வரூபம் என்கிறது; ஆறும் பாட்டில் — ப4க3வத்ஸம்ப3ந்த4ம் விச்சே2தி3யாதே போந்த ஆசார்ய ஸந்தாந ப்ரஸூதர் நமக்குப் பூஜ்யர்; அவர்களடியாக ப4க3வத்ஸமாஶ்ரயணம் பண்ணுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபம் என்கிறது; ஏழாம்பாட்டில்—ப4க3வத்3 விஶ்லேஷம் அஸஹ்யமாம்படி அவக3ாஹித்தவர்கள் நமக்கு உத்3தே3ஶ்யராமளவன்றிக்கே, தத்ஸம்ப3ந்தி4ஸம்ப3ந்தி4களும் உத்3தே3ஶ்யரென்றிருக்கை-ஸ்வரூபம் என்கிறது; எட்டாம் பாட்டில்-ப4க3வதா3நுப4வபரிகரமான ஜ்ஞாந வைராக்3ய ப4க்திகளால் பூர்ணராயிருப்பார் திறத்து, தத3ர்த்த2மாக ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸாபேக்ஷராயிருக்கை — ஸ்வரூபம் என்கிறது; ஒன்பதாம் பாட்டில் — ப4க3வத்3 விஷயத்தில் மூட்டுகையில் அதி4கரித்த நிர்வாஹகர் முன்னுக ப4க3வதா3நுப4வம் பண்ணுகை—ஸ்வரூபம் என்கிறது; பத்தாம்பாட்டில் — ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸமூஹம் அபி4மதமாயிருக்குமவர்களைக் கண்டால் அந்த ஸமூஹமாக, அவர்களையுகக்கை ஸ்வரூபம் என்கிறது' என்று ஆருயிரப்படியிலே அருளிச்செய்த ஸ்வாபதே3ஶத்தைக் கண்டு கொள்வது. a ஆக, கீழ்ப்பத்துப்பாட்டுக்கும் இப்பாட்டுக்கும் பேதிகாஸங்க3தியை அருளிச்செய்கிறார் (கீழ்இத்யாதி3) கோயில்காப்பானையிருக்கும் திருவாசல்காப்பானை எழுப்புகிறார்களென்றும் ஓர் அவதாரிகை கண்டுகொள்வது. b முன்பு பெண்களிடங்களிலே போய் அவரவரைப் பேரைச்சொல்லி எழுப்பினாற்போலே, இங்கு நோன்புக்கு வந்து எழுப்புங்கோளென்று சொல்லிப்போந்த க்ருஷ்ணன் பேரைச்சொல்லிக் கூப்பிட வேண்டியிருக்க, இவர்களை அழைக்கிறதென்? என்ன அருளிச்செய்கிறார் (செய்யாதன இத்யாதி3).

சி. அ. பதினேழும் பாட்டு. (நாயகன்) b த்3வாரபாலனை எழுப்புகிறது ஏதுக்கென்ன (செய்யாதன செய்யோம் இத்யாதி3) எல்லாரும் கூட எழுப்பவேணுமோ? ஒருத்தர் வந்து

அனுஷ்டா₄நபர்யந்தமாக்கவேணுமே. ததீ₃யரை முன்னிட்டுப் பற்ருத அன்று முறைதப்பின சூர்ப்பணகை₃பட்டது படுமத்தனே. A ''வல்லபரிசு வருவிப்பரே லதுகாண்டும்'' என்னும் cபெரியாழ்வார் திருமகளிறே இவள்,

வ்யா:— d (நாயகனுய்நின்ற நந்தகோபனுடைய கோயில்காப்பானே) eஸ்ரீநந்த₃கோ₃பர் திருமாளிகைக்குக் காவலாய் எங்களுக்கு நிர்வாஹகனுனவனே! ''நாயகன்'' என்று - ஸ்ரீநந்த₃கோ₃பரைச் சொல்லிற்ருகவுமாம், f இவர்களால் பெறுமவனன்ரே நாயகனுவான், இவனே ''நாயகன்'' என்கிறது என்?' என்ன; g''1. பாபிஷ்ட₃: க்ஷத்ரப₃ந்து₄ஸ்ச புண்ட₃ரீகஸ்ச புண்யக்ருத் l ஆசார்யவத்தயா முக்தெள தஸ்மாத்₃ஆசார்யவாந் ப₄வேத் ll '' என்று-ப₃லஸித்₃தி₄ ஆசார்யனுலே யாகையாலே, உபகாரகனே ''நாயகன்'' என்கிருர்கள். h ப்ரதா₄நஸோஷியிற்காட்டில் h₂ த்₃வார ஸோஷிகளே எங்களுக்கு ஸோஷிகளென்கிருர்கள். i (நந்தகோபனுடைய கோயில்) j நாங்கள் ஆஸ்ரயிக்கிறவன் பரதந்த்ரன்; k தங்களே ஸோஷிகளாகவைக்க இசை வாரோடே கலந்து பரிமாறவிறே இவன் இங்குவந்து அவதரித்தது. l B 'அடியார் நிலாகின்ற வைகுந்தமோ'' என்று—பரமபத₃த்திலும் தான்

பெ. அ. c (பெரியாழ்வார் திருமகளிறே இவள்) என்றதுக்கு — ஆண்டாளே இத்தனே கோபிமாராக ப₄வித்திருக்கையாலே இங்ஙன் சொல்லலாமென்று கருத்து.

d, e ''நாயகனுய் நின்றவனே! நந்தகோபனுடைய கோயில்காப்பானே!'' என்று ஸப்₃த₃ார்த்த₂ம் விவக்ஷித்து, நாயகனுகைக்கும் கோயில்காப்பானுகைக்கும் ஹேதுவாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (ஸ்ரீநந்த₃கோ₃பர் இத்யாதி₃) f (இவர்களால் பெறுமவன்) என்றது — இப்பெண்களால் பெறப்படுமவனுன க்ருஷ்ணன் என்றபடி. d, g, h ஆசார்யனேப் போலே உபகாரகத்வேத உபசரித்து ''நாயகன்'' என்ருர்களென்று ஒரு பரிஹாரம் அருளிச்செய்து, ஸோஷித்வத்தைப் பற்றச் சொல்லுகிருர்களென்று பரிஹாராந்தரம் அருளிச் செய்கிருர் (ப்ரதா₄நேத்யாதி₃) h₂ ஸ்வாபதே₃ஸத்தில் த்₃வாரஸோஷிகள்—ததீ₃யர். i, j 'நீங்கள் ''க்ருஷ்ணன் கோயில்'' என்னுதே ''நந்தகோபன் கோயில்'' என்கிறது என்?' என்ன;

சி. அ எழுப்பினுல் போராதோ? என்ன (செய்யாதன இத்யாதி₃) என்றுமாம். அன்றிக்கே பெண்களே ஒருத்தரை ஒருத்தர் எழுப்புகிறதற்கு ப்ரயோஜனமென்? என்ற ஸங்கைக்கு உத்தரமாகவுமாம். f, h (இவர்களால் பெறுமவன்ன்ரே நாயகனுவான்) என்ற ஸங்கைக்குப் பரிஹாராந்தரம் (ப்ரதா₄நஸோஷியிற் காட்டில் இத்யாதி₃) அதாவது — அவனே நாயகன் என்றபடி; h ப்ரதா₄னஸோஷி க்ருஷ்ணன்; h₂ நந்த₃கோ₃பர் த்₃வாரஸோஷி; சாடுவாய் வாசல் காக்கிறவனுதல், ததீ₃யராதல். i, j ''க்ருஷ்ணன் கோயில்'' என்னுதே ''நந்த கோபனுடைய கோயில்'' என்பானென்? என்ன அருளிச்செய்கிருர் — (நாங்கள் ஆஸ்ரயிக்கிறவன் இத்யாதி₃) k C ''அயர்வறுமமரர்களதிபதி'' என்று பரமபத₃த்திலே ஸ்வதந்த்ரனுயிருக்கிற க்ருஷ்ணனேப் பரதந்த்ரன் என்பானென்?· என்ன, ''அங்கும் ஸ்வதந்த்ரனன்று, பரதந்த்ரனுயிருக்கும்; அப்படியிருந்தாலும் தன்னுடைய பாரதந்த்ர்யத்துக்கு நித்யஸூரிகள் இசையாமையாலே தங்களே ஸோஷிகளாக இசைந்திருக்கிற ஸம்ஸாரிகளோடே பரிமாற இங்கே வந்து அவதரித்தான்'' என்கிருர் (தங்களே ஸோஷிகளாக இத்யாதி₃) l அங்கே

A நாச்-திரு-10-10. B திருவிருத்தம் 75, C திருவாய் 1-1-1.

பரதந்த்ரனுய் அவர்களிட்ட வழக்காயிறேயிருப்பது. m (கோயில்காப்பானே) n சிறுபெண்களாகையாலே, அவன் தொழிலியிட்டுச் சொல்லுகிறார்கள். o ''இன்னது பிடிப்பான்'' என்னுமாபோலே; அவனும் உகக்கும்படியாலே சொல்லுகிறார்களாகவுமாம், p இத்தால் - ஸுஷவ்ருத்தி ப்ரயுக்தமான பேரே இவ்வாத்மாவுக்குப் பேர் என்னுமிடந்தோற்றுகிறது; 1. ''யதே²ஸிதம் ஸுஷ இதீரிதே ஜநை:'' என்னக்கடவதிறே.

சி. அ. c அம்பரம்—புடைவை. e (ஏவகாரம்) ''அம்பரமே, தண்ணீரே, சோறே'' என்றது. f, g இவற்றைக் கொடுக்கும் என்னுதே ''அறம் செய்யும்'' என்கிறதென்? என்ன அருளிச்செய்கிறார் (ப2லாபி4ஸந்தி4ரஹிதம் இத்யாதி3) f அறம் — க்ருபை. g2 8. ''ஆந்ருʼஶம்ஸ்யம் பரோ த4ர்ம:'' இறே. h ஹார்த்த3பா4வம் (இத்தால் நாட்டுக்கு இத்யாதி3) i, j'எம்பெருமான்' என்ற ஶப்3த3த்துக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எங்களுக்கு த4ாரகேத்யாதி3) k ஒரு வஸ்துதானே த4ாரக போஷக பே4ாக்3யமாகக் கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (ஏகைகேத்யாதி3) l, m ''எம்பெருமான்'' என்றதுக்குப் புருஷகார பரமாக்கித் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (நாட்டில் பெண்களுக்கு இத்யாதி3) l. m2 ''எம்'' என்கிற ஶப்3த3த்துக்குப் பொருள் அருளிச்செய்கிறார் (பெண்களுக்கு தா3னமித்யாதி3).

A திருவாய் 6-7-1,

கொண்டு கிடக்கும் தாயைப்போலே. இருந்ததே குடியாக எல்லார்தலையிலும் d_2 ஊறெண்ணெய் வார்த்தாற்போலே திருவடிகளைக் குளிர வைத்தபடி. e (உம்பர் கோமானே) அச்செயலாலே தேவர்களை எழுதிக்கொண்டபடி, நித்யஸூரிகளை யென்னவுமாம். f அதாவது - 'நமக்கு ஸ்ரீரோபூஷணமான திருவடிகளையிட்டுக் காடும் ஓடையும் அளப்பதே! இது ஒரு வாத்ஸல்யமே!' என்று வாத்ஸல்யத்துக்குத் தோற்கை. (உறங்காது எழுந்திராய்) g ஆண்களுமாய் ப்ரோஜநாந்தரபரராக வேணுமோ முகங் கொடுக்கைக்கு? g_2 அநந்யப்ரயோஜநைகளுமாய் அபூலைகளுமாஸல் ஆகாதோ? h எங்களுக்கு முகங் காட்டும்போது சிறுப்பது பருப்பதாக வேணுமோ? இருந்தபடியே காட்ட அமையாதோ? i உன் வாசியறியாதே அந்ய பரமான நாட்டுக்கு ஸுலபமான திருவடிகளை உன்வாசியறியும் எங்களுக்குக் காட்டலாகாதோ? j (உறங்காதெழுந்திராய்) k எங்களை k_2 உறக்கம் எழுப்பவந்த நீ, உறங்கக்கடவையோ? l 1. "அநித்ர: ஸததம் ராம:" என்று கேட்டிருந்தபடி அழகிதாயிருந்தது!

இப்படிச் சொல்லவும் எழுந்திராமையாலே, முந்துற நம்பிமூத்தபிரானை எழுப்பாதே முறைகேடாகச் செய்தோமென்று அவனை எழுப்புகிறார்கள். — m (செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா) n பிள்ளை பிறக்கைக்குப் பொற்கால்

பெ அ. என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உறங்குகிற இத்யாதி$_3$) d_2 ஊறெண்ணெய் —உச்சியெண்ணெய். g "உறங்காதே" என்று இவ்வளவைச்சொல்ல அமைந்திருக்க, 'எழுந்திராய்" என்றதுக்கு—எழுந்திருக்கை முகங்காட்டுகைக்கு நிமித்தமென்று விவக்ஷித்து "அம்பரம்" இத்யாதி$_3$யைக் கடாக்ஷித்து பூர்வம் அருளிச்செய்கிறார் (ஆண்களும் இத்யாதி$_3$) அதில் முதலிரண்டு வாக்யமும் "அம்பரமூடறுத்து" என்ற அம்ஸத்தைப்பற்ற, h "ஓங்கி" என்றத்தைப் பற்ற அருளிச்செய்கிறார் (எங்களுக்கு இத்யாதி$_3$) i "உலகளந்த" என்றத்தைப் பற்ற அருளிச்செய்கிறார் (உன் வாசி இத்யாதி$_3$) என்று கண்டுகொள்வது. j, k, l "உறங்காது" என்னுமதுக்கு ஸ்வாபதேஸத்தில் பூர்வம் அருளிச்செய்கிறார் (எங்களை இத்யாதி$_3$ வாக்யத்$_3$வயத்தாலே.) k_2 'உறக்கமெழுப்ப' என்றது - ஸம்ஸாரமாகிற உறக்கத்தை எழுப்ப என்றபடி.

m, n செம் - சிவந்ததாய், பொன்—ஸ்ப்ருஹணீயமாய், கழல்-வீரவண்டையமுடைய அடியையுடையவனென்று பூர்வாசார்யர்களும் திருவுள்ளம்பற்றி, இங்ஙன் விளிஸித்ததுக்குத்

சி. அ. e, f "உம்பர் கோமான்" என்றது நித்யஸூரிநாயகத்வம் சொன்னால் அது மேன்மையன்றே; உங்களுக்கு ப்ரயோஜனமேது? என்ன, கீழ்ப்பதத்தையும் கடாக்ஷித்து வாத்ஸல்ய பரமாக நித்யஸூரிகள் அனுஸந்தானபரமாக யோஜிக்கிறார் (அதாவது நமக்கு இத்யாதி$_3$) e, g "உம்பர் கோமான்" என்ற பதத்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் (ஆண்களுமாய் இத்யாதி$_3$) z, h "ஓங்கி" என்ற பதத்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் (எங்களுக்கு இத்யாதி$_3$) e, i "உலகளந்த" என்றத்தைக் கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் (உன் வாசி அறியாதே) என்று. m "செம்பொற்கழலடிச்செல்வா" — சிவந்த பொன்னாலே செய்யப்பட்ட வீரக்கழலையுடைத்தான திருவடிகளையுடைய ஸ்ரீமானே என்று பூர்வாசார்யர்களும். n (பிள்ளை

பொலியப் பிறந்த சீமானே! o (உம்பியும் நீயும் உறங்கேல்) p உனக்கு ப₄வ்ய னன தம்பியும், அவனுக்கு ப₄வ்யனன நீயும் உறங்காதொழியவேணும். q 1. ''ஸந்தே₃ஸ: ஸாமமது₄ர: ப்ரேமகா₃ர்ப்யை₄ரகா₃ர்விதை: l ராமேணஸ்வாஸிதா கோ₃ப்போ ஹரிணு ஹ்ருதசேதஸ: ll '' என்று—எங்களையும் அவனையும் பொருந்த விடுமவனல்லையோ நீ? 17.

பெ. அ. தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (பிள்ளை இத்யாதி₃) p, q இருவர்க்கும் பரஸ்பரம் ப₄வ்யதை சொன்னதுக்கு ப்ரக்ருதோபயோகா₃ம் காட்டுகிறார் (ஸந்தே₃ஸ: இத்யாதி₃) 17.

சி. அ பிறக்கைக்குப் பொற்காலொலிய) என்றது 'கால்' என்று ஸந்ததியாய், ''பொன்' என்று லோக்₄யமாய், பொலிவு — அபி₄வ்ருத்₃தி₄யாய், லோக்₄யமான ஸந்ததி அபி₄வ்ருத்₃ தி₄மாக என்றபடி. o உம்பி — தம்பி. p, q அப்படி க்ருஷ்ணனுக்கு ப₄வ்யனே? என்ன அருளிச்செய்கிறார் (ஸந்தே₃ஸ: இத்யாதி₃) ''உறங்கேல் ஓர் எம்பாவாய்'' என்று பத₃ஸித்₃தி₄. 17.

(ஆருயிரப்படி பதினேழாம் பாட்டு

அவ:— பதினேழாம் பாட்டு. ''நேச நிலைக் கதவம் நீக்கு'' என்றார்கள் திருவாசல் காப்பானை; அவன் கருந்தாளையுருவி உள்ளே புகவிட்டான். ஒருவரை யொருவர் சென்றெழுப்புகிறபோது அங்குத் தனித்தனியே பட்டத்தை இங்கு எல்லாரும் திரளப்படுகிறார்கள். A ''இமையோர்கள் குழாம் தொழுவதுஞ் சூழ்வதும்செய் தொல்லைமாலைப்'' பெற்றநுப₄விக்கிற திரளிறே உள்ளுத்திரள்; பெறுகைக்குப்படுகிற திரள் பெற்றநுப₄விக்கிற ஸ்ரீநந்த₃கோ₃பர் தொடக்கமானுரை எழுப்புகிறார்கள் அவர்கள் முன்னுக க்ருஷ்ணனைப்பெறவேண்டுகையாலே. அதாவது —B ''வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிகை''யிறே; C ''காலை நன்ஞானத் துறைபடிந்தாடி'' என்னுமாபோலே. நன்ஞானமாகிறது—ப்ராப்யப்ரா பகங்களிரண்டுமவனென்கை; 2. ''விஜ்ஞாநம் யதி₃தி₃ம் ப்ராப்தம்'' என்னுமா போலே. துறையாகிறது —முறைதப்பாமே கு₃ருபரம்பரைவழியே பற்றுகை. த்₃வய நிஷ்ட₂ர்க்கு கு₃ருபரம்பரையே ப்ரதா₄நமாகக்கடவது. துறை தப்பாத ஸ்ரீவிபீ₄ஷ ணழ்வானைப்போலே. B ''வேதம் வல்லார்கள்'' என்றவிடத்திலே கு₃ருபரம்பரையை நினைத்து, கீழ்ப்பத்துப்பாட்டாலும் அநுஷ்டி₂த்தார்கள். B ''விண்ணோர் பெருமா''வில் விண்ணோராகிறவர்கள் த்₃வாரபாலகர் தொடக்கமாக தி₃வ்யமஹிஷிகள் ஈறாக உள்ளவர்களிறே. திருவாசல் காப்பானை அநுமதிகொண்டு உள்ளே புகுந்த வளவிலே, முதல்கட்டிலே பிள்ளைக்குக் காவலாகக்கிடந்தார் ஸ்ரீநந்த₃கோ₃பர்; க்ருஷ்ணனைப் பெண்கள் களவுகாண்பர்களென்று நோக்கிக்கிடப்பரே; அநிருத்₃த₄னை யகப்படக் களவுகாண்கிற பெண்கள் இவனுடைய ஸம்ப₃ந்த₄ங்கொண்டு அவன ழகுக்கும் வாய்த்தலையான இவனைப்பெற்றால் விட்டார்களே. 3. ''ஸாக்ஷாந்மந்மத₂

A திருவிருத்தம் 97. B திருவாய் 4-6-8. C திருவிருத்தம் 93.

மந்மத:'' என்கிற க்ருஷ்ணனைப்பெற்றால் விடார்களென்று நோக்கிக்கொண்டு கிடக்கிறவரைச் சென்று பற்றினார்கள். உள்ளுக்கிடக்கிறது A வைத்தமாநிதியுமாய்த் தாம் B எடுத்த பேராளனுமாய், நிதியெடுத்தவருமானால் நோக்காதிராரிறே.

வ்யா:— (அம்பரமே) எங்கள் அபிமதம் பெறுமைக்கு—லுப்தான் வாசலிலேயோ நாங்கள் துவண்டு கூப்பிடுகிறது? அர்த்திகள் கொண்டல்லது தரியாதாற் போலே. கொடுத்தல்லது தரியாத உம்முடைய வாசலிலே நாங்கள் வந்தது எங்கள் குறைநிர்க்ஷைக்காகவோ? உம்முடைய குறை தீர்க்கைக்கு நாங்கள் வந்து நிற்க, நீர் உறங்குகிறதென்? தன்பக்கல் கார்யங் கொள்ளுமவர்கள், 1. ''உதாரா:'' என்று; க்ருஷ்ணன் சொல்லுகிறது உம்முடைய வயிற்றில் பிறப்பாலேயன்றே? பெற்றாலுமங்ஙனேயோவென்று, பெறுவிட்டாலும் தரிக்கலாமவையோ நீர் கொடுப்பது? அர்த்தித்தவர்களுக்கு ரூபஸாதாநமான வஸ்த்ரம், தாரகமான தண்ணீர், போஷகமான சோறு, வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொடுக்கிறவரன்றே நீர். வேண்டுவார்க்கு வேண்டுவதெல்லாம் கொடுக்கிற உமக்கு, நாங்கள்வேண்டிற்றெல்லாம் தரவேண்டாவோ? ''அம்பரமே'' என்கிற அவதாரணத்தாலே ஒரொன்றேயோ இவர் கொடுக்கக்கூற்றது(தக்கது) என்னும்படியிருக்கையும், அதுதான் புஷ்கலமாகக் கொடுக்கையும்.

(அறஞ்செய்யும்) யஜ்ஞத்துக்குக் கொடுக்கையன்றிக்கே, பலாபிஸந்திரஹிதமாகக் கொடுக்கையும், ''கர்த்தவ்யம்'' என்கிற ப்ரதிபத்தியோடே தன்பேருக ஆந்ருஶம்ஸ்யத்தாலே கொடுக்கையும். (செய்யும்) 2. ''மஹதா தபஸா ராம'' என்று சக்ரவர்த்தியைப்போலே அவதாரத்துக்கு அத்ருஷ்டயத்நம் பண்ணவேண்டாவிறே B எடுத்தபேராளனுகையாலே. இனி. பண்ணுகிறது பிள்ளையினுடைய மங்களார்த்தமாகவும், விஜயார்த்தமாகவுமாமத்தனையிறே. பெறிலுமாய் இழக்கலுமானவையோ இப்படி கொடுக்கலாவது? எங்கள் தாரகாதிகளைத் தரலாகாதோ? பலகூடி தாரகமானவையோ தரலாவது? எல்லாமொன்றேயான வஸ்துவைத் தரலாகாதோ? 3. ''ஏகைகபலலாபாய ஸர்வலாபாய கேஶவ:'' என்று C ''எல்லாம் கண்ணன்'' என்றிருக்குமவர்கள் நாங்கள். (எம்பெருமான்) எங்களுக்கு க்ருஷ்ணனைப்பெற்றுத் தந்த ஸ்வாமியானவனே! (எம்பெருமான்) நாட்டில் பெண்களுக்கு தானம் கொடுப்பாரில்லை கொள்ளுகைக்கு அதிகாரிகளல்லாமையாலே. 4. ''வாஸுதேவஸ் ஸர்வம்'' என்றிருக்கிற—எங்களுக்கு க்ருஷ்ணனை உபகரிக்கையாலே விஶேஷித்து எங்களை எழுதிக்கொண்டவனே! (நந்தகோபாலா) ''நந்தகோபன் குமரன்'' (1) என்று — உம்முடைய ஆந்ருஶம்ஸ்யத்தைக்கொண்டு உம்முடைய பிள்ளையென்றன்றே நாங்களாசைப்பட்டது. பெற்றுத்தந்த நீர் குறையும் தாரீரோ நாங்களநுபவிக்கும்படி? 5. ''தாரா: பித்ருக்ருதா இதி'' என்னப்பண்ணீர் க்ருஷ்ணனையும். பெருமாள் பிராட்டியை உகப்பது — ஆபிஜாத்யத்தாலும் அழகாலும் குணத்தாலு

A திருவாய் 6-7-11. B திருவாய் 8-1-3. C திருவாய் 6-7-1.

மல்ல, ஐயர் விவாஹம் பண்ணுவித்தவளென்று. (எழுந்திராய்) உத₃ாரர்க்கும் உறங்க விரகுண்டோ? 1. "உத₃ாரா:" என்றது—இவர்ஸம்ப₃ந்த₄ம் கொண்டுகாணும் மகனுக்கும். 2. "கு₃ணை: த₃ஶரதே₂ாபம:" என்னக்கடவதிறே சக்ரவர்த்தித் திருமகளையும். ஸர்வேஶ்வரத்வகு₃ணங்களும் பிறந்து படைத்த கு₃ணங்களுமெல்லாம் கூடத் தும்புகூட்டிஞல் சக்ரவர்த்தியோடொப்பன் என்னப்போருமத்தனை. (அம்பரமே இத்யாதி:) வேண்டுவார்க்கு வேண்டுவது கொடுக்கிறவராகையாலும், அறஞ்செய்கிற வராகையாலும், எங்களுக்கு ஸ்வாமிகளாகையாலும், நீர்தாம்—கோபாலராகையாலும் ஜீவலோகரக்ஷணம் த₄ர்மரக்ஷணம் ஸ்வஜநரக்ஷணம் ஸ்வத₄ர்மரக்ஷணம் பண்ணுதே உறங்கக் கடவீரோ? (அம்பரமே) இவர் மகன் தூ₃ரஸ்த₂னைலும் பேர் சொல்லப் புடவை வழங்குகிறதும், 'A இனிது மறித்து நீருட்டுகிறதும், B வேண்டடிசிலுண்ணும் போதுகளிலே சோறுவாங்கி இடுகிறதும் இவர் வயிற்றில் பிறப்பாலேயிறே. ஹிதபு₃த்₃தி₄யேயிறே பிதாவின் பக்கலுள்ளது.

உள்ளே புகுருங்கோளென்னுதே, உணர்ந்து அநுமதி பண்ணினமைதோற்றக் கிடந்தார்; அவரநுமதியைப்பெற்று நடுவில்கட்டிலே புக்கு யஶோதை₃ப்பிராட்டியை எழுப்புகிறார்கள்—(கொம்பனார்க்கெல்லாம்) பிராட்டியை எழுப்பி அவள் முன்னே அவன்பக்கலிலே காரியங்கொள்ளுமாபோலே, யசோதை₃ப்பிராட்டியை எழுப்பிப் பின்னை ஶ்ரீநந்த₃கோபரை எழுப்ப ப்ராப்தமாயிருக்க, முற்பட அவரை எழுப்பிப் பின்னை இவளை எழுப்புவானென்? என்னில்: பிள்ளைபக்கலுண்டான ஸ்நேஹத்தாலே 'என் புகுருகிறதோ?' என்னும் ப₄யத்தாலே, "கூர்வேல் கொடுந்தொழிலன்" (1) என்னும்படி உருவிப்பிடித்த வேலுந்தாமுமாய்ப்—புறக்கட்டிலே கிடப்பர். ஶ்ரீநந்த₃ கோபர்; இவள், பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலும் பூ₄ர்த்₃ருஸங்க₃த்தாலும் உள் கட்டிலே நடுவேயாய்த்துக் கிடப்பது. இவர்கள் இடைப்பெண்களாகையாலே கண்ட துக்கு மேற்பட அடைவறிந்து எழுப்புமவர்களல்லரே; ஆகையாலே, பிற்பட எழுப்புகிறது. ஶ்ரீநந்த₃கோபருடைய படுக்கைத்தலையும் விடாள், பிள்ளைகளுடைய தொட்டில் காற்கடையும் விடாள்; அவரைத் தன்முலையாலே அணைக்கைக்காகவும், இவர்களுக்கு முலைப்பால் கொடுத்து வளர்க்கைக்காகவும் நடுவில் கட்டிலே கிடக்கும்; பிராட்டி ஸர்வேஶ்வரனையும் விபூ₄தியையும் கைவிடாதேயிருக்குமாபோலே. இதிறே விபூ₄தித்₃வயத்துக்கும் நிருக்தித்₃வயத்துக்கும் விஷயம். 3. "த்ரயாணாம் பூ₄தாதீ₃நாம் ப்₄ராத்ருணாம் தே₃வதா ச யா l ராமஸ்ய ச மந:காந்தா ப்ராணே. ப்₄யோபி கு₃ரீயஸீ ॥ " C "உன்திரு" D "நங்கள்திரு" 4. "தி₃வ்யமஹிஷீம் அகி₂ல ஜகு₃ந்மாதரம்" 5. "யஸ்யா: கடாக்ஷணம்" 6. "ஜநநட்₃வநப்ரீத்யா". (கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே) இரண்டுக்கும் கடவ அவன் உணர்ந்தால், ஒன்றுக்குக் கடவ நீ உறங்கக்கடவையோ? வஞ்சிக் கொம்புபோலே இருந்துள்ள ஸ்த்ரீகளுக் கெல்லாம் தலையானவளே! (கொழுந்தே) பெண்களுக்கு ஒரு குறைவரில் உன்

A நாச்-திரு 14-1. B நாச்-திரு 12-6. C திருவாய் 10-10-2. D இர-திருவ 56.

முகமன்றே வாடுவது. 1. ''நாரீணமுத்தமா'' என்கிற பதமும் பெறும்போது அவள்படி உனக்குண்டாகவேண்டாவோ? தன்னை நலிகிற ராக்ஷஸிகளுக்கு 2. ''பதிவயம் சரணம் ஹி வ:'' என்று அவள் சொன்னற்போலே, ஆர்த்தைகளாய் வந்த எங்களையும் 'அஞ்சாதே' என்னவேண்டாவோ?

(குலவிளக்கே) எங்களுக்கும் உன்னுடைய குலத்துக்கும் மங்களதீபமாய்க் கொண்டு ப்ரகாசகையானவளே! விளக்கு அந்யநிரபேக்ஷமாகப் பதார்த்தபோதர்சநத்துக்கும் தன்னுடைய தர்சநத்துக்கும் ஹேதுவாமாபோலே. (கொழுந்தே குலவிளக்கே) A ஆயர்கொழுந்தையும் B ஆயர்பாடிக்கணிவிளக்கையும் நீகொழுந்தும் விளக்குமானால் அநுபவிக்கத்தரவேண்டாவோ? (எம்பெருமாட்டி) எங்களுக்கு க்ருஷ்ணனைப்பிள்ளையாகப்பெற்று உபகரித்து எங்களுக்கு ஸ்வாமிநியானவளே! (எம்பெருமாட்டி) 3. ''நாநயோர் வித்யதே பரம்''. அந்த மிதுநத்தில் சொல்லுகிறதெல்லாம் இங்கே சொல்லுகிறார்கள். C 'கண்ணனெம்பெருமான்'' என்றுக்ருஷ்ணனைச் சொல்லும் பாசுரம், ''எம்பெருமான் நந்தகோபாலா'' என்று — ஸ்ரீநந்தகோபரைச் சொல்லக்கடவதானால், ''எம்பெருமாட்டி'' என்பது இவளையிறே. 1. ''நாரீணமுத்தமை'' களக்கப்பட உன் கை பார்த்திருக்கும்படியன்றே உன் வேண்டப்பாடு. க்ருஷ்ணன் நீளாநாயகனாய் கோபீஜநவல்லபனாயிருக்குமளவன்றிக்கே, D ''மண்மகள்கேள்வன் மலர்மங்கைநாயகன்'' என்று இடைச்சேரியாகச் சொல்லும்படி ஸ்ரீபூமிவல்லபனாகையாலே, ப்ரதாந மஹிஷிகளும் கும்பிடும்படியன்றே உன்னுடைய ஏற்றமிருப்பது. (யசோதாய்) ஸஜாதியையாகையாலே வ்யதிரேகத்தில் தங்கள் நோவறியும் என்கிறார்கள். (யசோதாய்) க்ருஷ்ணனும் பெண்களுமான சேர்த்திக்கு உகக்குமவளென்றிருக்கிறார்கள் இவள். ஹிதகாமரான ஸ்ரீநந்தகோபரைப் போலன்றிறே ப்ரியகாமையான நீ. E 'அஞ்சவுரப்பாளசோதை'' என்கிறவிது பற்றாசாகவன்றே நாங்கள் வந்தது. இவள், பிள்ளையுடைய அருமையாலே, ஊரித்தனையும் திரிந்து அழிவுசெய்து மூலையடியே திரிந்தாலும் 'ஏதேனுமொருபடி செய்து இவன் ஸுகமேயிருக்கவமையும்' என்று ஒருநாளொழியாமே தீம்புக்குப் பெருநிலைநிற்கும்; ஊரடைய முறைப்பட்டவாறே ஸ்மிதம் பண்ணிக்கொண்டு ''செய்தாயோ'' என்னும்; இங்குத்தையள்வறிந்தோமென்று துணிகைக்குடலாய்விடும்; இது பற்றாசாகவன்றே வந்தது. (அறிவுருய்) இவளறியவமையும்; பின்னை தங்களுக்கொரு குறையில்லையென்றிருக்கிறார்கள். ஸ்ரீநந்தகோபரை ''எழுந்திராய்'' என்றும், இவளை 'அறிவுருய்'' என்றும் சொல்லுகையாலே. இவள் நெஞ்சிலே உணர்த்தியுண்டானால் நமக்கு அவனைப் பெறலாவதென்று குவாலாக உணர்த்துகிறார்கள்.

அவளுடைய ஸம்வாதங்கொண்டு உள்ளேபுக்கு க்ருஷ்ணனை எழுப்புகிறார்கள்— (அம்பரமூடறுத்து) ''மாதாபிதாக்களுக்கு நான் பரதந்த்ரனன்றே'' என்று

A திருவாய் 1-7-3. B நாச்-திரு 13-10. C திருவாய் 6-7-1. D பெரிய திரு 10-7-6. E நாச்-திரு 3-9.

உனக்குக் கண்ணழிவுசொல்லவொண்ணுதபடி அக்குறை தீர்ந்து ,அவளநுமதி கொண்டு வந்து புகுந்தோம்; நீ இனி உறங்குகிறதென்? என்கிறார்கள். (அம்பர மூடறுத்து) திருக்கையிலே நீர்விழுந்தவாறே ஆகாஶாவகாஶமடைய விம்மவளர்ந்து, வரையாதே எல்லார் தலைகளிலும் திருவடிகளை வைத்து பூ₄மியையளந்துகொண்டு தே₃வஜா₄திக்குக் குடியிருப்பைக்கொடுத்து, இந்த்₃ராதி₃களையெழுதிக்கொண்டவனே! A ''இருவிசும்பினூடுபோய்'' இத்யாதி₃. (அம்பரமூடறுத்து) இத்தால்—நிருபாதி₄க ரக்ஷகனுகையாலே ரக்ஷகத்வமே விளைநீராக வளர்ந்தபடி. (உலகளந்த) உறங்குகிற ப்ரஜையைத் தழுவிக்கொண்டு கிடக்கும் தாயைப்போலே, இருந்ததே குடியாக எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்தபடி. (உம்பர்கோமானே) இச்செயலாலே தே₃வஜா₄தியை எழுதிக்கொண்டவனே!

(உறங்காதெழுந்திராய்) ரக்ஷகராயிருப்பார்க்கு உறங்கவிரகுண்டோ? ஆண்களுமாப், ப்ரயோஜநாந்தர பரரானவர்களுக்கோ கார்யஞ்செய்யலாவது? அப₃லைகளுமாப் அநந்யப்ரயோஜநைகளுமானவர்கள்கார்யம் செய்யலாகாதோ? உகப்பாரையும் உகவாதாரையும் வரையாதே தின்டுகிற நீ, ஆசைப்பட்ட எங்களைத் தின்டலாகாதோ? நீயே அர்த்தி₂யாய்க்கார்யஞ்செய்யக்கடவ உனக்கு நாங்களர்த்தி₂க்கை குற்றமோ? நீ, நிபுணரான இந்த்₃ராதி₃களுக்கேயோ கார்யஞ் செய்யலாவது? அநிபுணரான எங்கள்கார்யம் செய்யலாகாதோ? உறங்குவாரையுந் தழுவக்கடவ உனக்கு உணர்ந்து வந்தாரைத் தழுவலாகாதோ? அவிஶ்ரமஜ்ஞமான விபூ₄திக்காக உன்னைக் கொடுத்தால், வாசியறிவார்க்கு உன்னைக் கொடுக்கலாகாதோ? கழஞ்சுமண்ணை ஆசைப்படாதே உன்னையாசைப்பட்டது இழவுக்குடலாய்த்தாகாதே? (உம்பர்கோமானே) நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டுநிற்கிற இருப்பாகவுமாம். ''நமக்கு ஶிரோபூ₄ஷணமான திருவடிகளையிட்டோ காடுமோடையு மளப்பது? இதொரு வாத்ஸல்யமே'' என்று அவர்களும் தோற்கும்படியிருக்கை. (உறங்காதெழுந்திராய்) 1. ''ஸதா₄ பஶ்யந்தி'' என்று — இமைகொட்டில் மூச்சடங்கும்படியானவர்களைப் படவடித்து, எங்களை உகந்து, எங்களுக்கு முகங்காட்டாதே உறங்கி, எங்களையும் படவடியாதே எழுந்திராய். (உறங்காதெழுந்திராய்) இங்கு இருக்கவும் அளக்கவும் வேண்டா, அவ்வடிவை அநுப₄விப்பிக்கவமையும். உலகளந்த இளைப்பாலே உறங்குகிறுயென்கிற எங்கள் வயிற்றெரிச்சலைத் தீர்க்கவமையும். B ''நடந்த கால்கள் நொந்தவோ'', C ''இப்படிதான் நீண்டு தாவிய வசைவோ'' D ''அன்றிவ்வுலகமளந்த அசைவேகொல்''—E ''தாளாலுலகமளந்த அசைவேகொல்'' என்றிறே இவர்கள் வயிறெரிவது.

(உறங்காதெழுந்திராய்) F ''எல்லிபகலென்னுதெப்போதும்'' என்கிறபடியே இராவுறக்கமின்றி, பகலுறக்கமின்றிக்கே, பாண்ட₃வர்கள் கார்யஞ்செய்து திரிந்து, அது தலைக்கட்டினபின்பும், 2. ''ருணம் ப்ரவ்ருத்₃த₄ம்'' என்று புண்பட்ட பின்பும்

A திருநெடு-5. B திருச்சந்த-61. C திருவாய்-8-3-5. D மூன்-திருவ-34. E நான்-திருவ-35, F பெரிய-திருவ-19.

தானுறங்காதவனன்றே. 1. ''அநித்₃ரஸ்ஸததம் ராம:'' என்று கேட்டிருந்தபடி அழகிதாயிருந்தது. ''கோவிந்தா என்ற சொல்லோடே, அவள்முன்னே நிற்கப் பெற்றிலோம்; அவதார ப்ரயோஜநம் பெற்றிலோம்'' என்றிருந்தபடிகளெல்லாம் அறிந்தோமிறே. (உம்பர்கோமானே உறங்காதெழுந்திராய்) உபயவிபூ₄தியோக₃த்தால் வந்த செருக்கடைய ப்ரணயிநிகளோடேயோ காட்டுவது? இப்படி இவர்கள் சொல்லச் செய்தேயும், ''அண்ணலே எழுப்பி நம்மைமெழுப்பிற்றிலர்கள்: முறை தப்பினார்கள்; எழுந்திருக்கில் நாமும் கூட்டாவுதோம்'' என்று பேசாதே கிடந்தான்.

2. ''ஆத்₃யாதி ஹ்ருத₃யம் ஹ்ருத₃ா'' என்றும், 3. ''ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா:'' என்றும் நிலைவும் பார்வையும் அறியுமவர்களாகையாலே 'க்ரமம் தப்பிறேனாகாதே' என்று நம்பிமூத்தபிரானே எழுப்புகிறார்கள்—(செம்பொற்கழலடிச் செல்வா) க்ருஷ்ணன் பின்னே பிறக்க, முன்னே பொற்கால் பொலியவிட்டுப் பிறந்த சிமானே! இளையபெருமாள் பின்பிறந்து பெற்ற ஸம்பத்து முன்பிறந்து பெற்றவனன்றே நீ. 4. ''லக்ஷ்மணே லக்ஷ்மிஸம்பந்ந:'' என்று அவரைப்போலே முன்பிறந்து கைங்கர்யஶ்ரீயைப் படைத்தால், அவரைப்போலே உறங்காதிருக்கவும் வேண்டாவோ? பெருமாளும் பிராட்டியும் கண்வளரும்போது புறம்பே மதிலாய் நின்று நோக்குமத்தனையிறே அவர். க்ருஷ்ணனையும் பெண்ணையும் சேரவிடும் ஏற்ற முடையவனன்றே நீ. 5. ''ஸந்தே₃ஶாஸ் ஸாமமது₄ரை: ப்ரேமக₃ர்ப்பை₄: ரக₃ர்ஹிதை: l ராமேணஶ்வாஸிதா ஸே₃ாப்யோ ஹரிணை ஹ்ருதசேதஸ: ll'' என்கிறபடியே எங்களையும் அவனையும் பொருந்தவிடுகிற உனக்கு உறங்கவிரகுண்டோ? (பலதேவா) ''ப₃லதே₃வர்'' என்று திருநாமம். 6. ''ப₃லகதா₄மநி''. (உம்பியும் நீயுமுறங்கேல்) உனக்கு பவ்யனான தம்பியும் அவனுக்கு பவ்யனான நீயும் உறங்காதொழியவேணும். அவனும் பிறப்பாலே பாரதந்த்ரியம்கொண்டாட, நீ உன் ஸ்வரூபத்தாலே பாரதந்த்ரியம் கொண்டாட, நாங்கள் இழந்தேபோமித்தனையோ? திருவநந்தாழ்வானுக்குப் பாரதந்த்ரியம் ஸ்வரூபமிறே. A '' செம்பருல்குடையாம்.''

(உம்பியும் நீயும்) உன்னுடைய—ஸ்பர்ஶத்தாலே உறங்குகிற அவனும், அவனுடைய ஸ்பர்ஶத்தாலே உறங்குகிற நீயும்; அவன் பாரதந்த்ரியத்தாலே கட்டிக்கொண்டு கிடக்கும்; இவன் ஆற்றுமையாலே கட்டிக்கொண்டு கிடக்கும். A 'புல்குமணையாம்'' என்று நாய்ச்சிமாரைப் பிரிந்தால் ஆற்றலாயிறேயிருப்பது. பிராட்டியைப் பிரிந்து நெடுநாளிருந்தார்; இளையபெருமானைப் பிரிந்தபின்பு அழுதுசெய்திலர். 7. ''லக்ஷ்மணேந கா₃தாம் கா₃திம்'' என்று 'என்தம்பிபோனவழியே நானும் போமித்தனே' என்றெழுந்தருவினர். (உம்பியும் நீயும் உறங்கேல்) படுக்கையிலே சாய்ந்தார் உறங்குமத்தனைபோக்கி படுக்கைக்கு உறக்கமுண்டோ? அவன் படுக்கையான நீ உணர்ந்து, எங்கள் படுக்கையையுமுணர்த்தி எங்களுக்குத் தாராய். B ''பாம்பணைப் பள்ளிகொண்ட

A முதல் திருவ-53, B திருமாலை 20.

மாயனூர்.'' (உம்பியும் நீயுமுறங்கேல்) இப்போது கிடந்துறங்க, நாங்கள் ஆர்த்தை களாய் வந்தெழுப்பினபோது எழுந்திராதே நாங்கள் பட்டதெல்லாம், நீ எங்கள் வாசலிலே படவிறே புகுகிறுய்.

(செம்பொற் கழலடியித்யாதி₃) நாங்கள் உன்னைக் காற்கட்டுகிறபோதே எழுந் திராதே, பின்னை தனித்தனியே காற்கட்டவிறே நீதான் புகுகிறுய். இழவில் A ''நடலைகளெல்லாம் நாகணைக்கே சென்றுரைத்தி'' என்பார்கள்; ஊடினபோது B ''தீமுகத்து நாகணை'' என்பார்கள்; உகந்தபோது C ''நாகணமிசை நம்பிரான்'' என்பார்கள். ஸ்ரீகு₃ஹப்பெருமாள், மஹாராஜர், திருவடி, விபீ₄ஷணழ்வான் எல் லார்க்கும் இளையபெருமாளிறே புருஷகாரம். ஆனபின்பு அவனையும் எழுப்பி, நீயும் எழுந்திராய் என்கிறார்கள்.

17.

ஈராயிரப்படி — பதினேழாம் பாட்டு

அவ:— பதினேழாம்பாட்டு — கருந்தாளையுருவித் திருவாசல் காப்பானும் ''உள்ளே புகுருங்கோள்'' என்று சொல்ல, உள்ளே புக்கவாறே பிள்ளைக்குக் காவலாகப் பெண்கள் களவுகாணப்போவர்களென்று நோக்கிக் கிடக்கிற ஸ்ரீநந்த₃ கோ₃பரை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (அம்பரமே தண்ணீரே இத்யாதி₃) புடவை தண்ணீர் சோறுடு வாசி யற வேண்டுவார்க்கு வேண்டிற்றுத் தடையின்றிக்கே கொடுக்கை. (அறஞ்செய்யும்) ப₃லாபி₄ஸந்தி₄ரஹிதமாக ஆந்ருʼஶம்ஸ்யத்தாலே கொடுக்கை. (எம்பெருமான்) பெண்களுக்கு க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்தவன். 1. ''ஸர்வலாப₄ய கோ₃வ:'' D ''உண்ணும் சோறு பருʼகும் நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே'' எல்லாமாயிருக்கிறவர்களுக்கு அவ்வொன்றையும் தாராய். (நந்தகோபாலா) க்ருஷ்ணனைப் பெற்றுத்தந்த நீர் நாங்கள் பெறும்படி பாரீர். ஹிதபு₃த்₃தி₄ பிதாக்கள்பாடே உண்டாகையாலே 'புகுருங்கோள்'என்ருனிறே.

(கொம்பனரித்யாதி₃) நாங்கள் வருந்தினையுமன்ரே நீ காப்பதென்கை. 2. ''ஈரிணமுத்தமா'' என்று பெண்களாய்ப் பிறந்தார்க்கெல்லாம் தலையாகப் பிறந்தவளே! (குலவிளக்கே) பெண்களாய்ப்பிறந்தார்க்கெல்லாம் த்₃ருஷ்டியான விளக்கே! (எம்பெருமாட்டி) க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்து எங்களுக்கு ஸ்வாமிநியானவளே! (அசோதாய்) க்ருஷ்ணனுக்கும் பெண்களுக்குமுள்ள சேர்த்திக்கு ஈகக்குமவளே! ஸஜாதீயை ஆகையாலே நோவறியுமே அவள். (அறிவுருய்) நீ அறிந்த அன்று எங்களுக்கு ஒரு குறையுண்டோ? நீ காவலாக அமையுமென்கை. அவளனுமதி பண்ணின மாத்ரத்தோடே க்ருஷ்ணை உள்ளே புக்கு எழுப்புகிறார்கள் — (அம்பரமித்யாதி₃) பரதந்த்ரனென்று கண்ணழிவு சொல்ல வொண்ணுது. அவளனுமதிகொண்டோம்; அநந்யப்ரயோஜநராய் வந்தார்க்கு முகங்கொடுக்கவொண்ணுதோ? ஆண்களுமாய், ப்ரயோஜநாந்தரபரர்க்கோ கார்யம்

A நாச்-திரு 10-9. B நாச்-திரு 11-1. C திருவாய் 5-10-11. D திருவாய் 6-7-1.

செய்யலாவது? தேவர்களுக்குக் குடியிருப்பைக் கொடுத்த நீ எங்கள் குடியிருப்பை அழிக்கவோ பார்த்தது? உறங்குவாரைத் தழுவக்கடவ உனக்கு உணர்ந்து வந்தவர்களைத் தழுவலாகாதோ?

"தம்பி மூத்தபிரானை எழுப்பி நம்மை எழுப்பிற்றிலர்கள்" என்று கிடக்கிறானென்று பார்த்து அவனை எழுப்புகிறார்கள் — (செம்பொற்கழலித்யாதி) பொற்கால் பொலியவிட்டுப் பிறந்த சீமானே! எழுந்திராய்; அவன் பாரதந்த்ரியத்தாலே கட்டிக்கொண்டு கிடக்கும். இவன் ஆற்றுமையாலே கட்டிக்கொண்டு கிடக்கும் என்கை. 1. "ஸந்தேஹரூ: ஸாமமதுரை: ப்ரேமகர்ப்பைரகர்விதை:। ராமேணாவாஸிதா கோப்ய: ஹரிணா ஹ்ருதசேதஸ:॥" என்கிறபடி எங்களையும் அவனையும் பொருந்தவிடுமவனல்லையோ நீ? என்கிறார்கள். வெறும் படுக்கையைக் கண்டுகொண்டு கிடக்கவமையுமோ? A "சென்றுல் குடையாம்" இத்யாதியாக வேண்டாவோ? 17.

நாலாயிரப்படி — பதினேழாம் பாட்டு

அவ:— பதினேழாம் பாட்டு. கருந்தாளையுருவித் திருவாசல் காப்பான், 'நீங்கள் உள்ளே புகுங்கோள்' என்ன, உள்ளே புக்கவாறே பிள்ளைக்குக் காவலாக 'பெண்கள் களவு காண்பர்கள்' என்று வாசலிலே நோக்கிக் கிடக்கிற ஸ்ரீநந்தகோபரை எழுப்புகிறார்கள். 'பேரனுன அநிருத்ததாழ்வானையகப்படக் களவுகாணக்கடவ அவர்கள் ஸாக்ஷாந்மன்மதமன்மதனுய் அழகுக்கு வாய்த்தலையான இவனை விடுவர்களோ?' என்று காத்துக்கொண்டு கிடந்தார்.

வ்யா:— (அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்) 'புடவையோடு தண்ணீரோடு சோற்றோடு வாசியற வேண்டுவார்க்கு வேண்டுவற்றையடையக் கொடுக்குமவனே!' என்கிறார்கள். ஏவகாரத்தாலே 'இதுவேயோ இவன் கற்றது'என்னும்படியிருக்கை. (அறம் செய்யும்) படாபிஷந்திரஹிதமாக ஆற்றுமையாலே கொடுக்கை. சக்ரவர்த்தியைப் போலே, 2. "மஹதா தபஸா ராம" என்னவேண்டுவதில்லையே. B "வைத்தமாநிதி". இவன் C எடுத்த பேராளனிறே. 'எங்கள் தாரகத்ரவ்யத்தையும் தாராய்' என்கிறார்கள். (எம்பெருமான்) பெண்களுக்குக் க்ருஷ்ணனைப் பெற்றுத் தந்த ஸ்வாமியாயுள்ளவனே! என்கிறார்கள். 3. "ஏகைக பலலாபாய ஸர்வலாபாய கோபவ:" என்றும், D "உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணனெம்பெருமான்" என்றும் ஒன்றே எல்லாமென்றிக்குமவர்களுக்கு அவ்வொன்றையும் தாராய். (நந்தகோபாலா எழுந்திராய்) 'நந்தகோபன் குமரன்' (1) என்று உம்முடைய ஆற்றுமையத்தைக்கண்டு உம்முடைய பிள்ளையென்றன்றே நாங்களாசைப்பட்டது. 4. "குணைர்தரதேவாபம:" பெற்றுத் தந்த நீர், குறையும் நாங்கள் பெறும்படி பாரீரென்கிறார்கள். ஹிதபுத்திதி பிதாக்கள் பாடே உண்டாகையாலே 'புகுருங்கோள்'என்றுரிறே.

உணர்ந்து அவரும் அநுமதி பண்ணினபடி தோற்றக்கிடந்தார். அவரைவிட்டு உள்ளே புகுந்து அசோதைப் பிராட்டியை எழுப்புகிறார்கள் — (கொம்பனூர்க் கெல்லாம்

A முதல் திருவ 53, B திருவாய் 6-7-11, C திருவாய் 8-1-3, D திருவாய் 6-7-1

கொழுந்தே குலவிளக்கே எம்பெருமாட்டி அசோதாயறிவுறுய்) நாங்கள் வருந்தஜன யுமன்றே காப்பதென்கை. அசோதைப் பிராட்டியை எழுப்பி ஸ்ரீநந்த₃கோ₃பரை எழுப்பாமலொழிவானென் என்னில்; பிள்ளைமேல் ஸங்க₃த்தால் அவனுக்கு அணித்தாக வும் ப₄ர்த்ருஸம்ஸ்லேஷத்துக்காகவும் இரண்டுக்கும் நடுவாக உள்கட்டிலே கிடக்கை யாலே பிற்பட அசோதைப் பிராட்டியை எழுப்புகிறார்கள். (கொம்பனஞரித்யாதி₃) 1. "நாரீணாமுத்தமா வதூ₄:" என்று பெண்களாய்ப் பிறந்தார்க்கெல்லாம் தலையாகப் பிறந்தவளே! கொம்பு அனுர்—வஞ்சிக் கொம்பு போன்றவளே. (குலவிளக்கே) பெண் ணுய்ப் பிறந்தார்க்கெல்லாம் த்₃ருஷ்டியான விளக்கென்கை. இக்குடிக்கு மங்க₃ளதீ₃ப மென்னவுமாம். (எம்பெருமாட்டி) க்ருஷ்ணனைப் பெற்றுத்தந்து எங்களுக்கு ஸ்வாமிநி யானவளே! (அசோதாய்) பெண்களுக்கும் க்ருஷ்ணனுக்கும் சேர்த்தி கண்டு உகக்கு மவளன்றே நீ. A 'அந்சவுரப்பாளசோதை' என்றது பற்றுசாகவன்றே நாங்கள் வந்தது. (அறிவுறுய்) நீ அறிந்தவன்று எங்களுக்கு ஒரு குறையுண்டோ? என்கிறார் கள். இவர்கள் வந்தது தங்களாற்றுமையிறே.

'உள்ளே புகுருங்கோள்' என்று அவளநுமதி பண்ண, அவள் ஸம்மாநத் தோடே உள்ளேபுக்கு க்ருஷ்ணனை எழுப்புகிறார்கள் — (அம்பரமூடறுத் தோங்கியுல களந்த உம்பர்கோமானே உறங்காதெழுந்திராய்) என்கிறார்கள். (உம்பர் கோமானே) அச்செயலாலே தே₃வர்களை எழுதிக்கொண்டபடி. நித்யஸூரிகளை என்னவுமாம். "ஐயரும் ஆய்ச்சியும் சொல்லவேண்டாவோ?' என்ன 'பரதந்த்ரன் என்று கண்ணழிவு சொல்லவொண்ணுது. அவர்களை அநுமதி கொண்டோம்; எழுந்திராய்' என்கிறார்கள். அநந்ய ப்ரயோஜநராய் அணையவந்தார்க்கு முகம் கொடுக்கலாகாதோ? ஆண்களு மாய், ப்ரயோஜநாந்தரபரருமாய் இருப்பார்க்கோ கார்யம் செய்யலாவது? தேவர் களுக்குக் குடியிருப்புக் கொடுத்த நீ, எங்கள் குடியிருப்பை அழிக்கவோ பார்த்தது? உறங்குவாரைத் தழுவக்கடவ உனக்கு, உணர்ந்து வந்தவர்களைத் தழுவலாகாதோ? மண்ணைத் தழுவுவது, பெண்ணைத் தழுவலாகாதோ?

அண்ணரை எழுப்பிற்றிலர்களோ? என்ன, 'நம்பி மூத்தபிரானை எழுப்ப மறந் தோம், இதொரு தப்புப் பிறந்தது' என்று நம்பிமூத்தபிரானை எழுப்புகிறார்கள். (செம்பொற்கழலடிச்செல்வா பல தேவா உம்பியும் நீயுமுறங்கேல்) 'பொற்கால் பொலிய விட்டுப் பிறந்த சீமானே! எழுந்திராய்' என்கிறார்கள். 'பல தேவன்' என்று திரு நாமம். 2. "ப₃லகத₄மநி". அவன் பாரதந்த்ரியத்தாலே கட்டிக்கொண்டுகிடக்கும், இவன் ஆற்றுமையாலே கட்டிக்கொண்டு கிடக்குமென்கை. 3. "ஸந்தே₃ஶஸ்ஸாம மது₄ர: ப்ரேமகர்ப்பை₄ரகர்விதை: | ராமேணாஸ்வாஸிதா கே₃ப்ய: ஹரிணு ஷ்ருதசேதஸ:"॥ என்கிறபடியே எங்களையும் அவனையும் பொருந்தவிடுமவனல்லையோ? என்கிறார்கள். வெறும் படுக்கையைக் கட்டிக் கொண்டு கிடக்கவமையுமோ? திருவ நந்தாழ்வானிறே தமையனுய்ப் பிறந்தான். B "சென்றுல்குடையாம்". 'உன்படுக்கையை நீ விடாதாப்போலே, எங்கள் படுக்கையும் எங்களுக்குத் தாராய்' என்கிறார்கள். 17.

A நாச்-திரு 3-9. B முதல் திருவ-53.

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யாநம் — பதினேழாம் பாட்டு

அவ :— பதினேழாம்பாட்டு. (அம்பரம் இத்யாதி₃) இப்பாட்டில், கீழ்ப் பாட்டில் எழுப்பின கோயில்காப்பானநுமதியால் திருவாசல் காப்பான் உள்ளே புகுரவிட, முந்துற ஆசார்யனை எழுப்பி, நம்பி மூத்தபிரான் முன்னாக ஈஶ்வரனை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (அம்பரம் இத்யாதி₃) ஆத்மஸ்வரூபமான ஈஶ்வரமுக₃விகாஸத்தையும் தத்₃வர்த்த₄கமான போ₄க்த்ருத்வபு₃த்₃தி₄ நிவ்ருத்தியையும், தத்₃தே₄துவான கைங்கர்யத்தையும், — 'ஒரொன்றேயோ இவன் கொடுப்பது' என்னும்படி தன்னுடைய ஆந்ருʼஶம்ஸ்யத்தாலே ஸ்வயம்புருஷார்த்த₃மாகக் கொடாநின்றுள்ள, நமக்கு வகுத்தஶேஷியாய், ஆநந்த₃ நிர்ப்ப₄ரனாய், ஆஶ்ரிதரக்ஷகனான ஆசார்யனே! நீ உணரவேணும்.

(கொம்பு இத்யாதி₃) நதீ₃ப்ரவாஹங்களுக்கு வளைந்து பிழைக்கும் நீர் வஞ்சிக்கொம்புபோலே, ஸம்ஸாரிகளுடைய அபி₄மாநத்துக்கு அநுரூபமாகத் தங்களை அமைத்துவைக்கும் ப₄க₃வந்மந்த்ரங்களுக்கெல்லாம் ஶ்ரேஷ்ட₂மாய், ப்ரபந்நகுலத்துக்கு ப்ரகாஶகமாய், எங்களுக்கு நிருபாதி₄கஸ்வாமியாய்த் தன்னை அநுஸந்தி₄ப்பார்க்கு ஆபி₄ஜாத்யாதி₃ ஸகலாதிஶயப்ரத₃மான திருமந்த்ரமே! அறிவுருய்; திருமந்த்ரம் அறிவுறுகையாவது - ஸ்வார்த்த₄ப்ரகாஶகமாகை.

(அம்பரம் இத்யாதி₃) நிரீஶ்வரவாத₃ம் பண்ணுமவர்களுக்கு அவகாஶமறும்படி அபி₄வ்ருத்₃த₄னாய் இவ்விபூ₄தியைத் தன் திருவடிகளின் கீழே சேர்த்துக்கொண்ட நித்யஸூரி நிர்வாஹகனானவனே! ஸம்ஸாரிகளுறக்கம் தீர்க்க அவதரித்த நீ உறங்காதொழியவேணும்.

இப்படி எழுப்பின இடத்திலும் எழுந்திராமையாலே, அவனை எழுப்புகைக்காக நம்பிமூத்தபிரானை எழுப்புகிறார்கள்:— (செம்பொற்கழலடி) சிவந்து ஸ்ப்ருஹணீயமாய், ஸ்வர்ணத்தாலே செய்யப்பட்ட வீரக்கழலையுடைய; ஸ்வஶேஷத்வத்திலே ப₄க₃வச்சே₂ஷத்வம் அந்தர்க்க₃தமாம்படியிருக்கையாலே, திருவடிகள் விருதுபூண்டன என்றுமாம். (செல்வா பலதேவா) இப்படி ஸம்பந்நனை ப₃லதே₃வனே! (உம்பியும் நீயும் உறங்கேல்) உனக்கு ப₄வ்யனை க்ருஷ்ணனும், அவனுக்கு ப₄வ்யனை நீயும் உறங்காதொழியவேணும்.

பதினெட்டாம் பாட்டு

உந்து மதகளிற்ற னெடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தங் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்

பதவுரை:— மதம் உந்து களிற்றன் — மத₃ஜலத்தைப் பெருகவிடுகின்ற யானை போலே ப₃லமுள்ளவராய், ஒடாத தோள் வலியன் — (யுத்₃த₄பூ₄மியில்) பின்வாங்க வேண்டாத தோள்வலியை உடையவரான, நந்த கோபாலன்—ஸ்ரீநந்த₃கோ₃பருடைய, மருமகளே — மருமகளே! நப்பின்னாய் — நப்பின்னை என்னும் பெயரை உடையவளே! கந்தம் கமழும் குழலீ — பரிமளம் வீசும்படியான கூந்தலை உடையவளே! கடை திறவாய் — வாயிலைத் திறப்பாயாக; கோழி — கோழிகள், எங்கும் வந்து — நாற்புறங்களிலும் பரவி, அழைத்தன காண் — கூவினகாண்! (மேலும்) மாதவி பந்தல் மேல் — குருக்கத்திக் கொடிகளாலான பந்தல்மேல் (உறங்கும்), குயில் இனங்கள் — குயில் கூட்டங்கள், பல் கால் — பலமுறை, கூவின காண் — கூவாநின்றன காண்; பந்து ஆர் விரலி — (கண்ணனை, வினையாட்டில் தோற்பிக்கைக்கு உபகரணமாயிருந்த) பந்து விளங்கும் விரல்களையுடையவளே! உன் மைத்துனன் பேர் பாட—உன் நாத₂னாகிய கண்ணபிரானுடைய நாமங்களை (நாங்கள்) பாடும்படியாக, சீர் ஆர் வளை ஒலிப்ப—சீர்மை பொருந்திய (உன்) கைவளைகள் ஒலிக்கும்படி, வந்து — நடந்து வந்து, செம் தாமரை கையால் — சிவந்த தாமரை போன்ற உன் திருக்கையால், மகிழ்ந்து திறவாய் — மகிழ்ச்சியுடன் கதவைத் திறப்பாயாக.

மூவாயிரப்படி - பதினெட்டாம் பாட்டு

அவ:— பதினெட்டாம்பாட்டு, a இப்படி எழுப்பினவிடத்திலும் எழுந்திராமையாலே தங்களுக்குப் புருஷகாரபூ₄தையான நப்பின்னைப்பிராட்டியை எழுப்புகிறார்கள். b அவள் புருஷகாரமாக அவனைப்பற்றுவதே ப₃லவ்யாப்தமாவது. c இதுதான் காகவிபீ₄ஷணாதி₃கள் பக்கலிலே காணலாம். d அவளை அநாத₃ரித்து

பெ. அ. பதினெட்டாம் பாட்டு. (உந்துமதகளிற்றன் -இத்யாதி₃) a (இப்படி எழுப்பினவிடத்திலும்) என்றது — திருவாசல்காக்கும் முதலிகள் தொடக்கமாக நம்பிமூத்த பிரானளவும் புருஷகாரமாகப்பற்றி எழுப்பினவிடத்திலும் என்றபடி. b 'இவரைப் புருஷகாரமாக்குமிடத்தில் அவனைப் பெறலாமோ?' என்ன, — அருளிச்செய்கிறார் (அவள் இத்யாதி₃) c, d அவள் புருஷகாரமாகப் பற்றுகை ப₃லவ்யாப்தமென்கையை அந்வய

சி. அ. பதினெட்டாம் பாட்டு. (உந்து) b 'நப்பின்னைப்பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றுதபோது ப₃லஸித்₃தி₄யில்லையோ?' என்ன அருளிச்செய்கிறார் (அவள் புருஷகாரமாக

இவனைப் பற்றின சூர்ப்பணகை அநர்த்தப்பட்டாளிறே. e பெருமாளையொழியப் பிராட்டியைப் பற்றின ராவணனும் அநர்த்தப்பட்டான்; இருவரையும் பற்றினாலிறே ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே வாழலாவது. f அபிநிவேசப்ரேரிதைகளாகையாலே முந்துறவே க்ருஷ்ணன் பக்கலிலே மேல்விழுந்தார்கள்இவர்கள். அங்குக்கார்யம் டீயாமையாலே வழியே போகவேணுமென்று புருஷகாரத்தில் இழிந்தார்கள். g ஆஸ்ரயணவேளையிலேயிறே க்ரமம் பார்ப்பது; gi போகவேளையிலே க்ரமம் பார்க்கப்போகாதே.

வ்யா:— h (உந்துமதகளிற்றன்) i மதத்தை உந்தாநின்றுள்ள களிறு—மத்தகஜம்போலேயிருக்கும் பலத்தையுடையவன். j ஆனைகளோடே பொரும்படியான ji மிடுக்கை உடையவனென்கை. k (ஓடாத தோள்வலியன்) l 1. ''யுத்தே சாப்யபலாயநம்'' என்கிறபடியே ப்ரதிபக்ஷத்தைக் கண்டால் li பிற்காலியாத தோள்வலியை உடையவன். m நாட்டில் mi நடையாடாத தோள்வலியன் என்னவுமாம்.

பெ.அ வ்யதிரேகங்களால் உபபாதிக்கிறார் (இது இத்யாதி வாக்யத்வயத்தாலே) e இவனை யொழியப் பெருமாளைப்பற்றுமது அநர்த்தாவஹமென்கைக்கு த்ருஷ்டாந்தம் அருளிச் செய்கிறார் (பெருமாளை இத்யாதி) f 'இப்படியிருக்கவும் முந்துறவே நப்பின்னையைப் புருஷகாரமாக்காதே க்ருஷ்ணன்பக்கல் இழிகைக்குக் காரணமென்?' என்ன அருளிச்செய்கிறார் (அபிநிவேசேத்யாதி) g 'அபிநிவேசம் கரைபுரண்டாலும் வழிதப்பியிழிகை எங்ஙனே கூடுவது?' என்ன அருளிச்செய்கிறார் (ஆஸ்ரயணேத்யாதி) gi 'போகவேளை' என்று இவர்கள் நினைவிருக்கையாலே முந்துற இழிந்து, அது பலியாமையால் ஆஸ்ரயணவேளையென்று அறிந்து நப்பின்னையைப் புருஷகாரமாகப் பற்றுகிறார்களென்று கருத்து.

h, i, j மதத்தை, உந்துகை—தள்ளுகையாய், மதஜலத்தைப் பெருகவிடாநின்றுள்ள கஜம்போலேயிருக்குமவனென்று ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து, மதகளிற்றைத் தள்ளுமவனென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆனைகளோடே இத்யாதி) ji 'மிடுக்கையுடையவனென்கை' என்றிருக்கையாலே, கீழ்ச் சொன்ன பலத்தை விவரிக்கிறரென்னவுமாம். k, l ஓடாதவனும், தோள்வலியுடையனுமிருக்குமவனென்று ஸப்தார்த்தம் திருவுள்ளம்பற்றிச் சக்ரவர்த்திதிருமகனை த்ருஷ்டாந்தமாக்கிக்கொண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (யுத்தேத்யாதி) li 'பிற்காலியாத' என்றது பின்வாங்கவேண்டாத என்றபடி. k, m ''ஓடாத'' என்றத்தைத் தோள்வலிக்கு விசேஷணமாக்கி, தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (நாட்டில் நடையாடாத இத்யாதி) m 'நாட்டில்

சி.அ. அவனை இத்யாதி) f 'ஆனால் முந்துற க்ருஷ்ணனை எழுப்புவானென்?' என்ன அருளிச்செய்கிறார் (அபிநிவேச இத்யாதி) g அபிநிவேசம் மிக்காலும் ஸ்வரூபவிருத்தங்களிலே வர்த்திக்கலாமோ? என்ன அருளிச்செய்கிறார் (ஆஸ்ரயணவேளை இத்யாதி)

h, i (உந்துமதகளிற்றன்) வர்ஷியாநிற்கிற மதத்தையுடைய களிறுபோலே இருக்கிறவன். உந்துகை — வர்ஷிக்கை. h, j அன்றிக்கே, உந்துகை — தள்ளுகையாய் தள்ளப்பட்ட மதகளிற்றையுடையவன் என்றுமாம்; இத்தை அருளிச்செய்கிறார் (ஆனைகள் இத்யாதி) k, m ஓடாத—ஸஞ்சரியாத. mi (நடையாடாத) என்றது 'லோகத்திலே நடை

இப்போது இவருடைய மிடுக்குச் சொல்லிற்று, தங்களுக்கு த₄நமான இம்மித்₄நத்துக்குக் காவலுண்டென்று தங்கள் ப₄யநிவ்ருத்திக்காக. n A "அங்கோராய்க் குலம்" என்று-கம்ஸன்படைவீடான ஸ்ரீமது₄ரையை நினைத்து அஞ்சினர்க்கு அஞ்சவேண்டாத ஊரிறே. o (தோள்வலியன்) p 1. "ந பி₃பே₄தி குதஶ்சந" என்று நம்முடைய அநீதிகளை நினைத்தால் p_2 எம்பெருமான் தோள்வலியை நினைத்து ப₄யம் கெடுமாபோலே, p_3 க்ருஷ்ணனுடைய தீம்புகளை நினைத்தால் இவருடைய தோள்வலியை நினைத்து ப₄யம் கெடலாயிருக்கை. கம்ஸன் மாளிகைநிழலின் கீழே க்ருஷ்ணனுக்கு ஒரு தீங்கு வாராதபடி வளர்க்கவல்ல மிடுக்கையுடைய வரிறே. (நந்தகோபாலன் மருமகளே) "ஸ்ரீகும்ப₄ர்மகளே" என்னுதே மாமனுரைச் சொல்லிற்று—2. "ஸ்நுஷா த₃ஶரத₂ஸ்யாஹம் ஶத்ருஸைந்யப்ரதாபிந:" என்னுமா போலே, அதிலும் இவளுக்கு இது ப்ரியமாகையாலே. (நப்பின்னை) "திருவாய்ப் பாடியில் க்ருஷ்ணன் பிறந்ததுக்குப் பின்பு ஸ்ரீநந்த₃கோபருக்கு மருமகளல்லாதா ருண்டோ? நமக்கென்?" என்று பேசாதே கிடக்க, "நப்பின்னை" என்கிறார்கள்.

q (கந்தம் கமழும் குழலீ) r பரிமளந்தான் நிறம்பெறுவது இவள் திருக் குழலிலே சேர்ந்தவன்று என்கிறது: s B வாசஞ்செய் பூங்குழலாளிறே.

பெ. அ. நடையாடாத' என்றது—நாட்டில் ஸஞ்சரியாத என்றபடி. அதாவது—அப்ரதிமமான என்றபடி. n இவன் மிடுக்கைப் பற்ற இவன்னரும் ப₄யநிவ்ருத்திக்கு உட்லென்னுமத்தைக் காட்டுகிறார் (அங்கோராய்க்குலம் இத்யாதி₃) o, p இம்மித்₂நத்துக்குக் காவலுண்டென்று ப₄யநிவ்ருத்தி உண்டாகைக்கு ப₄யப்ரஸக்தியேதென்ன, — அத்தை ஸத்₃ருஷ்டாந்தமாகக் காட்டாநின்றுகொண்டு நிவ்ருத்திக்குடலானபடியை உபபாதி₃க்கிறார் (ந பி₃பே₄தி இத்யாதி₃) p_2 1. "ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந் ந பி₃பே₄தி குதஶ்சந" என்று ஶ்ருதியில் ஆநந்த₃ பத₃ம் — கு₃ணவிக்₃ரஹ விஷ₄யிகளைக் காட்டுமென்று திருவுள்ளம்பற்றி (எம்பெருமான் தோள்வலியை) என்றது.

q, r கந்தம் — க₃ந்த₄ம் பரிமளிக்கும்படியான குழலியுடையவளென்று ஶப்₃த₃ார்த்த₂மாய், பரிமளிக்கையாவது — அதிஶயிக்கையென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பரிமளம் இத்யாதி₃) s, t எடுத்த பாசுரத்துக்கு அர்த்த₂ம் அருளிச்செய்கிறார் (ஸர்வேத்யாதி₃)

பி.அ. யாடாத' என்றபடி.. p_3 (க்ருஷ்ணனுடைய தீம்புகளை நினைத்தால் இவனுடைய தோள் வலியைநினைத்து ப₄யம் கெடலாயிருக்கை) என்றதுக்குத் தாத்பர்யம்—க்ருஷ்ணன் தீம்புகளை நினைத்தாலும் நந்த₃கோபனுடைய தோள்வலியை நினைத்தால் ப₄யம் கெடலாயிருக்கை என்றபடி.

q,r,s "கந்தம் கமழும் குழலீ" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம்: க₃ந்த₄மானது கமழும் படியான திருக்குழலியுடையவள் என்னுதல்; 'கந்தம் கமழும்' என்கிற மிமிசையாலே ிகுதியைச் சொல்லி, பரிமளம் மிக்கிருக்கிற குழலியுடையவள் என்னுதல்; s இத்தை

\ திருவாய் 6-4-5, B திருவாய் 10-10-2,

t 1. ''ஸர்வகந்த:'' என்கிறவனுக்கும் நாற்றம் கொடுக்கும்படி பரிமளம் மிக்க திருக்குழல். u (கடைதிறவாய்) v க்ருஷ்ணனுடைய பரிமளமும் உன்னுடைய பரிமளமுமாகத் தேங்கி நிற்கிற வெள்ளத்தை, கதவைத்திறந்து புறப்படவிட்டு எங்கள் விடாயைத் தீராயென்கிறார்கள்; கிண்ணகத்தை அணைசெய்தாற்போலே அடைத்துக்கொண்டு கிடவாதே வெட்டிவிடாய்.

'மத்யராத்ரியிலே எழுப்புகிறதென்?' என்ன; 'போது விடிந்தது' என்ன; 'விடிந்ததுக்கு அடையாளமென்?' என்ன, — w (கோழியழைத்தனகாண்) x கோழி கூவாநின்றது என்ன; y 'ஒருகோழி கூவினவாறே விடிந்ததாமோ?' என்ன, z (வந்தெங்கும் கோழியழைத்தனகாண்) a துடைதட்டி எழுப்புவாரைப்போலே ஸர்வதோதிக்கமாகக் கோழி கூவாநின்றன.

'உணர்ந்தவையெல்லாம் கூப்பிடும், பின்னையுறங்குமதுதான் சாமக்கோழி' என்ன, — b (மாதவிப்பந்தல்மேல் இத்யாதி) c ஸுகஸ்பர்ஶத்தாலே c 2. ''நோபஜநம் ஸ்மரந்'' என்னும்படியான படுக்கையிலே உறங்குகிறவை உணரும்போது விடிய வேண்டாவோ?' என்ன; d 'ஒருகுயில் ஒருகால் கூவுங் காட்டில் விடிந்ததோ?' என்ன — e (பல்காற் குயில் கூவிற்றுக்காண்) f உன்

பெ. அ u,v ''கடை'' என்று-கோடியாய், கோடியைத் திறவாயென்னும் அர்த்தமும் த்வனிக்கையாலே பழித்த தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணன் இத்யாதி) ''கடை'' என்று - தாழ்ப்பாளாய், அத்தாலே-கதவுதிறக்கை வாக்யார்த்தமாகக் கண்டுகொள்வது.

*w, x, ''கோழி'' என்று- ஏகவசநமாயிருக்கையாலே, ''அழைத்தன'' என்ற பஹுவசநம் சேராமையாலே, ஏகவசநமாக்கி ஸப்தார்த்தமும் அருளிச்செய்கிறார் (கோழி இத்யாதி) y''எங்கும்'' என்றத்துக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (ஒரு கோழி இத்யாதி) z, a ''எங்கும் கோழிவந்து அழைத்தன'' என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி, ''கூப்பிட்டன'' என்னுதே ''வந்தழைத்தன'' என்றது த்ருஷ்டாந்தம் தோன்றவேண்டி என்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (துடைஇத்யாதி) ஒரு கோழி எங்குமொக்க ஏககாலத்திலே கூவக் கூடாமையால், இங்கு ''கோழி'' என்றது—ஜாத்யேகவசநம்.

b, c ''மாதவிப்பந்தல்மேல்'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸுகஸ்பர்ஶத்யாதி) c 2. ''நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்'' என்னும்படி, என்றது—முக்தன் தன்பந்துஜநஸமீபத்தில் வர்த்திக்கும் தான்விட்ட ஶரீரத்தை ஸ்மரியாதாப்போலே, இங்குகிடந்துநலங்கும் குயிலும், உன்னையும் நினையாதே உறங்கும் என்றபடி. d,e ''இனம்'' என்றத்துக்கும், ''பல்கால்'' என்றத்துக்கும் அவதாரிகை அருளிச்செய்கிறார் (ஒரு குயில் இத்யாதி) b, e, f மாதவிப்பந்தல்மேல் கிடக்கும் குயிலாகையாலே, இவள் வளர்ந்த குயிலென்று

சி. அ. அருளிச்செய்கிறார் — (வாசம் செய் பூங்குழலாள் இத்யாதி) u, v கடை—சாடு; தாளாதல், கோடியாதல்.

b, c மாதவிப்பந்தலுக்குத் தாத்பர்யம் (ஸுகஸ்பர்ஶத்தாலே நோபஜநம் இத்யாதி) b, e, f ''மாதவிப்பந்தல்மேல்'' என்கையாலே நீ வளர்த்தது என்று தோற்றுகிறது; அத்தைத்

---

* இந்த அரும்பதவுரை வாக்யம் தமிழ்மரியாதைக்குப் பொருந்தாது; மேலே வ்யாக்யானத்தில் 'கோழி கூவாநின்றன' என்று உள்ளதற்கும் சேராது.

னுடைய நோக்கும் ஸ்பர்ஶமுமே தா₄ரகமான குயில், விடிந்தும் உன்னைக் காணப்பெருமையாலே பலகால் கூவாநின்றது. g 'ஒரு குயில் பலகால் கூவினது ப்ரமாணமோ?' என்ன; h உன்னைக் காணப்பெருமையாலே h_2 நாக்கு ஒட்டினமை தோற்ற, i (குயில் இனங்கள் கூவினகாண்) j இனமினமாகக் குயில்கள் பலகாலும் கூவினகாண்.

k (பந்தார் விரலி) l பந்தும் கையும் பொருந்தியிருக்கிறபடி. m நாங்கள் சைதந்யத்தை விட்டு அசேதநமாகப் பெற்றிலோமே! 'அதுஎன்?'. என்னில்: — உன் கைக்குள்ளே கிடக்கலாமே! n இப்போது பந்தின் ப்ரஸங்க₃மென்னென்றுல் — க்ருஷ்ணனேடே பந்தடித்து அவனைத் தோற்பித்து, அவனை ஒரு கையாலும் பந்தை ஒருகையாலும் அணைத்துக்கொண்டு கிடக்கை. அவன் இவளுக்கு பே₄தோ₃பகரணம்; பந்து லீலோபகரணம். o ஒருகையில் நாரமாய்த்து; ஒரு கையில் நாராயணனுய்த்து. p ஒருகையிலே விபூ₄தியாய்த்து; ஒருகையிலே விபூ₄திமானுய்த்து. q இத்தால் — 1. "அஸ்யேஶாநா ஜக₃தோ விஷ்ணுபத்நீ" என்கிறபடியே உப₄ய ஸம்ப₃ந்த₄த்தால் வந்த புருஷகாரப₄ாவம் தோற்றுகிறது. 'நீங்கள் வந்ததென்?' என்ன; — (உன் மைத்துனன் பேர்பாட) r நீயும் அவனும் r_2 மைத்துனமையாடி ஒருவர்க்கொருவர் ஒன்றுக்கு ஒன்பது சொல்லி இட்டீடு கொள்ளும்போது, உன்பக்ஷத்திலே நாங்கள் நின்று அவன் தோல்விக்கு r_3 வசைபாட. s அவனுக்கு உள்ளதெல்லாம் சொல்லிக்கொடுக்கைக்கும், s_2 இருவரும் ஒன்ருய்ச்செல்லுமன்று s_3 செல்லவும். பிரிந்தால் தாய்பக்ஷத்திலேயிறே ப்ரஜைகள் நிற்பது.

பெ.அ.தோன்றுகையாலே, அவை இவர்க்குக் காணுமையால் பல்கால் கூவிற்று என்று அதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உன்னுடைய இத்யாதி₃) g, h, i, j "இனங்கள்" என்ற ப₃ஹு-வசநத்துக்குத் தாத்பர்யத்தை ப்ரஶ்நப்ரதிவசநரூபேண அருளிச்செய்கிறார் (ஒருகுயில் இத்யாதி₃ வாக்யசதுஷ்டயத்தாலே) h_2 "பல்கால்" என்றதால் ப₂லித்தது-நாக்கு ஒட்டினமை என்று கண்டுகொள்வது.

k, l ஆர்தல்-பொருந்துதலாய், ஸப்₃த₃ார்த்த₂ம் அருளிச்செய்கிறார் (பந்தும் இத்யாதி₃) k, m இவ்விஶேஷணத்துக்கு ப₄ாவத்தை அருளிச்செய்கிறார் (நாங்கள் இத்யாதி₃) n 'நித்₃ரா ஸமயத்தில் பந்தைச்சொல்லக்கூடுமோ?' என்னும் ஶங்கையை அநுவதி₃க்கிறார் (இப்போது இத்யாதி₃) q ஸ்வாபதே₃ஶத்திலே தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இத்தால் இத்யாதி₃) r_3 வசை-தே₃ாஷம். s பிரிந்தபோது அவன் மர்மம் சொல்லவும், கூடியிருக்கும்போது ஒன்ருய்ச் செல்லவும் வந்தோமென்றபடி.

கி.அ. பற்ற (உன்னுடைய நோக்கும் இத்யாதி₃) k, m "பந்தார் விரலி"க்கு ஹார்த்த₃ப₄ாவம் (நாங்கள் சைதன்யத்தை இத்யாதி₃) o, p "ஒரு கையில் நாரமாய்த்து" என்ற வாக்யத்தை விவரிக்கிறார் (ஒருகையிலே விபூ₄தி இத்யாதி₃)

r_3 (மைத்துனமையாடி) விநோத₃ம் சொல்லி, r_3 வசை-பரிஹாஸம். r, s கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் (அவனுக்குள்ளதெல்லாம் இத்யாதி₃) s அவனுக்குள்ளது—அவனுடைய மர்மம்; அன்றிக்கே, தாத்பர்யாந்தரமாகவுமாம். s_2 ப்ரஜைகள் இரண்டுபேர்க்கும் ஸமமாயன்றே இருக்க அடுப்பது என்ன, ஸ்வாபதே₃ஶத்திலே நோக்காக (இருவருமொன்ருய் இத்யாதி₃) இது எம்பார் அருளிச்செய்த வார்த்தை. s_3 செல்லவும் — இருவர்க்கும் பக்ஷமாய்ச்செல்லவும்.

அவள், 'இங்ஙனேயாகில் திறந்து கொண்டு புகுருங்கோள்' என்ன; — t (செந்தாமரைக்கையால் இத்யாதி₃) நீதானே வந்து திறக்கவேணும். செந் தாமரைக்கை — u அவனும் ஆசைப்படும் கை. v 1. "ப₄வேயம் ஶரணம் ஹி வ:"— 'ஈஶ்வர ஸ்வாதந்த்ர்யத்துக்கு நீங்கள் அஞ்சவேண்டா' என்னும் கை. அவள் 'அப்படி3யே செய்கிறேம்' என்று முன்கையில் வளையைக் கடுக்கித் திறக்கப் புக்காள்: w (சீரார்வளை w₃ ஒலிப்ப)—வளைக்குச் சீர்மையாவது — கழலாதிருக்கை. A சங்குதங்கு முன்கை நங்கையிறே. x நாங்களும் அந்த த்₄வநிகேட்டு வாழும்படி. y தங்கள் கைகள். B "இருகையில் சங்கிவை நில்லா" என்றிறே இருப்பது; z "சூடகமே தோள்வளையே" (29) என்று—z₂ அவர்களிருவரும் கூடிப் பூட்டினலிறே இவர்களுக்கு உள்ளது. a இப்பாட்டு, எம்பெருமானர் விஶேஷித்து உகந்தபாட்டு.

பதிப்பாசிரியர் குறிப்பு

a "எம்பெருமானர் விஶேஷித்து உகந்த பாட்டு" என்னும் வ்யாக்₂யான ஶ்ரீஸூக்தி பல ப்ரப₃ல ப்ரமாணங்களிலே விவரிக்கப்பட்டிருப்பதற்கு மாருக அரும்பதவுரைகளில் விவ ரிக்கப்பட்டுள்ளது. அந்த ப்ரமாணங்களாவன;—

(1) நம்பிள்ளை சிஷ்யரான பின்பழகிய பெருமாள்ஜீயர் அருளிய வார்த்தாமாலை — 206-ம் வார்த்தை

எம்பெருமானர், "உந்துமதகளிற்றன்" என்கிற பாட்டை அனுஸந்தி₄த்துக்கொண்டு திருக்கோட்டியூர் நம்பிதிருவாசலிலே (சீரார்வளையொலிப்ப வந்து திறவாய்) என்கிறவிடத்தை அனுஸந்தி₄க்கிறபோது நம்பி திருமகளார், திருக்கதவைத் திறந்துகொண்டு புறப்பட, எம் பெருமானர் விழுந்து தண்டனிட்டுக் கிடக்க, நெரித்துக்கொண்டு உள்ளேயோடிப் புக, நம்பி 'இதுவென் பெண்ணே?' என்ன, 'என்னை எம்பெருமானர் தண்டனிட்டார்' என்ன, 'அதுக்கு ப₄யப்படவேணுமோ?' என்றருளிச்செய்து, எம்பெருமானர் உள்ளே புக்கருளின வாறே, 'இளையாழ்வீர்! இப்போது அனுஸந்த₄நம் உந்துமதகளிற்றனே?' என்றருளிச் செய்தாரென்று பிள்ளையருளிச்செய்வர்.

பெ அ₁, t, u, v கதவுதிறக்கை கையாலேயாயிருக்க. "செந்தாமரைக்கையால்" என்றவிடத் திலே, 'செந்தாமரை' என்ற விஶேஷணத்துக்கும் விஶேஷ்யத்துக்கும் க்ரமேண தாத்பர் யம் அருளிச்செய்கிறார் (அவனும் இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) v 1. "ப₄வேயம் ஶரணம் ஹி வ:" என்ற அநந்தரம், "என்று" என்று ஶேஷம். y. இவர்கள், வாயினுரை கேட்க ஆசைப் படுகைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் (தங்கள் இத்யாதி₃) z ஹேத்வந்தரம் அருளிச் செய்கிறார் (சூடகம் இத்யாதி₃) a எம்பெருமானர் உகக்கையாவது - மாது₄கரத்துக்குப் பெரிய

சி.அ. u (அவனும் ஆசைப்படும் கை) என்றதும்"— 2. "த₃தௌ ப₃ஹூலதாம் ஸ்கந்தே₄" என்ற ஶ்லோகதாத்பர்யம். v (ப₄வேயம் ஶரணம் ஹிவ:) என்றது அர்த்த₂ாந்தரம்.

w, x 'ஒலிப்ப' என்றதுக்கு ஹார்த்த₃மான தாத்பர்யம் (நாங்களும் அந்த த்₄வனி இத் யாதி₃) w. y "சீரார்வளையொலிப்ப" என்றதுக்கு ஹார்த்த₃ப₄ாவம் (தங்கள் கைகள் இத்யாதி₃) z தாத்பர்யாந்தரம் (சூட்கமே இத்யாதி₃) அதாவது — அவர்கள் இருவரும் கூடிப்பூட்டினு லன்றே உள்ளது. இப்போது நோன்புக்கு அங்க₃மாக "மலரிட்டு நாம்முடியோம்" (2) என் றிறே இருப்பது என்றபடி. y, z அன்றிக்கே. 'இவர்கள் கையிலே சங்கில்லையோ?' என்ன நோன்பின் ஸமாப்தியிலே அவர்கள் பூட்டினுலொழிய இல்லை என்கிறார் (சூடகமே இத்யாதி₃) z₂ இதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அவர்களிருவரும் கூடிப்பூட்டினுலிறே இவர் களுக்குள்ளது) என்று. a எம்பெருமானர் உகக்கையாவது—மாது₄கரத்துக்குப் பெரியநம்பி

A திருச்சந்த-57. B திருநெடு-24.

(வந்து திறவாய்) யந்த்ரத்தாலே திறக்கவொண்ணாது, உன்னுடைய தடையழகு காணும்படி வந்து திற. (மகிழ்ந்து) 'அர்த்தி₂கள் வாசலிலே நிற்க வேறு அநுப₄வமுண்டோ?' என்று த₄ர்மத்துக்குத் திறக்கையன்றிக்கே, பேறும் உன்னதாகவேணும். (மகிழ்ந்து) க்ருஷ்ணஸம்ஸ்லேஷத்தாலே வந்த ஹர்ஷப்ரகர்ஷம் முக₂த்திலே தோற்றும்படி என்னவுமாம். 18.

பதிப்பாசிரியர் குறிப்பு (தொடர்ச்சி):—

(2) ராமாநுஜார்ய தி₃வ்யசரிதை:—

"உடையவரும் அதைக்கேட்டு அதிப்ரீதராய் ஆநந்த₃ாஸ்ருவோடே 'பயின்றதரங்கம் திருக்கோட்டி' என்கிறபடியே பெரிய த்வரையுடனே புறப்பட்டுத் திருக்கோட்டியூரேற எழுந்தருளி நம்பி திருமாளிகை வாசலிலே திருப்பாவையநுஸந்தா₄நத்துடனே தண்டன் ஸமர்ப்பித்து 'சீரார் வளையொலிப்ப வந்து திறவாய் மகிழ்ந்து' என்றவநந்தரத்திலே நம்பி குமாரத்தியான தேவகிப்பிராட்டியார் திருக்காப்பை நீக்க, விஸ்மிதராய் அவரை விழுந்து ஸேவித்து, தே₃வகீ புத்ரரத்னத்தைப் பெறுகைக்கு அந்த தே₃வகிப்பிராட்டி புருஷகாரமாக ஸந்நிதி₄யில் சென்று நம்பியை ஸேவித்து"

(3) வடிவழகியநம்பித₃ாஸர் இயற்றிய குருபரம்பராப்ரபாவம்:—

"மாதுகரத்துக் கெழுந்தருளி வரும்போதன்றிப் போம்போதும்
ஒதும்கோதை திருப்பாவை உரையோடுலாவித் திரிபவரும்
வேதம்வல்ல திருக்கோட்டி நம்பிமனையில் மெய்ஞ்ஞானப்
போதமுடையார் ஆங்கொருநாள் புக்கார் உந்துமதகளிற்றில்.
[மாதுகரம்—உஞ்சவ்ருத்தி; மெய்ஞ்ஞானப்போதம்—மெய்ஞான அறிவு]
வந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாடச் செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்தாரணங்கே திறவென்னவாசலின்முன் என்தாதை நின்றார் அவ்வெல்லையினில்நம்பிதரும்
அன்னமென் னடையாள் தேவகியென்னும் அரும்பெயருடைய ஆரணங்கு
தன்னெருகரத்தால் கந்துகமொன்று தாங்கியோர் தாமரைக் கையால்
இன்னிசை எதிரட் கிறைவனார் திறவென் றிசைத்தசொல் இறுமுனம் திறந்தாள்
மின்னுமா மணிசேர்ந் திலங்கிய கபாடம் விண்டுவின் தொண்டர் மெல்லியலே.
கண்டனர் பின்னைப் பிராட்டி மற்றிவளும் கள்வனேன் பொருட்டிலலர்ந்த
புண்டரிகச்சீர்த் திருவடி வருந்தப் போந்திவை திறந்தனளென்னப்
பண்தகும் பனுவல் மறந்தனர் மண்ணில் பதைப்பறவொடுங்கினர் விழுந்தார்
தெண்டோடி கண்டு வெகுளியோ டேகி உற்றதைப் பெற்றவர்க் குரைப்பாள்.
என்றிவை மகளார் இயம்பிட நம்பி இன்பமுற் றிருந்(து) இவை யாழ்வீர்!
ஒன்று சீர் உந்து மதகளிறென்ன ஒதிய பாடலோ சந்தை
இன்று நம் வாசல் தலையுறு மளவில் என்றனர் ஆம்என எழுந்து
சென்றுமா மாது கரம்பரி மாறத் தேசிகக் குன்றையும் வணங்கி"

(4) பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலும் இப்படியே உள்ளது. ஆகையால் அரும்பதவுரைகளில் விவரிக்கப்பட்டிருப்பது ஏற்கத்தக்கதல்ல— பதிப்பாசிரியர்.

பெ.அ. நம்பி திருமாளிகைக்குத் திருப்பாவையநுஸந்தா₄நத்துடனே எழுந்தருள, அப்போது திருக்காப்பைச் சேர்த்திருக்கையாலே அநுஸந்தா₄னத்தைக்கேட்டு அத்துழாய் திருக்காப்பு நீக்கின வளவிலே இப்பாட்டாக, பிராட்டியென்று த்₄யானித்து மோஹித்தார்—என்ற அத்தை நம்பிகேட்டருளி, "உந்துமதகளிருகாதே" என்று அருளிச்செய்தாராகையாலே உகந்திருப்பர் என்றபடி. 18.

சி.அ. திருமாளிகைக்குத் திருப்பாவையநுஸந்தா₄னத்துடனே எழுந்தருள, அப்போது திருக்காப்புச் சாத்தியிருக்கையாலே, திருநாமோச்சாரணத்தைக்கேட்டு அத்துழாய் திருக்காப்பு நீக்குகிற வளவிலே இப்பாட்டாக. "நப்பின்னைப்பிராட்டி" என்று த்₄யானித்து மோஹித்தார். இத்தை நம்பி கேட்டு "உந்துமதகளிருகாதே" என்று அருளிச்செய்தார். ஆகையாலே உகந்திருப்பர் என்றபடி. 18.

ஆருயிரப்படி — பதினெட்டாம் பாட்டு

அவ :— பதினெட்டாம் பாட்டு. (உந்துமதகளிற்றன்) கீழ் — நந்தகோபர் தொடக்கமானுரை எழுப்பிநின்றது. ''இந்நேர்த்தியெல்லாம் பட்டால் ப்ரயோஜநமென்? பேற்றுக்கு அடியானவள்தன்னைப் பற்றவேண்டாவோ? இவ்விட்டுநீட்டுதலால் ப்ரயோஜநமுண்டோ? 'உறங்காதெழுந்திராய்' (17) என்றவிடத்திலும் எழுந்திராதொழிந்தது, திருவாசல் காக்கும் முதலிகள் ஸ்ரீநந்தகோபருள்ளிட்டார் தொடக்கமானவர்களை எழுப்பினாலும், படலவ்யாப்தியாவது நப்பின்னையை முன்னிட்டாலன்றே'' என்று க்ருஷ்ணனிருந்தாணுகக்கொண்டு, பேற்றுக்கு அடியானவள்தன்னையே பற்றுவோமென்று நப்பின்னைப்பிராட்டிதன்னை எழுப்புகிறார்கள்.

எம்பெருமானைப் பற்றுகைக்குப் பிராட்டி புருஷகாரமாகவேணும்; இவள் திருவடிகளைப் பற்றுவார்க்கு அவள்தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையே அமையும். 1. ''நமோஸ்து ராமாய ஸலக்ஷ்மணாய தேவ்யை ச தஸ்யை ஜநகாத்மஜாயை'' என்று — ஸ்ரீஜநகராஜனுக்கு நீயே உன்னைக் காட்டினாற்போலே அடியேனுக்கும் நீயே வந்து உன்னைக் காட்டியருளவேணும் என்கிறான். நெருப்பை ஆற்றுகைக்கு நீர் வேணும், நீரை ஆற்றுகைக்கு நீர்தானேயமையும். ''பலதேவா'' (17) என்று கீழ் இவர்களெழுப்பின க்ருஷ்ணனுடைய தமையனூர் தாம் தம்பியாய்ப் பிறந்த அவஸ்தையிலே 2. ''ஸீதாமுவாசாதியஸா: ராகவஞ்ச மஹாவ்ரதம்'' என்று— பிராட்டி முன்னிலையாக ஸரணம்புக்கு பெருமாள் 'போகவொண்ணாது, நீ நில்' என்ற ஸங்கல்பத்தையுமழித்து அவரைப் பெற்றுப்போனாற்போலே.

காகம் அபராதத்தினுடைய எல்லையிலே நின்றுவைத்து, பிராட்டி ஸந்நிதியுண்டாகையாலே ப்ரபந்நர் பெறும் பேற்றைப் பெற்றது. 3. ''வதார்ஹமபி காகுத்ஸ்த:'' மஹாராஜரும் கெட்டு அராஜாய், நாலுமுதலிகளும் தாமுமாயிருக்க, பிராட்டி, தன் திருவாபரணத்தைத் திருவுத்தரீயத்திலே கட்டி விழவிட, அதுமுன்னுகவிறே பெருமாள் ஸரணம் புகுந்தது. 'மஹாராஜர்க்கு முன்னேவந்து கண்டிலனே திருவடி?' என்னில்; அப்போது, வீரத்துக்கும் அழகுக்கும் தோற்று சூர்ப்பணகையோபாதி அடிமைபுக்கான்; எம்பெருமான் அர்ஜுநனைநோக்கி அருளிச்செய்த ஹிதம், A ''மாயன் அன்றேதிய வாக்கதனைக்கல்லார்'' என்று இழவுபடும்படி ஆழ்வார்களுக்கு உண்டானாற்போலே பிராட்டி, ராவணனைக்குறித்து அருளிச்செய்த ஹிதத்தை, ஸிம்ஸுபாவ்ருக்ஷத்திலே மறைந்திருந்து கேட்டு 4. ''ஸீதாமாச்ரித்ய தேஜஸ்வீ'' என்று அதிகாரிஸாத்ருத்யுண்டாய், தன் ஸ்வரூபமும் பெற்று முறையறிந்து அடிமைபுக்கு, 5. ''தூதோ ராமஸ்ய'' என்ற வாயாலே, 6. ''தாஸோஹம் கோஸலேந்த்ராஸ்ய'' என்பதுஞ் செய்து தன்

A நான்திருவ 71

ஸ்வரூபம் பெற்று, 1. "ஏஷ ஸர்வஸ்வபூ₄தஸ்து" என்று — ஸ்வரூபாநுரூபமான பல₂ம் பெற்றதும் பிராட்டியை ஆஶ்ரயித்தபின்பிறே.

புருஷகார பூ₄தையான பிராட்டியைப் பேரவைத்து புஜிக்கவந்த சூர்ப்பணகை₃ துறையறியாமல், அந்தரப்பட்டாள். A "தன்னை நயந்தாளை" என்கிறது குற்றமுண்டாயன்றே; B 'கொல்லியரக்கி' யாகையாலேயிறே அநர்த்த₂ப்பட்டது. பிராட்டி தன்னை முறைதப்பப் பற்றின ராவணன் முடிந்துபோனான்; இருவரையுஞ்சேரப் பற்றின விபீ₄ஷணன் அல்லல்தீர்ந்து வாழ்ந்துபோனான். C "மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா" என்றிறே ஆழ்வார். தன்னுடைய கர்மஜ்ஞாநாத்₃யுபாயங்களாலே எம்பெருமானைப் பெறவிருக்குமது இளிம்பு; அவற்றைவிட்டு எம்பெருமானுடைய க்ருபையாலே பெறுகை சதிர்; அந்த க்ருபைக்கடியான பிராட்டியை முன்னிட்டுக்கொண்டு பெறுகை மாசதிர். D "எனக்கேயருள்கள் செய்ய விதிசூழ்ந்ததால்" என்றார். அதுக்கடியாக E "மாதவனென்றதே கொண்டு" என்றார். உபாயத்தில் வந்தால் உக்திமாத்ரமமைந்தது; பல₂த்திலே வந்தவாறே ஸம்ப₃ந்தி₄ஸம்ப₃ந்தி₄களளவும் செல்ல வாழ்ந்துபோய்த்தது என்கிறார். F "திருக்கண்டேன்" என்று தொடங்கி, G "தேனமரும் பூமேல்திரு — சார்வு நமக்கென்றும்" என்றருளிச்செய்தார். இவையடியாக இழிந்த எம்பெருமானரும் க்₃ருத்₃ரத்திலே முதலிலே தமக்கு த்₃வயநிஷ்டை₂யுண்டாகவேணுமென்று பிராட்டியை ஶரணம்புக்கார்; இவர்களும் அப்படியே ஒரு பாட்டாலே நப்பின்னைப்பிராட்டியை ஶரணம்புக்கு,—அநந்தரம் அந்த:புரபரிகரமாய் நின்று ப₄யங்கெட்டு, ஒருபாட்டாலே உபாயலி₃ங்க₃முக்குடலாக அவனைப்பற்றி, ஒருபாட்டாலே உபேயலி₃ங்க₃முக்குடலாக அவனையுமவளையும் பற்றி, ஆக மூன்று பாட்டாலே — நப்பின்னைப்பிராட்டியை யெழுப்பி, அவள்வழியாக எம்பெருமானை எழுப்புகிறார்கள்.

அபி₄நிவேஶப்ரேரிதைகளாகையாலே, கலக்கத்தாலே க்ருஷ்ணன் பக்கலிலே மேல் விழுந்தார்கள்; ஆஶ்ரயணத₃ஶையும் போ₄க₃த₃ஶையும் பே₄தி₃க்கவொட்டாதபடி உபக்ரமத₃ஶையிலே கலக்குமிறே விஷயஸ்வபா₄வம். 'பிராட்டி முன்னாக ஶரணம் புகவன்றே ப்ரமாணங்கள் சொல்லிற்று, இங்கு நப்பின்னைப் பிராட்டியையன்றே ஶரணம்புகுகிறது' என்னில்; பெரியபிராட்டியார்க்கு அல்லாத நாய்ச்சிமார் ஸ்ரக்சந்த₃நாதி₃களோபாதி உபகரணகோடிகளாகையாலும் இவர்கள் அவயவ கோடியிலே அவள் நினைத்திருக்கையாலும், பிராட்டிக்குத் திருவடிகளோபாதியாக நினைத்திருக்கையாலே இவளைப் பற்றுகிறார்கள். பரத₃ஶையில் நாய்ச்சிமார் மூவரையும் முன்னிடக்கடவது; H "கூந்தல்மலர்மங்கை" இத்யாதி₃. வ்யூஹாவஸ்தை₂யில் நாய்ச்சிமாரிருவரை முன்னிடக்கடவது; I "சந்தணி மென்முலை மலராள் தரணிமங்கை" என்னக்கடவதிறே. ராமாவதாரத்தில் பெரிய பிராட்டியாரொருவரையுமாயிருக்கும். ஶ்ரீவராஹப்ராது₃ர்ப்பா₄வத்தில் ஶ்ரீபூ₄மிப்

A பெரியதிருமடல் 146, B நாச்-திரு 10-4, C திருவாய் 2-7-1, D திருவாய் 2-7-6, E திருவாய் 2-7-3, F முன்-திருவ 1, G முன்-திருவ 100, H திருவாய் 5-6-11, I பெரியதிரு 2-10-2.

பிராட்புயை முன்னிடும்; க்ருஷ்ணவதாரத்துக்கு ப்ரதாநமஹிஷி இவளாகையாலே நப்பின்னைப்பிராட்டியை முன்னிடுகிறார்கள்.

வ்யா:— (உந்துமதகளிற்றன்) க்ருஷ்ணனை "நந்தகோபன் குமரன்" (1) என்று ஆதரிக்குமாபோலே, இவனைப்பற்றுவார்க்கும் இவளுகப்பது சொல்ல வேண்டுகையாலே ஸ்ரீநந்தகோபரை ப்ரஸங்கித்து அவரை ஸ்லாகிக்கை இவளுக்கு உகப்பென்று அவர்மிடுக்கைச் சொல்லுகிறார்கள். (உந்துமதகளிற்றன்) நாங்கள் வந்தெழப்புக்கபடி A 'வாரணம் பையநின்றூர்வதுபோல்' மகன் செருக்கித்திரிகிறது—இவ்வயிற்றில் பிறப்பிறே. (உந்துமதகளிற்றன்) மத்தகஜத்தின் மிடுக்குப் போலே ப்ராப்ய்ம் கனக்க உண்டாகையாலே, களிற்றைத் தள்ளாநின்றுள்ள மிடுக்கையுடையவரென்றுமாம். ஆனைகளோடே பொருது அவற்றை நூக்கும் படியான மிடுக்கையுடையவரென்கை. கருஷ்ணன் ஆனைகொன்றது ஸர்வஶக்தித்வத்தாலன்றிறே; இவர்மகனைகையாலேயிறே. (உந்துமதகளிற்றன்) மத்தகஜங்களையுடையவரென்றுமாம். 'ஆனையுண்டோ இவர்க்கு?' என்னில்: ஸ்ரீவஸுதேவரும் தாமும் ஒருமிடறுயிருக்கையாலே அங்குள்ளது இங்கேயாய், இங்குள்ளது இங்கேபாய் ஒன்றாய்ப்போருகையாலேயும், தத்தபுத்ரனுக்கு இரண்டிலும் ப்ராப்தியுண்டாகையாலும், ஆனையுண்டாகத் தட்டில்லை. B "வாரணமாயிரஞ்சூழ" என்று திருவாய்ப்பாடியில் ஆனைகளும் பசுக்களும் கலந்து திரியுமத்தனையிறே.

(ஓடாததோள்வலியன்) 1. "யுத்தே சாப்யபலாயநம்" என்கிறபடியே எதிரிகளைக்கண்டால் 'ப்ரதிபக்ஷமிறே' என்று பிற்காலியாத தோள்வலியையுடையவன். கம்ஸன் மாளிகைக் கீழே பிள்ளைவளர்க்கவல்ல வலிமையிறே. 'குடியுடன்படக் கடமைகொண்டு இருந்தானுகிலிருக்கிறன்; மிகைத்தானுகில் உழக்கோல் கொண்டு தகர்க்கிறேம்' என்றிருப்பர். அவனும் அது அறிந்திறே புகுந்து அபிபவித்தல், 'விட்டுக் காட்டுங்கோள்' என்னுதல் செய்யாதே, தான் முடியுந் தானையும் களவிலே நலியப்பார்த்தது. C "அங்கோராய்க்குலம்" என்று அஞ்சினன் புகலிடமானவூரிறே. கம்ஸன் படைவீடென்று அஞ்சிஞரச்சங்கெடுவது இவ்விடைச்சேரியை நினைத்திறே. (தோள்வலியன்) நித்யஸம்ஸாரியானவன் தன்னுடைய அநீதிகளை நினைத்து அஞ்சுகை 2. "ந பீதேதி குதஶ்சந", 3. "அதை ஸோபயங்கரதோ பயாதி" என்று எம்பெருமானுடைய குணங்களை அநுஸந்தித்து புத்திபூர்வகமான பாபத்துக்கு பயங்கெட்டு மார்மிலே கைவைத்து உறங்குமாபோலே, க்ருஷ்ணன் தீம்பை அநுஸந்தித்து அஞ்சின பெண்களுக்கு இவர் தோள்மிடுக்கை நினைத்து அச்சங்கெட்டிருக்கலாயிருக்கை; 4. "பாஹூ ராமஸ்ய ஸம்ஶ்ரிதா" என்று பிராட்டி பெருமாள் தோளை அண்டைகொண்டு அச்சங்கெட்டிருக்குமாபோலே. (தோள்வலியன்) 'எம்பெருமானுக்கு என்புகுருகிறதோ?' என்று அஸ்தாநே பயஶங்கை பண்ணி மங்களாஶாஸநம் பண்ணுமவர்களாகையாலே, க்ருஷ்ணனைப்போலே D பின்னை

A பெரியாழ்திரு 1-8-1, B நாச்-திரு 6-1 C திருவாய் 6-4-5 D திருவாய் 1-7-

நெடும்பணைத்தோளே விரும்புதல், அல்லாதபெண்களேப்போலே. A பின்னைதன் காதலன்றன் பெருந்தோள் நலம்பேணுதல் செய்யாதே, தங்கள் தா₄நமான அம்மிது₃நத்துக்குக் காவலுண்டென்று இவருடைய தோள்மிடுக்கை அநுஸந்தி₄க்கிறார்கள் தங்கள் பர₄யநிவ்ருத்திக்காக. (ஓடாததோள்வலியன்) க்ருஷ்ணன், தோளில் சாந்தழியாமல் மல்லரைத் தகர்க்கவல்லனெய்த்து — பு₄ஜப₃லமுடைய இவர் வயிற்றில் பிறப்பிறே. (ஓடாத) நாட்டில் நடையாடாத தோள்வலியை உடையவன் என்னவுமாம்.

(நந்தகோபாலன்) ஐஶ்வர்யத்தாலும் பு₄ஜப₃லத்தாலுமுண்டான மேன்மைக்குத் தமக்கவ்வருகில்லாதாப்போலே, "நந்தகோபாலாவெழுந்திராய்" (17) என்று பெண்களோடொக்க எழுப்பலாம்படி தாழ்ந்தாருடைய ரக்ஷணத்திலே அதி₄கரித்துத் தம்மையமைத்த நீர்மையைச் சொல்லுகிறது. (மருமகளே) "ஶ்ரீகும்ப₄கர்ணனே" என்றுல் அறியாள்; ஶ்ரீநந்த₃கோபர் ஸம்ப₃ந்த₄மேயாய்த்து அறிந்திருப்பது. ஶ்ரீநந்த₃கோபர் மாமனுய், க்ருஷ்ணனுக்கு மச்சினியாய் முறையாலே ப₃ால்யத்திலே இங்கே வளருகையாலும், இங்கே வாழ்க்கைப்பட்டபடியாலும், 'இவர் மருமகள்' என்று தன்னை நினைத்திருக்கையாலும், இவள் உகக்குமதாகையாலும், இவள் விரும்பியிருப்பது இவருடைய ஸம்ப₃ந்த₄ம். (மருமகளே) முக்தனுக்கு ஸம்ஸாரம் போலே, இவளுக்குப் பிறந்தகம். புருஷகாரமாவார்க்கு க்ருபைவேணுமிறே. மனிச்சர் நோவறிந்து கார்யஞ்செய்யுமிடத்தில் 'அறஞ்செய்யும் நந்தகோபாலனுக்கு மருமகள்' என்னலாயிருக்கும். 1. "ஸ்நுஷா த₃ஶரதஸ்யாஹம் ஶத்ருஸைந்ய ப்ரதாபிந:" என்று 'எங்கள்மாமனுர் இருந்தாராகில் நானிவர்கள் நடுவே இவ்விருப்பிருக்கவும் இவ்வார்த்தை சொல்லவும் வையாரிறே' என்றுள் பிராட்டி. 'திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் பிறந்ததுக்குப் பின்பு கம்புக்கற்றையும் ஒழிந்தார் இந்த ப்ராப்தியில்லாதாருண்டோ? பஞ்சலக்ஷம் குடியில் பெண்களெல்லார்க்கும் ஸாதா₄ரணமன்றே? நமக்கு விஶேஷணமென்?' என்று பேசாதே கிடந்தாள்;— (நப்பின்னுய்) என்கிறார்கள். தங்களுடைய க்லேஶம் தீர்க்கைக்கும், தங்களுடைய ஆர்த்தி இவளுடைய நெஞ்சிலே படுத்துகைக்காகவும் "நப்பின்னுய்" என்று பேரைச் சொல்லுகிறார்கள். தாங்களார்த்தைகளாய் நம் வாசலிலே வர நம்முடைய நீர்மையாலுள்ளது தாங்கள் பெருதபடியாலே, 2. "ஹே க்ருஷ்ண" என்று அர்ஜுநன் க்ருஷ்ணனை அஸத்கரித்து வார்த்தை சொல்லுமாபோலே, "நப்பின்னுய்" என்று சிவட்கென்கிறார்கள். 'இங்கு வெறும் க்ருஷ்ணனேயாய் நாமில்லையென்னுமிடத் தோற்றவேணும்' என்று பேசாதேகிடந்தாள்.

(கந்தம் கமழும் குழலீ) என்கிறார்கள். நீ இல்லையாகில் உள்ளு இப்படியாமோ? ஸமுதா₃யபரிமளமும் வ்யாவ்ருத்த பரிமளமும் நாங்களறியோமோ? 3. "ஸ்வகே₃ந்த:" என்கிற வஸ்துவுக்கும் B 'வாசஞ்செய்பூங்குழலா'ளாகையாலே நாற்றங்கொடுக்கும் குழலையுடையவளன்றே. (கந்தங்கமழும்) நீ ப்ரதிவசநம் பண்ணிற்றிலையாகிலும் உன்குழலில் பரிமளம் ப்ரதிவசநம் பண்ணுநின்றதுகாண்!

A பெரியதிரு 3-7-7, B திருவாய் 10-10-2

(கமழும்குழலீ) பரிமளந்தான் நிறம்பெறுவது இவள் குழலிலே சேர்ந்த பின்பு; A ''வாசப்பூங்குழல் பின்னேதோள்கள் மணந்ததும்'' என்னக்கடவதிறே. (கடை திறவாய்) ''மலரிட்டு நாம் முடியோம்'' (2) என்கிற ப்ரதிஜ்ஞைக்கு விபரீதமாகப் பூமுடித்தோம் என்று நினைக்கிறார்களாகக்கொண்டு பேசாதேகிடக்க; நாங்களும் எங்கள் B சென்னிப் பூவைச் சூடும்படி—வாசலைத் திறவாயென்கிறார்கள். அப்பரிம ளத்தைத் தலைநீர்ப்பாட்டிலே அநுபவித்து, அப்பரிமளத்தினுடைய வெள்ளத்திலே அழுந்திக் கிடந்து, அவனைத்தனியே அநுபவிக்கவமையுமோ? வாசலைத் திறந்து எங்களையும் கூட்டிக்கொண்டு அநுபவிக்கப்பாராய். (கடைதிறவாய்) கிண்ணகத்தை அணைசெய்துகொடு கிடப்பாரைப்போலே அடைத்துக்கொடு கிடவாதே, க்ருஷ்ண னுடையவும் உன்னுடையவும் தேங்கிநிற்கிற பரிமளத்தைக்கடைவெட்டிவிட்டு எல்லாரும் வாழும்படி புறப்படவிடாய். பெருவெள்ளத்தை அணைசெய்வாருண்டோ? எங்களார்த்தி திராயாகில் பெருவெள்ளத்திலும் போக்குவிட வேண்டாவோ? உன்னுடைய பேராற்றையிலே அவனழுந்திக்கிடக்கும்; அவனை அநுபவிக்கைக்கு நாங்கள் வேண்டாவோ? அநுபவிப்பார்தான், அவயவங்களோடும் ஸ்ரக்சந்தநாதி களோடுமன்றே அநுபவிப்பது. C ''உன்றன் திருவுள்ளம்இடர்கெடுந்தோறும்'' என்னக்கடவதிறே.

'மத்யராத்ரத்திலே எழுப்புகிறதென்? கதவு திறக்கும்போது விடிய வேண்டாவோ?' என்ன; 'போது விடிந்ததுகாண்' என்ன; 'விடிந்தமைக்கு அடையாளமென்?' என்ன; 'விடிந்தமைக்கு அடையாளமன்றே கோழி கூவுகிறது?' என்ன; 'ஒரு கோழி கூவிற்றுகில் விடிந்ததாகவேணுமோ?' என்ன; 'திரள் கூவா நின்றது' என்ன; 'ஒன்றினுடைய ஶப்தத்தைக் கேட்டுப் பலவுமுணர்ந்தது' என்ன: (எங்கும்) 'ஸர்வதோதிக்கமாகக் கோழி கூவாநின்றதுகாண்' என்ன; 'உணர்ந் தவையெல்லாங்கூட எங்குமொக்கக் கூப்பிட்டுப் பின்னையும் உறங்குமாகையாலே இப்போதே கூப்பிட்டு அடங்கும்' என்ன:— (வந்தெங்குங் கோழி அழைத்தன காண்) என்கிறார்கள். வாசலைப்பற்றித் 'திற' என்பாரைப்போலேயன்றே அழைக் கின்றன. (கோழியழைத்தனகாண்) D ''கோழிகூவென்னுமால்'' என்று உனக்கு வயிறெரிகைக்குடலல்லாமையாலே தெரியாதே. எங்களைப்போலே E 'கோழியழைப் பதன் முன்னம்' குளிக்கவும் வேண்டாவே உனக்கு.— 'எங்கும் சாமக்கோழி கூவக்கடவதாயன்றே விருப்பது; அவையிப்போதே இளர்ந்தடங்கும்; இது அடையாள மாகமாட்டாது; வேறு அடையாளமுண்டாகில் சொல்லுங்கோள்' என்ன (மாதவிப் பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) 'குயில்கூவினது அடையாள மன்றே' என்ன; 'ஒரு குயில் கூவுங்காட்டில் விடிந்ததாகவேணுமோ?' என்ன; 'குயிலினங்கள் கூவிற்று' என்ன; 'ஒரு திரளாக ஒருகால் கூவும்போது விடிவுக்குடலோ?' என்ன; 'திரள் திரளாகப் பலகால் கூவுமது உடலன்றே?'

A திருவாய் 6-4-2. B திருக்குறு 6 C திருவாய் 10-3-9. D பெரியதிரு 10-10-6. E நாச்திரு 3-1.

என்ன, 'உறக்கத்தாலே அநந்தலிலே பலகால் வாய்வெருவிற்றித்தனைகாணுங்கோள்' என்ன: (மாதவிப் பந்தல்மேல்) இப்பூம்படுக்கையினின்றும் இவை உணரும்போது விடிந்ததாக வேண்டாவோ? 1. ''நோபஜநம் ஸ்மரந்'' என்று முக்தன் ஸம்ஸாரயாத்ரையை மறக்குமாபோலே, படுக்கைவாய்ப்பாலே கிடந்துறங்குகிற அவையும் உணரும்போது விடிந்ததாகவேண்டாவோ? (பல்கால்) உன்நோக்கும் உன்பேச்சுமே தாரகமாக இருக்கக்கடவ இவை, உன்னைக்காணுமே கதறி நாக்கு ஒட்டக்காண்புகுகிறது. A ''தயிர்ப்பழம் சோற்றெடு''. (இனங்கள்) மேலே ஒரு திரள் கூவா நின்றது; கீழே ஒரு திரள் கூவாநின்றது; இவையொன்றுங் கேளாதே உறங்குகிறாய் நீயேயிறே. ''B 'கண்படை கொள்ளுமிளங்குயிலே' என்று உறங்குகிற குயில்களையும் எழுப்பிக் கூவச்சொல்லுமவர்களாகையாலே, கூவாதபோது நீங்கள் C இங்குற்று நின்றுந்துரத்திவிடுவிகோளென்று ஊரிலிருக்கிறத்தைக் கூலியாகக் கொண்டு கூப்பிடுகிறதித்தனை; விடிந்ததன்று'' என்று பேசாதே கிடந்தாள்;— (பந்தார் விரலி) நாங்கள் சொன்னவற்றுக்கெல்லாம் ஓரோ உத்தரஞ்சொல்லி உள்ளே கிடக்கிறது உன் குறைவறுகையிறே. (பந்தார்விரலி) நாங்கள் சொன்னதெல்லாம் உன் நெஞ்சில் படாதொழிகிறது உன் செருக்கிறே. க்ருஷ்ணனை ஒருகையாலும் பந்தை ஒருகையாலும்தானும் அணைத்துக்கொண்டு கிடக்கிறது லீலோபகரணங்களை உறங்கும் போதும் கைவிடாதபடியாய்த்து மெளத்ஸ்யமிருக்கிறபடி. இவளுக்கு போகோபகரணம் க்ருஷ்ணன்; பந்து லீலோபகரணம். அவன் செண்டையொருகையாலும் இவளையொருகையாலும் அணைத்துக்கொண்டு கிடக்குமாபோலே; அவனுக்கு லீலாயஷ்டிபோலே இவளுக்குப் பந்து; ஒருகையிலே விபூதி, விபூதிமான் ஒருகையிலே; நாரம் ஒருகையிலே, அயநம் ஒருகையிலே; ஸோஷி ஒருகையிலே, ஸோஷம் ஒருகையிலே; போக்யம் ஒருகையிலே, போகஸ்தானம் ஒருகையிலே. (பந்தார்விரலி) நாங்களும் அசேதநமானேமாகில் பந்தோபாதி எங்களையும் பேண உன்கைக்குள்ளே கிடக்கலாய்த்தே. நீயுமவனுங் கூடவிருந்த சேர்த்தியிலே நாங்கள் கிட்டி, எங்கள் கையிலிருக்க வேண்டாவோ பந்து? எங்கள் கையிலும் பந்து தேங்கும்படி பண்ணி பந்து பிடிக்க வேண்டாவோ உனக்கு? உனக்கு, சேர்த்தியாலே பந்து கையில் பொருந்திற்று; எங்களுக்குத் தழும்புங்கூட மறைந்து போயிற்று. 2. ''ஜ்யாகிணகர்க்கஶ:'' என்று அவனுக்கு வில்பிடித்த தழும்புபோலே, இவர்களுக்குப் பந்துபிடித்த தழும்பு. 'செருக்காலே உங்களை நினைத்திலேனகச் சொல்லாநின்றிகோள். நீங்கள்தான் வந்த கார்யம் ஏது? என்செய்ய நினைக்கிறது?' என்ன; — (உன்மைத்துனன் பேர்பாட) நீயும் அவனும் மைத்துனமை கொண்டாடி ஒருவர்க்கொருவர் உத்தரஞ்சொல்லி ஒத்துநில்லாமே, உன்பக்ஷத்திலே நின்று உனக்காக அவனை ஒத்தனசொல்ல, நீஒன்றுக்கு ஒன்பது சொல்லும்போது நாங்கள் அவனுடைய தோல்வியும் உன்னுடைய வெற்றியுந் தோற்ற உனக்கு வேண்டுவனவெல்லாஞ்சொல்லி உபகரிக்க வந்தோம்.

A திருவாய் 9-5-8. B நாச்-திரு 5-6. C நாச்-திரு-5-10.

இருவரும் ஒன்றுய்ச் செல்லுமன்றும் பிரிந்தவன்றும் தாய் கூற்றிலேயிறே ப்ரஜைகள் நிற்பது. 1. ''அஸ்மிந் மயா ஸார்த்தம்'' என்று பெருமாள் தோல்வியைப் பிராட்டி இளையபெருமாளுக்கு அருளிச்செய்ய, அவர் பிராட்டி பக்ஷத்திலே நின்றுற்போலே. (உன்மைத்துனன்) த்வயத்தில் ப்ரதமபதத்திற்படியே சொல்லுகிறர்கள். (பேர்பாட) A 'நாமம் பலவுமுடை நாரணநம்பி'யிறே ''இன்னளடியான், இன்னளடியான்'' என்று படைத்தபேருக்கு ஒரு அவதியில் A [நாரணநம்பீ] நீர் ஊர்ப்பொதுவாம்படி ஸர்வாதிகரன்றே. A [நம்பீ] 'உனக்கு நாங்கள் வேணுமோ? எங்களையொழியவே பூர்ணரன்றே?' என்று இப்படி அவனுக்குள்ளன சொல்லிக்கொடுக்க, 'ஆகில் க்ருஷ்ணை திற' என்றுள்; 'உன்னுடையார்க்கு நானே திறப்பேன்' என்றன்; 'நீங்கள் வருவதிகோளென்று யந்த்ரத்தாலே திறக்கலாம்படி பண்ணிவைத்தேன்; திறந்துகொண்டு புகுருங்கோள்' என்றுள்;

'எங்களாலே பெறவிருக்குமவர்களோ நாங்கள்? உன்னுலே பெறவிருக்குமவர்களன்றே, உன்கை பார்த்திருக்கிறவர்களன்றே' என்கிறர்கள்.—(செந்தாமரைக்கையால்) 2. '' மாமேகம்'' என்னும் கைபார்த்திருப்பவர்களோ நாங்கள்? 3 ''பூவேயம் ஶரணம் ஹி வ:'' என்னும் கைபார்த்திருக்கிறவர்களன்றே நாங்கள். நீங்கள் பண்ணின பாபத்துக்கு அஞ்ச வேண்டாவென்கிறது பெருமாளுடைய ''அஞ்சேல்'' என்ற திருக்கை; ஈஶ்வரஸ்வாதந்த்ரியத்துக்கு அஞ்சவேண்டாவென்கிறது பெரியபிராட்டியார் வைத்தஞ்சலென்ற கை. அவனுமாசைப்படும் கையிறே. B ''கைமேலென்கைவைத்து'' என்று C 'அணிமிகு தாமரைக்கை'க்குமேலேயிருக்கும் கை. (செந்தாமரைக்கையால்) பந்துபிடித்துச் சிவந்தகை. இவர்கள் உறங்கியிருக்க வகையோசை செவிப்படவொண்ணுதென்று வகையை ஏறக்கடுக்கித் திறக்கப்புக்கால்;— சீரார்வகை யொலிப்ப) மேகம் முழங்கி வர்ஷிக்குமாபோலே (சீரார்வகை) கலியர் சோற்றை வர்ணிக்குமாபோலே, வகையைக்கொண்டாடுகிறர்கள். வகைக்குச் சீர்மையாவது — கையில் நின்றும் கழலாதொழிகை. விஶ்லேஷவ்யஸநம் அநுபவியாத வகை. D ''சங்குதங்குமுன்கை'' E ''ஒண்டொடியாள் திருமகள்'' என்னக்கடவதிறே. F 'இருகையில் சங்கிவைநில்லா'விறே— G 'கழல் வகையே யாக்கினர்'' என்று வெறுக்கிறவர்களிறேயிவர்கள். ''சூடகமே தோள்வகையே'' (27) என்று இவர்கள் ப்ரார்த்திதபடியே அவர்கள் பூட்டினலிறே இவர்களுக்கு வகையுள்ளது. (ஒலிப்ப) க்ருஷ்ணனும் ஓசையிலே உணர்ந்து, நாங்களும் இத்வநி கேட்டு வாழும்படி ஆகவேணும்.

க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதமாகவொண்ணுதென்று கிடந்தவிடத்தே கிடந்து திறக்கப்புக்கால்; (வந்து திறவாய்) 'எங்களுக்காக நாலடிவந்தாய்' என்னும் தரம் நாங்கள் பெறும்படி வந்து திறக்கவேணும். நாலடிபோய் வந்தாகிலும் திறக்கவேணும். அவனும் நாங்களும் உன் நடையழகு கண்டு வாழும்படி

A பெரியதிரு 10-8-4. B நாச்-திரு 6-9. C திருவாய் 10-3-5
D திருச்சந்த 57. E திருவாய் 4-9-10. F திருநெடு 24. G நாச்-திரு11-2

வரவேணும். (மகிழ்ந்து) பெண்கள் ஆர்த்தைகளாய் வந்தார்களென்று ஸாஸ்த்ரார்த்தம் கொண்டாடவொண்ணாது, உகந்துவந்து திறக்கவேணும்.——(மகிழ்ந்து) "மார்கழி நீராட" (4) என்று நாங்கள் நோற்ற நோன்புக்கு உன்னுடைய மகிழ்ச்சி காண்கையன்றே. யதேஷ்டபாஸநம் படிலமாக வேண்டாவோ?

(மகிழ்ந்து) தர்மத்துக்குத் திறக்கவொண்ணாது, பேறு உன்னதாகவேணும். அவன்பக்கலிலுங் காட்டில் அவனுடையார் பக்கல் நீ இருக்குமிருப்பு உன்னுடைய மூக்ஷவிகாஸங்களிலே தோற்றும்படி ஆகவேணும். (வந்துதிறவாய்) கண்ணுக்கு இரையிடவேணும். (வாயொலிப்ப) செவியின் பட்டினி தீர்க்கவேணும். (பேர்பாட) நாக்குப்பட்டினி ஒழியவேணும். (செந்தாமரைக்கையால்) ஸ்பர்ஶஸுகம் வயிறு நின்றாவேணும்.——(கந்தம்கமழும்குழலீ) க்ராணேந்த்ரியத்துக்கு இரையிடவேணும். (மகிழ்ந்து) இப்படி ஸர்வேந்த்ரியங்களுக்கும் விடாய் தீர்ந்தால் மாநஸமான உகப்பு உன்னதாக வேணும். எம்பெருமானார் விரோஷித்து உகந்திருக்கும்பாட்டு இப்பாட்டு. 18

ஈராயிரப்படி — பதினெட்டாம் பாட்டு

அவ:— பதினெட்டாம் பாட்டு. இனிமேல் மூன்று பாட்டாலே நப்பின்னைப் பிராட்டியை எழுப்பி, அவள் வழியாலே எம்பெருமானை எழுப்புகிறது. பிராட்டியையொழிந்தால் பலஸித்தியில்லையோவென்னில்; இல்லை. எங்ஙனே? என்னில்: இளையபெருமாள் பிராட்டி முன்னிலையாகப் பெருமாளைப்பற்றினார். அபராதத்தினுடைய எல்லையிலே நின்றாலும், இவள் ஸன்னிதியாலே காகம் ப்ரபந்நர் பெறும் பேற்றைப் பெற்றது. திருவடி பிராட்டி கடாக்ஷம் பெற்ற பின்பு 1. "ஸீதாமாஶ்ரித்ய தேஜஸ்வீ" ஆனதுமன்றிக்கே ராமதாஸனானான். 2. 'ஏஷ ஸர்வஸ்வபூத:". எம்பெருமானாரும் கூத்தியத்திலுமப்படியே. ஆகையாலே இவர்களும் ஒரு பாட்டாலே அவள்தனக்கு அடிமைபுக்கு, பின்னை ஒரு பாட்டாலே உபாயத்துக்கு உடலாக அவனைப் பற்றி, பின்னை ஒரு பாட்டாலே உபேயத்துக்கு உடலாக அவளையும் அவனையும் பற்றுகிறார்கள்.

வ்யா:— (உந்துமதகளிற்றன்) உந்துகை — முறுக்குகை. அதாவது — பொருகிற யானையை நினைவையறிந்து நடத்த வல்லனென்றபடி. மதத்தை உந்து களிறென்றுமாம். களிறுண்டோ இவனுக்கென்னில், ஸ்ரீவஸுதேவரும் ஸ்ரீநந்தகோபரும் ஒரு மிடறுயிருக்கையாலே அங்குள்ளதெல்லாமிங்குண்டு. ஆனைகளோடே பொரும்படியான மிடுக்கையுடையவன் என்கை. ஆகையன்றே பிள்ளைகள் போய் ஆனையோடே போருற்றது. 1 "அவஶ்யம் பிதுராசாரம்" இறே. 2. "குணைர்தாரதேபம:" இறே. (ஓடாத தோள்வலியன்) எதிரிகளைக் கண்டு பிற்காலியாதே கொல்லவல்ல மிடுக்கு. நம்முடைய தனத்துக்குக் காவலுண்டு என்கிறார்கள்.

3. "ஸ்நுஷா தஶரதஸ்யாஹம் ஶத்ருஸைன்யப்ரதாபிந:" என்று பிராட்டியருளிச் செய்தாற்போலே ஸ்ரீநந்தகோபரைக் கொண்டாடுகிறார்கள். அதுதன்னையே

"நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்" என்கிறார்கள். அவள் பின்னை "திருவாய்ப்பாடியில் பெண்களானவர்கள் நந்தகோபாலன் மருமகளல்லாதாருண்டோ? நமக்கென்" என்று பேசாதே கிடந்தாள். அதுக்காக "நப்பின்னாய்" என்கிறார்கள்.

(கந்தம் கமழும் குழலீ) முன்பு க்ரமமறிகிலோமென்ன; "என்னை நீங்கள் சொல்லுகிறதென்" என்ன; "எங்களையும் க்ருஷ்ணனையும் சேர்த்து விடாய்" என்ன; "இங்கவனுண்டோ?" என்ன "ஆண்நாருநின்றது; வ்யாவ்ருத்த பரிமளமும் ஸமுதாயபரிமளமும் அறியோமோ?" என்ன, அவன் 1. "ஸர்வகந்தः" என்று பூவுக்கு நாற்றம் கொடுக்குமாபோலே அவனுக்கு நாற்றம் கொடுக்கவல்ல குழல் இவளதென்கை. உன் குழலில் பரிமளத்தாலே அவனழுந்திக் கிடக்கும். அனுபவிக்கைக்கு நாங்கள் வேண்டாவோ? (கடைதிறவாய்) கிண்ணக வெள்ளத்தைக் கரைகட்டினாற்போலே, அடைத்துக் கொண்டு திறவாமல் கிடவாதே வெட்டி விடாய் எல்லாரும் அனுபவிக்கும்படி. இவர்கள் அவளுக்கு அவயவமாகையாலும், ஸ்ரக்சந்தனுதிகளோபாதியாகையாலும், போகோபகரணமாகையாலும் இவளோடு அவன் புணர்ச்சிக்கும்போது அவனுக்குத் தன் திருமுலைத் தடத்தாலே நெருக்கின்வோபாதி ப்ரியமாகையாலும் அவளையெழுப்புகிறார்கள். A "உன்தன் திருவுள்ளமிடர் கெடுந்தோறும்" இத்யாதிவத்.

(வந்தெங்கும் கோழியழைத்தனகாண்) "கதவு திறக்கப் போது விடிய வேண்டாவோ?" என்ன, "விடிந்தமைக்கடையாளமன்றே கோழி கூவுகிறது" என்ன, 'ஒரு கோழி கூவப் போது விடியுமோ?' என்ன; 'எங்கும் கோழி கூவாநின்றது' என்ன, 'அது சாமக் கோழி; மற்றடையாளமுண்டோ?' என்ன—(மாதவியித்யாதி) 'இப் பூம்படுக்கையினின்றும் இவை உணரும்போது விடிய வேண்டாவோ?' என்ன; அதுமேலே கூவ நாங்கள் கீழே கூவாநின்றோம். (மாதவிப்பந்தல் மேல்) ஸுகஸ்பர்சத்தாலே படுக்கையிலே உறங்குகிறவை.

(பந்தார்விரலி) க்ருஷ்ணனை ஒருகையாலும், பந்தை ஒருகையாலும் அணைத்துக் கொண்டு கிடக்கை. அவன் செண்டை ஒரு கையாலும் இவளை ஒரு கையாலும் அணைத்துக்கொண்டு கிடக்கும். அப்பந்தானுமாகில் எங்களைக் கைவிட வேண்டாவே. இவளுக்கு அவன் போகோபகரணம்; பந்து லீலோபகரணம். (உன் மைத்துனன் பேர் பாட) நீங்கள் வந்ததென்னென்ன "நீயும் அவனுமொருவர்க்கொருவர் உத்தரம் சொல்லும்போது ஒத்து நில்லாமே உன்பக்ஷத்திலே நின்று உனக்காக அவனை ஒத்தன சொல்லி அவன் தோல்வி கண்டு உன் விஜயம் பாட" 2. "அஸ்மிந்மயா ஸார்த்தம்" என்று இளையபெருமாள் பிராட்டி பக்ஷத்திலே நின்றுற்போலே பேர் பாட. B "நாமம் பலவுமுடை நாரணா நம்பி" என்று அவனுக்குள்ளவையெல்லாம் சொல்லிக்கொடுக்கைக்கு.

(செந்தாமரைக் கையால்) அவனுமாசைப்படும் கை. அவனுகக்கும் C "அணிமிகு தாமரைக்கை". எங்களை 3. "மா முனி" என்னும் கை. "நீங்கள்

A திருவாய் 10-3-9. B பெரியதிரு-10-8-4. C திருவாய் 10-3-5

பண்ணுகிற பாபத்துக்கு நீங்கள் அஞ்சவேண்டா. நானுளேன்" என்கிறது இப்பெருமாளுடைய அஞ்சலென்றகை. 1. "ப₄வேயம் ஶரணம் ஹி வ:" என்னும் கை "ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்துக்கு நீங்கள் அஞ்ச வேண்டா" என்கிறது பெரிய பிராட்டியார் அஞ்சலென்றகை. (சீரார் வளையொலிப்ப வளையையேறக் கடுக்கித்) திறக்கப் புக்காள், அங்ஙனெண்ணுது. அவனும் நாங்களும் நடையழகைக் கண்டு வாழவேணும்.

(மகிழ்ந்து) பேறு உன்னதாகவேணும். த₄ர்மத்துக்குத் திறக்க வொண்ணுது. அடியே பிடித்து 1. "ப₄வேயம் ஶரணம் ஹி வ:" என்னவேணும். எம்பெருமானுர் விரோஷித்து உகந்த பாட்டு இது. 18.

தாலாயிரப்படி — பதினெட்டாம் பாட்டு.

அவ - பதினெட்டாம் பாட்டு:— பெண்பிள்ளைகளெல்லாரையுமெழுப்பி, திருவாசல் முதலிகளையும் நந்த₃கோபருள்ளிட்டாரையுமெழுப்பினர்கள். இந்நேர்த்தியெல்லாம் பிராட்டியையெழுப்பி, அவளேடே கூட அவளையும் முன்னிட்டு எம்பெருமானைப் பற்றுவிட்டால் ப₂லவ்யாப்தமாகமாட்டாமையாலே, இனி மூன்று பாட்டாலே நப்பின்னைப் பிராட்டியை எழுப்பி, அவ்வழியாலே எம்பெருமானைப் பற்றுகிறது. 'பிராட்டியையொழிந்தால் ப₂லவ்யாப்தமாகாதோ?' என்னில், ஆகாது. எங்ஙனே என்னில்; இளையபெருமாளை நில்லுமென்ன, பிராட்டியைப் பற்றி, அவன் ஸங்கல்பத்தையழித்துப் பெருமாளோடு கூடப்போனுர். காகம், அபராத₄த்தினல்லையிலே நின்றுவைத்து இவள் ஸந்நிதி₄யுண்டாகையாலே ப்ரபந்நர் பெறும் பேற்றைப் பெற்றது. ராவணனுக்கு அத்தனை அபராத₄மின்றியிருக்க, பிராட்டி ஸந்நிதி₄ இல்லாமையாலே தலையறுப்புண்டு போனுன். பிராட்டி ராவணனைக் குறித்து அருளிச் செய்த ஹிதம் — ஸிம்ஶுபாவ்ருக்ஷத்திலே மறைந்திருந்த திருவடிக்கும் ஸ்ரீவிபீ₄ஷணழ்வானுக்கும், அவன் பரிகரத்துக்குமுடலாய், பிராட்டியை முன்னிட்டுப் பெருமாளைப் பற்றுகைக்கு உடலாயிற்று. எம்பெருமான் அர்ஜுனனை நோக்கி அருளிச்செய்த ஹிதம் நம் ஆழ்வார்கள் கொண்டுபோய் விட்டாற்போலே. திருவடி பிராட்டியைக் காண்பதற்கு முன்பு 2. "வானரோஹம்" என்றுன். பிராட்டியைத் திருவடி தொழுத அனந்தரம் 3. "த₃ாஸோஹம்" என்றுன்.

மற்றும் ப₂லபர்யந்தமான இடங்களெல்லாம் ஆராய்ந்தால் இப்படியேயாயிருக்கும். எம்பெருமானுர் க₃த்₃யத்திலே தமக்கு த்₄வய நிஷ்டை₂ உண்டாகைக்காக முதலிலே பிராட்டியை ஶரணம் புக்கார். இவர்களும் ஒரு பாட்டாலே அவள் தனக்கு அடிமை புக்கு, ஒரு பாட்டாலே உபாயத்துக்கு உடலாக அவனைப் பற்றி, ஒரு பாட்டாலே உபேயத்துக்கு உடலாக அவளையும் அவனையும் பற்றுகிறார்கள். A "மாசதிரிது பெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா" என்னக் கடவதிறே. தன்னுடைய கர்மாத்₃யுபாயங்களாலே எம்பெருமானைப் பெறப்பார்க்கை இளிம்பு. அவற்றைப் பொகட்டு எம்பெருமானுடைய க்ருபையாலே எம்பெருமானைப்

A திருவாய் 2-7-1.

பெறப் புகுகிறது சதிர். அந்த க்ருபைக்கும் அடியான பிராட்டி ஸம்பந்தங்கொண்டு அவனைப் பெறவிருக்கை மாசதிர். A "எனக்கே அருள்கள் செய்ய விதிசூழ்ந்ததால்" என்றார். அதுக்கடியாக B 'மாதவன்' என்றார். 'உபாயத்திலே வந்தவாறே உக்தி மாத்ரமே அமைந்தது. பலத்தில் வந்தவாறே ஸம்பந்த ஸம்பந்திகளும் வாழ்ந்து போயிற்று' என்றார். அவருடைய பெண்பிள்ளையன்றே. முறை தப்பாமல் எம்பெருமானைப் பற்றுகிறாள். எம்பெருமான முறைதப்பிப் பற்றின சூர்ப்பணகை அந்தரப்பட்டாள். பிராட்டியை முறைதப்பிப் பற்றின ராவணன் அந்தரப்பட்டான். இருவரையும் முறையாலே பற்றின ஸ்ரீ விபீஷணாழ்வான் வாழ்ந்துபோனான்.

வ்யா-(உந்து மதகளிற்றன்) மத்தகஜம்போலேயிருந்துள்ள பலத்தையுடையவன். மதஸ்ரீதிதமான களிற்றையுடையவனென்றுமாம். உந்துகை—தள்ளுகையாய் ஊர்ப்படுகை. மிடுக்கையும் மதத்தையும் உந்துக்களிறு என்னவுமாம். 'களிறுண்டோ இவர்க்கு' என்னில், ஸ்ரீவஸுதேவரும் ஸ்ரீநந்தகோபரும் ஒரு மிடறுயிருக்கையாலே அங்குள்ளதுமொன்றுய்ப் பரிமாறும். C "வாரணமாயிரம் சூழவலம்" இத்யாதி. திருவாய்ப்பாடியில் பசுக்களும் ஆனைகளும் ஒக்கத்திரியுமத்தனை. தத்தபுத்ரனுக்கு இரண்டிடத்திலும் கூறுண்டாகக்கடவதன்றே. ஆகையாலேயன்றே பிள்ளைகள் போய் ஆனைகளோடே போருற்றது. 1. "குணைர்தஸுரதேபம:" என்று எல்லாவற்றுக்கும் அவரை ஒப்பாகச் சொல்ல வேண்டுகை. (ஓடாத தோள்வலியன்) ப்ரதிபக்ஷம் காணப்பணைக்கும் தோள்வலியையுடையவன். 2. "யுத்தே சாப்யபலாயநம்" என்கிறபடியே எதிரிகளைக் கண்டு பிற்காலியாதே கொல்லவல்ல மிடுக்கு. இப்போது இவர் மிடுக்குச் சொல்லுகிறது தங்கள் பயம் கெடுகைக்காக. கம்ஸனுக்குக் குடிமக்களாயிருந்தே அவனுக்கு அஞ்சார்கள். பசு மேய்க்கிற கோலாலே தகர்க்கிலும் தகர்த்து விடுவார்கள். D "அங்கோராய்க்குலம்" என்று அஞ்சினன் புகலிடம். ஸ்ரீமதுரையை நினைத்து அஞ்சினார்க்கு அச்சம் கெடுக்குமூர். (தோள்வலியன்) 3, "ந பிபேதி குதஶ்சந" என்று நம்முடைய நீதியை நினைத்தால் எம்பெருமான் தோளை நினைத்து பயம் கெடுமாபோலே, க்ருஷ்ணனுடைய தீம்புகளை நினைத்தால் அவருடைய தோளை நினைத்து பயம் கெடலாயிருக்கை. நம்முடைய தனத்துக்குக் காவலுண்டென்கிறார்கள்.

(நந்தகோபாலன் மருமகளே) 4. "ஸ்நுஷா தஸுரதஸ்யாஹம் மத்ருஸைந்ய ப்ரதாபிந:" என்று பிராட்டி அருளிச்செய்தாற்போலே 'ஸ்ரீ கும்பர்மகள்' என்னுமதிலும் மாமனுரையிட்டுச் சொல்லுகை அவளுக்கும் ப்ரியமாயிருக்கையாலே மருமகளென்று சொல்லுகிறார்கள். இங்கே மைத்துனமையாடி வளர்ந்து வாழ்க்கைப்படுகையாலே, ஸ்ரீநந்தகோபர் ஸம்பந்தமல்லது இன்னுன் மகளென்றுல் அறியார்கள். இப்படி சொன்னவாறே "திருவாய்ப்பாடியில் கம்புக்கற்றையுமகப்பட ஸ்ரீநந்தகோபர் மருமகளல்லாதாருண்டோ? நமக்கென்?" என்று பேசாதேகிடந்தாள்—(நப்பின்னை) என்று விமோஹிக்கிறார்கள்.

(கந்தங்கமழும் குழலீ) முன்பு க்ரமமறியாதே அவனையெழுப்பினமை தாழ்க்கைக்கடி என்று முறையாலே எழுப்புகிறார்கள். "என்னை நீங்கள் சொல்லுகிறதென்?"

A திருவாய் 2-7-6, B திருவாய் 2-7-3, C நாச்-திரு 6-1, D திருவாய் 6-4-5,

என்ன, 'எங்களையும் க்ருஷ்ணனையும் கூட்டிவிடாய்' என்ன, 'இங்கு அவன் உண்டோ' என்ன, 'பூநாரூநின்றது; வ்யாவ்ருத்த பரிமளமும் ஸமுதா₃ய பரிமளமும் அறியோமோ?' என்ன, அவன் 1. "ஸர்வக₃ந்த₄ஸ் ஸர்வரஸ:"என்று பூவுக்கு நாற்றம் கொடுக்குமாபோலே அவனுக்கு நாற்றங் கொடுக்கவல்ல குழல் இவளதென்கை. உன் பரிமளபோக₃த்திலே அவன் அழுந்திக் கிடக்கும். அநுப₄விக்கைக்கு நாங்கள் வேண்டாவோ? (கடை திறவாய்) கிண்ணக வெள்ளத்தைக் கரைகட்டினாற்போலே அடைத்துக் கொண்டு கிடவாதே எல்லாரும் அநுபவிக்கும்படி வெட்டிவிடாய். இவர்கள் அவளுக்கு அவயவத்தோபாதியாகையாலும், ஸ்ரக்சந்த₃நாதி₃களோபாதியாகையாலும். போ₄கோப கரணமாகையாலும், அவர்களோடே பு₄ஜிக்கும்போது தன் திருமுலைத் தடத்தாலே நெருக்கினவோபாதி அவளுக்கு ப்ரியமாயிருக்கையாலும் அவளை எழுப்புகிறார்கள்.

உன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்க வின்புறுதும்" என்னக் கடவதிறே.

"மத்₄யராத்ரத்திலே வந்து எழுப்புகிறதென்? போதுவிடியவேண்டாவோ?" என்ன 'போதுவிடிந்தது' என்ன, 'விடிந்தமைக்கு அடையாளம் சொல்லுங்கோள்' என்ன. 'கோழி கூவா நின்றது' என்ன, 'அது சாமக்கோழிகாண்' என்றாள். 'என்ன வொண்ணாது (வந்தெங்கும் கோழியழைத்தனகாண்)' என்கிறார்கள். 'உணர்ந்தவையெல்லாம் கூடக் கூப்பிட. பின்னையுறங்கப் புகும்; அது அடையாளமாகமாட்டாது. வேறடையாள முண்டாகில் சொல்லுங்கோள்' என்று பேசாதேகிடந்தாள். (மாதவிப் பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) இப் பூம்படுக்கையில் நின்றும் இவையுணரும் போது விடிந்ததாகவேண்டாவோ? 'உன்னுடைய ஸ்பர்ஶமும் நோக்கும் தா₄ரகமா பிருக்கிற குயில்கள், விடிந்தபின்பும் உன்னைக்காணப் பெறுமையாலே நாக்கொட்டிப் பலகால் கூப்பிட்டு நின்றனகாண்' என்கிறார்கள். அவையும் மேலே கூவ நாங்கள் கீழே கூவாநின்றோம். (மாதவிப்பந்தல்மேல்) ஸுக₃ ஸ்பர்ஶத்தாலே 2. "நோபஜநம் ஸ்மரந்" என்கிற படுக்கையிலே உறங்குகிறவை.

(பந்தார் விரலி) பந்துமக்கையும் பொருந்தினபடி. க்ருஷ்ணனை ஒருகையாலும் பந்தை ஒருகையாலும் அணைத்துக்கொண்டு கிடக்க, சென்னடை ஒருகையாலும் அவனை ஒருகையாலும் அணைத்துக்கொண்டு கிடக்கும். 'அந்தப்பந்து நாமாகில் எங்களைக் கைவிடவேண்டா' என்கிறார்கள். இவன் இவளுக்கு போ₄கோ₄பகரணம். பந்து - லீலோபகரணம். ஒருகையிலே நாரமாயிற்று. ஒருகையிலே அயனமாயிறறு. ஒருகையிலே விபூ₄தியாயிற்று. ஒருகையிலே விபூ₄திமானுயிற்று. இப்போது பந்துப்ரஸங்கமென்? என்ன. 'க்ருஷ்ணனேடே பந்தடித்து, அவனைத்தோற்பித்த கர்வமோ வாய்திறவாதொழிகிறது' என்னுமத்தாலே. 'திறந்தால் நீங்கள் செய்யக்கடவதென்?' என்ன; (உன்மைத்துனன் பேர்பாட) 'நீயுமவனும் மைத்துனமை கொண்டாடி ஒன்றுக் கொன்பது சொல்லி இட்டிடு கொள்ளும்போது மத்₄யஸ்த்தராய் நில்லாதே உன்பக்ஷத்திலே நின்று அவன் தோல்விக்குக் கவிபாடக்கடவோம்' என்கிறார்கள். இருவரும் ஒன்றுச்ச செல்லுமன்று செல்லவும், பிரிந்தவன்றும், தாய்பக்ஷத்திலே ப்ரஜைகள் நிற்பது. 3. "அஸ்மிந் மயா ஸார்த்த₄ம்" என்கிறபடியே இளைய பெருமாள் பிராட்டி பக்ஷத்திலே நின்றுற்போலே. (பேர்பாட) B "நாமம்பலவுமுடை நாரணநம்பி" என்று அவனுக்குள்ளனவெல்லாம் சொல்லிக்கொடுக்கைக்கு.

A திருவாய் 10-3-9. B பெரியதிரு 10-8-4.

(செந்தாமரைக்கையால்) அவனும் ஆசைப்படும் கை. அவனுடையது A தாமரைக் கையிறே. 1. "ததை₃ள ப₃ஹு". எங்களை 2. "மாஶுச:" என்னும் கை. 3. "ப₄வேயம் ஶரணம் ஹி வ:" என்னும் கை. 'நீங்கள் பண்ணுகிற பாபங்களுக்கு நீங்களஞ்ச வேண்டா; நானுளன்' என்கிறது பெருமாளுடைய அஞ்சலென்ற கை. 'ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்துக்கு நீங்களஞ்சவேண்டா' என்கிறது, பெரியபிராட்டியார் அஞ்ச லென்ற கை. (சீரார்வளையொலிப்ப) வளையையேறக்கடுக்கித் திறக்கப்புக்காள்; 'அங்ஙனெண்ணுது. நாங்களும் அவனும் த்₄வநிகேட்டு வாழவேணும்'. B "சங்கு தங்கு முன்கை" இவளது; C "இருகையில் சங்கிவைநில்லா"விறே இவர்களுக்கு. கலியர் சோற்றை வர்ணிக்குமாபோலே வர்ணிக்கிறார்கள். "சூடகமே தோள் வளையே" (27) என்று அவர்கள் பூட்டினவிறே இவர்களுக்குள்ளது. எம்பெருமானர் விரோஷித்துகந்த பாட்டு.

(வந்து திறவாய்) யந்த்ரத்தாலே கண்வளர்ந்தருளினபடியே கிடந்து திறக்கப் புக்காள்; அதுவொண்ணுது. அவனும் நாங்களும் நடையழகு கண்டு வாழும்படியாக வேணும். (மகிழ்ந்து) பேறு உன்னதாகவேணும். த₄ர்மத்துக்குத் திறக்கவொண்ணுது. வழியே பிடித்து 3. "ப₄வேயம் ஶரணம் ஹி வ:" என்னவேணும். 18.

ஸ்வாபதே₃ஶ வ்யாக்₂யாநம் — பதினெட்டாம் பாட்டு

அவ:— பதினெட்டாம் பாட்டு. (உந்து இத்யாதி₃) இப்பாட்டில் ஆசார்யன் முன்னாக நம்பிமூத்தபிரானை முன்னிட்டு எழுப்பினவிடத்திலும் எழுந்திராமை யாலே, அவனை எழுப்புகைக்காகப் புருஷகாரபூ₄தையான நப்பின்னைப் பிராட்டியை எழுப்புகிறார்கள்.

வ்யா:— (உந்துமத களிற்றன்) உந்மஸ்தகமான அஹங்காரத்தை வெல்லும் ப₃லத்தையுடையவனுய். (ஓடாத தோள்வலியன்) ஜகு₃த்₃வில க்ஷணமான ஜ்ஞாநப₃லத்தையுடையவனுய்; D "ஞானக்கை" என்னக் கடவதிறே. அஹங்காரத்துக்குப் பிற்காலியாத ஜ்ஞாந ப₃லத்தையுடையவ னென்றுமாம். (நந்தகோபாலன்) ஆநந்த₃நிர்ப₄ரனுய், ஆஶ்ரிதரக்ஷகனான ஆசார்யனுடைய. (மருமகளே) ஆசார்யனுக்கு எம்பெருமான் புத்ரவத்₃ வீதே₄யனுகையாலே, பிராட்டி மருமகளாகக் குறையில்லையிறே. (நப்பின்னாய்) திருநாமம். (கந்தங்கமழுங்குழலீ) 4. "ஸர்வக₃ந்த₄:" என்னுமவனுக்கும் வாஸனையைக் கொடாநிற்கிற ப₄க₃வத்₃விஷயவ்யாமோஹத்தை உடையவளே! இத்தால் — ஸ்வவ்யாமோஹத்தாலே ஈஶ்வரனை வஶீகரித்து, ஆஶ்ரிதரக்ஷணத் திலே மூட்டி, அவனை எல்லாரும் கொண்டாடும்படி பண்ணுகிறானென்னுமிடம் தோற்றுகிறது. (கடைதிறவாய்) அவனுடைய பரிமளமும் உன்னுடைய பரிமளமும் காட்டிலெரித்த நிலாவாகாமே நாங்கள் அநுப₄விக்கும்படி, தத்₃விரோதி₄யான எங்களுடைய அஜ்ஞாநத்தை நீக்காய்.

அஜ்ஞாநம் போகைக்கு ஸத்வோத்தரமான காலமாயிற்றே?' என்ன — 'ஆயிற்று' என்ன; 'அதுக்கு அடையாளம் என்?' என்ன; — (வந்து எங்கும்

A திருவா:ய் 7-6-1. B திருச்சந்த 57. C திருநெடு 24. D திருவாய் 2-9-2.

பத்தொன்பதாம் பாட்டு

குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினுய் நீயுன் மணாளனை
எத்தனை போதுந் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

ஸ்வா- கோழியழைத்தனகாண்) 'ஸத்வோத்தரமான காலமானவாறே ஸர்வதோதி₃க்க மாக ப₄க₃வதர் எழுந்திருந்து ப₄க₃வத்கைங்கர்யார்த்த₂மாக ஒருத்தரையொருத்தர் எழுப்பாநின்றார்கள்' என்ன; 'அவர்களை உறங்கவொட்டாமைக்கு நீங்களுண்டே' என்ன; — (மாதவிப்பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்) வேதா₃ந்தங்களிலே வேதா₃ந்தார்த்த₂ங்களை அநுப₄வியாநிற்கும் நாத₂யாமுநர்போலும் பரமப₄க₃வதஸமூஹங்கள் ஸத்வம் தலையெடுத்த பின்பும் உன்னைக் காணுமையாலே நாக்கு ஒட்டினமை தோற்றப் பலகால் கூவாநின்றனகாண்.

இப்படி எழுப்பினவிடத்திலும் எழுந்திராமையாலே, ஜாலகரந்த்₃ரத்தாலே பார்த்து 'பந்தார்விரலி' என்கிறார்கள். 'ஸத்த்வம் தலையெடுக்குந்தனையும் சேதநரைக்கொண்டு லீலாரஸம் அநுப₄வித்து, ஸத்த்வம் தலையெடுத்தவாறே ஒருகையாலே லீலோபகரணபூ₄தரான சேதநவர்க்க₃த்தையும், ஒருகையாலே இத்தைக் கொண்டு தன்னை லீலாரஸம் அநுப₄விப்பித்த ஈச்வரனையும் அணைத்துக்கொண்டு கிடப்பதே! இதென்ன ஐச்வர்யம்!' என்கிறார்கள். 'இப்போது எழுந்திருந்து செய்யவேண்டுவதென்?' என்ன; — (உன் மைத்துனன் பேர் பாட) நீயும் அவனும் பந்தடிக்கையில் உனக்கு அவன் தோற்ற தோல்விக்கு அவன் திருநாமங்களைப் பாட. 'ஆகில், கதவைத்தள்ளி உள்ளே புகுங்கோள்' என்ன; அது கூடாது; — (செந்தாமரைக்கையால்) ஸௌந்த₃ர்ய ஸௌகுமார்ய ஸௌக₃ந்த்₄யங்களாலே தாமரைபோன்ற திருக்கையாலே. இவ்விடத்தில் கையாவது — ஜ்ஞாநம்; A "ஞானக்கை தா" என்றாரிறே ஆழ்வார். ஜ்ஞாநத்துக்கு ஸௌந்த₃ர்ய ஸௌகுமார்ய ஸௌக₃ந்த்₄யங்களாவன: — இதர விஷய நிவ்ருத்தி — ஸௌந்த₃ர்யம்; ஸ்வபோ₄கத்ருத்வநிவ்ருத்தி — ஸௌகுமார்யம்; நிரதிசய ப்ரேமாத்மகத்வம் — ஸௌக₃ந்த்₄யம்; இப்படியிருந்துள்ள ஜ்ஞாநத்தாலே. (சீரார்வளையொலிப்ப) நிரந்தர ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄த்தாலே பூர்ணங்களாய் ப₄க₃வத்ஸம்ப₃ந்தி₄ ஸமாசகங்களான ரஹஸ்யத்ரயார்த்த₂ங்கள் ப்ரகாசிக்க. (வந்துதிறவாய்) நம்முடைய ப்ரயத்நத்தை அபேக்ஷியாமல் நீயே வந்து ஸ்வரூபோபாய புருஷார்த்த₂ விரோதி₄ விஷயமான தத்தத்₃ஜ்ஞாநத்தைப் போக்காய். (மகிழ்ந்து) புருஷார்த்த₂ம் உன்னதாகவேணும். 18.

A திருவாய் 2-9-2.

பதவுரை:— குத்துவிளக்கு — நிலைவிளக்கானது, எரிய — எரியாநிற்க, கோடு கால் கட்டில் மேல் — யானைத் தந்தங்களால் செய்த கால்களையுடைய கட்டிலிலே, மெத்தென்ற — மெத்தென்றிருக்கும், பஞ்ச சயனத்தின் மேல் ஏறி — பஞ்சினாலான படுக்கையின் மீது ஏறி, கொத்து அலர் பூ குழல் — கொத்துக் கொத்தாக மலரும் பூக்களை அணிந்த குழலையுடைய, நப்பின்னை — நப்பின்னைப் பிராட்டியுடைய, கொங்கை மேல் — திருமுலைத்தடங்களின் மேலே, வைத்துக் கிடந்த மலர் மார்பா — (தன்னுடைய) அகன்ற மார்பை வைத்துக் கிடப்பவனே! வாய் திறவாய் — வாய் திறந்து வார்த்தை சொல்லுவாயாக; ஐய தடம் கண்ணினாய் — மையிட்டலங்கரித்த பரந்த கண்களை உடையவளே! நீ — நீ, உன் மணாளனை — உனக்குக் கணவனான கண்ணனை, எத்தனை போதும் — ஒரு கணநேரமும், துயில் எழ — திருப்பள்ளியெழ, ஒட்டாய் காண் — சம்மதிக்கிறாயல்லை; எத்தனை யேலும் — சிறிதுபோதும், பிரிவு ஆற்றகில்லாய் ஆல் — (அவனை விட்டுப்) பிரிந்திருப்பதைப் பொறுக்கிறாயல்லை அன்றே; தத்துவம் அன்று — (இது) உன் ஸ்வரூபத்துக்கும் தகுந்ததன்று; தகவு அன்று—உன் ஸ்வபாவத்துக்கும் தகுந்ததன்று. 19.

மூவாயிரப்படி — பத்தொன்பதாம் பாட்டு

அவ:— பத்தொன்பதாம்பாட்டு. a இவள் திறக்கப்புக, a_2 'நம்முடையார்க்கு இவள் திறக்க முற்பட்டாளாகவொண்ணாது' என்று இவளைத் a_3 திறக்கவொட்டாதே கட்டிக்கொடு கிடக்கிற க்ருஷ்ணனை எழுப்பி, அங்கு மறுமாற்றங்கொள்ளாமையாலே மீளவும் அவனை உணர்த்துகைக்காக அவளை எழுப்புகிறார்கள். b இத்தால்—ஆஸ்ரிதர்க்கு மாறிமாறிப் பரிகைக்கு A "என்னடியார் அதுசெய்யார்" என்னுமவனும், 1. "நகஸ்சிந் நாபராத்யதி" என்னுமவளும் இருவரும் உண்டென்கை.

பெ. அ. பத்தொன்பதாம் பாட்டு. (குத்துவிளக்கு இத்யாதி) a "நப்பின்னைகொங்கை மேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா" என்றதைக் கடாக்ஷித்து, அவளைக் கட்டிக்கொண்டு கிடக்கிற க்ருஷ்ணனை எழுப்புகிறார்களென்று திருவுள்ளம் பற்றி, கீழ்ப்பாட்டில் நப்பின்னை கதவுதிறக்கைக்கு உத்யோகித்தமை தோற்றியிருக்க, அதுக்கு விரோதமாகக் கட்டிக்கொண்டிருக்கக்கூடுமோ? என்னும் ஸங்கையைப் பரிஹரியாநின்றுகொண்டு, அவளோட்டை ஸுகத்தாலே மயங்கிக் கதவு திறவாமல் உறங்குகையாலே அதுக்காக நப்பின்னையை எழுப்புகிறார்களென்று ஸங்கதியிடுகிறார் (இவள் இத்யாதி) a_2 'நம்முடையார்க்கு' என்றது — இவனைப் புருஷகாரமாகப்பற்றினவர்கள் நம்மையே பற்றினவர்களென்னும் நினைவாலே என்றபடி. a_3 'திறக்கவொட்டாதே' என்றது — 'தானே முற்பட்டுத் திறக்கவேணும்' என்னும் நினைவாலே. b 'இத்தால்' என்றது — கீழ்ப்பாட்டில் நப்பின்னை திறக்க உத்யோகித்ததாலும், இப்பாட்டில் தானே திறக்க க்ருஷ்ணன் உத்யோகித்ததாய்ச் சொன்னதாலும் என்றபடி.

சி. அ. பத்தொன்பதாம் பாட்டு. (குத்து விளக்கு) a "நப்பின்னை கொங்கை மேல் வைத்துக்கிடந்த" என்றதைக் கடாக்ஷித்து அவதாரிகை. d பத்நீத்வத்தைப் பற்ற

A பெரியாழ் திரு 4-9-2.

வ்யா:— (குத்துவிளக்கெரிய இத்யாதி₃) c 'அர்த்தி₂கள் வாசலிலே நிற்க ஓர்நுப₄வமுண்டோ? 'என்கிறார்கள் d † 'எங்களைப்போலே d_3 ஊராரிசைவும் வேண்டாதே, "கீழ்வானம் வெள்ளென்றது" (8) என்கிற ப₄யமுமின்றிக்கே, A "நள்ளிருட்கனைன்னையுய்த்திடுமின்" என்று இருட்டுத்தேடவும் வேண்டாதே, d_3 பகலே இரவாக்கிக்கொண்டு விளக்கிலே d_4 க்ருஷ்ணன்முக₂த்தைப் பார்த்துக்கொண்டு படுக்கையிலே கிடக்கப்பெறுவதே! இதென்ன ஐஶ்வர்யம்!' என்கிறார்கள். e 1. "அதிவராம: ஸுஶுபே₄" என்று, இவள் அவனுக்கும் ப்ரகாஶகமான விளக்காயிருக்க, ஓர் நிலைவிளக்கு e₂ உண்டாவதே! f (கோட்டுக்கால் கட்டில்மேல்) g குவலயாபீட₃த்தின் கொம்பைப் பறித்துக்கொண்டுவந்து செய்த கட்டிலிறே. h வீரபத்நியாகையாலே இவளுக்கு இதிலல்லது கண் உறங்காது. i எங்களைப்போலே ஸ்ரீப்₃ருந்தா₃வநம் தேடிப் போகவேண்டாதே உள்ளகத்துக்குள்ளே கூச்சமறக் கிடக்கப்பெறுவதே! இது என்ன ப₄ாக்₃யம்? j (கட்டில்) k மாணிக்கத்தாலே செய்

பெ. அ. c பாட்டுக்கெல்லாம் நியாயநிஷ்டூ₃ரம் சொல்லுகிறார்களென்று தொகுத்துத் தாத்பர்ய₂த்தை அருளிச்செய்கிறார் (அர்த்தி₂கள் இத்யாதி₃) d "நப்பின்னை கொங்கைமேல்" என்னுமளவுக்கும் ஹார்த்த₃ப₄ாவத்தை அருளிச்செய்கிறார் (எங்களை இத்யாதி₃) d_2 'ஊராரிசைவும் வேண்டாதே' என்றது — நந்த₃ாதி₃களெல்லாருங்கூட இவர்களை நோக்கிக் கொண்டிருக்கும்படி மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலே கண்வளர்ந்தருளுகையாலே அர்த்த₂ஸித்₃த₄ம். d_3 (பகலே இரவாக்கிக்கொண்டு) என்றது — ராத்ரி செய்யும் க்ருத்யத்தை விடிந்தும் செய்கை; அதாவது — விடிந்தும் விளக்குவைத்துக்கொண்டு ஸம்ஶ்லேஷித்திருக்கை. d_4, e நந்தர் மருமக்களாகையால் விளக்கு உண்டாயிருக்கை அர்த்த₂ஸித்₃த₄மாயிருக்கவும், "குத்துவிளக்கெரிய" என்று இவர்கள் சொன்னதுக்கு 'விளக்கிலே க்ருஷ்ணன் முக₂த்தைப் பார்த்துக்கொண்டு, அத்தால் வந்த அழகின்மிகுதியை அநுப₄விக்கிறார்களிறே' என்று கீழ் ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து, 'அவளே விளக்காயிருக்க இதுவும் வேணுமோ' என்னும் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (அதிவ இத்யாதி₃) e_2 (உண்டாவதே) என்றது — உண்டாகவேணுமோ என்றபடி. f, g, h 'கட்டில்கால் குவலயாபீட₃த்தின் கொம்பேயாகவேணுமோ' என்ன; அருளிச்செய்கிறார் (வீரபத்நி இத்யாதி₃) f, i "கட்டில்மேல்" என்றத்தால் — ஒரு ஶயநக்₃ருஹவிஶேஷம் அர்த்த₂ஸித்₃த₄மாகையாலே, அதுக்கு வ்யாவர்த்யபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எங்களை இத்யாதி₃) j, k நப்பின்னையும் க்ருஷ்ணனும் கண்வளர்ந்தருளுகைக்கு யாதா₃ந்தத்தாலே செய்து ஶ்லாக்₄யமாயிருந்ததத்தை "திருப்பள்ளிக்கட்டில்" என்று உபசரித்துச் சொல்ல வேண்டியிருக்க, "கட்டில்" என்று சொல்லக்

சி.அ. (நம்மைப்போலே ஊராரிசைவுமித்யாதி₃) d_3 பகலே இரவாக்குகை — ராத்ரி செய்யும் க்ருத்யத்தை விடிந்தும் விளக்கு வைத்துக்கொண்டு ஸம்ஶ்லேஷிக்கை. அன்றிக்கே, (பகலே இரவாக்கி) என்கிறதை அவ்விளக்கு ப்ரகாஶத்தாலே இரவைப் பகலாக்கி என்று அந்வயித்தல். g, h ஸாமான்யேந ஆனைக்கொம்பு என்னுதே (குவலயாபீட₃த்தின் கொம்பை) என்று விஶேஷிக்கிறதென்? என்ன அருளிச்செய்கிறார் (வீரபத்நியாகையாலே) என்று. i ஆகக்கீழெல்லாவற்றிலும் பூ₂ர்த்த₃ப₄ாவம் (எங்களைப்போலே) என்று. j, k தூங்கும் மஞ்சமென்றுற்போலே சொல்லாதே. 'கட்டில்' என்கிறதென்? என்ன.

---

† (பா) நம்மைப்போலே

மிலும் "கட்டில்" என்று ஜாதிப்பேச்சு. l (மெத்தென்ற) m நாங்கள் ஆர்த்தை களாய் வந்து கிடக்க, படுக்கையின் m_3 உள் m_3 மானம் புறமானம் கொண்டாடிக் கொண்டு படுக்கைபொருந்துவதே! கண் உறங்குவதே! (பஞ்சசயனத்தின்மேலேறி) பஞ்சலிt_4மான படுக்கையின் மேலேறி. அதாவது—அழகு, குளிர்த்தி, மார்த்த$_3$வம், பரிமளம், த$_4$வள்யம் ஆக இவை. n இவர்களுக்கு A மென்மலர்ப்பள்ளி வெம் பள்ளி யாகிறே இருப்பது. o அஞ்சு உருவிட்டுச்செய்த படுக்கை என்றுமாம்: பஞ் சாலே செய்த படுக்கை என்னவுமாம். p (மேலேறி) q 1. "யாதே$_3$நாத்$_4$யாரோ ஹதி" என்று நாங்கள் மிதித்தேறினுலன்றே நீ படுக்கையிலே ஏறுவதென்கை.

r (கொத்தலர் பூங்குழல் நப்பின்னை) s திருக்குழலில் ஸ்பர்ஶத்தாலே கொத்துக் கொத்தாக அலராநின்றுள்ள பூவையுடைத்தான குழல். t காலம் அலர்த்துமா போலே. அவனுடைய ப்ரணயகலஹத்தாலே அலருகை. u B "வாசஞ்செய்

பெ. அ. கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (மாணிக்கத்தால் இத்யாதி$_3$) ஆண்டாள் கோ$_3$பி$_2$ரவஸ்தை$_2$யை ப்ரபித்து அருளிச்செய்கையாலே, க்ருஷ்ணன் திருப்படுக்கை யானது: அந்த ஜா$_2$த்யநுகு$_3$ண ப$_4$ாஷணம் பண்ணினனென்று கருத்து. l. m "பஞ்சசயனத்தில்" என்றபோதே மார்த்த$_3$வம் அர்த்த$_2$ஸித்$_3$த$_4$மாயிருக்க "மெத்தென்ற" என்றதுக்கு ப$_4$ாவம் அருளிச்செய்கிறார் (நாங்கள் இத்யாதி$_3$) m_3 மானம் — அளவு; ஸ்வப$_4$ாவ மென்றபடி. n இவர்கள் இப்படி விஶேஷித்துச் சொன்னத்தாலே இவர்களார்த்தி தோற்றுகைக்கு உபபத்தி அருளிச்செய்கிறார் (இவர்களுக்கு இத்யாதி$_3$) o 'அஞ்சுரு' என்றது — பஞ்சவர்ணம் என்றபடி. p, q "மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலே— நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த" என்னவே, ஏறியிருக்கை அர்த்த$_2$ஸித்$_3$த$_4$ மாயிருக்கவும், "ஏறி" என்று விஶேஷித்ததுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பாதே$_3$ந இத்யாதி$_3$)

r. s "கொத்தலர்" என்றவிடத்தில் — அலராநின்றுள்ள என்று வர்த்தமாநமாகத் தோன்றுகையாலே, திருக்குழலோட்டை ஸ்பர்ஶமே இதுக்கு ஹேதுவென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (திருக்குழல் இத்யாதி$_3$) t தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (காலம் இத்யாதி$_3$) நப்பின்னை கதவு திறக்கப்புக, க்ருஷ்ணன் "இவள் முற்படலாகாது" என்று கட்டிக்கொண்டு வரும்போதையில் ப்ரணயகலஹத்தாலே அலர்ந்ததென்று இவ்வர்த் யத்துக்குத் தாத்பர்யம். u 'கொத்தாக அலரக்கூடுமோ' என்ன, அருளிச்செய்கிறார் (வாசம் இத்யாதி$_3$) பரிமளத்தையுண்டாக்குகிற குழல், ஸ்ரத்$_3$தை$_4$யையுண்டாக்கும் என்றபடி.

சி. அ. அருளிச்செய்கிறார் (மாணிக்கத்தாலே இத்யாதி$_3$) m_2 (உள்மானம்) இத்யாதி$_3$க்கு, "படுக்கையினுடைய உள்ளிலுண்டான மார்த்த$_3$வத்தைபே$_4$க்$_3$யமாகக் கொண்டாடி என்றபடி. m_3 மானம்-அளவு, பரீக்ஷை என்றபடி. n "ஏறி" என்று வருத்தமாகச் சொல்லுவானென்? என்ன (இவர்களுக்கு இத்யாதி$_3$) o (அஞ்சுரு) என்றது அஞ்சுவர்ணத்தாலே என்றபடி. r "கொத்தலர் பூங்குழல்" என்றதுக்கு இரண்டர்த்த$_2$ம். அதாவது — s குழல் ஸ்பர்ஶத்தாலே அலருகை என்னுதல், t ப்ரணயகலஹத்தாலே அலருகை என்னுதல். அதாவது — 'இவள் எழுந் திருப்பேன்' என்ன, அவன் 'எழுந்திருக்கவொட்டேன்' என்ன, அந்த ஸம்ப்ரமத்திலே அலருகை. u முந்தினதிலே ப்ரமாணம் (வாசம் செய்பூங்குழலாள்) என்று.

A திருவாய் 9-9-4. B திருவாய் 10-10-2.

பூங்குழலாளிறே. (கொங்கைமேல் வைத்துக் கிடந்த மலர்மார்பா) v. கொங்கையைத் தன்மேல் வைத்துக் கிடக்கை; w கொங்கைமேல் தன்னை வைத்துக் கிடந்த என்னவுமாம். x 1. "ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம:" என்றிறே ப்ரணயம் இருப்பது. y 2. "பர்யாயேண ப்ரஸூப்தஶ்ச" என்றும் உண்டிறே; z மலையை அண்டை கொண்டு ஜீவிப்பாரைப் போலே; A "மலராள் தனத்துள்ளான்" என்னக்கடவதிறே. a (மலர்மார்பா) 'திருமுலைத்தடங்களுறுத்துகையாலே அகன்றிருந்துள்ள மார்பு. இவ்விக்ருதியால், 3. "ஸதை₃கரூபரூபாய" என்றதோடு விரோதி₄யாதோ? என்னில்,-விரோதி₄யாது: அது ஹேயகு₃ணங்களில்லை என்கிறது. ஆஶ்ரிதஸம்ஶ்லேஷத்தில் அவிகாரித்வம் அவத்₃யமித்தனையிறே. b (வாய் திறவாய்) c உன் க₃ம்பீ₄ரமான மிடற்றோசையாலே ஒரு வார்த்தை சொல்லாய். d 4. "ஆர்த்தோ வா பதி₃வா த்₃ருப்த:" என்ற உனக்கு உன்னலல்லது செல்லாதே உன்புறப்பாடு பார்த்திருக்கிற எங்களுக்கு ஒரு d₂ வார்த்தையும் அரிதோ? e அவள் புறப்படவொட்டாளாகில் கிடந்தவிடத்தே கிடந்து, 5. "மாஶுச:" என்று ஒரு உக்தி நேருகையும் அரிதோ?

பெ.அ. v, x 'நப்பின்னை கொங்கையை, அவன் பள்ளிகொள்ளும்போது தன்மேலே வைத்துக் கொள்ள ஸம்மதிக்கும்படி எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிறார் (ந ஶாஸ்த்ரம் இத்யாதி₃) w, y இரண்டாம் அர்த்த₂த்தில் ப்ரமாணபூர்வகம் த்₃ருஷ்டாந்தம் காட்டுகிறார் (பர்யாயேண இத்யாதி₃) z கொங்கை மேலே தன்னை வைக்கைக்கு நிமித்தம் ஆத₃ராதிஶயமென்னுமதுக்கு லௌகிகத்₃ருஷ்டாந்தம் காட்டுகிறார் (மலை இத்யாதி₃) b, c "கதவு திறவாய்" என்னுதே, "வாய்திறவாய்" என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உன் இத்யாதி₃) "அநந்யா" என்னும்படி ஏகத்₃ரவ்யம்போலேயிருக்குமவர்களை எழுப்பிக் கதவுதிறக்கச்சொல்லுகை ராவணாதி₃களோபாதியிறே என்று நினைத்து; க₃ம்பீ₄ரமான த்₄வநியைக் கேட்க ஆசைப்படுகிறார்களென்று கருத்து. d "திறவாய்" என்றதை ப்ரார்த்த₂நாபரமாக்கி ஒருயோஜநை அருளிச்செய்து, திறவாமல் போனுவென்று வ்யதிரேகபரமாக்கி உபாலம்ப₄ம் தோற்றத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆர்த்தோவா இத்யாதி₃) 4. "பரேஷாம் ஶரணாக₃த: அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா" என்று - ஶத்ருவிஷயத்தில் ஆர்த்த அநார்த்தவிபா₄க₃மற ரக்ஷிக்கும் உனக்கு ஆர்த்தைகளாயிருக்கும் அபூ₄மிகள் விஷயத்தில் ஒருவார்த்தையும் து₃ர்லபமாக வேணுமோ? என்று கருத்து. e (அவள் புறப்படவொட்டாளாகில்) என்றது — அவள் போ₄க்₃யனான உன்னைப்புறப்படவொட்டாதே போய்த்தாகில் என்றபடி. நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பனுய், அவள் போ₄க்₃யதையிலே குமிழ் நீருண்டிருக்குமவனுக்கு வார்த்தையும் சொல்லக்கூடாதென்று தங்களுக்கு போ₄க்₃யதை இடைச்சுவராகத் தோற்றிற்றாகிலும் அவள் மார்விலிருந்தே ஆர்த்தைகளான எங்களுக்கும் போக நிவ்ருத்திக்கு ஒருவார்த்தை மாத்ரம் சொன்னாலாகாதோ? என்று இவ்வாக்யத்துக்குக் கருத்து.

சி. அ. v, x கொங்கையைத் தன்மேலே வைத்துக் கிடக்கக் கூடுமோ? என்ன அருளிச்செய்கிறார் (ந ஶாஸ்த்ரமித்யாதி₃) ஶேஷஶேஷிபா₄வம் தலைதடுமாறுநிற்கக்கூடும் என்றபடி. z "கொங்கைமேல் தன்னை வைத்துக் கிடந்த" என்ற அர்த்தோக்தியைத் தாத்பர்ய ஸஹிதமாக்குகிறார் (மலையை அண்டை கொண்டு இத்யாதி₃) a மலர் — விஸ்தீர்ணமான. d₂, e வார்த்தையும் அரிதோ" என்றதை விவரிக்கிறார் (அவள் புறப்படவொட்டாளாகில்

---

f (மைத்தடங்கண்ணினுய்) g இவன் மறுமாற்றம் சொல்லப் புக, 'நம்மை யொழியத் தாங்களே எழுப்புவதே!' என்று, கண்ணுலே ''வாய்வாய்'' என்று g_1 வாயை நெரித்தாள். h அழகாலும் பரப்பாலும் கண்ணிலே அகப்பட்டவன் அக்கடலைக் கரைகண்டாலிறே h_2 நம்மைப் பார்ப்பது. i 1. ''நஜீவேயம் க்ஷணமபி'' என்னப்பண்ணும் கண்ணிறே. j ''மையிட்டெழுதோம்'' (2) என்றிருக்கிற எங்களையும் மையிடப்பண்ணினுலன்றே நீ கண்ணுக்கு மையிடுவது; k உன்னுடைய கண்ணிலழகும் பெருமையும் k_2 எங்கள் பேற்றுக்கு உடலென்றிருந்தோம்; அது இழவுக்கு உடலாவதே!

(நீ) அவனைப் பெறுகைக்கு அடியான நீ அவனை விலக்கக் கடவையோ? l (உன்மணுளனை) m 2. ''கோபீஜநவல்லபः'' என்றும், 3. ''லோகபர்த்தாரம்'' என்றும் சொல்லுகிற பொதுவையொழிய உனக்கே ஸ்வம்மாய் நீ புருவம் நெறித்தவிடத்திலே கார்யஞ் செய்யும்படி பவ்யனுயிருக்கும் இருப்பு எங்களுக்கு உடலென்றிருந்தோம்: அங்ஙனன்றிக்கே m_2 இனி உனக்கே ஶேஷமென்றிருக்கிறேமென்கிறார்கள். n (எத்தனைபோதும் துயிலெழவொட்டாய்காண்) o ஒருக்ஷணமும் அவனை எழுந்திருக்கவொட்டுகிறதில்லை. p புணர்ச்சிக்காகப் பிரியவும் பயப்படுவுதி.

பெ.அ. f,g ''நப்பின்னுய்'' என்று ஸம்போதிக்கலாயிருக்க, ''மைத்தடங்கண்ணினுய்'' என்று சொன்னவர்களுடைய உட்கருத்தை அருளிச்செய்கிறார் (இவன் இத்யாதி$_3$) g_2 'நெரித்தாள்' என்ற அநந்தரம் ''ஆகையாலே வாய்திறவாதிருக்கவேணும்'' என்று ஶேஷம், h 'அவள் கண்ணுலே வாய்நெரித்தவாறே அவன் வாய்திறவாதிருக்கவேணுமோ' என்ன, அருளிச்செய்கிறார் (அழகாலும் இத்யாதி$_3$) h_2 'நம்மைப்பார்ப்பது' என்றது — நம்முடைய க்லேஶத்தைப் பார்த்து வார்த்தை சொல்லுவது என்றபடி. i 1. ''நஜீவேயம்'' என்றதுக்கு, 1. ''விநா தாமஸிதேக்ஷணம்'' என்னுமளவும் விவக்ஷிதம். f, j ''மைத்தடங் கண்ணினுய்'' என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (மை இத்யாதி$_3$) i, k பூர்வதாத்பர்யவிவரணம் (உன்னுடைய இத்யாதி$_3$)

l, m ''மணுளனே'' என்ன அமைந்திருக்க, ''உன்'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (கோபீஜநேத்யாதி$_3$) n, o ''எத்தனை'' என்றது — எவ்வளவென்றுய், அல்பகாலமென்று விவக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஒரு க்ஷணமும் இத்யாதி$_3$) p எழுந்திருக்கவொட்டாமைக்கு ஹேதுவை அருளிச்செய்கிறார் (புணர்ச்சிக்கு இத்யாதி$_3$) ஸம்ஸ்லேஷித்திருக்கும்போதே விச்சிதத்ய புநஸ்ஸம்ஸ்லேஷிக்குமதுக்கும் அஞ்சுகையாலே ஒரு க்ஷணமும் எழுந்திருக்கவொட்டாய் என்று தாத்பர்யம்.

கி.அ. இத்யாதி$_3$) g_2 (வாயை நெரித்தாள்) என்றது—வாயை மூடினுள் என்றபடி. f ''மைத்தடங்கண்ணினுய்'' என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். i 1. ''அஸிதேக்ஷணை'' என்கிறபடியே ஸ்வாபாவிகமான கறுப்பைச் சொல்லுதல்; j அன்றிக்கே மையிட்ட கண் என்னுதல். k_2 (எங்கள் பேற்றுக்கு உடலென்றிருந்தோம்) என்றது 'கண்ணழகாலே அவனை வஶீகரித்துப் புருஷீகரிக்கைக்குடலென்றிருந்தோம்' என்றபடி. m_2 (இனி உனக்கு ஶேஷமென்றிருக்கிறேம்) 'க்ருஷ்ணனை உனக்கே ஶேஷமென்றிருக்கிறேம்' என்றபடி. n o ''எத்தனை போதும்'' என்றது அல்பகாலமுமென்றபடி. p (புணர்ச்சிக்காகப் பிரியவும்) என்றது ஸம்ஸ்லேஷாநந்தர வர்த்தகமான விஶ்லேஷத்துக்கும், அணைத்த கையை நெகிழ்க்கவும் என்றபடி.

(எத்தனேயேலும் q பிரிவாற்றகில்லாயால்) r அது உன்குறையோ? அவனே க்ஷணகாலமும் பிரியமாட்டாத உன்னுடைய r₃ பு₃லஹாநியின் குறையன்றே- s A "அகலகில்லேனிறையும்" என்று க்ஷணகால விஶ்லேஷமும் பொறுக்கமாட்டாமையாலே, அவனேட்டை நித்யஸம்யோக₃ம் எங்களுடைய லாப₄த்துக்கு உடலாகையொழிய விபரீதப₂லமாவதே!

t (தத்துவம் அன்று தகவு) u தத்வம் — ஸத்யம். v தகவன்று — த₄ர்மமன்று; எங்களறியாமையில் சொல்லுகிறேமல்லோம்; v₃ மெய்யே த₄ர்மமன்று, w (தகவு—தத்துவமன்று) x 1. "பாபாநாம் வா ஶுப₄ாநாம் வா" என்னும் உனக்கு. 2. "அஹத்வா ராவணம் ஸங்க்₄யே" என்ற அவனில் வாசியில்லை என்றிருக்கிறேம். அத₃வா (தத்துவமன்று) தத்வம் — y ஸ்வரூபம், உன் ஸ்வரூபத்துக்கும் போராது; (தகவன்று) உன்னுடைய y₃ ஸ்வப₄ாவத்துக்கும் போராது; z உன்னுடைய புருஷகாரப₄ாவத்துக்கும் போராது, க்ருபைக்கும் போராது. 19.

பெ.அ. q, r "பிரியாய்" என்னுதே, "பிரிவாற்றகில்லாய்" என்று — பிரிவை ஸஹிக்கமாட்டாயென்கையாலே, அதுக்குச்சேர தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அது இத்யாதி₃) r₂, s 'பு₃லஹாநியென்பரனென்? உங்களுக்காகவன்றே நான் இருக்கிறது' என்று அவளுக்குக் கருத்தாக அருளிச்செய்கிறார் (அகலகில்லேன் இத்யாதி₃)

v₂ 'மெய்யே த₄ர்மமன்று' என்றது — த₄ர்மமன்றென்று சொல்லுகிறது ஸத்யமே என்றபடி. w, x தகவு — க்ருபையானது, தத்துவமன்று — ஸ்வாப₄ாவிகமன்றென்று ஸப்₃த₃ார்த்த₂ம் விவக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பாபாநாம் இத்யாதி₃) நிர்க்₄ருணராகச் சொல்லப்பட்ட பெருமாளுக்கும் க்₄ருணவதியாகச் சொல்லப்பட்ட உனக்கும் வாசியில்லையென்று கருத்து. y, z ஸ்வரூப ஸ்வப₄ாவங்களை அடைவே விவரிக்கிறார் (உன்னுடைய இத்யாதி₃) 19.

சி.அ. t, uதத்துவம்—உண்மை. w, x தகவு—க்ருபை. t.....z "தத்துவமன்றுதகவு" என்றதுக்கு மூன்று பொருள். அதாவது — தத்துவம் என்று ஸத்யமாய், தகவென்று த₄ர்மமாய், மெய்யே த₄ர்மமன்று என்னுதல்; அன்றிக்கே, தகவு என்று க்ருபையாய், 'தத்துவம்' என்று ஸ்வரூபமாய், உனக்கு க்ருபையே ஸ்வரூபமன்று என்னுதல்; அன்றிக்கே, தத்துவமுமன்று தகவுமன்று — உன் ஸ்வரூபத்துக்கும் போராது, உன் ஸ்வப₄ாவத்துக்கும் போராது; அதாவது — உன்னுடைய புருஷகாரப₄ாவத்துக்கும் போராது, உன் க்ருபைக்கும் போராது என்று. x இரண்டாமர்த்த₂த்தை அருளிச்செய்கிறார் (பாபாநாம் வா இத்யாதி₃) y, z ஸ்வரூபம் — புருஷகாரம். 19.

A திருவாய் 6-10-10